# மாற்றுவெளி

ஆய்விதழ்

8



## போருக்குப் பிந்தைய ஈழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டை: ஈழம்

விலை ரூ. 100

*வெளியீடு*

**புரிசல் புத்தக நிலையம்**

ப.எண்.96, ஜெ.பிளாக்,

நல்வரவு தெரு, எம்.எம்.டி.ஏ. காலனி,

அரும்பாக்கம், சென்னை-600 106

செல்பேசி: 9382853646

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுவெளி

## ஆய்விதழ்

# 8

## போருக்குப் பிந்தைய ஈழம்

மாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுவெளி

ஆய்விதழ் : 8
அக்டோபர் 2011

சிறப்பாசிரியர்
வீ. அரசு
அழைப்பாசிரியர்
சுகுமாரன் தெ.



ஆசிரியர் குழு

| | |
|---|---|
| கா. அய்யப்பன் | கன்னியம் அ.சதீஷ் |
| கு. அரவிந்தன் | தே.சிவகணேஷ் |
| பா. இளமாறன் | ஜ.சிவகுமார் |
| இரா.கமலக்கண்ணன் | சு.சுஜா |
| கு.கலைவாணன் | க.செந்தில்ராஜா |
| மு.கஸ்தூரி | மு.தேவராஜ் |
| மு.காமாட்சி | மு.நஜ்மா |
| அ.கார்வண்ணன் | வெ.பிரகாஷ் |
| அ.சதீஷ் | அ.மோகனா |
| | இரா.வெங்கடேசன் |

வள அறிஞர் குழு

கண்ணன். எம், வ. கீதா,
அ. மங்கை, செந்தில்பாபு,
எஸ். பாலச்சந்திரன், ந. மனோகரன்



வெளியீட்டாளர்
சிவ. செந்தில்நாதன்

தனி இதழ் விலை ரூ. 100
மாணவர் சந்தா பத்து இதழ்கள் ரூ. 800
சந்தா 10 இதழ்கள் ரூ. 1000
நிறுவனச் சந்தா ரூ. 20, 000

வடிவமைப்பு
தி. முரளி



தொடர்பு
பரிசல் புத்தக நிலையம்
எண் : J96 பிளாக்

நல்வரவுத் தெரு, அரும்பாக்கம், சென்னை - 600 106
பேச: 93828 53646
மின்னஞ்சல்: maatruveli@gmail.com



ISSN: 0976-1667

வரைவோலை (D.D.)அல்லது பணவிடை (M.O.) அனுப்புபவர்கள்
***மாற்றுவெளி*** என்ற பெயருக்கு அனுப்பவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாயிரத்துஒன்பது மே மாதம் பதினெட்டாம் தேதியோடு ஈழத்தமிழர்களின் ஆயுதம் தாங்கிய போராட்டம் அடக்கி ஒடுக்கப்பட்டது. 1956 - 1982 வரையிலான ஈழத்தமிழர்களின் போராட்டம், 1983 - 2009 ஈழத்தமிழர்களின் போராட்டம் என்று இரு தன்மைகளாகப் பிரித்துப் பார்க்கலாம். சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் ஈழத்தமிழர்கள் போரோடு வாழ்ந்தனர். போர் இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. இந்தப் போர் மூலம் ஏற்பட்ட விளைவுகளை மக்கள் அநுபவித்து வருகிறார்கள். அதிலிருந்தும் அவர்களுக்கு விடுதலை தேவை. இந்த இதழில் உள்ள பதிவுகள் மூலம் போர் முடிந்த பின்பும் மக்கள் புதிய வகையான துன்பங்களுக்கு ஆளாக்கப் படுவதும் சிங்களப் பேரினவாதம் சர்வாதிகாரமாக உருப்பெற்று வருவதையும் அறிய முடிகிறது.

இவ்விதழுக்கு அழைப்பாசிரியராக செயல் பட்டுள்ள நண்பர் தெ. சுகுமாரன் அவர்களுக்கு எங்களது நன்றி.

(சி-ர்)

# போருக்குப் பிந்தைய ஈழம்

மாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையங்கம்

# 'ஒரே குரல்' எனும் சர்வாதிகாரம்

கடந்த முப்பது ஆண்டுகளாக இலங்கைத் தீவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் புத்தளம் - சிலாபம் பகுதிகளிலும் கொழும்பு நகரிலும் வாழ்ந்த / வாழும் தமிழர்கள், சாதாரண மனிதர்களுக்குக் கிடைத்த குடிமை (civil) வாழ்வை இழந்தனர். தாங்கள் எப்போதும் கண்காணிக்கப்படுகிறோம் என்ற மனநிலையில் வாழ்ந்தனர் / வாழுகின்றனர். விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ நடவடிக்கைகளால் சீர்குலைக்கப்பட்ட பிறகு, இந்தத் தீவின் அரசு 'வடக்கின் வசந்தம்' எனும் பெயரில் வடக்குப்பகுதி முன்னேற்றத் திட்டங்களை அழைக்கிறது. இப்போது வசந்தம் வந்து விட்டதாகவும் கோடையில் தவித்தவர்கள் இப்போது குடிமை உணர்வுடன் வாழ்வதாகவும் கூறுகின்றது இலங்கை அரசு. திரும்பும் இடமெல்லாம் 'வடக்கின் வசந்தம்' மற்றும் 'ஒரே தேசம் ஒரே குரல்' எனும் முழக்கங்கள் எழுதப்பட்ட விளம்பரப் பலகைகள் காட்சியளிக்கின்றன. 2009-மே முள்ளி வாய்க்கால் படுகொலைக்குப் பின் இலங்கைத் தீவின் வடகிழக்கு வாழ் மக்கள் மனநிலை விடுதலையுணர்வோடு உள்ளதா? குடிமை வாழ்முறை சாதா ரணமாக நடைபெறுகிறதா? போரால் அழிந்துபோன வாழ்வாதார வளங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுவிட்டனவா? இப்படியான கேள்விகளை நாம் கேட்கவேண்டும். இதனைத்தான் 'போருக்குப் பிந்தைய ஈழம்' எனும் தொடர் மூலம் வெளிப்படுத்த விரும்புகிறோம். இதனை பின்வரும் வகையில் தொகுத்துக் கொள்வோம்.

*-சிங்களப் பேரினவாதம், சிறுபான்மையினரான தமிழ் மக்களை ஆதிக்கம் செலுத்தும் செயலுக்கு எதிரான போர் என்று நடந்து முடிந்த நிகழ்வை ஒருதரப்பினர் அடையாளப்படுத்துகின்றனர்.*

*-தேசம் - தேசியம் - தேசிய இனம் எனும் சொல்லாட்சிகளை ஏற்றுக் கொள்ளாது தவறான முறையில் 'தேசிய இனம்' எனும் உணர்வுத் தளம் சார்ந்து அணி சேர்க்கப்பட்ட குழுக்களின் போராட்டங்கள் முறியடிக்கப்பட்டுவிட்டன. வரலாற்றில் நிகழ்ந் திருக்கக் கூடாத துரதிஷ்டவசமான நிகழ்வு இது. பேரின வாதம் ஒரு பக்கமும் சிறுபான்மை அடிப்படைவாதம் இன்னொரு பக்கமும் செயல்பட்டு அப்பாவி மக்களைத் துயரத்திற்கு ஆட் படுத்தி விட்டனர் என்று மதிப்பிடும் இன்னொரு தரப்பினர்.*

*-கொரில்லா போர் முறையைக் கையில் எடுத்த விடுதலைப் புலிகள் இயக்கம், அடிப்படையில் சமூகப் பொருளாதார அரசியல் புரிதலற்ற இயக்கம். இவர்கள் போர் நிகழ்த்திய முறை தவறானது. வெகுமக்களை அரசியல்ரீதியாக அணி சேர்க்காது நடத்திய போர் இது. மக்கள் பங்கேற்பு இல்லாத விடுதலைப் போர் இவ்வகையில் தான் ஒடுக்கப்படும் என்று மதிப்பிடுவோர் இன்னொரு பக்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல்வேறு மதிப்பீடுகள் 'போர் முடிந்த' சூழலில் முன்வைக்கப்படுகின்றன. மூன்றாம் மனிதராக இருந்து, இருப் போரின் அவரவர் சார்ந்த புரிதலில் இவ்வகையான உரையாடல்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த உரையாடல் வெகுமக்களின் நடைமுறை வாழ்வுக்கான உடனடித் தீர்வுகளை முன்வைக்காதவை. இம்மதிப்பீடுகள் இப்போது எந்த அளவிற்கு முக்கியத்துவம் மிக்கவை என்ற உரையாடலை முன்வைத்தால்; நடந்துமுடிந்த நிகழ்வுகளின் மதிப்பீடுகள் இவை. ஆனால் இப்போது வாழும் மக்கள் குறித்த உரையாடல்களை எப்படி முன்வைப்பது என்பதே முதன்மையாகிறது. இதனை நமது புரிதல் சார்ந்து பின்வருமாறு தொகுப்போம்.

*-போரினால் அழிந்துபோன வாழ்க்கையை மீண்டும் உருவாக் குவதற்காக உலகச் சமூகம் மேற்கொள்ளும் திட்டங்கள் எவை? இலங்கை அரசு இத்திட்டங்களை எவ்வகையில் செயல்படுத்து கிறது?*

*-போர் முடிந்த பின்னும் இராணுவ முகாம்களை நீக்குவது தானே முறை. ஆனால் எந்த இடத்திலிருந்தும் அவை நீக்கப் படவில்லை. மாறாக நிலையான இராணுவ முகாம்கள் கட்டப்படுகின்றன.*

*-வெகுமக்கள் கடந்த முப்பது ஆண்டுகளில் உளரீதியாக எதிர்கொண்ட துன்பங்களை அகற்றுவதற்கான நிகழ்வுகள் நடைபெறுகின்றனவா? மாறாக மக்களுக்கு புதுவகையான பயம்தரும் நிகழ்வுகளையும் துன்பங்களையும் கட்டமைப்பதா?*

*-தரிசாக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் விளைநிலம் ஆவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா? அல்லது அந்த நிலங்களை இராணுவ முகாம்களாக மாற்றும் செயல்பாடு நடைபெறுகிறதா?*

மேற்குறித்த உரையாடல்களை அடிப்படையாகக் கொண்டு, 'போருக்குப் பிந்தைய ஈழம்' குறித்து நாம் மதிப்பீடு செய்யலாம்.

இலங்கைத் தீவை தமது வணிக ரீதியான காலனியாக்கிக் கொள்ள சீனா, இந்தியா, ஜப்பான் ஆகியவை போட்டியிடுகின்றன. இதில் சிவப்புச் சீனாவின் கை ஓங்கியிருப்பதாகக் கூறுகின்றனர். அந்த நாட்டில் 'முன்னேற்றப் பணிகளுக்கானத் திட்டங்கள்' எனும் பெயரில் மேற்குறித்த மூன்று நாடுகளின் கம்பெனிகள், பங்கு போட்டுக் கொண்டு செயல்படுகின்றன. இதில் சீனா முன்னணியில் உள்ளது. சீனா வடக்குப் பகுதியில் மிகப்பெரும் இராணுவ முகாம்களை கட்டுவதில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளிட்ட வன்னிப்பிரதேசங்கள் விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் நீண்டகாலம் இருந்த பகுதிகளாகும். இப்பகுதிகளில் நிலையான இராணுவ முகாம்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கிளிநொச்சியில் உள்ள 'இரணைமடு' எனும் பகுதி நீர்வளம் மிக்க பகுதி. இரணைமடு குளம் என்று அழைக்கப்படும் பெரிய நீர்நிலை அங்குள்ளது. வன்னிப்பகுதியில் உள்ள வளமான நீர் ஆதாரப் பகுதிகளில் இதுவும் ஒன்று. இந்த நீர்நிலையைச் சுற்றி மிகப்பெரிய நிலையான இராணுவ முகாம் அமைக்கப்பட்டு வருகிறது. அந்தப் பகுதியில் இனிமேல் மக்கள் நடமாட இயலாது. அங்குள்ள வளமான விளை நிலங்களும் காடுகளும் அழிக்கப்பட்டு, முகாம் அமைக்கப் படுகிறது. காடுகளால் சூழப்பட்டுள்ள இப்பகுதி முகாம்கள் கட்ட ஏற்ற இடமாகக் கருதப்பட்டு, வேலை நடைபெறுகிறது. இதைப்போல் முல்லைத் தீவுப் பகுதியிலும் இன்னொரு நிலையான முகாம் அமைக்கப் படுவதின் மூலம் உருவாகும் பின்விளைவுகளைக் கீழ்காணும் வகையில் தொகுத்துக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மிக வளமான விளைநிலப்பகுதி மற்றும் காட்டுப்பகுதிகள் அழிக்கப்படுகின்றன. மக்கள் இப்பகுதி சார்ந்து பெற்று வந்த நீர், நில வாழ்வாதாரங்களை இழக்கின்றனர்.

-தடை செய்யப்பட்ட பகுதி என்பதால் அங்கு எவரும் இனி நடமாட இயலாது. அங்கிருக்கும் மக்களின் வழிபாட்டிடங்கள் அழிக்கப்படும்.

-ஆயிரக் கணக்கில் சிங்கள இராணுவத்தினர் நிலையாகக் குடியேறுகின்றனர். அவர்களுக்கான பள்ளிகள், சந்தைகள் உருவாக்கப்படும். தமிழர்கள் வாழ்ந்த பகுதி; சிங்கள இராணுவ முகாம் பகுதியாக - கன்டோன்மெண்டாக - மாற்றம் செய்யப்படுகின்றது. கிளிநொச்சி நகரம், இனிமேல் சிங்கள இராணுவ முகாம் பகுதியாகி விடும்.

-நேரடியாகச் சிங்களக் குடியேற்றம் என்பதற்கு மாற்றாக இராணுவ முகாம் சார்ந்த சிங்களக் குடியேற்றமாகக் கட்டமைக்கப்படும். இதன் மூலம் வருங்காலங்களில் சிங்கள - தமிழ் இணைவு சார்ந்த பகுதியாகப் படிப்படியாக மாறும். புத்தளம், சிலாபம், வவுனியா பகுதிகள் ஒருகாலத்தில் பெரும்பான்மை தமிழ்மக்கள் வாழ்ந்த பகுதி. இப்போது அந்நிலை மாறிவிட்டது. அதைப் போலவே கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதி படிப்படியாக மாற்றப்படும். இதற்கான முதல்கட்ட வேலையே நிலையான இராணுவ முகாம்களைச் சீனாவிடம் கடன்பெற்று சிங்கள அரசு நிறைவேற்றி வருவது ஆகும்.

-தமிழர்கள் வாழும் பகுதிகள் முழுமையாக நிலையான இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளாக வடிவமைக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகள் சீர்குலைக்கப்பட்ட பின்பு, சிங்கள பேரின அரசு தமிழ்ப் பகுதிகளை இராணுவ முகாம்கள் நிரம்பிய பகுதிகளாக உருவாக்கத்தின் மூலம், தமிழ் மக்கள் முழுமையாக இராணுவ கட்டுப்பாட்டில் வாழும் சூழல், இனி நிகழ வாய்ப்புண்டு. ஏனெனில் இராணுவ முகாம் பகுதிகளில் நிகழ்வது வெளி உலகிற்கு தெரிவதற்கு வாய்ப்பில்லை.

வடகிழக்குப் பகுதிகளில் இருவழிச் சாலைகள் (100 அடி) போடப்பட்டு வருகின்றன. ஜப்பானிய கம்பெனிகளும் இந்தியக் கம்பெனிகளும் இதில் முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு போடத் தொடங்கிய நெடுஞ்சாலைகள் போன்று, அங்கும் சாலைகள் உருவாக்கப் படுகின்றன. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் இப்பணி நிறைவேறலாம். இனிமேல் இராணுவ வாகனங்கள் மிக வேகமாகச் செல்லலாம். 100 கி.மீ. வேகத்திற்குக் குறையாமல் வாகனங்கள் செல்லும் வகையில் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. சுற்றுலாப் பயணிகள் இச்சாலைகளைக் கண்டவுடன் 'வடக்கின் வசந்தம்' வந்து விட்டதைச் சட்டென உணரக்கூடும். போக்குவரத்து வசதிக்கும் இராணுவ அடக்குமுறைகளுக்குமான உறவை நாம் மறந்து விடக் கூடாது. இராணுவத்திற்காகப் போடப்படும் சாலைகள் மக்களுக்கும் உதவும். இனிமேல் A9 சாலையில் செல்லும் பயண நேரம் பாதியாகக் குறையலாம். மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான வீடுகள் கட்டுதல், வயல்களைச் சீர்செய்தல், மின்சாரம் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் ஆகியவை மிக மெதுவாக நடைபெறும் பணிகளாக உள்ளன.

நெடுஞ்சாலைகள் போடுவது மட்டும் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முன்னுரிமை எதற்குத் தேவை? அடிப்படைத் தேவைகளுக்கா? முன்னேற்றப் பணிகளுக்கா?

யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் வாழும் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவதற்குப் பயப்படுகின்றனர். தங்களைச் சுற்றி வாழும் தமிழர்களையே 'கூலிப்படை'களாக மாற்றி இராணுவம் செயல்படுவதாகக் கருதுகின்றனர். சாதாரண உடையில் தங்களைச் சுற்றி இராணுவமும் காவல்துறையும் எந்நேரமும் இருப்பதான மனநிலையில் உள்ளனர். ஊடகத் துறையில் 'ஆட்காட்டி'கள் அதிகமாக உள்ளனர் என்றும் கூறுகின்றனர். 'கிரீஸ் டெவில்' எனும் கருப்பெண்ணெய் பூசப்பட்ட பிசாசு இரவு வேளைகளில் திடீர்திடீரென வருவதாகக் கூறுகின்றனர். உடல் முழுவதும் கருப்பு வண்ண கிரீஸ் பூசிக்கொண்டு இரவுகளில் சிலர் நடக்கின்றனர். இவர்கள் பெண்கள் மீது வன்முறையில் ஈடுபடுகின்றனர். இவர்களைப் பொதுமக்கள் துரத்தினால், அவர்கள் நேரடியாக இராணுவ முகாம்களுக்குள் ஓடி ம்றைகின்றனர். அவர்கள் மனநோயாளிகள் என்றும் அவர்களைத் தாங்கள் கட்டுப்படுத்துவதாகவும் இராணுவமுகாம் அதிகாரிகள் கூறுகின்றனர். இவ்வகையில் மக்களை மனப்பிராந்தியில் தொடர்ந்து வைத்து இருப்பதற்கான வேலைகளை இராணுவம் செய்து வருகிறது.

போரின்போது இருதரப்பிலும் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் இன்னும் அகற்றப்படவில்லை. ஏன் அகற்றாமல் இருக்கிறார்கள் என்பது கேள்வி. மக்களைப் பயத்தில் ஆழ்த்த வேண்டிய கட்டாயம் இராணுவத்திற்கு இருக்கிறது. இதனால்தான் இரவு நேரப் பிசாசுகள் உலவுகின்றன. எங்கும் கண்ணி வெடிகள். எனவே, 'உங்களைக் காப்பாற்ற இங்கு நாங்கள் இருக்கவேண்டும்' என்னும் தர்க்கத்தைக் கொண்டே இராணுவம் தொடர்ந்து இருக்கலாம். போரில் பட்ட துன்பத்தைவிட தற்போது மனதளவில் கொள்ளும் பயம் கூடியிருப்பதாகவே சாதாரண மக்கள் கருதுகிறார்கள்.

போருக்குப் பிந்தைய ஈழச்சமூகம் எதிர் கொள்ளும் துன்பங்கள் உளவியல் சார்ந்துள்ளன. ஒருவர் பிறரை நம்புவது சாத்தியமா? என்றுகூட நினைக்கின்றனர். கூட்டு வாழ்க்கைமுறை கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. இத்தன்மைகளை மாற்றுவதற்கான செயல்பாடுகளில் அரசு அக்கறை கொள்வதாக இல்லை. தனது எடுபிடிகளைக் கொண்டு நிர்வாகத்தை நடத்துகிறது. மக்கள் நம்பும் நிர்வாகிகள் இல்லை. இடைத்தரகர்கள் மிகுதியாக உருவாகியுள்ளனர். போரினால் ஏற்பட்ட இவ்வகையான உளவியல் சிக்கல்கள் குறித்து நாம் அக்கறை கொள்ள வேண்டும்.

குழப்பத்தில் இருக்கும் ஈழத் தமிழ்ச் சமூக மக்களிடம், சிங்கள பேரினவாத அரசு 'ஒரே தேசம் ஒரே குரல்' எனும் முழக்கத்தை முன்வைக்கிறது. 'ஒரே குரல்' என்ற முழக்கத்தின் மூலம் சிங்கள அரசு சர்வாதிகாரத்தைக் கையில் எடுத்திருப்பதைக் காணமுடிகிறது. பல் குரல்களின் ஒருங்கிணைக்கப்பட்ட நிர்வாகம் அழிக்கப்பட்டு ஒரு குரல் நிர்வாகம்; இது சனநாயகத்திற்கு எதிரானது. ஈழத் தமிழ்மக்கள் சர்வதிகார ஆட்சி முறையில் உள்ளனர். தொடர்ந்து நிலைமைகள் என்னவாகும்? என்று கணிக்க இயலாது. காலம் தான் பதில் சொல்லும். 'வடக்கில் வசந்தம்' எனும் முழக்கம்; 'ஒரே குரல்' எனும் முழக்கம் ஆகியவை போருக்குப் பிந்தைய ஈழத்தமிழ்ச் சமூகத்தின் நவீன ஒடுக்கு முறையாக அமைகிறது. பொறுத்திருப்போம்..... காலம் மாறும்.

*(2011 அக் 1-5 ஆகிய நாட்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பகுதிகளில் செய்த பயணத்தின்போது உணர்ந்த அனுபவப் பதிவுகளாக இத்தலையங்கம் அமைகிறது. சி-ர்).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்தின் கதை

## சம்பூர்: அரசினால் அழிக்கப்பட்ட வளமான பூமி

■ எல். சிவலிங்கம்

இலங்கையின் கிழக்கே திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஒரு பாரம்பரியத் தமிழ்க்கிராமமே சம்பூராகும். அனைத்து விதமான வளங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தமையினாலேயே சம்பூரணம் என்னும் பெயர் மருவி சம்பூர் என ஆகியதாக முன்னோர்கள் கூறுகின்றனர். இப்பெயர் இலங்கை அரசினால் தற்போது உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனம் செய்யப்பட்ட சம்பூர் பிரதேசத்தில் சம்பூர், கடற்கரைச்சேனை, கூனித்தீவு, சூடைக்குடா மற்றும் இளக்கந்தை ஆகிய ஐந்து பாரம்பரியத் தமிழ்க்கிராமங்கள் அடங்குகின்றன. மூதூர் பிரதேச செயலகத்தின் 2008ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி இப்பிரதேசத்தில் 1940 குடும்பங்களைச் சேர்ந்த 7494 பேர் வாழ்ந்து வந்தனர்.

### இனப்பிரச்சினையும் சம்பூரும்

இனப்பிரச்சினை ஆரம்பமான காலப்பகுதியில் சம்பூர் தனித்தமிழ் பிரதேசமாகக் காணப்பட்டமையினால் போராட்ட இயக்கங்களின் நடமாட்டம் காணப்பட்டமை ஒன்றும் இரகசியமானதல்ல. இதனால் சுற்றிவளைப்புகள், கைதுகள், வீடெரிப்புக்கள் என பல்வேறு விதமான தாக்கங்களுக்குச் சம்பூர் பிரதேசம் உட்பட்டு வந்தது. பெயருக்கேற்ற சம்பூரணமான வளங்களைக்கொண்ட இப்பிரதேசம் பல்வேறு விதமான நெருக்கடிகளைச் சந்தித்துப் பொருளாதார ரீதியாகவும் கல்வியிலும்; மிக மோசமாகப் பாதிக்கப்பட்டபோதிலும் அனைத்திலும் தன்னிறைவான பிரதேசமாகவே இயங்கிக் கொண்டிருந்தது. 1987 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர் முதன்முதலில் சம்பூரில் முகாம் அமைக்க முனைந்தபோதிலும் இந்திய இலங்கை உடன்படிக்கையின் காரணமாக அவர்கள் சம்பூரைவிட்டு இடைநடுவில் வெளியேற வேண்டியேற்பட்டது. 1990களில் யுத்தம் ஆரம்பித்த பின்னர் சம்பூர் பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலும் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலும் மாறி மாறி இருந்து வந்தது. மூன்று பக்கம் கடலால் சூழப்பட்டிருந்தமையினால் இராணுவம் ஊருக்குள் வரும்போது புலிகள் காடுகளுக்குள் பின்வாங்கும் மரபினைக் கொண்டிருந்தனர். சம்பூரில் அமைந்திருந்த இலங்கை இராணுவ முகாம்கள் மீது புலிகள் ஒருபோதும் பெருமெடுப்பிலான

இக்கட்டுரையாசிரியர் ஆய்வுப்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதலைத் தொடுத்திருக்கவில்லை என்பதிலிருந்தும் இராணுவம் சம்பூரை நோக்கி முன்னேறிய போதெல்லாம் ஒரு தரமேனும் புலிகள் இராணுவத்தினரை எதிர்த்து மரபு வழிச் சமரில் ஈடுபடவில்லை என்பதிலிருந்தும் சம்பூர் பிரதேசம் ஒருபோதும் புலிகளின் கோட்டையாக இருக்கவில்லை என்பது புலனாகின்றது. கடைசியாகச் சம்பூரில் இருந்த இலங்கை இராணுவ முகாம் ஜயசிக்குறு நடவடிக்கைக் காலத்திலேயே அகற்றப்பட்டது. கடைசியாக நடந்த சண்டையிலும் புலிகள் சாதாரண எதிர்ப்பைக் காட்டிவிட்டுச் சம்பூரிலிருந்து பின்வாங்கியிருந்தனர் என்பதே உண்மையானதாகும். உண்மையில் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட சம்பூர் பிரதேச நில அமைவானது புலிகளுக்கு மரபு வழிச்சமருக்கான ஒரு இயற்கையான பாதுகாப்பு நிலைமையை வழங்கியிருக்கவில்லை. பல காலகட்டங்களில் இராணுவம் சம்பூரை விட்டு வெளியேறியவுடன் புலிகளின் நடமாட்டம் சம்பூரில் அதிகரித்தது என்பதே உண்மையானதாகும். எனவே சம்பூர் புலிகளின் கோட்டை எனும் ரீதியில் சம்பூர் மக்களைப் பழிவாங்குவது எவ்விதத்திலும் நியாயமாகாது.

## யுத்த நிறுத்தமும் சம்பூரும்

2001ஆம் ஆண்டு புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் நிலைமை முற்றிலும் ஒரு புதிய பரிமாணத்தினை எடுத்தது. யுத்த நிறுத்த காலத்தில் புலிகள் சம்பூர் பிரதேசத்தில் அவர்களின் திருமலை மாவட்டத் தலைமை பொலிஸ் நிலையம், திருமலை மாவட்ட அரசியல் தலைமைச் செயலகம் என்பவற்றை அமைத்தனர். இலங்கை அரசியல்வாதிகளும் வெளிநாட்டுத் தூதுவர்களும் அடிக்கடி வந்து சென்றமையினால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அறியப்பட்ட ஒரு பிரதேசமாகச் சம்பூர் மாறத் தொடங்கியது. தங்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்து பற்றிச் சம்பூர் மக்களில் பெரும்பாலானோர் அப்போது அறிந்திருக்கவில்லை. 1983 ஆம் ஆண்டிலிருந்து யுத்தத்திற்கு மத்தியிலும் நெருக்கடிகளுடன் ஓரளவு சந்தோசமாகவே அவர்கள் வாழ்ந்து வந்தனர். யுத்த காலத்திலும் மூதூர் பிரதேசத்திற்கு அவர்கள் நெல், மீன், விறகு, பால் போன்றவற்றைத் தாராளமாக வழங்கி வந்தனர்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அவர்களின் மீது தற்கொலைத் தாக்குதல் 2006 ஏப்ரல் 25 ஆந்திகதி மாதத்தில் கொழும்பில் நிகழ்த்தப்பட்ட பின்னர் நிலைமை தலைகீழாக மாறியது. ஏனெனில் திருகோணமலைத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவமிக்க பகுதியில் அமைந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாகக் காணப்பட்டமையினால் சம்பூர் மீதே முதன்முதலாக வான் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்பு வெற்றிலைக்கேணியில் இலங்கைக் கடற்படையினர் மீது புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் கெப்பிட்டிக் கொலாவையில் சிங்கள மக்கள் படுகொலை செய்யப்பட்ட போதும் சம்பூர் பிரதேசம் மீதே இலங்கை விமானப்படைத் தாக்குதலைத் தொடுத்தது. இதன் பிறகு மாவிலாறு பிரச்சினையினைத் தொடர்ந்து இலங்கை இராணுவம் தரைவழித் தாக்குதலை ஆரம்பித்து முதன்முதலாகச் சம்பூர் பிரதேசத்தினையே கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து சம்பூர் மக்களின்

மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட சம்பூர் பிரதேச நில அமைவானது புலிகளுக்கு மரபு வழிச்சமருக்கான ஒரு இயற்கையான பாதுகாப்பு நிலைமையை வழங்கியிருக்கவில்லை. பல காலகட்டங்களில் இராணுவம் சம்பூரை விட்டு வெளியேறியவுடன் புலிகளின் நடமாட்டம் சம்பூரில் அதிகரித்தது என்பதே உண்மையானதாகும். எனவே சம்பூர் புலிகளின் கோட்டை எனும் ரீதியில் சம்பூர் மக்களைப் பழிவாங்குவது எவ்விதத்திலும் நியாயமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்வு வாழ்க்கை ஆரம்பமாகியது.



## இராணுவம் சம்பூரைக் கைப்பற்றியபோது சம்பூர் எப்படி இருந்தது

சம்பூர் மீது விமானத் தாக்குதல் ஆரம்பமானபோது மக்கள் உடுத்த உடையுடன் அயற்கிராமங்களில் தஞ்சமடைந்தனர். யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தமையினால் தாக்குதல் தற்காலிகமானது எனவும் தாம் விரைவில் வீடு திரும்பிவிடலாம் என மக்கள் நம்பினர். ஆனால் அவர்களின் நினைப்பு பொய்த்துப் போனது. தாம் ஆண்டாண்டு காலமாகச் சம்பாதித்த அனைத்துச் சொத்துக் களையும் வீடுகளுடன் விட்டுவிட்டுக் கையில் எடுக்கக் கூடியவற்றை எடுத்துக்கொண்டு இடம்பெயர்ந்த மக்கள் இன்று எல்லாவற்றையும் இழந்துவிட்டு ஏதிலியாக நிற்கின்றனர்.

சம்பூர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் இலங்கை இராணுவத்தினர் பத்திரிகையாளர் குழுவொன்றினைச் சம்பூருக்கு அழைத்துச் சென்றிருந்தனர். தேசன் வாரப் பத்திரிகையின் பத்திரிகையாளரான தரிஸ பஸ்தியன் 10.09.2006 அன்று வெளியான தேசன் பத்திரிகையில் "சம்பூர் கைப்பற்றப் பட்டதைத் தொடர்ந்து இடம்பெறும் தேடுதல் நடவடிக்கை களினால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் பாதிப்புகளுக்கு அப்பால் பாடசாலைகள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட சிவிலியன் உடமைகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு மிகக் குறைவானதாகும்" தான் அன்று கண்ட சம்பூர் பற்றி எழுதியுள்ளார். ஆனால், அன்று அவர் கண்ட சம்பூரில் இருந்த எதுவுமே இன்று இல்லை. சம்பூரில் இருந்த மக்களின் வீடுகள் மட்டுமல்ல அரசாங்க வைத்தியசாலை கூட இருந்த அடையாளமே தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அப்போது சம்பூரில் நிலை கொண்டிருந்த 222 அல்லை –கந்தளாய் பிரிகேட்டின் கட்டளைத் தளபதியாகிய லெப்டினன்ட் கேர்ணல் சரத் விஜேசிங்க சம்பூர்ப்பிரதேசத்தில் பல பொலிஸ் காவல் நிலைகள் அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இவை யாவும் காலப்போக்கில் முழு அளவில் தொழிற்படும் பொலிஸ் நிலையமாகத் தரமுயர்த்தப்படும் என்றும் இவை விரைவில் ஆரம்பமாகவிருக்கும் மக்களின் மீள்குடியேற்றத் திற்கான முன்னோடி நடவடிக்கைகள் எனத் தன்னிடம் கூறியதாக வும் தரிஸ பஸ்தியன் மேலும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், ஐந்து வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் மக்களின் மீள்குடியேற்றம் மட்டும் இன்னும் இடம்பெறவில்லை.

## அனல் மின் நிலையம், பாதுகாப்பு வலயம், மற்றும் பாரக்கைத் தொழில் வலயம்

சம்பூர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் சம்பூரில் இந்தியாவின் உதவியுடன் அனல் மின்நிலையம் அமைக்கப்படும் என இலங்கை அரசு அறிவித்தது. இச்செய்தி வெளியாகிச் சிறிது காலத்தில் சம்பூர் பிரதேசம் முழுவதும் மக்கள் உட்செல்ல முடியாத உயர் பாதுகாப்பு வலயம் என வர்த்மானி அறிவித்தலை அரசு வெளியிட்டது. அண்மையில் உயர்பாதுகாப்பு வலயம் என்பது நாட்டில் எங்கும் இல்லை என அரசு அறிவித்த சில நாட்களில் சம்பூர், பாரக் கைத்தொழில் வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு அதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப் பட்டுள்ளது. இதன்மூலம் சம்பூரை மக்களுக்கு ஒருபோதும்

சம்பூர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் சம்பூரில் இந்தியாவின் உதவியுடன் அனல் மின்நிலையம் அமைக்கப்படும் என இலங்கை அரசு அறிவித்தது. இச்செய்தி வெளியாகிச் சிறிது காலத்தில் சம்பூர் பிரதேசம் முழுவதும் மக்கள் உட்செல்ல முடியாத உயர் பாதுகாப்பு வலயம் என வர்த்மானி அறிவித்தலை அரசு வெளியிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளிப்பதில்லை என்னும் முடிவில் அரசாங்கம் உறுதியாக இருப்பதுபோல் தோன்றுகின்றது.

உண்மையில் சம்பூர் விடயத்தில் நடப்பது என்ன? 2009 ஆகஸ்ட் 30ஆந் திகதி ராவய சிங்கள பத்திரிகையில் தனுஜ பத்திரன அவர்கள் இந்தியாவின் உதவியுடன் அனல் மின்நிலையம் அமைப்பதற்காகச் சம்பூரில் 500 ஏக்கர் பரப்பளவான பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சுமார் 500 வீடுகளை அங்கு வாழ்ந்தவர்களுக்கு எவ்வித அறிவித்தல்களுமின்றி அவர்களுடைய எழுத்து மூலமான எவ்வித அனுமதியும் பெறாமல் இலங்கை அரசாங்கம் தரைமட்டமாக்கியுள்ளது எனவும் அந்த அனல் மின்நிலையம் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட சம்பூர் பிரதேசமானது மக்கள் வாழ்வற்ற சூன்யப் பிரதேசமென இந்தியப் பிரதிநிதிகளுக்குக் காரணம் காட்டவே அரசாங்கம் இவ்வாறு தமிழ் மக்களின் வாழ்விடத்தை நாசப்படுத்தியுள்ளது எனவும் இது தொடர்பாக மின்சக்தி அமைச்சு அதிகாரிகளை அவர் தொடர்புகொண்டு கேட்டபோது இந்த வீடுகள் தமது அமைச்சினால் தரைமட்டமாக்கப்படவில்லை என்றும் அது அரசாங்கத்தின் பிறிதொரு தரப்பினரால் செய்யப்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் அபிவிருத்தித் திட்டமொன்றிற்கு நிலக்கையகப்படுத்தல் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் சட்டவிதிமுறைகளை இலங்கை அரசாங்கமே அப்பட்டமாக மீறிச் சம்பூர் மக்கள் மீது அட்டூழியம் புரிந்துள்ளமை தெளிவாகின்றது.

ஒரு அபிவிருத்தித்திட்டம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய எந்த நடைமுறைகளும் சம்பூர் விடயத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை அபிவிருத்தித் திட்டத்தினால் ஏற்படக்கூடிய செலவு நலனைக் கண்டறியும் ஆய்வு, சூழல் பாதிப்பு ஆய்வு, சமூகப் பாதிப்பு ஆய்வு என எதுவும் சம்பூர் விடயத்தில் பின்பற்றப்படவில்லை. அத்துடன் இலங்கைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலக்கையகப்படுத்தல் நடைமுறைகள் எதுவும் இன்றுவரை பின்பற்றப்படவில்லை

ஒரு அபிவிருத்தித்திட்டம் செயற்படுத்தப்படும்போது கடைப்பிடிக்கப்படவேண்டிய எந்த நடைமுறைகளும் சம்பூர் விடயத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை. அபிவிருத்தித் திட்டத்தினால் ஏற்படக்கூடிய செலவு நலனைக் கண்டறியும் ஆய்வு, சூழல் பாதிப்பு ஆய்வு, சமூகப் பாதிப்பு ஆய்வு என எதுவும் சம்பூர் விடயத்தில் பின்பற்றப்படவில்லை. அத்துடன் இலங்கைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலக்கையகப்படுத்தல் நடைமுறைகள் எதுவும் இன்றுவரை பின்பற்றப்படவில்லை. ஏன் அரசாங்கம் இன்றுவரை அம்மக்களுடன் இது தொடர்பில் பேசவேயில்லை. கிழக்கு மாகாண ஆளுநரும் திருமலை மாவட்ட அரசாங்க அதிபரும் இனி மக்கள் அங்குக் குடியேற முடியாது எனக் கூறுகின்றனரே தவிர அரசாங்கம் அரசியல்ரீதியாக முறைப்படி அம்மக்களுடன் பேசவில்லை. கிழக்கு மாகாண முதலமைச்சர் கூட இப்பிரச்சினையில் ஒரு நழுவல் போக்கினையே கடைப்பிடிக்கின்றார். சுமார் பத்தாயிரம் ஏக்கர் சதுரப் பரப்பளவான முறையான உறுதிகளைக் கொண்டுள்ள தனியார் நிலத்தினை அரசாங்கம் சட்ட நடைமுறைகளை மீறிக் கையகப்படுத்த முடியாது என்பதனைச் சாதாரண அறிவுடையோர் கூட அறிவர். மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு மூதூர் பிரதேசத்தில் சுமார் நூறு ஏக்கர் நெற்காணிகள் கூட இல்லாத நிலையில் சுமார் 2500 ஏக்கர் பரப்பளவிலான நெற்காணிகளுக்கு எவ்வாறு மாற்றுக்காணிகளை வழங்குவது? சுமார் 2500 ஏக்கர் பரப்பளவிலான நெற்காணிகள் சம்பூர் பிரதேசத்தில் இன்றுவரை செய்கை பண்ணப்படாமல் தரிசு நிலங்களாக ஆகிக்கொண்டிருக்கின்றன. வளமாக வாழ்ந்த சுமார் இரண்டாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் எட்டாயிரம் மக்கள் இன்று ஏதிலிகளாக முகாம்களில் அல்லலுறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தில் சம்பூர் மகாவித்தியாலயம், சம்பூர் ஸ்ரீ ஜீமுருகன் வித்தியாலயம், கூனித்தீவு நாவலர் வித்தியாலயம், சூடைக்குடா பாரதி வித்தியாலயம் முதலிய பாடசாலைகள் தொடர்ந்தும் இயங்க முடியாத நிலையில் செயலிழந்துள்ளன. சம்பூர் மகா வித்தியாலயத்தில் இலங்கை இராணுவத்தினர் முகாமிட்டுள்ள தாகத் தெரிய வருகின்றது. அத்துடன் பிரசித்திபெற்ற சம்பூர் ஸ்ரீ ஜீபத்திரகாளி அம்பாள் ஆலயம், சம்பூர் விநாயகர் ஆலயம், சம்பூர் அரசடி விநாயகர் ஆலயம், சம்பூர் நாகதம்பிரான் ஆலயம் (இவ்வாலயம் இருந்த இடம் தெரியாமல் தரைமட்டமாக்கப் பட்டுள்ளது), கூனித்தீவு விநாயகர் ஆலயம், கூனித்தீவு வடபத்திர காளி அம்பாள் ஆலயம், சூடைக்குடா மாரியம்மன் ஆலயம் முதலிய கோயில்களும் வருடக்கணக்காகப் பூசைகள் எதுவுமின்றிச் சிதிலமடைந்துகொண்டிருக்கின்றன. பிரசித்தி பெற்ற சம்பூர் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயம் குண்டுத் தாக்குதல்களால் முற்றாகச் சேதமடைந்துள்ளமை இங்குக் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். சுதந்திர இலங்கையில் சுமார் பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவுக் காணி, சுமார் எட்டாயிரம் மக்களின் வாழ்வு, ஐந்து பாடசாலைகள், ஏழு கோயில்கள் யாவற்றையும் அழித்து எங்காவது ஒரு அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை உரியவர்கள் நாட்டு மக்களுக்கும் உலகிற்கும் வெளிப்படுத்தவேண்டும். மௌனம் காத்து இவ்வநியாயத்திற்குத் துணைபுரியும் தமிழ் அரசியல்வாதிகளை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது என்பதனையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். வளமான இடத்தில் பிறந்து வாழ்ந்தது சம்பூர் மக்கள் செய்த குற்றமா? புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அவர்கள் வாழ்ந்தது யார் செய்த குற்றம்?

சுதந்திர இலங்கையில் சுமார் பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவுக் காணி, சுமார் எட்டாயிரம் மக்களின் வாழ்வு, ஐந்து பாடசாலைகள், ஏழு கோயில்கள் யாவற்றையும் அழித்து எங்காவது ஒரு அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை உரியவர்கள் நாட்டு மக்களுக்கும் உலகிற்கும் வெளிப்படுத்தவேண்டும். மௌனம் காத்து இவ்வநியாயத்திற்குத் துணைபுரியும் தமிழ் அரசியல்வாதிகளை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது

### சம்பூர் மக்களின் துயரம், அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் தமிழ் அரசியல்வாதிகள்

சம்பூர் பிரதேச மக்கள் 1983 தொடக்கம் 2006 வரைக்கும் யுத்த சூழ்நிலைக்குள் வாழ்ந்தபோதும் அவர்கள் ஒருபோதும் இடம் பெயர்ந்திருக்கவில்லை. ஆனால், 2006இல் இடம்பெற்ற வான் தாக்குதலைத் தொடர்ந்து முதன்முதலாக இடம்பெயர்ந்த சம்பூர், கூனித்தீவு, சூடைக்குடா மற்றும் கடற்கரைச்சேனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அப்பிரதேச மக்கள் இன்றுவரைக்கும் கிளிவெட்டி, பட்டித்திடல், மணற்சேனை மற்றும் கட்டை பறிச்சான் ஆகிய பிரதேங்களில் அமைந்துள்ள அகதி முகாம் களிலும் உறவினர் வீடுகளிலும் ஐந்து வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து பெருந்துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அரச அதிகாரிகள் சிலர் அம்மக்களை அணுகி இறால்குழி அல்லது இத்திக்குளம் ஆகிய இடங்களில் குடியேறுமாறு வற்புறுத்தியுள்ள னர். சம்பூர் பிரதேசம் விவசாயம், கால்நடை, தோட்டப் பயிர்ச் செய்கை மற்றும் கடற்றொழில் போன்றவற்றுக்கு மிகவும் பொருத்தமான பிரதேசமாகும். ஆறு அடி ஆழத்தில் நிலக்கீழ் நீரைக் கொண்டுள்ள மிகவும் வளமான பிரதேசமாகும். அரச அதிகாரிகள் முன்மொழிந்த இறால்குழி அல்லது இத்திக்குளம் ஆகிய பிரதேசங்கள் இதற்கு முற்றிலும் மாறுபட்டவையாகும். இறால்குழிப் பிரதேசம் மாரிக் காலத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் சேற்று நிலப்பகுதியாகும். இங்கு விவசாயம் செய்வதற்குரிய ஒரு சில நூறு ஏக்கர் நெற்காணிகள் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதபோது ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்காணிகளைக் கொண்ட மக்கள் எவ்வாறு அங்குக் குடியேறுவது? இத்திக்குளம் பிரதேசத்தில் நிலத்தடி நீர் 40--50 அடிகளுக்குள் கிடைப்பதே கடினமானதாகும். குடிநீருக்கே அல்லற்படும் அப்பிரதேசத்தில் விவசாயமும் செய்யமுடியாது. கடற்றொழிலும் செய்ய முடியாது. பத்தாயிரம் ஏக்கர் சம்பூர்க் காணிகளை வேலிபோட்டு அடைத்து வைத்துவிட்டு வேலிக்கப்பால் கருங்கற்பாறை நிலங்களிலும் சேற்று நிலங்களிலும் மக்கள் குடியேறலாம் என அரசு எந்த நியாயா திக்கத்தினடிப்படையில் கூறுகின்றது? பத்தாயிரம் ஏக்கர் காணிகளைக் கொண்டிருந்த மக்களுக்கு ஒரு சில நூறு ஏக்கர் காணிகளை மூதூரின் எந்தப் பகுதியிலும் பெற முடியாத நிலையில் எந்த நியாயாதிக்கத்தின்படி அரசு மாற்றுக்காணிகள் வழங்கப்படும் எனக் கூறுகின்றது? இலங்கை அரசாங்கத்திற்கு இலங்கையில் எங்காவது சொந்தமாக ஒரு சில நூறு ஏக்கர் நெற்காணிகளாவது உண்டா? அவ்வாறிருக்கையில் 2500 ஏக்கர் நெற்காணிகளை எங்கி ருந்து பெற்று சம்பூர் மக்களுக்கு அரசாங்கம் வழங்கப் போகின்றது?.

தற்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச, டெயிலி மிரர் பத்திரிகைக்கு 01.11.2007 அன்று வழங்கியுள்ள பேட்டியில் சம்பூர் பிரதேசத்திலிருந்து ஒரு தனிநபரேனும் வெளியேற்றப்படவில்லை என்றும் உண்மையில் எல்.டி.டி.ஈயினர் தங்கள் பாதுகாப்புக்காகச் சில குடும்பங்களைச் சம்பூர் பகுதியில் வைத்திருந்தாகக் கூறியுள்ளதுடன் இக்குடும்பங்கள் அப்பிரதேசத்தில் தமது சொத்துரிமையை நிரூபிக்க முடியாது எனவும் அவர்களால் அங்கு ஒரு வீட்டையேனும் காட்ட முடியாது என்றும் கூறியுள்ளார். இது முற்றுமுழுக்க ஆதாரமற்ற கதையாகும். சம்பூரில் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். சம்பூர் மகாவித்தியாலயம் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரேயே ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமாக இயங்கியது என்பதையும் 1965ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அப்போதைய மூதூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் மர்கூம் அப்துல் மஜீத் அவர்களின் முன்முயற்சியினால் மூதூர் கிழக்கிலேயே முதன்முதலாக மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது என்பதனையும் அரசாங்கத்திலுள்ளோர் கல்வியமைச்சின் ஆவணங்களைப் புரட்டிப்பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும். யுத்தம் தொடங்கிய பின் இலங்கை இராணுவத்தினர் பல தடவைகள் சம்பூரில் முகாமிட்டிருந்தனர். 1987--1989ஆம் காலப்பகுதியில் இந்திய இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர். 1990களின் முற்பகுதியில் சம்பூரில் முகாமிட்டிருந்த இராணுவத்தினருக்கு கப்டனாக இருந்து தற்போது மேஜர் ஜெனரலாக இருக்கும் பேர்ட்டி பெரேரா அவர்கள் சம்பூர் பிரதேசத்தில் நீண்டகாலம் பணியாற்றியவர். அவர் சம்பூரைப்பற்றி அதிகம் கூறக்கூடியவர். ஆகவே, சம்பூரில் மக்கள் வாழவில்லை என அரச தரப்பின் உயர்மட்டம் கூறுவது அடிப்படையற்றதாகும்.

பத்தாயிரம் ஏக்கர் காணிகளைக் கொண்டிருந்த மக்களுக்கு ஒரு சில நூறு ஏக்கர் காணிகளை மூதூரின் எந்தப் பகுதியிலும் பெற முடியாத நிலையில் எந்த நியாயாதிக்கத்தின்படி அரசு மாற்றுக்காணிகள் வழங்கப்படும் எனக் கூறுகின்றது? இலங்கை அரசாங்கத்திற்கு இலங்கையில் எங்காவது சொந்தமாக ஒரு சில நூறு ஏக்கர் நெற்காணிகளாவது உண்டா? அவ்வாறிருக்கையில் 2500 ஏக்கர் நெற்காணிகளை எங்கி ருந்து பெற்று சம்பூர் மக்களுக்கு அரசாங்கம் வழங்கப் போகின்றது?

இது இவ்விதமிருக்கத் தமிழ் அரசியல்வாதிகளின் சம்பூர் தொடர்பான அரசியல் நிலைப்பாடு துரோகத்தனமானதாகும். இந்தியா சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கும் கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியானதுடன் சம்பந்தன் அவர்களின் இரட்டை வேடம் அம்பலமாகத் தொடங்கியது. சுரேஸ் பிறமேச்சந்திரன் மற்றும் அரியநேந்திரன் ஆகிய இரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே சம்பூர் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல் கொடுத்து வருகின்றனர். சம்பூர் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் திருவாளர் சம்பந்தன் அவர்களின் சம்பூர் தொடர்பான நிலைப்பாடு சம்பூர் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. சம்மந்தன் அவர்கள் சரத் பொன்சேகாவிற்கு வாக்குக் கேட்டு ஜனாதிபதி தேர்தல் காலத்திலும், அடுத்து வந்த பொதுத்தேர்தலில் தனக்கு வாக்குக்கேட்டும் சம்பூர் பிரதேச மக்களை அகதிமுகாம்களில் சென்று சந்தித்தார். இந்தியாவுடன் பேசி எப்படியும் மக்களைக் குடியேற்றுவதாக வாக்குறுதியளித்தார். அதன்பின் அம்மக்களை எட்டிக்கூடப் பார்க்காமல் இந்தியாவே கதியெனத் தஞ்சமடைந்துவிட்டார். தனக்கு வாக்களித்த மக்களை மிக முக்கியமான காலத்தில் கைவிட்டு அரசியலில் இருந்து ஓய்வு பெறுவாரேயானால் வரலாற்றுப் பழியில் இருந்து அவர் தப்ப முடியாது. அவர் தற்போது முதுமையடைந்துவிட்டதாகவும் நோய்வாய்ப்பட்டு இந்தியாவில் ஓய்வெடுப்பதாகவும் கதைகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. அவ்வாறெனில் தேர்தல் பிரச்சாரங்களில் அவர் ஈடுபட்டபோது தனக்கு 80 வயது நெருங்குவதனையும் தான் செயற்படு அரசியலில் ஈடுபட முடியாது என்பதனையும் அவர் அறியாமல் இருந்தாரா? அவர் மூப்படைவதும் அவர் ஓய்வெடுப்பதும் அவரது சொந்தப் பிரச்சினைகள். அதற்காக அவர் தன்னைத் தெரிவு செய்த மக்களின் தலைவிதியோடு விளையாடலாமா? தற்போதுகூடத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை அவர் தக்க வைத்துக் கொண்டு திருமலை மாவட்டத்தில் செயற்படு அரசியலில் ஈடுபடக் கூடிய ஒருவரைத் தெரிவு செய்து மக்களின் தேவைகளை அறிந்து பணிசெய்யுமாறு அவரால் பணிக்க முடியாதா? ஏனெனில் அவர் இன்றுவரை பாராளுமன்றத்தில் சம்பூர் பிரதேச மக்களின் பிரச்சினை பற்றித் தனியாக விவாதித்து ஒரு நியாமான தீர்வினைப் பெற்றுத்தர முன்வரவில்லை. இன்று வரையும் அவர் சம்பூர் மக்களின் பிரச்சினையினைச் சட்ட ரீதியாகவும் அணுகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவே தமிழர்களுக்கு இனி எல்லாம் எனக் கருதும் இவர் இந்தியாவிடம் சரணாகதி அரசியல் நடத்துவது தமிழ் மக்களுக்கு அழிவினையே பெற்றுத்தரும் என்பதை ஏன் உணர மறுக்கின்றார்?

யுத்த காலத்தில் பெருந்துன்பங்களை அனுபவித்து ஓரளவேனும் சந்தோசமாகத் தமது பிரதேசத்தில் வாழ்ந்த இப்பிரதேச மக்கள் தற்போதைய சமாதான காலத்தில் தாம் பிறந்து வாழ்ந்த பூமியைப் பறிகொடுத்துவிட்டு அரசியல் அநாதைகளாக ஏதிலிகளாக நிற்கின்றனர். சம்பூர் மக்களின் வாழ்க்கையும் எதிர்காலமும் நிர்மூலம் செய்யப்பட்டுள்ளது போல் மிகவும் அருள் சக்தி பொருந்திய சம்பூர் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயமும் குண்டுத் தாக்குதலால் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளது. மக்களின் துயரத்தினை அம்பாளும் பகிர்ந்துகொண்டுள்ளதாகவே மக்கள் கருதுகின்றனர்.

யுத்த காலத்தில் பெருந்துன்பங்களை அனுபவித்து ஓரளவேனும் சந்தோசமாகத் தமது பிரதேசத்தில் வாழ்ந்த இப்பிரதேச மக்கள் தற்போதைய சமாதான காலத்தில் தாம் பிறந்து வாழ்ந்த பூமியைப் பறிகொடுத்துவிட்டு அரசியல் அநாதைகளாக ஏதிலிகளாக நிற்கின்றனர். சம்பூர் மக்களின் வாழ்க்கையும் எதிர்காலமும் நிர்மூலம் செய்யப்பட்டுள்ளது போல் மிகவும் அருள் சக்தி பொருந்திய சம்பூர் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயமும் குண்டுத் தாக்குதலால் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரியப் பிரதேசங்களும் அரச குடியேற்றத் திட்டங்களும்

■ ச. சத்தியசீலன்

தமிழ்பேசும் மக்கள் பல தலைமுறைகளாக வாழ்ந்துவரும் அவர்களது பாரம்பரியப் பிரதேசங்களான வடக்கு--கிழக்கு மாகாணங்களில் அம்மக்கள் நலனைப் புறக்கணிக்கும் வகையில் இலங்கை அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட அரச குடியேற்றத் திட்டங்கள் அமைகின்றன. பல தலைமுறைகளாக அமைதியான வகையில் தங்கள் பாரம்பரியத் தாயகத்தில் வாழ்ந்து வரும் இம்மக்களின் சமூக, -பொருளாதார, கலாச்சார அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டிய அரசாங்கங்கள் அம்மக்களின் சமூக, - பொருளாதார கலாச்சார நலன்களைப் புறக்கணிக்கும் வகையில் அரச குடியேற்றங்களைத் தாபித்துக் கொண்டன. இத்தகைய குடியேற்றங்கள் இனமுரண்பாடுகளை மேலும் கூர்மையடையச் செய்வதோடு தமிழ், - சிங்கள மக்களிடையிலான இனவாத உணர்வு மேலும் வலுப்பெற்று நாடு சீரழிவதற்கே வழிவகுத்தது.

இங்குத் தமிழ்பேசும் மக்கள் என்று குறிப்பிடும்பொழுது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் அனைவரையுமே குறிக்கின்றது. முக்கியமாக இப்பகுதியில் வாழும் முஸ்லீம் மக்களையும் இது குறித்து நிற்கின்றது. இவர்கள் மத அடிப்படையிலான அடையாளத்தைக் கொண்டிருந்தபொழுதும் தமிழ் பேசும் மக்களென்ற பிரிவுக்கு உட்பட்டவர்களாகவே விளங்குகின்றனர்.

## அடையாளமும் பாரம்பரியமும்

தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் பொறுத்துத் தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது அரச குடியேற்றங்களினால் இப்பிரதேசம் அடைந்த பாதிப்புகளை விளங்கிக் கொள்வதற்கு அவசியமானதாகும். தமிழ்பேசும் மக்கள் பல தலைமுறைகளாகப் பெருமளவினராக வாழும் வடக்கு, - கிழக்கு மாகாணங்களை நாம் அவர்களது பாரம்பரியப் பிரதேசமென்று வரையறை செய்துகொள்ளலாம்.

பாரம்பரியப் பிரதேசம் என்பதை நிரூபிப்பதற்காக நீண்ட கால வரலாற்று ஆய்வை மேற்கொள்வது அவசியமற்றதும் அர்த்த மற்றதுமாகும். வரலாற்று ஆரம்ப கால ஆதாரங்களைக் கொண்டு

இக்கட்டுரையாசிரியர் வரலாற்று ஆய்வாளர், களப்பணியாளர் மற்றும் பல நூல்களை எழுதியிருப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மன்னர்களின் ஆட்சியதிகார எல்லைகளைக் கொண்டு இது சிங்கள மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்று நிரூபிக்க முயல்வது அர்த்தமற்ற செயலாகும். அப்படி ஆய்வை மேற்கொண்டால் இன்று உலகில் பல நாடுகளில் வாழும் மக்கள் அந்தப் பிரதேசங்களுக்கு அந்நியமானவர்கள் என்ற முடிவுக்குத் தான் வரவேண்டும். வரலாற்றில் காலத்திற்குக் காலம் வம்சங்கள் எழுச்சியடைவதும் பரந்த இராச்சியங்களை நிறுவுவதும் பின்னர் அவை தளர்வுற்று வீழ்ச்சியடைவதும் நாம் காணும் பொதுவான பண்புகளாகும். ஆட்சியாளர்களை வைத்துக்கொண்டு சுதேச மக்களை அடையாளங்காண்பதாயின் நாங்கள் ஒரு காலத்தில் போர்த்துக்கீசராகவும் ஒருகாலத்தில் ஒல்லாந்தராகவும் பிரிதொரு காலத்தில் ஆங்கிலேயராகவும் இருந்திருத்தல் வேண்டும்.

இலங்கை வரலாற்றிலே தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்ற பதம் தமிழ்பேசும் மக்களின் தேசிய இனம் என்ற இருப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து வழக்கத்திற்கு வந்ததாகும். இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்பாக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தமிழ்பேசும் மக்களின் அரசியல் பொருளாதார, சமூக நலன்களை மறுதலித்ததன் காரணமாகவே அவர்களது தாயகம் பற்றிய கோட்பாடும் அரசியலரங்கிலே முக்கியத்துவம் பெறலாயிற்று.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்பாக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தமிழ்பேசும் மக்களின் அரசியல் பொருளாதார, சமூக நலன்களை மறுதலித்ததன் காரணமாகவே அவர்களது தாயகம் பற்றிய கோட்பாடும் அரசியலரங்கிலே முக்கியத்துவம் பெறலாயிற்று.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் ஒரு பெரும் பிரிவினராகிய இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் குடியுரிமை வாக்குரிமையைப் பறித்த 1948, 49 ஆண்டுக் குடியுரிமை, பாராளு மன்றச் சட்டங்களைத் தொடர்ந்து தமிழ் பேசும் மக்களிடையே அச்ச உணர்வு வளரத் தொடங்கியது. தொடர்ந்து ஆட்சியுரிமை பெற்ற ஒவ்வொரு சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களினதும் தமிழ்பேசும் மக்கள் பெருத்த பாரபட்ச நடவடிக்கைகளால் இந்த அச்ச உணர்வு மேலும் மேலும் வலுப்பெறல் ஆயிற்று. இவ்வுணர்வுதான் தமிழ்பேசும் மக்களைத் தனியான தேசிய இனம் என்ற அடிப்படையில் சிந்திக்க வைத்தது.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்ற கருத்து தமிழ்பேசும் மக்கள் தனியான தேசிய இனமென்ற அரசியல் எண்ணக் கருவுடன் நெருங்கிய வகையிலே தொடர்புகொண்டது. இலங்கையர் தேசியம் என்பதில் பெரும்பான்மைச் சிங்கள மக்களும் சிங்களத் தலைவர்களும் பௌத்த தேசியமாக மாற்றிக் கொண்டதைத் தொடர்ந்து தமிழ்பேசும் மக்களும் பிரதானமாகத் தமிழ் மக்களும் தங்களைத் தனியான தேசிய இனமாக அடையாளங்காணவேண்டியதாயிற்று. இப்பின்னணியில்தான் 'தாயகம்' பற்றிய கோட்பாடு சிறப்பிடம் பெற ஆரம்பித்தது.

தாங்கள் பல தலைமுறைகளாக வாழ்ந்த வடக்கு -கிழக்கு பாரம்பரியப் பிரதேசங்களில் அரச ஆதரவிலான சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து தாயகம் பற்றிய எண்ணக் கரு மிகவும் வலுப்பெற்ற ஒன்றாக மாற்றம் பெற்றது. இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அரச ஆதரவிலான சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலே வடக்கு–கிழக்கு மாகாணங்கள் தங்கள் தாயகம் என்ற கருத்தை வலுப்பெற வைத்தன. இவ்வகையில் நிலத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைக்கப்பட்ட வகையிலே இனஉணர்வு வலுப்பெறுவதற்குச் சிங்கள அரசாங்கங்களின் தவறான அணுகுமுறை வழிவகுத்தது.

தமிழ் பேசும் மக்களின் விருப்பிற்கு ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் காரணமாகப் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் பிரதேசங்களைத் தமது பிரதேசங்களென்று அடையாளங் கொள்வதற்காகத் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகம், பிரதேசத் தாயகம், சட்டப்பூர்வத் தாயகம் தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் பிரதேசங்கள் வாழிடம் முதலான பதங்களைப் பயன்படுத்தும் எதார்த்த நிலைமை உருவானது. இந்தப் பதங்களை ஆழ்ந்து நோக்கும்பொழுது இவை பல அர்த்தங்கள் கொண்டவையாகக் காணப்படும். இருப்பினும் அடிப்படையில் ஓர் ஒற்றுமைத் தன்மையைக் கொண்டிருப்பதைக் காணலாம். இலங்கையின் சமூக பொருளாதார, கலாசார அரசியல் போக்குகள் வடக்கு—கிழக்கு வாழிடம் தொடர்பிலான ஆழமான புரிதலே மனக்கிளர்ச்சியைத் தமிழ்மக்களிடையே உருவாக்கிற்று.

வடக்கு—கிழக்குப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்படும் அபிவிருத்திகள் அப்பிரதேச மக்களின் நலன்களை மேம்படுத்தும் தன்மை கொண்டனவாகவே இருக்க வேண்டும். இந்த விருப்பின் அடிப்படையாகவே மேற்குறித்த பதங்கள் காணப்படுகின்றன. இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அரச ஆதரவிலான சிங்கள குடியேற்றத் திட்டங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகள் இப்பிரதேச மக்களின் நலன்களைப் பாரதூரமாகப் பாதிக்கும் தன்மை கொண்டனவாக அமைந்தன. பன்மைச் சமூகங்களைக் கொண்ட நாட்டில் ஓரினத்தவர் பெருமளவு வாழும் பிரதேசங்களில் அவர்கள் நலன்களைப் பாதிக்கும் வகையில் மற்றோர் இனத்தவரை அரசாங்க ஆதரவுக்குக் கொண்டு சென்று குடியேற்றுவது இன மோதலுக்கும் முரண்பாடுகளுக்கும் தொடர்ந்து வழிவகுக்கும் என்பதற்கு இலங்கை இந்தத் தருணம் வரை நல்ல உதாரணமாகவே விளங்குகின்றது.

தமிழ் பேசும் மக்களின் விருப்பிற்கு ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் காரணமாகப் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் பிரதேசங்களைத் தமது பிரதேசங்களென்று அடையாளங் கொள்வதற்காகத் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகம், பிரதேசத் தாயகம், சட்டப்பூர்வத் தாயகம் தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் பிரதேசங்கள் வாழிடம் முதலான பதங்களைப் பயன்படுத்தும் எதார்த்த நிலைமை உருவானது.

## அரச ஆதரவிலான குடியேற்றம்

இலங்கை, சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்கள் எனக் கருதப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பெருமளவு சிங்கள மக்களைக் குடியேற்றும் தன்மை கொண்ட அரச ஆதரவிலான குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்நடவடிக்கை-களுக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டன. உணவு உற்பத்தியில் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் புராதன நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைத்தலும், புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கிச் சிங்கள விவசாயிகளைக் குடியமர்த்துவதும் இத்தகைய காரணங்களில் ஒன்றாகக் காட்டப்பட்டது. அத்துடன் மிகச் செறிவான குடியடர்த்தியுள்ள சிங்களப் பகுதிகளில் இருந்து குடியமர்த்தி' க் குறைவுடைய தீவின் வடமேற்கு, கிழக்குப் பிராந்தி யங்களில் குடிபெயர்வதற்கு ஊக்குவிப்பு அளிக்கப்படுவதற்கும், இத்தகைய குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன என்றும் கூறப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இவ்வகையில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களில் பெருமளவு சிங்கள மக்களே குடியேற்றப்பட்டமை தமிழ், சிங்கள இன முரண்பாடுகளை மேலும் வளர்ப்பதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் ஏற்படுத்தப் பட்ட அரச ஆதரவிலான குடியேற்றத் திட்டங்களுக்குப் பின்னணியாகக் காட்டப்பட்டனவற்றைப் பின்வருமாறு வகுக்கலாம்.

-- அபிவிருத்தி

- நிலமற்றோருக்கு நிலம் வழங்கல்

- தமிழ் பிரதேசங்களில் தான் பயன்படுத்தப்படாத பெருமளவிலான விவசாய நடவடிக்கை-களுக்கான நிலங்கள் உள்ளன.

- அரசாங்க வருமானம் - முதலீட்டைக் கொண்டு ஆரம்பிக்கப்படும் இத்திட்டங்களில் சிங்கள மக்களுக்குப் போதிய நிலம் வழங்கல்.

அபிவிருத்தி எனும்போது உற்பத்தி அதிகரிப்பு, வருமானப் பெருக்கம், வேலைவாய்ப்பு அதிகரிப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக அமைகின்றது. இம்மூன்று அம்சங்கள் பொறுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்ட அரச குடியேற்றத் திட்டங்கள் அம்மாகாண, மாவட்ட மக்கள் நலன் பொறுத்து எத்தகைய முன்னேற்றத்தை ஏற்படுத்தின என்பதை வைத்து அபிவிருத்தியை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

அபிவிருத்தி எனும்போது உற்பத்தி அதிகரிப்பு, வருமானப் பெருக்கம், வேலைவாய்ப்பு அதிகரிப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக அமைகின்றது. இம்மூன்று அம்சங்கள் பொறுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்ட அரச குடியேற்றத் திட்டங்கள் அம்மாகாண, மாவட்ட மக்கள் நலன் பொறுத்து எத்தகைய முன்னேற்றத்தை ஏற்படுத்தின என்பதை வைத்து அபிவிருத்தியை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

அப்படிப் பார்க்கையில் இக்குடியேற்றத் திட்டங்களில் பரம்பரையாக இம்மாகாணங்களில் வாழ்ந்த மக்களைப் பெருமளவில் புறக்கணித்து மொழி, இன, மத, கலாச்சார அடிப்படையில் வேறுபாடு கொண்ட சிங்கள மக்களைக் குடியேற்றியமை உண்மையான அபிவிருத்தியைக் கொண்டுவராது. மாறாக இன மோதல்களையும் அமைதியற்ற சூழ்நிலையையும் உருவாக்கவே அவை வழிவகுக்கும். உண்மையான அபிவிருத்தியை அரசாங்கம் விரும்பியிருந்தால் அவ்வவ் மாகாண, மாவட்ட மக்களுக்கு முதலிடம் கொடுத்து அவர்களை இப்பிரதேசங்களில் குடியேற்றி அமைதியான சூழலில் நாட்டை வளப்படுத்தி யிருக்கலாம். இத்தகைய நடவடிக்கையால் தாங்கள் வாழ்ந்த பிரதேசங்களில் தாம் சிறுபான்மையினராக மாறிவிடுவோம் என்ற அச்சத்தை ஏற்படுத்தாததோடு, குடித்தொகைப் பண்புகளில் பாரதூரமான மாற்றங்கள் ஏற்படாத சூழ்நிலையையும் உருவாக்கியிருக்கும்.

நிலப்பசியைத் தீர்க்கும் நடவடிக்கையாக நிலமற்ற சிங்கள மக்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் நிலம் வழங்குதல் ஒரு காரணமாகக் கூறப்பட்டது. அத்துடன் எண்ணிக்கை அடிப்படையில் தமிழ் பேசும் மக்களிலும் பார்க்கச் சிங்கள மக்-களிடையே நிலமின்மை மோசமடைந்திருந்ததாகவும் எடுத்துக்காட்டப்பட்டது. ஒரு காலத்தில் வறண்ட பிரதேசங்களில் ஏற்படுத்தப்படும் குடியேற்றத் திட்டங்களுக்குப் பொருத்தமானவர் என்று கருதப்பட்ட மலைநாட்டுத் தமிழ் மக்களையும் சேர்த்துப் பார்த்தால் தமிழ் பேசும் மக்களிடையே நிலமின்மைப் பிரச்சினையானது முக்கியப் பிரச்சினையாகக் காணப்பட்டதனை விளங்கிக் கொள்ளலாம்.

அத்துடன் தென்னிலங்கைவாழ் சிங்கள மக்களிடையே நிலப்பற்றாக்குறைப் பிரச்சினையை அரசு எடுத்துக்காட்டுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல அவ்வளவு மோசமானதாகக் காணப்படவில்லை எனலாம். அம்பாந்தோட்டை மாவட்டத்திலும், தென்னிலங்கையிலும் அபிவிருத்திக்கு ஏற்ற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் காணப்படுகின்றது. மேலும், கிழக்கு மாகாணத்தில் குடியேற்றப் பட்ட சிங்கள மக்களுள் அனேகர் தென்னிலங்கையில் இருந் தல்லாது வறண்ட பிரதேச விவசாய நடவடிக்கையில் அனுபவம் பெறாத கண்டியைச் சேர்ந்த சிங்களவராகவே காணப்பட்டனர். அந்தந்த மாவட்டத்தில் காணப்பட்ட நிலமில்லாதோருக்கு முதலில் இக்குடியேற்றத் திட்டங்களில் நிலம் வழங்கி அவர்கள் நிலப் பிரச்சினையைத் தீர்த்து விவசாய உற்பத்தியில் ஈடுபடச் செய்தலே பெருமளவு விரும்பத்தக்க நடவடிக்கையாக இருக்கும்.

ஆனால், அம்மாவட்ட நிலமற்ற மக்கள், புறக்கணிக்கப்பட்டு அவர்கள் பரம்பரையாக வாழ்ந்த பிரதேசங்களிலும், அதற்கு அண்மையிலும் இன, சமூக அடிப்படையில் வேறுபாடு கொண்ட சிங்கள மக்களைக் கொண்டுவந்து குடியேற்றியமை உண்மையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதிலோ, நிலமின்-மைப் பிரச்சினையை நீக்குவதிலோ அரசாங்கம் கொண்டிருந்த நோக்கைச் சந்தேகமுற வைத்தது.

## இனவிகிதாச்சார மாற்றம்

தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயன்படுத்தாத பெருமளவிலான நிலங்கள் உள்ளன. இந்தக் கருத்தும் மறுத்துரைக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இலங்கையின் ஏனைய பாகங்களில் விவசாய அபிவிருத்திக்கு ஏற்ற நிலங்கள் இன்மையி-னால்தான் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அரச ஆதரவிலான சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன என்றும் கூறப்படுகின்றது. அரசாங்க சபைக் காலத்திலிருந்தே வடமேற்கு மாகாணத்தில் நீர்ப்பாசன அமைப்புகள் புனரமைக்கப்பட்டும், புதிதாக அமைக்கப்பட்டும் நீர்ப்பாசானத்-திற்குரிய விவசாய நிலங்கள் அதிகரிக்கப்பட்டு வந்தன. இவை முற்றுப்பெற்றதனைத் தொடர்ந்தே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீர்ப்பாசன அடிப்படையிலான குடியேற்றத் திட்டங்களை அமைத்துச் சிங்கள மக்களைக் குடியேற்றுவதிலே பதவிக்கு வந்த எல்லா அரசாங்கங் களும் அதிக அக்கறை கொண்டன.

அந்த அக்கறை நியாயமானதாக இருந்தபோதும் தமிழ்பேசும் மக்களைக் கொண்ட பிரதேசங்களில் இன விகிதாச்சார முறையை மாற்றியமைக்கும் தன்மை காணப்பட்டதால் அம்மக்கள் இவற்றைக் கடுமையாக எதிர்க்கலாயினர். அரசாங்கங்கள் இப்பிரதேசத்திலிருந்த மக்களை இங்குக் குடியேற்றியிருந்தால் இந்த இனமுரண்பாடு ஏற்பட்டிருக்க வாய்ப்பே இல்லாமல் போயிருக்கும். சிங்களப் பிரதேசங்களில் விவசாய அபிவிருத்திக்கு ஏற்ற நிலங்கள் இன்மையால்தான் தமிழ்ப் பிரதேசங்களில் இத்தகைய குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. ஏனெனில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தென் மாகாணத்திலும், வடமேற்கு மாகாணத்திலும் உலக நிதி நிறுவனங்களின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட நீர்ப்பாசன அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்களைக் கண்டுள்ளோம்.

சிங்களப் பிரதேசங்களில் விவசாய அபிவிருத்திக்கு ஏற்ற நிலங்கள் இன்மையால்தான் தமிழ்ப் பிரதேசங்களில் இத்தகைய குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. ஏனெனில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தென் மாகாணத்திலும், வடமேற்கு மாகாணத்திலும் உலக நிதி நிறுவனங்களின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட நீர்ப்பாசன அடிப்பைடையிலான அபிவிருத்தித் திட்டங்களைக் கண்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்பேசும் மக்களது பாரம்பரியப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட அரச ஆதரவிலான குடியேற்றத் திட்டங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கு ஆதரவாகத் தெரிவிக்கப் பட்ட மற்றோர் கருத்து இப்பாரிய திட்டங்கள் பெரும் அரசாங்க வருமானத்தையும் - முதலீட்டையும் கொண்டு ஆரம்பிக்கப் படுபவை. அதனால் நாட்டு மக்கள் அனைவரும் இக்குடியேற்றத் திட்டங்களில் குடிய-மர்த்தப்படுவதற்கு உரித்துடையவர் என்பதாகும். அத்துடன் இப்பாரிய திட்டங்கள் தேசியத் திட்டங்கள் என்று முலாம் பூசப்படுகின்றன.

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றியபின் பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டுக் கோடிக் கணக்கான பெறுமதியுள்ள மூலதனம் சிங்களப் பிரதேசங்களிலே முதலிடப்பட்டுப் பல வகைகளிலும் அபிவிருத்தியை அப்பகுதிகள் அடைந்தன. ஆனால், தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்த பகுதி நேரடியாக இந்த அபிவிருத்தியில் பங்குபெறாது பின்தங்கியதா கவே காணப்பட்டது. இப்பின்னணியில் இப்பிரதேசங்களும், மக்களும் விவசாய அடிப்படையிலாவது அபிவிருத்தி செய்யப்பட வேண்டியவையாகும். சுதந்திரத்தின் பின்பாக ஏற்படுத்தப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் கூட இப்பகுதிகளில் வாழும் மக்கள் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். அவ்வகையில் இப்பாரம்பரியப் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதோடு, அங்கு வாழ்ந்த மக்களும் தேசியப் பொரு-ளாதார அமைப்பிலே சமத்துவமாக இடம்பெறுமாறு செய்ய வேண்டியது அரசின் கடப்பாடு ஆகும்.

இலங்கையின் ஏனைய பாகங்களில் அரசாங்க, வெளிநாட்டு மூலதன உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ்பேசும் மக்களுக்கு உரிய பங்கு வழங்கப் படுகின்றதா? என்பதனை இங்கு உற்றுநோக்குவது அவசியமாகும். அரச வெளிநாட்டு மூலதனங்களைக் கொண்ட பாரிய கைத்தொழிற்சாலைகள், துரித மகாவலித்திட்டம், ரந்தெனிகல, விக்டோரியா நீர்மின்சாரப் பல்நோக்குத் திட்டங்கள் போன்றவற்றில் தமிழ்பேசும் மக்களுக்கு உரிய இடம் வழங்கப்படாமை இங்குக் கவனிக்கத்தக்கது. இதுபோன்ற நிலைமையையே சமூக நலத்திட்டங்களிலும் காண்கின்றோம்.

இப்பின்னணியில் பார்க்கையில் தமிழ்பேசும் மக்களது பாரம்பரியப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்படும் தேசியத் திட்டங் களில் உரிய பங்குகள் கோருவது பொருத்தமற்றதென்றே கூற வேண்டும். ஆனால், இம்மக்களின் குடித்தொகை விகிதாச்சாரப் பண்புகளை மாற்றாத வகையில் சிங்கள மக்களுக்கு இடமளிப்பதே பொருத்தமானதாகும். ஆனால், பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த கொள்கை-கள் இவற்றிற்கு முரணாக அமைந்த துடன் தமிழ்பேசும் மக்களது பிரதேசங்களிலே அவர்களைச் சிறுபான்மையினராக்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தன.

குடித்தொகை விகிதாச்சாரப் பண்புகளை மாற்றாத வகையில் சிங்கள மக்களுக்கு இடமளிப்பதே பொருத்தமானதாகும். ஆனால், பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த கொள்கை-கள் இவற்றிற்கு முரணாக அமைந்த துடன் தமிழ்பேசும் மக்களது பிரதேசங்களிலே அவர்களைச் சிறுபான்மையினராக்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தன.

### நிலம் – மக்கள்

விவசாயத்தை அடிப்பைடையாகக் கொண்ட பொருளா தாரங்களில் நிலம் மிக முக்கியமான உற்பத்திக் காரணியாக விளங்குகின்றது. நிலத்தின் அளவு, தரம், பயன்பாட்டுக்குள்ளான நிலம், நீர்ப்பாசன வசதி, போக்குவரத்து வசதி என்பனவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலேயே விவசாயப் பொருளாதாரத்தின் முன்னேற்றம் பெரிதும் தங்கியுள்ளது. தமிழ்பேசும் மக்களது பாரம்பரியப் பிரதேசங்களில் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பு வலுப்பெற்று வந்துள்ளது. இப்பிரதேசத்தின் உழைக்கும் மக்களில் 60 சதவீதத்தினர் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். இதனால் இப்பகுதி மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், நல்வாழ்வுக்கும் நிலம் முக்கியமாகின்றது.

ஆகவே, தமிழ்பேசும் மக்கள் தமக்கே இருக்கக்கூடிய நிலத்தின் அளவை இழப்பது நேரடியாக எதிர்காலப் பொருளாதார வாழ்வை இழப்பதற்குச் சமனாகின்றது. அத்துடன் பாரம்பரியப் பிரதேசங்களில் அவர்கள் இருப்பிற்கே அச்சுறுத்தலாக அமைகின்றது. இதனால்தான் தமிழ்பேசும் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே மேற்கொள்ளப்பட்ட அரச ஆதரவிலான குடியேற்றத் திட்டங்களுக்கு ஆரம்பத்திலிருந்தே கடும் எதிர்ப்பினைத் தெரிவித்து வந்துள்ளனர்.

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் பிரதான அரசியல் கட்சியாக விளங்கிய தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்ற 1949 இலிருந்தே அது தமிழ்பேசும் மக்கள் தனியான தேசிய இனம் என்பதிலும் சமஷ்டி முறையிலான அரசியல் அமைப்பின் கீழ் ஒன்றுபட்ட இலங்கையில் தம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தது. அதனால் அதன் ஆரம்ப காலத்திலிருந்தே மொழி, பிரதேசத் தாயகம், பொதுவான வரலாற்றுணர்வு, கலாச்சாரம் என்பனவற்றின் அடிப்படையில் வேறான, தனித்துவமான தமிழ்த் தேசிய இனம் என்பதனை வலியுறுத்திவந்துள்ளது.

அத்துடன் சமஷ்டி முறையிலான அரசியல் அமைப்பில் நம்பிக்கை கொண்டிருந்தமையால், தமிழர்கள் பெருமளவு வாழ்ந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் பிரதேசத் தாயகம் எனக் கொள்வதிலும் அதிக அக்கறை கொண்டதாகக் காணப்பட்டது. இதனால்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்ட அரச ஆதரவிலான சிங்களக் குடியேற்றங்களுக்குக் கடும் எதிர்ப்பினைத் தமிழரசுக் கட்சியினர் ஆரம்பத்திலிருந்தே காட்டியுள்ளனர். மொழியைப் போலவே பிரதேசத் தாயகம் அல்லது பாரம்பரியப் பிரதேசம் என்பது தமிழ்பேசும் மக்களின் தேசிய இன இருப்பிற்கு மிக அத்தியாவசியமானதாக அமைந்தது.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் பொருளாதார சமூகக் குறைபாடுகள் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களினால் தீர்த்து வைக்கப்படாது மோசமாக்கப்பட்ட நிலையில் தனியான தேசிய இனம் என்பதும் அவர்கள் வாழ்ந்த சட்டரீதியான பிரதேசமும் மேலும் முக்கியத்துவம் பெறுவது தவிர்க்க முடியாததாகியது. தொடர்ந்து தமிழரசுக் கட்சி இந்தக் கொள்கையில் வலுவான நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வந்தது. இருப்பினும் அரசியல் வழிமுறைகளில் தொய்வும் சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளும் கோலோச்சியமையால் அரசியலற்ற போக்கு எதார்த்தம் பெற்றது.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் பொருளாதார சமூகக் குறைபாடுகள் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களினால் தீர்த்து வைக்கப்படாது மோசமாக்கப்பட்ட நிலையில் தனியான தேசிய இனம் என்பதும் அவர்கள் வாழ்ந்த சட்டரீதியான பிரதேசமும் மேலும் முக்கியத்துவம் பெறுவது தவிர்க்க முடியாததாகியது. தொடர்ந்து தமிழரசுக் கட்சி இந்தக் கொள்கையில் வலுவான நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வந்தது.

### தேசிய இனம்

சுதந்திரத்தின் பின்பான காலத்திலிருந்தே தமிழ்பேசும் மக்கள் தங்களைத் தனியான தேசிய இனமென அடையாளங்காட்டுவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக அக்கறை கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இந்நிலைமைக்கு அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த பெரும்பான்மைச் சிங்கள அரசாங்கங்களைப் பாரபட்சமான நடவடிக்கைகள் காரணமாக அமைந்தன. இதன் வெளிப்பாடாகவே தமிழ்பேசும் மக்கள் தேசிய இனம், பிரதேசத் தாயகம் முதலான அம்சங்களை வலுவாகப் பற்றிக்கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

வடக்கு–கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்ட அரச ஆதரவிலான சிங்களக் குடியேற்றத் திட்டங்களுக்கு எதிராகத் தமிழ்பேசும் மக்கள் காட்டிய தீவிரமான எதிர்ப்பு அவர்களது தேசிய இருப்பிற்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலின் விளைவாக ஏற்படுத்தப்பட்டதாகும். அதாவது நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பெரும்பான்மையினராகத் தெளிவான தேசிய இன அடையாளங்களுடன் வாழ்ந்து வந்த பாரம்பரியப் பிரதேசங்களில் (சிறுபான்மையினராக) அவர்கள் குடித்தொகைப் பண்புகளை மாற்றமுற்பட்டதன் விளைவாக உருவாக்கப்பட்ட எதிர்ப்பாகவும் காணப்பட்டது. இக்குடியேற்றத் திட்டங்களினால் வடகிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையினராக வாழ்ந்துவந்த தமிழ்பேசும் மக்களின் குடித்தொகைப் பண்புகளிலே பாரதூரமான மாற்றங்கள் ஏற்பட்டன. இந்நடவடிக்கையினால் கிழக்கு மாகாணம் அவர்களது பாரம்பரியப் பிரதேசங்களில் ஒன்று என்பது அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டது.

தமிழ்பேசும் மக்களிடையே நிலவும் அச்சத்திற்கும் அவர்களது பிரச்சினைக்கும் தீர்வு காணப்படும் வகையில் குடியேற்றத் திட்டங்கள் தொடர்பான அரசின் கொள்கை ஓரினச் சார்புடையதாகவே விளங்குகின்றது. தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் வகையில் அரசின் கொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டும். இனங்களுக்கிடையில் சமத்துவமான சூழ்நிலை நிலவும் பட்சத்தில்தான் அமைதி சுபீட்சம் எற்பட்டு நாடு முன்னேற்றமடையும். நாட்டில் தேசிய ஐக்கியம், தேசக்கட்டுமானம், தேசிய ஒருங்கிணைப்பு என்பன வலுப்பெற்ற சக்திகளாக மாறி ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கை மலர்வதற்கு இதுவரை காணப்பட்ட அரசின் ஓரினச்சார்புத் தன்மை கைவிடப்பட வேண்டும். சகல இனங்களும் அவற்றின் பண்பாட்டம்சங்களும் சமத்துவமான முறையில் ஆதரிக்கப்படல் வேண்டும். இந்நடவடிக்கையினால் தான் இனவாதப் பண்புகளை அரசியலிலிருந்து அகற்றி ஆரோக்கியமான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

தமிழ்பேசும் மக்களிடையே நிலவும் அச்சத்திற்கும் அவர்களது பிரச்சினைக்கும் தீர்வு காணப்படும் வகையில் குடியேற்றத் திட்டங்கள் தொடர்பான அரசின் கொள்கை ஓரினச் சார்புடையதாகவே விளங்குகின்றது. தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் வகையில் அரசின் கொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டும். இனங்களுக்கிடையில் சமத்துவமான சூழ்நிலை நிலவும் பட்சத்தில்தான் அமைதி சுபீட்சம் எற்பட்டு நாடு முன்னேற்றமடையும்.

முடிவாக...

ஆனால், இன்றுவரை மாறி மாறி வந்த அரசாங்கங்கள் இனவாத மேலாதிக்கப் பண்புடன்தான் இயங்குகின்றன. போருக்குப் பிந்திய காலத்திலும் இனவாதப் பண்பு கைவிடப்படுவதாக இல்லை. வடகிழக்குப் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொள்ளவும் தனித்துவமான கலாச்சார அம்சங்களைச் சிதைக்கவும் இராணுவ மேலாதிக்கத்தைப் பல்வேறு வடிவங்களிலும் நிலைநிறுத்தவும் மகிந்த அரசு நவீனப் பாணியில் செயலாற்றி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் அவசரகாலச் சட்டமும்

■ செ. துரைசிங்கம்

*இலங்கையின் அசைவியக்கத்தை வடிவமைத்த அவசரகாலச் சட்ட ஒழுங்குவிதிகள் அமுலில் இருந்து முற்றாக நீக்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பாராளுமன்றத்தில் அறிவித்தார். அவசரகாலச் சட்டம் அமுலிலிருந்து நீக்கப்படுவது வரவேற்புக் குரியதாகும். ஏனெனில் அதனை நீக்குமாறு பல்வேறு ஜனநாயக சக்திகள், அரசியல் கட்சிகள் முற்போக்கு இடதுசாரிகள் என்போர் தத்தம் தளங்களிலும் பொதுத் தளங்களிலும் குரல் கொடுத்து வந்துள்ளார்கள்.*

*அதேவேளை இந்தியாவும் அமெரிக்காவும் அவசரகாலச் சட்டத்தை அகற்ற வேண்டுமென அழுத்தங்கொடுத்து வந்திருக்கின்றன. ஆதலால் ஜனாதிபதி இவ்வாறான சூழலில் பாராளுமன்றத்துக்கு வருவது என்று அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக அறிவித்து ஒரு ஜனநாயகத் தோற்றப்பாட்டைக் காட்டியிருக்கின்றார். இலங்கை சுதந்திரமடைந்த காலத்துக்குப் பின் (1948க்குப் பின்) 25.08.2011வரை சுமார் 31 ஆண்டுகள் இடைவிட்டு விட்டு அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்து வந்துள்ளது. பாராளுமன்றத்தில் 444 தடவைகள் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டன. இறுதியாக இச்சட்டம் 2005ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மீண்டும் கொண்டுவரப்பட்டது.*

*இந்த அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தாது ஆட்சிசெய்த ஒரு அரசாங்கம்தானும் இலங்கையில் இருந்தது கிடையாது. ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரகட்சி தலைமையிலான கூட்டணியும் இச்சட்டத்தின் நிழலிலேயே ஆட்சிஅதிகாரம் புரிந்து வந்துள்ளன. அவசரகாலச் சட்டம் என்பது தனியே மகிந்த சிந்தனை அரசாங்கத்தால் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல. ஆளும் வர்க்க அரசாங்கம் ஒவ்வொன்றினாலும் அவ்வப்போது மக்களின் மேல் பிரயோகித்து அடக்குமுறைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சட்டவிதிகளைக் கொண்டதாகவே இது இருந்துவந்துள்ளது.*

*சிங்கள ஆளும் வர்க்கக் - கட்சியின் அரசாங்கங்கள் இலங்கை யில் வர்க்க அடிப்படையில் முன்வைக்கப்பட்ட தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் உழைக்கும் மக்கள் அவ்வப்போது முன்வைத்த கோரிக்கைகளையும் போராட்டங்களையும்*

இக்கட்டுரையாசிரியர் மாற்று ஊடகச் சிந்தனையாளர், களப்பணியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறியடித்து அடக்குவதற்கு அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இச்சட்டத்தின் கீழேயே கொடிய அடக்குமுறைகளும் இரத்த ஆறுகளும் ஓடியிருக்கின்றன. தெற்கிலே உயிர்ப் பலிகள் பல்லாயிரக்கணக்கில் எடுக்கப்பட்டன. இருண்ட ஆட்சிகளாக நடத்தப்பட்டன. வரலாற்றில் இரண்டு பிரதான சிங்களக் கட்சியின் தலைமைகளிலான அரசாங்கங்களின் அவசரகாலச் சட்டத்தின் கீழான இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாற்றுப் பதிவுகளை மக்கள் மறந்துவிட மாட்டார்கள்.

(II)

1977ஆம் ஆண்டுக்குப் பின்பு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக் கட்டிலேறியது. இச்சமயம் பாராளுமன்றத்தில் ஐ.தே.க மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 8 ஆசனங்கள் மட்டுமே பெற்றிருந்தது. எதிர்க்கட்சியாகவும் இருந்து செயற்படுவதற்கான தகுதியைச் சுதந்திரக்கட்சி இழந்திருந்தது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழக் கோரிக்கையுடன் இத்தேர்தலில் களமிறங்கி 18 ஆசனங்களைக் கைப்பற்றிக்கொண்டது. தமிழர் கூட்டணியின் தலைவர் அ. அமிர்தலிங்கம் இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்.

இத்தருணத்தில் ஆளுங்கட்சியாகிய ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றத்தில் தனக்கிருந்த பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு எந்தச் சட்டத்தையும் ஆக்கக் கூடியதாக இருந்தது. தனக்கிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 1978ஆம் ஆண்டு இலங்கைக்குரிய புதிய அரசியல் அமைப்பினைக் கொண்டு வந்தது. இந்த அரசியலமைப்பில் இலங்கைப் பாராளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமுலுக்குக் கொண்டு வரும் எந்தச் சட்டமும் அது அரசியலமைப்புடன் ஒத்துப் போகின்றதோ இல்லையோ. அது செயற்படுத்தப்படும் என்கிற அதிகாரமும் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை 1976களின் ஆரம்பத்தில் வட-கிழக்கில் தமிழ் இளைஞர்களின் தீவிரவாதச் செயற்பாடுகள் படிப்படியாக அரங்கேறத் தொடங்கின. குறிப்பாகத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக 1972ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட புதிய தமிழ்ப் புலிகள் என்ற அமைப்பின் தீவிரவாத நடவடிக்கைகள் வெளித்தெரிய ஆரம்பித்தன. இவர்களது 'அரசியல் கொலை'ச் செயற்றிட்டம் முன்னணிக்கு வரத்தொடங்கியது. 1973ஜூலை 27ஆம் திகதி யாழ்ப்பாண மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் மூலம் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஆயுதமேந்திய குழு ஒன்று உருவாகியுள்ளது என்பது வெளியுலகுக்கு வெளிப்பட்டது. தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் அரசுக்கு ஆதரவாக இயங்கிவந்த பலரும் பயமுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். இளைஞர்களின் தீவிரவாத நடவடிக்கைகள் எழுச்சிபெறத் தொடங்கின. இந்தக் குழாமில் ஒருவராக இருந்து செயற்பட்டு வந்தவர் உரும்பிராயைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவகுமாரன். பின்னர் இவர் சில காலமாக பொலிசாரால்

சிங்கள ஆளும் வர்க்கக் - கட்சியின் அரசாங்கங்கள் இலங்கை யில் வர்க்க அடிப்படையில் முன்வைக்கப்பட்ட தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் உழைக்கும் மக்கள் அவ்வப்போது முன்வைத்த கோரிக்கைகளையும் போராட்டங்களையும் முறியடித்து அடக்குவதற்கு அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இச்சட்டத்தின் கீழேயே கொடிய அடக்குமுறைகளும் இரத்த ஆறுகளும் ஓடியிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடப்பட்டு வந்தார். இவர் 1974 ஜுன் மாதம் பொலிசாரால் கைது செய்ய முற்பட்டபோது தன்னைத்தானே தற்கொலை செய்துகொண்டார்.

உலகத் தமிழாராட்சி நிறுவனத்தின் நான்காவது தமிழாராட்சி மாநாடு 1974 சன 3--_10ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பல்வேறு அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்டார்கள். ஆரம்பத்திலே இந்த மாநாடு யாழ்ப் பாணத்தில் நடைபெறுவற்கு அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்து வந்தது. இதையும் மீறி இந்த மாநாடு திட்டமிட்டபடி நடை பெற்றது. ஆனால், அரசாங்கம் படையினரை அனுப்பி மாநாட்டைக் குழப்பத் திட்டமிட்டது. சனவரி 10ஆம் திகதி இறுதிநாள் நிகழ்ச்சி யின்போது நூற்றுக்கணக்கான பொலிசார் பொதுமக்களை நோக்கிக் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியதுடன், பொதுமக்கள் மீது மோசமான தாக்குதல்களையும் மேற்கொண்டனர். இதனால் ஒன்பது தமிழர்கள் கொல்லப் பட்டதுடன் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களும் காயமடைந்தனர்.

பொலிசாரின் இந்த நடவடிக்கை எந்தவிதமான ஆத்திர மூட்டலும் இல்லாமலே நடைபெற்றதாக அப்பகுதியில் இருந்த அனைவரும் கூறினார்கள். இது பற்றிய விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கு அரசாங்கம் மறுத்துவிட்டது. தமிழர்களுக்கு எதிரான பாதுகாப்பின்மை அச்சவுணர்வு ஏற்படத் தொடங்கியது. வடகிழக்கில் நிலைமை படுமோசமாக மாறத் தொடங்கியது. இதையடுத்து 1976 மே 14ஆம் திகதி வட்டுக்கோட்டையிலுள்ள பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய முன்னணி மாநாட் டில் தமிழர் விடுதலைக் கூட்டணி (¾.¼.'.°) உருவாக்கப்பட்டது.

இம்மாநாட்டில் ஏகமனதாகப் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. 'ஒவ்வொரு நாட்டுக்கும் உள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான இறைமையுள்ள மதச்சார்பற்ற சோசலிசத் தமிழீழத்தை அமைப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணிப் போம். இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இதுவே பாதுகாப்பானதாக அமையும்' என்று தந்தை செல்வா கூறினார். ஐக்கிய இலங்கையில் தமிழர் தன்மானத்துடனும் பாதுகாப்புடனும் வாழ்வதற்குச் சுயாட்சி அரசு ஒன்றை அமைப்பதற்குச் சிங்கள மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்குத் தமிழரசுக் கட்சியும் அதன்பின் தமிழர் கூட்டணியும் எடுத்த முயற்சிகள் யாவும் தோற்றுவிட்டதையும் எடுத்துக் கூறினார்.

'ஒவ்வொரு நாட்டுக்கும் உள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான இறைமையுள்ள மதச்சார்பற்ற சோசலிசத் தமிழீழத்தை அமைப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணிப் போம். இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இதுவே பாதுகாப்பானதாக அமையும்' என்று தந்தை செல்வா கூறினார்.

மேலும் தந்தை செல்வா எமது முயற்சிகளுக்கெல்லாம் சிங்களத் தலைவர்கள் தடையாக இருந்துள்ளனர். எமது நியாயமான கோரிக்கைகளுக்கும் அவர்கள் இணங்குவதாயில்லை. இந்த நிலையில் எமக்கெனத் தனிநாடு கோருவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை எனவும் தெளிவாக எடுத்துரைத்தார். இதன் பின்பு தந்தை செல்வா 'வட்டுக்கோட்டைப் பிரகடனம்' என்று இன்று எல்லோராலும் அழைக்கப்படும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

உத்தேச தமிழ் ஈழத்தின் பிரஜாவுரிமை யார் யாருக்கு வழங்கப்படும் என்ற விபரங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்டது. அதன்படி பின்வருவோர் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் பிரஜைகளாக இருப்பார்கள்.

- தமிழ் ஈழப் பிராந்தியத்தில் வசிக்கும் அனைவரும்
- இலங்கையில் எப்பகுதியிலும் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் தமிழ் ஈழத்தின் பிரஜாவுரிமை கோரினால்
- இலங்கையில் மூதாதையர்களைக் கொண்ட உலகின் எப்பகுதியிலும் வசிக்கும் தமிழ் பேசுவோர் தமிழ் ஈழத்தின் பிரஜாவுரிமையைக் கோரினால்

'வட்டுக்கோட்டைத் தீர்மானம்' என அழைக்கப்படும் இந்தத் தீர்மானம் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குச் சர்வதேச அளவில் ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுப்பதாக இருந்தது. இதற்கு முன்னரும் தமிழ் ஈழத்திற்கான கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டிருந்த போதிலும் உத்தியோக பூர்வமான ஒரு தீர்மானத்தின் மூலம் இதற்கான பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டமை இதுவே முதல் தடவை ஆகும்.

இதனைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களாக இருந்த ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோரின் மரணங்கள் இடம்பெற்றன. இவர் களுடைய வெற்றிடங்களை நிரப்புவதற்காக எம்.சிவசிதம்பரம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவும், அ. அமிர்தலிங்கம் கூட்டணியின் செயலதிபராகவும் நியமிக்கப்பட்டனர்.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவருடைய தமிழரசுக்கட்சி யினூடாகச் சமஷ்டி மூலமாகத் தமிழ் பிரதேசத்துக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகக் கடந்த 25 வருடகாலமாகக் கடுமையாக உழைத்து வந்தார். தமிழ்ப் பகுதிகளுக்கு அதிகாரங்களையாவது பெறுவதற்காகப் பிரதமர்களாக இருந்த பண்டாரநாயக்கா, டட்லிசேனாநாயக்கா ஆகியோருடன் அவர் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார். சிங்களவர்களின் எதிர்ப்புக் காரணமாக இந்த ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவருடைய தமிழரசுக்கட்சி யினூடாகச் சமஷ்டி மூலமாகத் தமிழ் பிரதேசத்துக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகக் கடந்த 25 வருடகாலமாகக் கடுமையாக உழைத்து வந்தார். தமிழ்ப் பகுதிகளுக்கு அதிகாரங்களையாவது பெறுவதற்காகப் பிரதமர்களாக இருந்த பண்டாரநாயக்கா, டட்லிசேனாநாயக்கா ஆகியோருடன் அவர் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார்.

சமஷ்டி முறையிலான தீர்வுக்கான யோசனைகள் கூட அரசி யலமைப்புச் சபையில் விவாதிக்கப்படாமலேயே நிராகரிக்கப் பட்டன. தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கையோ சில தமிழ் அமைப்புகளின் 20 அம்சக் கோரிக்கையோ ஒருபோதும் கவனத்தைப் பெறவில்லை. மொழியுரிமை, மதஉரிமை, பிரஜா உரிமை ஆகியவற்றை இழந்து தினசரி நடைபெறும் சிங்களக் குடியேற்றத்தால் தனது பாரம்பரியப் பிரதேசங்களைப் படிப்படியாகத் தமிழ் மக்கள் இழந்துவந்தனர். தொடர்ந்து கல்வித் துறையிலும் அரச உத்தியோகங்களிலும் மற்றும் வளப்பகிர்விலும் பல்வேறு வீழ்ச்சிகளைத் தமிழ் மக்களும் தமிழ்ப் பிரதேசங்களும் முகங் கொடுக்கத் தொடங்கின.

ஏழு வருடகால 1970--1977 இடைவெளியின் பின்னர் 1977 ஜூலை 21இல் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலைக் கூட்டணித் தமிழீழம் என்ற அவர்களுடைய கோரிக்கைக்கு மக்களுடைய ஆணையைப் பெறுவதற்கான ஒரு தேர்தலாகவே இது இருக்கும் என அறிவித்தனர். இவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனிநாட்டுக்கான கோரிக்கை எவ்வாறு உருவானது என்பது பற்றி விரிவாகத் தெளிவுபடுத்தியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நீங்கள் வழங்கும் ஒவ்வொரு வாக்கும் சிங்கள ஆட்சியிலிருந்து தமிழ்நாடு விடுதலை அடைவதற் கான ஒரு ஆணையாக இருக்கும் எனத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். இத்தேர்தலில் கூட்டணி 18 ஆசனங்களைப் பெற்றுப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி அந்தஸ்துடன் இருந்தது.

(III)

இந்தத் தேர்தல் வெற்றியின் மூலம் தமிழ் ஈழத்தை அமைப்ப தற்கான ஆணையைத் தமிழ்மக்கள் கூட்டணிக்கு வழங்கி யுள்ளனர் எனக் கூட்டணித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்து வந்தார்கள். ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவியேற்று ஒரு மாதம் கடப்பதற்குள்ளாகவே தமிழர்களுக்கு எதிரான மற்றொரு இனக்கலவரம் 1977 ஆகஸ்ட் 16ஆம் திகதி ஆரம்பமானது. இந்தக் கலவரம் சுமார் இரண்டு வாரகாலம் நீடித்தது. இந்தக் கலவரத்தின்போது ஆண்–பெண் சிறுவர்–முதியவர் என்ற வேறுபாடின்றி நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழர்களது வீடுகள் கடைகள் கொள்ளையிடப்பட்டுத் தீமூட்டி எரிக்கப்பட்டன.

இந்த இனக்கலவரம் மத்திய மாகாணத்திலுள்ள பெருந் தோட்டங்களையும் மக்களையும் மிகவும் மோசமாகப் பாதித்தது. இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மலையக மக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக வவுனியா மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்தனர். வவுனியாவில் உருவாக்கப்பட்ட விவசாயப் பண்ணைகளில் இந்த மக்கள் குடியேற்றப்பட்டனர். தென்பகுதி யில் வாழ்ந்து வந்த தமிழ்மக்கள் பலர் தமது வாழ்விடப் பாதுகாப்பு கருதித் தமது சொந்தப் பிரதேசங்களுக்கு - மண்ணுக்கு இடம்பெயர்ந்தனர். போனவர்கள் பலர் மீண்டும் திரும்பவில்லை.

இந்த இனக்கலவரம் மத்திய மாகாணத்திலுள்ள பெருந் தோட்டங்களையும் மக்களையும் மிகவும் மோசமாகப் பாதித்தது. இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மலையக மக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக வவுனியா மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்தனர். வவுனியாவில் உருவாக்கப்பட்ட விவசாயப் பண்ணைகளில் இந்த மக்கள் குடியேற்றப்பட்டனர்.

இன்னொரு புறம் பதவியேற்ற அரசாங்கம் 1972ஆம் ஆண்டில் குடியரசு அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கான தீர்மான மொன்றைக் கொண்டு வந்தது. இதன் அடிப்படையில் புதிய அரசியலமைப்பு 1978ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. 'வெஸ்ட்மினிஸ்டர்' பாணியிலான அரசாங்கத்தை நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட சனாதிபதி தலைமையிலான அரசாங்கமாக மாற்றுவதே இந்த அரசியலமைப்பின் பிரதான அம்சமாக இருந்தது. இதன்படி பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது சனாதிபதியாக 1978 பிப்ரவரி 4ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டார்.

இலங்கை ஒற்றையாட்சியைக் கொண்ட நாடாக இருக்கும் என்பதை இந்த அரசியலமைப்பு மீண்டும் உறுதிப்படுத்துவதாக இருந்தது. இந்த அரசியலமைப்பு முதல் தடவையாகத் தேசியக் கொடி, தேசிய கீதம், தேசிய இனம் ஆகியவற்றைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

பௌத்த மதத்தைப் பொறுத்தவரையில் 1972ஆம் ஆண்டில் அரசியலமைப்பில் கொடுக்கப்பட்-டதைவிட முக்கியமான இடத்தை 1978 அரசியலமைப்பு கொடுத்துள்ளது. அதாவது 'இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு முக்கிய இடத்தை வழங்கும் இதன்படி பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுவதும் அரசாங்கத்தின் கடமையாக இருக்கும்.' இவ்வாறு அரசியலமைப்பின் 9ஆவது பிரிவு கூறுகின்றது. இதுபோல் உத்தியோக மொழித் தொடர்பில் அரசியலமைப்பின் 18ஆவது பிரிவு 'சிங்களம் இலங்கையின் உத்தியோக பூர்வமான மொழியாக இருக்கும்' எனக் கூறுகிறது.

ஆக, பௌத்த மதத்திற்கும் சிங்கள மொழிக்கும் 1978 அரசியலமைப்பில் அரசாங்கம் மேலும் உயர்ந்த இடத்தைக் கொடுத்துள்ளது. பல்லினத்தன்மை மிக்க நாடு எனும் பண்பாட்டுக்கு மாறாக அரசியலமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் இலங்கையில் முனைப்படைந்துள்ள இனப்பிரச்சினைக்கான அடிப்படைகளைப் புரிந்து தீர்வுகளை முன்வைக்கும் மற்றும் சமூகநீதி, சமூகச் சனநாயகம், சமூகச் சமத்துவம் போன்ற உரிய பண்பாடுகளை வாழ்வியல் நெறிகளாக உருவாக்கும் நெறிமுறைகள் எதனையும் உருவாக்காத ஆட்சி முறை வலுப்பெறத் தொடங்கியது. இனவாத அரசியல் பேரினவாத அரசியலாக மேலாதிக்கம் பெற்று அரச வன்முறைகளையும் கட்டவிழ்த்துப் போரியல் வாழ்வு தமிழ்பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்டது.

தமிழ்மக்கள் தமக்கான அரசியல் வழிமுறைகள் குறித்துத் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாமலாயிற்று. வாழ்வியல் விழுமியம் சார்ந்த பண்பு மாற்றத்துக்கான 'அரசியல் வழிமுறைகள்' முனைப்புப் பெற்றன. ஆயுத வழிமுறையிலான தாக்குதல் தற்காப்புத் தாக்குதல் என்னும் நிலைமைகள் உருவாயின.

தமிழ்மக்கள் தமக்கான அரசியல் வழிமுறைகள் குறித்துத் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாமலாயிற்று. வாழ்வியல் விழுமியம் சார்ந்த பண்பு மாற்றத்துக்கான 'அரசியல் வழிமுறைகள்' முனைப்புப் பெற்றன. ஆயுத வழிமுறையிலான தாக்குதல் தற்காப்புத் தாக்குதல் என்னும் நிலைமைகள் உருவாயின.

இந்நிலையில் அரசாங்கம் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தின்படி விடுதலைப் புலிகளைத் தடை செய்தது. 1978 செப்டம்பர் 7ஆம் திகதி இரத்மலானை விமான நிலையத்தில் எயார் - சிலோன் விமானம் ஒன்று புலிகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. இவ்வாறு நிலைமைகள் வேறு-வகையில் வளர்ந்தன, மோசமாயின. தமிழ் இளைஞர்களின் தீவிரவாதச் செயல்கள் அதிகரித்த நிலையில் 1979ஆம் ஆண்டு ஜுலையில் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் சட்டத்திற்குப் பதிலாகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் 1979ஆம் ஆண்டில் 48ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமாகக் கொண்டுவரப்பட்டது.

தென்னாப்பிரிக்காவில் சட்டைத்தையொத்ததாகவுள்ள இந்தச் சட்டம் ஐ.ஆர்.ஏ. பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக பிரிட்டிஷ் அரசு கையாளும் சட்டத்தை விடவும் மிகக் கொடூரமானது எனவும் குறிப்பிடுகின்றது.

ஜுலை 20ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கொண்டுவரப்பட்ட இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் மூன்று வருடத்திற்கு மட்டுமே அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், பின்னர் இது நீடிக்கப்பட்டது. இலங்கையில் 30 வருடங்களுக்கு மேலாகப் பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலில் இருந்து வருகின்றது. இதனால் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர்கள் அதிகம் இன்றுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ச் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். தமது எதிர்காலத்தைத் தொலைத்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இச்சட்டத்தைவிட அவசரகாலச்சட்டமும் நடைமுறையில் உள்ளது. 1947 ஆம் ஆண்டின் பொதுசனப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் இலங்கை அரசியலமைப்பின் 76, 155 ஆகிய பிரிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவசரகாலச் சட்டம் செயற் படுத்தப்படுகின்றது. இச்சட்டத்தின்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எவரையும் கைது செய்து காலவரையறையின்றி அதாவது அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும் வரையில் தடுத்துவைக்க ஆணையிடலாம். ஆனால் இலங்கையில் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்த தன்மையினால் ஒருவர் தனது வாழ்நாள் முழுக்கவே விசாரணையின்றிக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப் படலாம். இந்த எதார்த்த நிலையே இன்றுவரை பலருக்குத் தொடர்கிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் 1982ஆம் ஆண்டும், பின்பு 1988ஆம் ஆண்டும் திருப்பப்பட்டது. இதில் வழங்கப்பட்டுள்ள சரத்துகள் போதாதென்று 2006ஆம் ஆண்டு மகிந்த அரசாங்கம் இன்னுமொரு பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் கொண்டு வந்தது.

இது முதலாவதாகப் பயங்கரவாத நடவடிக்கை என்றால் என்ன? என்பதை வரையறுத்தது. அது பிரிவினைக்கு ஆதரவாகப் பேசுதல் எழுதுதல் நடவடிக்கைகளைச் செய்தல் அப்படிச் செய்பவர்களுக்கு ஏதேனும் முறைகளில் உதவுதல் போன்ற வற்றையும் குறித்துரைத்தது. ஆக இச்சட்டைத்தின் கீழ் கைதா- கின்றவருக்கு ஆதரவாக நீதிமன்றில் ஆஜராகும் சட்டத்தரணிகள் கூடக் குற்றவாளிகளாகக் காணப்-படலாம். புலிகளின் தலைவர் களின் ஆதரவாளர்களும் கைது செய்யப் படுவது மட்டுமன்றி அவர்களின் சொத்துகள் கூட அரசாங்கம் உடமையாக்கப்படலாம் என்று தெரிவிக்கப் படுகின்றது.

அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதச் சட்டமும் ஒன்றாகச் செயற்படுத்தப்பட்டால் என்ன நடக்கும்? நாங்கள் கடந்த பல ஆண்டுகளாக அனுபவித்து வந்த நரகத் துன்பம்தான் மிஞ்சும். இன்றுவரை நிலைமைகள் மாறிவிட்டதாகக் கூறிக் கொண்டாலும் இச்சட்டங்கள் இன்றும் மீளப் பெறப்படவில்லை. இந்தச் சட்டங்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் இன்றும் மீட்கப்பட வில்லை.

அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதச் சட்டமும் ஒன்றாகச் செயற்படுத்தப்பட்டால் என்ன நடக்கும்? நாங்கள் கடந்த பல ஆண்டுகளாக அனுபவித்து வந்த நரகத் துன்பம்தான் மிஞ்சும். இன்றுவரை நிலைமைகள் மாறிவிட்டதாகக் கூறிக் கொண்டாலும் இச்சட்டங்கள் இன்றும் மீளப் பெறப்படவில்லை. இந்தச் சட்டங்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் இன்றும் மீட்கப்பட வில்லை. அப்படியானால் நாம் எங்கே நிற்கிறோம்? எங்கே செல்லப் போகின்றோம்?

இலங்கையில் இனமுரண்பாடு கூர்மையடைந்து வந்தபோது தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை நிராகரித்து ஒடுக்கவும், அடக்கவும் சட்ட ஏற்பாடுகள் அரசாங்கத்துக்குத் தேவைப்பட்டது. அதாவது அடக்குமுறை, ஒடுக்குமுறைச் கலாச்சாரத்தினூடாக இலங்கையில் சனநாயகம் மற்றும் மனித உரிமை மீறல்களை மேற்கொள்வதற்கு இரண்டு வகையான ஒடுக்கு முறைச் சட்டங்கள் அரசாங்கத்துக்குத் துணைபுரிந்து வந்தன. இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்த பேரினவாத அரசுகள் இந்தச் சட்டங்களை நன்கு திட்டமிட்டுப் பயன்படுத்திவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரு சட்ட முறைகளால் தமிழபேசும் மக்கள் சாதாரண வாழ்வியல் ஓட்டங்களில் கூட எட்ட நின்று ஓடும் நிலைமையே வெளிப்பட்டது. அரசாங்க ஆட்சி அதிகார கலாச்சார அணித் திரட்டலில் சாதாரண மக்கள் பங்குகொள்ள முடியாதவர் களாகவே இருந்தார்கள்.

(IV)

அவசரகாலச் சட்டத்தின்கீழ் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேல் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களின் மீது இன ஒடுக்குமுறை நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றது. குறிப்பாகக் கடந்த 35 ஆண்டு களாக வடகிழக்கு தமிழ் மக்கள் இதே அவசர காலச் சட்டத்தின் கீழ் கொடூர அடக்குமுறைகளுக்கும் இரத்தக் குளிப்புகளுக்கும் ஆளாக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். இதனால் சுமார் 300,000 வரையிலான தமிழ் மக்கள் மாண்டு மடிந்து போனதுடன் பல்லாயிரக்கணக்கானோர் புலம்பெயர்ந்து அகதிகளாயும் உள்ளனர். பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்க ஆட்சிகளின் அதிகாரப் பசிக்கும் இனவெறிக்கும் அவசரகாலச் சட்டம் பாதுகாப்பு வழங்கி வந்திருக்கிறது.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் கடந்த அரைநூற்றாண்டுக்கு மேல் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களின் மீது இன ஒடுக்குமுறை நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றது. குறிப்பாகக் கடந்த 35 ஆண்டு களாக வடகிழக்கு தமிழ் மக்கள் இதே அவசர காலச் சட்டத்தின் கீழ் கொடூர அடக்குமுறைகளுக்கும் இரத்தக் குளிப்புகளுக்கும் ஆளாக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள்.

இத்தகைய அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட சூழலில் இச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வழிவகுக்குமா என்பது இச்சூழலில் எழும் கேள்வி. ஏனெனில் அவசரகாலச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற பலதரப்புக் கோரிக்கைகளே இருந்துள்ளன. அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் எல்லோரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிடிக்குள் அகப்படுத்தப்பட்ட நிலையிலேயே சிறைகளில் இருந்து வருகிறார்கள். எனவே, அவசர காலச்சட்டம் அற்றுப் போனாலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் எவ்விதத் தளர்வையும் கொண்டிருக்கவில்லை. இதனைப் பல சட்டத்துறை வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். புலிகளை அழித்து விட்டதாகக் கூறப்பட்டு இரண்டு வெற்றிவிழாக்களும் நடத்தப்பட்ட பின்பும் அதே பயங்கரவாதத் தடைச்சட்டம் நீடிக்கின்றது. அதன் கீழ் இன்றும் சுமார் 15,000பேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நீண்ட காலமாகச் சுமார் 15 வருடங்கள் வரை இவ்விரு சட்டங்களின் கீழும் தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழர் மட்டுமன்றிச் சிங்கள அரசியல் கைதிகளும் உள்ளனர்.

இரட்டைப் பிசாசுகள் என வர்ணிக்கக் கூடிய வகையில் அமைந்த அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச்சட்டமும் இலங்கையின் அனைத்து உழைக்கும் மக்களையும் குறிப்பாகத் தமிழ் மக்களையும் ஒடுக்கி உயிர் பறித்து அகதிகளாக்கி வந்துள்ளன. தமிழ் இளைஞர்களையும் அவரது தீவிரப் போராட்டங்களை ஒடுக்கவெனக் கொண்டுவரப்பட்ட இச்சட்டங்களே 1988–89 காலகட்டத்தில் 100,000 வரையிலான சிங்கள இளைஞர் யுவதிகள் கொல்லப்படவும் காணாமல் போவதற்கும் காரணமான சட்டங்களாக அமைந்திருந்தன என்பதும் மறுப்பதற்கில்லை. ஆதலால் இச்சட்டங்கள் இழைத்த கொடுமைகளைப் பட்டியலிட்டால் அதன் நீளம் இலங்கையின் நீளத்தையே தாண்டி நிற்கும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 18 இன் பின்னரான சவால்களும் வாய்ப்புகளும்

■ சிவ. முத்துக்குமார்

முள்ளி வாய்க்காலில் இனப்படுகொலை நடைபெற்று இரண்டு வருடங்களாகின்றன. அந்கப்படுகொலை தந்த அதிர்ச்சியிலிருந்து தாயகத் தமிழ் மக்கள் மட்டுமல்ல உலகத்தமிழ் மக்களே இன்னும் விடுபடவில்லை. படுகொலையில் இருந்து தப்பியவர்கள், காயமடைந்தவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவேயில்லை. மீள்வதற்குரிய பணிகளும் சீராகக் கட்டியெழுப்பப்படவில்லை. போர் அவலத்தைச் சுமந்த மக்கள் இன்று போரின் பின்னரான அவலத்தையும் சுமக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் ஒரு அரசியல் சமூகமாக வாழ அனுமதிக்கப் படாததினால் இயல்புநிலைக்குக் கொண்டுவரும் பணிகளைச் சக தமிழர்களாலும் மேற்கொள்ள முடியவில்லை.

முள்ளிவாய்க்காலில் புலிகள் தோற்கடிக்கப்படவில்லை. தமிழ் மக்களே தோற்கடிக்கப்பட்டனர். தமிழ் மக்களது இதுவரைகால தியாகம் நிறைந்த போராட்டம் தோற்கடிக்கப்பட்டது. அவர்கள் அரசியல் சமூகமாக வாழ முயற்சித்த அடையாளம் தோற்கடிக்கப் பட்டது. இத்தோல்விகள் அவர்களது கூட்டிருப்புக்கே அச்சுறுத்தல்களை உருவாக்கியுள்ளது. பேரினவாதத்தின் வாய்க்குள் அது சப்புதற்காகத் தமிழ் மக்கள் கொண்டுபோய் விடப் பட்டுள்ளனர். இதற்குச் சிறீலங்கா அரசாங்கம் மட்டும் காரண மாக இருக்கவில்லை. தங்கள் நலன்களிலிருந்து செயற்பட்ட இந்தியா, மேற்குலகம், ஐக்கிய நாடுகள் சபை அனைத்துமே காரணம். இவை மட்டுமல்ல புலிக்காய்ச்சல் காரணமாகக் காட்டிக் கொடுப்புப் பணிகளில் ஈடுபட்ட தமிழ்த்தேசிய எதிர்ப்புச் சக்திகளும் காரணம்.

மறைந்த ஊடகவியலாளர் சிவராம் ஒரு தடவை கூறினார் "புலிகளிடம் பல தவறுகள் இருக்கின்றன. ஆனால், அது தொடர்பாகப் பகிரங்கத்தில் செயற்பட்டு இப்போராட்டத்தைப் பலவீனப்படுத்த நாம் விரும்பவில்லை. ஏனெனில் இப்போராட்டம் புலிகளுக்கான போராட்டமல்ல. தமிழ் மக்களுக்கான போராட்டம்'' இந்தச் சிந்தனை இந்த எதிர்ப்புச் சக்திகளிடம் தோன்றாமை தான் மிகவும் கவலைக்குரியது.

இன்று தாயகத்தில் புலிகளுக்கான பதிலீட்டை இராணுவமே மேற்கொண்டுள்ளது. முன்னர் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட தமிழ் அடையாள அழிப்புகள் இன்று பகிரங்கமாக

இக்கட்டுரையாசிரியர் அரசியல்பாட ஆசிரியர் மற்றும் அரசியல் ஆய்வாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கான நிகழ்ச்சி நிரல் தெளிவாக உருவாக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கண்களுக்குத் தெரியக்கூடியதாகவும், தெரியாமலும் இவ்வழிப்பு நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கேற்ற வகையில் வலிமையான இறுக்கத்துடன் இராணுவ நிர்வாகம் செயற்படுகின்றது.

தமிழ் மக்கள் விரும்பினால் என்ன? விரும்பாவிட்டால் என்ன? இதற்கு எதிராகப் போராடித்தான் ஆகவேண்டும். ஏனெனில் இது அவர்களுடைய கூட்டிருப்பு, கூட்டுரிமை சார்ந்த பிரச்சினை. கிழக்கில் இக்கூட்டிருப்பு ஏற்கனவே ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. முள்ளிவாய்க்கால் கொலைக்குப் பின்னர் வடக்கும் ஆட்டம் காணத் தொடங்குகின்றது.

இந்தப் புதிய சூழலுக்கு முகம்கொடுப்பதற்குச் சவால்களையும், வாய்ப்புகளையும் நாம் அடையாளம் காணவேண்டும். வேலைத்திட்டங்களையும் தந்திரோபாயங்களையும் அதற்கேற்ற வகையில் முன்னெடுக்கவேண்டும். சவால்கள் இல்லாத சூழல் என்பது வரலாற்றில் கிடையாது. அதேபோல வாய்ப்புகள் இல்லாத சூழலும் வரலாற்றில் கிடையாது. சவால்களுக்கும், வாய்ப்புகளுக்குமிடையில் விகிதாச்சாரத்தில் மட்டும் காலத்திற்குக் காலம் வேறுபாடுகள் ஏற்படலாம். வரலாற்றில் ஒரு கதவு மூடப்பட்டால் இன்னோர் கதவு திறக்கும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

முள்ளிவாய்க்காலில் விழுந்த அடி தமிழ் மக்களில் மட்டும் படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரஸ், மலையகக் கட்சிகள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என எல்லோர் மீதும் பட்டு இன்று தி.மு.க, காங்கிரஸ் மீதும் விழுந்துள்ளது. முள்ளிவாய்க்காலினால் விழுகின்றவர்களுடைய தொகை பெருகப் பெருகத் தமிழ் மக்களுக்கான வாய்ப்புகளும் பெருகிக்கொண்டே போகும். ஏனெனில் வீழ்ந்தவர்கள் எல்லோரும் மீண்டும் எழவே முயற்சிப்பர். அவர்களுக்கு உதவப்போவது தமிழ்த் தேசிய அரசியல்தான்.

நாம் முதலில் சவால்களைப் பார்ப்போம். தமிழ் மக்கள் சந்திக்கின்ற மிகப் பெரிய சவால் திட்டமிட்ட நிலப்பறிப்புதான். இதுமுன்னர் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டது. தற்போது இராணுவ நிர்வாகத்தின்கீழ் பகிரங்கமாகவே மேற்கொள்ளப் படுகின்றது.

இதில் முதலாவது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஒரே நேரத்தில் வடகிழக்கு முழுவதும் இவை முடுக்கிவிடப்பட்டுள்ளன. முன்னர் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள் போர் காரணமாகக் கைவிடப்பட்டிருந்தன. அவை தற்போது புதிய பொலிவுடன் கட்டியெழுப்பப்படுகின்றன. இதில் மிகப் பெரிய சோகம் நிலத்திற்கான ஆவணங்களைத் தமிழ் மக்கள் கைவசம் வைத்திருக்கின்றபோதும் அந்நிலங்கள் பகிரங்கமாக பறிக்கப் படுவதாகும்.

கிழக்கில் திருகோணமலை மாவட்டமே குடியேற்ற விடயத்தில் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குச்சவெளிப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் காணிகள் பகிரங்கமாகப் பறிக்கப்படுகின்றன.

இன்று தாயகத்தில் புலிகளுக்கான பதிலீட்டை இராணுவமே மேற்கொண்டுள்ளது. முன்னர் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட தமிழ் அடையாள அழிப்புகள் இன்று பகிரங்கமாக மேற்கொள்ளப் படுகின்றன. இதற்கான நிகழ்ச்சி நிரல் தெளிவாக உருவாக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. கண்களுக்குத் தெரியக்கூடியதாகவும், தெரியாமலும் இவ்வழிப்பு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொடர்பில் குச்சவெளிப் பிரதேச செயலாளரே முறைப்பாடுகளை முன்வைத்துள்ளார். மொறவேவா பிரதேச சபையிலுள்ள பன்குளம் பகுதியில் உறுதிப்பத்திரங்கள் வைத்திருந்தும் தமிழ் மக்களின் காணிகள் பறிக்கப்படுகின்றன. ஒட்டு படுகொடு இடத்தில் 200 ஏக்கர் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. திருகோணமலை –ஹொரப்பொத்தானை வீதியில் இருபகுதியிலும் திட்டமிட்டு சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றனர். கன்னியா பிரதேசப்பகுதி திருமலைப்பட்டணமும், சூழலும் பிரதேச சபையிலிருந்து அரசாங்க அதிபரினால் பகிரங்கமாகப் பறிக்கப்பட்டுச் சிங்கள நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. சேருவலவிலிருந்து பொலன்னறுவை நோக்கிப் புதிய வீதி அமைக்கப்பட்டபோது அதன் இருமருங்கிலும் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். எல்லை மீள் நிர்ணயம் என்ற பெயரில் தென்னைமரவாடி உட்படப் புல்மோட்டையின் தமிழ்க்கிராமங்கள் பல பதவி சிறீபரா என்ற சிங்களக் கிராமத்துடன் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. குச்சவெளிப் பிரதேச செயலாளரே இது தொடர்பாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

சம்பூர் மக்கள் அவர்களது சொந்தப் பிரதேசத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். அவர்களது 10,000 ஏக்கர் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. சம்பூரிலிருந்து கடற்கரையோரமாக வெருகல் ஆறுவரை தமிழ் பிரதேசங்களே உள்ளன. மூதூர் கிழக்குப் பிரதேசம் என இது அழைக்கப்பட்டது. படித்த மத்தியதர வர்க்கம் அதிகமாக உள்ள பகுதி என்ற வகையில் சம்பூர் பிரதேசமே அதற்குத் தலைமை கொடுத்துக்கொண்டிருந்தது. இன்று அது பறிக்கப் பட்டுள்ளதால் முழு மூதூர் கிழக்குப் பிரதேசமே பலவீனமாகி யுள்ளது.

திருகோணமலைக் கண்டக்காடு பகுதியில் மீளக்குடியேறிய முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களினால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். அவர்களது குடிசைகளும், உடமைகளும் தீயிடப்பட்டுள்ளன. இவர்கள் உரிய அதிகாரிகளின் அனுமதியுடன் நீண்ட காலமாகவே பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

திருகோணமலைக் கண்டக்காடு பகுதியில் மீளக்குடியேறிய முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களினால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். அவர்களது குடிசைகளும், உடமைகளும் தீயிடப்பட்டுள்ளன. இவர்கள் உரிய அதிகாரிகளின் அனுமதியுடன் நீண்ட காலமாகவே பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதன் வெளிப்பிரதேசங்களில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கௌலியா மடு பிரதேசம் இவ்வாறான நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றது. அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட எல்லைகளிலும் இவ் நெருக்கடிகள் உள்ளன. நாவலடி, ஊத்துச்சேனை போன்ற பிரதேசங்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களே சிங்களக் குடியேற்றத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பொத்துவில், தீக வாவிப் பிரதேசங்களில் இக்குடியேற்றங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பொத்துவில் வேகாமம் பிரதேசத்தில் அனுமதிப் பத்திரம் பெற்று வயல்செய்து கொண்டிருந்த முஸ்லிம்கள் துரத்தப்பட்டுள்ளார்கள்.

வடக்கில் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள் மட்டுமல்ல இன்று யாழ்ப்பாண மாவட்டம் கூடக் குடியேற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டம் கொண்டச்சி பிரதேசத்தில் போருக்கு முன்னர் மரமுந்திரிப் பயிர்ச்செய்கைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. 6000 ஏக்கர் நிலம் இதற்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஏழு சிங்களப் பெயர் கொண்ட பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுச் சிங்கள மக்கள் குடியேற்றப் பட்டனர். 200க்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டிருந்தன. பாடசாலை, விகாரை, மரமுந்திரிகை பதனிடும் நிலையம் என்பனவும் அமைக்கப்பட்டிருந்தன. மத்திய இடத்தில் பாதுகாப்பிற்காக இராணுவ முகாமும் அமைக்கப்பட்டிருந்தது. அனுராதபுரத்துடன் போக்குவரத்துச் செய்யக்கூடிய போக்குவரத்துப் பாதையும் அமைக்கப்பட்டிருந்தது.

1900களில் யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் வெளியேறினர். தற்போது புதுப்பொலிவுடன் குடியேற்றம் மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றது. ஏற்கனவே வசித்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டனர். தற்போது புதியவர்களைக் கொண்டு குடியேற்றம் செப்பனிடப்படுகின்றது.

மடு ரோட்டில் முன்னர் சட்ட விரோதமாகக் காணிகளைப் பிடித்துச் சிலர் சிங்களவர்கள் குடியேறியிருந்தனர். அவர்களுக்காகச் சிங்கள மகாவித்தியாளயம், பௌத்த விகாரை என்பனவும் உருவாக்கப்பட்டிருந்தன. யுத்த சூழ்நிலை காரணமாக அவர்கள் அனைவரும் வெளியேறியிருந்தனர். தற்போது பௌத்த பிக்குகள் முன்னின்று புதிய குடியேற்றங்களை உருவாக்கி வருகின்றனர். பௌத்த விகாரைப் பெருப்பிக்கப்பட்டு வில் வளைவு ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பாடசாலை உட்பட வேறு கட்டடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. வீதியின் இருமருங்கிலும் நூற்றுக்கணக்கான சிறு கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. மடுப்பகுதி மன்னார் அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றபோதும் அனுராதபுரம் மாவட்ட அரசாங்கச் செயலதி பரின் கீழேயே இக்குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கென்ற் பாம், டொலர் பாம், சிலோன் தியேட்டர் பாம் போன்ற பிரதேசங்களில் ஏற்கனவே சிங்களக் குடியேற்றங்கள் அங்கிருந்த தமிழ் மக்களை அகற்றி விட்டு உருவாக்கப்பட்டிருந்தன. இன்று அது மீளவும் புதுப்பிக்கப் பட்டு நெடுங்கேணிவரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கொக்கிளாய் சரணாலயத்தின் 4000 ஏக்கர் காணியில் 1000 ஏக்கர் காணி புல்டோசர் மூலம் திருத்தப்பட்டுள்ளது. அங்குச் சிங்களக் குடியேற்றங்கள் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கென்ற் பாம், டொலர் பாம், சிலோன் தியேட்டர் பாம் போன்ற பிரதேசங்களில் ஏற்கனவே சிங்களக் குடியேற்றங்கள் அங்கிருந்த தமிழ் மக்களை அகற்றி விட்டு உருவாக்கப்பட்டிருந்தன. இன்று அது மீளவும் புதுப்பிக்கப் பட்டு நெடுங்கேணிவரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாவற்குழிக் குடியேற்றம் நாமெல்லோரும் அறி ந்ததே. யாழ்ப்பாண மண்ணின் நிறமே தெரியாதவர்கள் அங்குத் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இரண்டாவது வகை குடியேற்றம் வியாபாரக் குடியேற்ற மாகும். இது முன்னர் கிழக்கு மாகாண திருகோணமலை மாவட்டத்தில் அதிகமாக இருந்தது. திருகோணமலை நகரத்திலுள்ள பல சிங்களக் கடைகள் வியாபாரக் குடியேற்றத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டவையாகும். கடைகளுக்கான நிலங்களை அடாத்தாகப் பிடித்து அந்த இடத்தில் முதலில் பெட்டிக் கடைகளைப் போடுவார்கள், பின்னர் அதனையே நிரந்தரக் கடைகளாக மாற்றிவிடுவார்கள். திருக்கோணமலைச் சந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரை சிங்களவரின் ஆதிக்கத்திலேயே உள்ளது.

தற்போது போரின் பின்னர் இந்த வியாபாரக் குடியேற்றம் வடக்கிற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் என வடக்கு நகரங்கள் எதுவும் இதற்கு விதிவலக்காக இல்லை. நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்னர் அடாத்தாக இடங்களைப் பிடித்துத் தெற்கிலிருந்து வந்த சிங்களவர்கள் வியாபாரம் செய்கின்றனர். காலைக்கடன்களையும் கோவில் நிலத்திலேயே கழிக்கின்றனர். நகரச் சுற்றுப்புறங்களில் இராணுவ முகாமிற்கு அருகே அல்லது காவலரண்களுக்கு அருகே அடாத்தாகக் காணிகளைப் பிடித்துக் கொட்டில்களைப் போட்டு வியாபாரம் செய்கின்றனர். காணிச் சொந்தக்காரர்களிடமோ அல்லது யாழ் மாநகரசபை நிர்வாகத்திடமோ இதற்காக எந்த அனுமதியையும் அவர்கள் பெறுவதில்லை. திருக்கேதீஸ்வரம், மடு, முறிகண்டி போன்ற கோவில் பிரதேசங்களிலும் இக்கொட்டில் வியாபாரம் நடைபெறுகின்றது. முறிகண்டியில் இதற்காகக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. போர் முடிந்த சில நாட்களிலேயே தெற்கிலிருந்து வடக்கிற்கு உல்லாசப் பயணம் பெருமளவில் இடம்பெற்றது. ஒரு பேருந்தில் 60 பேர் பயணம் செய்தால் இருவர் வியாபாரத்தினை அமைக்கும் நோக்குடனேயே பயணம் செய்கின்றனர்.

மூன்றாவது மீனவர் குடியேற்றம். திருக்கோணமலைப் பிரதேசத்தில் போர்க்காலத்திலேயே இக்குடியேற்றங்கள் வலிமையாக இருந்தன. ஆரம்பத்தில் பருவகால மீன்பிடிக்காக வாடி அமைத்துத் தங்கியவர்கள் பின்னர் நிரந்தரமாகவே தங்கிவிட்டனர். தற்போது வாகரை, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டத்தின் சிலாபத்துறை போன்ற இடங்களிலும் இவ்வகையான குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சிலாபத்துறையில் அமைக்கப்பட இருக்கின்ற புதிய துறைமுகம் சிங்கள மீனவர் குடியேற்றத்தை மேலும் பலப்படுத்தப் போகின்றது.

நான்காவது பௌத்த ஆலயங்களுக்கான நிலப்பறிப்பாகும். முன்னர் பௌத்த ஆலயங்கள் இருந்த இடங்கள் எனக் கூறிப் பழைய இடத்திலும் பார்க்க அதிகமான இடம் இதற்காகப் பறிக்கப்படுகின்றன. கிளிநொச்சி நகரில் இவ்வாறான பௌத்த ஆலயம் பெரிய நிலப்பரப்பில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதைவிடப் படைமுகாம்களுக்கு மத்தியிலும் சிறிய சிறிய ஆலயங்கள் கட்டப்படுகின்றன. வவுனியா நகரத்தில் ஒரு பெரிய புத்தர் சிலை வைக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றது. அமைதியைப் போதித்த புத்த பகவான் இங்கு ஆக்கிரமிப்பின் குறியீடாக மாற்றப்பட்டுள்ளார்.

ஐந்தாவது இராணுவத் தேவைகளுக்கான நிலப்பறிப்பாகும். வடக்கில் இப்பறிப்புத்தான் தற்போது அதிகமாக உள்ளது. இப்பறிப்புகள் ஆறு வகைகளாக இடம்பெறுகின்றன. இராணுவ முகாம்களுக்கான நிலப்பறிப்பு, இராணுவ முகாம்களுக்குச் செல்லும் பாதைகளுக்கான நிலப்பறிப்பு, இராணுவ வீரர்களின் நினைவுத் தூபிகளுக்கான நிலப்பறிப்பு, சிங்கள சுற்றுலாப் பயணிகளின் இடைத்தங்கல் நிலையங்களுக்கான நிலப்பறிப்பு, இராணுவக் கடைகளுக்கான நிலப்பறிப்பு, இராணுவ விவசாயப் பண்ணைகளுக்கான நிலப்பறிப்பு என்பனவே இவ் ஆறுமாகும்.

பறிப்புத்தான் தற்போது அதிகமாக உள்ளது. இப்பறிப்புகள் ஆறு வகைகளாக இடம்பெறுகின்றன. இராணுவ முகாம்களுக்கான நிலப்பறிப்பு, இராணுவ முகாம்களுக்குச் செல்லும் பாதைகளுக்கான நிலப்பறிப்பு, இராணுவ வீரர்களின் நினைவுத் தூபிகளுக்கான நிலப்பறிப்பு, சிங்கள சுற்றுலாப் பயணிகளின் இடைத்தங்கல் நிலையங்களுக்கான நிலப்பறிப்பு, இராணுவக் கடைகளுக்கான நிலப்பறிப்பு, இராணுவ விவசாயப் பண்ணைகளுக்கான நிலப்பறிப்பு என்பனவே இவ் ஆறுமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கில் இப்பறிப்புகள் இடம்பெற்றாலும் வடக்கினைப்போலக் கடுமையானதாக இல்லை.

இப் பறிப்புகளுக்குத் தனியார் காணிகள், அரச காணிகள், பொது நிறுவனங்களின் காணிகள் என எதுவும் விதிவிலக்கான தாக இல்லை. தற்போது வெளிநாட்டில் உள்ளவர்களின் காணிகள் கணக்கெடுக்கப்படுகின்றன. அவை எதிர்காலத்தில் இராணுவத் தேவைகளுக்காகப் பறிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை.

நினைவுத் தூபிகளுக்காக ஆனையிறவு, கிளிநொச்சி சந்திகளில் பெறுமதியான காணிகள் பறித்தெடுக்கப்பட்டுள்ளன. சிங்களச் சுற்றுலாப் பயணிகளுக்கான இடைத்தங்கல் இல்லங்கள் வீதியில் ஒவ்வொரு முக்கிய சந்திகளிலும் உருவாக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினரின் கடைகளும் சந்திக்குச் சந்தி உருவாக்கப் பட்டுள்ளன. இராணுவத்தினருக்கான பண்ணைகள் பலாலியிலும், வன்னியிலும் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வருகின்றன. இராணுவ முகாம்களுக்கான காணிப் பறிப்புகள் பற்றிச் சொல்லவே தேவையில்லை. வடக்கின் மூலை முடுக்கெல்லாம் அவை இடம்பெற்றுள்ளன. தற்போது திருமுறிகண்டியில் இராணுவக் குடியிருப்புக்காகவும் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன.

ஆறாவது அபிவிருத்தித் திட்டங்களுக்கான காணிப்பறிப் பாகும். கிழக்கில் பாசிக்குடா தொடக்கம் நிலாவெளி வரை உல்லாச ஹொட்டல்களுக்காகக் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு கம்பனிகளுக்கு விவசாயத் திட்டங்களுக்காவும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் கிழக்கில் பறிக்கப்பட்டுள் ளன. கிழக்கு மாகாண காணி அமைச்சர் தனக்குத்தெரியாமல் 25,000 ஏக்கர் காணி பறிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கிலும், மரமுந்திரிகைத் திட்டம் உட்படப் பல்வேறு திட்டங்களுக்காகக் காணிகள் பறிக்கப்படுவதற்காகச் செய்திகள் வருகின்றன.

போருக்குப் பின்னரான சவால்களில் இரண்டாவது மிகப் பெரிய சவால் இராணுவ நிர்வாகமாகும். இந்த இராணுவ நிர்வாகத்தால் வட கிழக்கு மக்கள் ஒரு திறந்த வெளிக்கைதிகள் என்ற நிலையிலேயே உள்ளனர். அவர்கள் உண்பதற்கு மட்டுமே வாய்திறக்க முடியும். வேறு விடயங்களைப் பேச வாய்திறக்க முடியாது. இராணுவத்தினரின் அனுமதியில்லாமல் ஓரிடத்தில் ஐந்து பேர் கூடிக்கதைப்பதற்கு முடியாது. எல்லாப் பொது நிகழ்வுகளுக்கும் அருகிலுள்ள இராணுவ முகாம்களின் தளபதிகளை அழைக்கப்பட வேண்டும் என்பது எழுதப்படாத பொது விதியாக உள்ளது. அரச நிர்வாகமும் இராணுவத்தின் ஒரு செயற்பாட்டுக் கருவியாக மாறியுள்ளது.

நடைமுறையில் இராணுவத்தினர் வேறாகவும், இராணு உளவுப்பிரிவினர் வேறாகவும் செயற்படுகின்றனர். இனந்தெரியாத கொலைகளுக்கும் தாக்குதல்களுக்கும் இராணுவ உளவுப் பிரிவினரே காரணம் என மக்கள் கூறுகின்றனர். சந்திக்குச் சந்தி ஒழுங்கைக்கு ஒழுங்கை இராணுவத்தினர் நிற்கும்போது அவர்களுக்குத் தெரியாமல் கொலைகள், தாக்குதல் இடம்பெறுகின்றன எனக் கூறமுடியாது. ஓய்வு பெற்ற ஆசிரியர்

போருக்குப் பின்னரான சவால்களில் இரண்டாவது மிகப் பெரிய சவால் இராணுவ நிர்வாகமாகும். இந்த இராணுவ நிர்வாகத்தால் வட கிழக்கு மக்கள் ஒரு திறந்த வெளிக்கைதிகள் என்ற நிலையிலேயே உள்ளனர். அவர்கள் உண்பதற்கு மட்டுமே வாய்திறக்க முடியும். வேறு விடயங்களைப் பேச வாய்திறக்க முடியாது. இராணுவத்தினரின் அனுமதியில்லாமல் ஓரிடத்தில் ஐந்து பேர் கூடிக்கதைப்பதற்கு முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் நகைச்சுவையாகக் கொலைகள் பற்றி இராணுவத்திற்குத் தெரியாதென்றால் முனிதான் அடித்துக் கொலை செய்திருக்க வேண்டும் எனக் கூறினார்.

வடகிழக்கில் இராணுவ நிர்வாகம் இருக்கும்வரை ஜனநாயகச் செயற்பாடுகளை ஒருபோதும் முன்னெடுக்க முடியாது. இன்று அரசியற் கட்சிகளெல்லாம் அங்குப் பெயருக்குச் செயற்படுகின்றனவே தவிர எந்த ஜனநாயகச் செயற்பாடுகளையும் முன்னெடுப்பதில்லை. அவ்வாறு முன்னெடுப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டால் பிரமுகர்கள் தாக்கப்படுவது குறைவு, மாறாக உறுதுணையாக இருக்கும் பொதுமக்களே அச்சுறுத்தப்படுகின்றனர். இதனால் பொதுமக்களும் ஜனநாயகச் செயற்பாடுகளில் பெரிய அக்கறைகளைக் காட்டுவதில்லை. இதற்குச் சிறந்த உதாரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிச் சபை வேட்பாளர்கள் பற்றிய விபரங்களை இராணுவம் சேகரிக்கின்றமையாகும். இதேபோல சுரேஸ் - பிறேமச்சந்திரன் மீதான கோபத்தை அவரின் செயலாளர்மீது தீர்த்திருக்கின்றனர். பத்திரிகைகளும் சுயதணிக்கை களை மேற்கொண்டு வருகின்றன. கொழும்புப் பத்திரிகைகளை விட யாழ்ப்பாணப் பத்திரிகைகளே இது விடயத்தில் பெரிதும் அச்சப்படுகின்றன.

மூன்றாவது சவால் பொருளாதார ஆதிக்கமாகும். இது மூன்று வகையாக இப் பொருளாதார ஆதிக்கம் இடம்பெறுகின்றது. தமிழர் தாயகத்தின் பண வளங்களை அள்ளிச் செல்லுதல், மூலவளங்களை அள்ளிச் செல்லுதல், தொழில் வாய்ப்புகளைப் பறித்தெடுத்தல் என்பனவே அவ்மூன்றுமாகும்.

தமிழர் தாயகத்தின் பணவளங்களை அள்ளிச்செல்லுதல் யாழ்ப்பாணத்திலேயே அதிகமாக இடம்பெறுகின்றது. யாழ்ப்பாணக் குடும்பங்களில் பெரும்பாலனவற்றிற்கு வெளிநாடுகளில் உறவுகள் உண்டு. இதன் காரணமாக வெளிநாட்டுப் பணம் அவர்களுக்கு வருகின்றது. இதைவிட யாழ்ப்பாண மக்கள் சேமிப்புக்குப் பழக்கப்பட்டவர்கள். பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகத் தங்களை ஒறுத்துப் பணத்தைச் சேமிப்பவர்கள். இந்தச் சேமிப்புப் பணங்களை அள்ளிச் செல்வதற்காகத் தெற்கிலிருந்து தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள் தமது கிளைகளை யாழ்ப்பாணத்தில் திறந்திருக்கின்றன.

சம்பத்த வங்கி ஒரு இனவாத வங்கி என அழைக்கப்படுகின்றது. அதில் தமிழர்களை வேலைக்குச் சேர்ப்பதே மிகக் குறைவு. அவ்வங்கியும் தனது கிளைகளை வட கிழக்கு எங்கும் திறந்திருக்கின்றது. அது யாழ்ப்பாணத்தில் கிளைகளைத் திறந்த முதல் நாளே லட்சக்கணக்கில் பணம் சேமிப்பில் சேர்ந்திருக்கின்றது. இந்த வங்கிகளில் பணியாளர்களாகத் தெற்கிலிருந்து சிங்களவர்களும் கொண்டுவந்து சேர்க்கப்படுகின்றனர். இந்த வங்கிகள் தமிழர்களுக்குப் பெரியளவில் கடனுதவிகளை வழங்குவதில்லை.

இதைவிட "சதோசா" போன்ற தெற்கின் வர்த்தக நிறுவனங்களும் அங்கு உருவாக்கப்படுகின்றன. இதற்குப் பணியாளர்களும் தெற்கிலிருந்து கொண்டுவரப்படுகின்றனர். இந்த வர்த்த நிறுவனங்களும், ஆங்காங்கே காணிகளை அடாத்தாகப் பிடித்துக்

மூன்றாவது சவால் பொருளாதார ஆதிக்கமாகும். இது மூன்று வகையாக இப் பொருளாதார ஆதிக்கம் இடம்பெறுகின்றது. தமிழர் தாயகத்தின் பண வளங்களை அள்ளிச் செல்லுதல், மூலவளங்களை அள்ளிச் செல்லுதல், தொழில் வாய்ப்புகளைப் பறித்தெடுத்தல் என்பனவே அவ்மூன்றுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டில்கள் மூலம் உருவாக்கப்படுகின்ற வர்த்தக நிறுவனங்களும் போரிலிருந்து மீண்டு கொஞ்சம் கொஞ்சமாகத் தமது வர்த்தகத்தை விருத்தி செய்து வருகின்ற தமிழ் வர்த்தகர்களை மோசமாகப் பலவீனமாக்குகின்றன.

அடுத்து மூலவளங்களைச் அள்ளிச் செல்லுதல் ஆகும். வட-கிழக்கின் மூல வளங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவை. வட வழங்களையும் பறித்தெடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

காங்கேசன்துறைச் சீமந்து தொழிற்சாலையை ஒட்டிய பிரதேசங்கிலுள்ள சுண்ணாம்புக் கற்களை அகழ்ந்தெடுக்கும் வாய்ப்பு தெற்கு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் கப்பல் மூலம் போர்க்காலத்திலேயே இவற்றைத் தெற்கிற்குக் கொண்டுசென்றனர். இதுபற்றி யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கோ, தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ கூட எதுவும் தெரிவிக்கவில்லை. போரின் பின்னர் கீரிமலைக்குச் சென்றவர்கள் மூலம்தான் அது வெளியில் தெரியவந்தது.

இதேபோல மணல்களை அள்ளிச்செல்லும் அனுமதியும் சிங்கள வர்த்தகர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தென் இலங்கைக்கு வன்னியின் மணல்களை அள்ளிச் செல்கின்றனர். அதேவேளை வன்னியில் மணலை இலவசமாக அள்ளிச்சென்று குடாநாட்டு மக்களுக்கு விற்கின்றனர்.

காட்டு வளங்களும் இவர்களின் கண்களுக்கு அகப்படாமல் இருக்கவில்லை. புலிகள் இருக்கும்போது காடுகளில் உள்ள பாரிய மரங்களைத் தறிப்பதற்குத் தடை விதித்திருந்தனர். போரின் பின்னர் தென் இலங்கை வியாபாரிகள் வன்னிக்கு வந்து காடுகளில் உள்ள பாரிய மரங்களைத் தறித்து விற்பனைக்காகத் தென் இலங்கைக்குக் கொண்டு செல்கின்றனர். மேலிடத்திலிருந்து விசேட அனுமதி இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடுமையாகப் போர் நடந்த புதுக்குடியிருப்புப் பிரதேசம் தற்போது பாதுகாப்பு வலயமாக உள்ளது. அங்குச் செல்வதற்கு வீட்டு உரிமையாளர்களுக்கோ இன்னமும் அனுமதி வழங்கப்பட வில்லை. ஆனால், தென் இலங்கை வியாபாரிகள் தாராளமாக அங்குச் சென்று பழைய இரும்புகள், வீட்டுக் கதவு, யன்னல் நிலைகள் என்பவற்றைத் தென் இலங்கைக்குக் கொண்டு செல்கின்றனர்.

மீன்வள விடயத்திலும் இவர்களின் வளப்பறிப்பு இடம் பெறுகின்றது. மன்னார் வளைகுடாக் கடல் பரப்பிலும், முல்லைத் தீவு கடற்பரப்பிலும் சிங்கள மீனவர்கள் பாரிய படகுகளுடன் வந்து மீன்பிடித்தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆழ்கடல் மீன்பிடிக்கான அனுமதி தமிழ் மீனவர்களுக்கு இன்னமும் சீராக வழங்கப்படவில்லை.

மூன்றாவது தொழில் வாய்ப்புகளைப் பறித்துச் செல்லலாகும். இதில் கொந்தராத்துத் தொழில் முக்கியமாக உள்ளது. போரின் பின்னர் வீதி அமைத்தல், கட்டடங்களை அமைத்தல் போன்ற கொந்தராத்துத் தொழில்கள் முக்கியமானதாக உள்ளன. இக் கொந்தராத்துகள் தமிழர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அனைத்தும் சிங்களவர்களுக்கே வழங்கப்படுகின்றது. சிங்களக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொந்தராத்துகாரர்கள் வேலையாட்களாகவும் சிங்களவர்களையே முழுமையாகக் கொண்டு வருகின்றனர். பல கொந்தராத்து வேலைகள் சீரற்று ஒழுங்கின்மையுடனும் நடைபெறுகின்றன. அவர்களுடைய செயற்பாடுகள் பல தரமானதாக இல்லை.இதனைத் தட்டிக்கேட்பதற்கும் தமிழ் அதிகாரிகள் அச்சப்படுகின்றனர். கொந்தராத்துகாரர்கள் மேலிடச் செல்வாக்கினைப் பெற்றவர்களாக இருப்பதே இதற்குக் காரணம்.

இதைவிட அரச தொழில் வாய்ப்புகளும் சிங்களவர்களுக்குக் கொடுக்கும் போக்கு அண்மைக் காலத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றது. அடிமட்டத்திலுள்ள சிற்றூழியர் பதவிகளுக்குக் கூட இந்நிலை ஏற்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சிற்றூழியர்களாக நியமிக்கப்பட்ட 21 பேரில் 17 பேர் சிங்களவர்களாக இருந்தனர். நிர்வாகச் சேவையில் இணைத்துக்கொண்ட 257 பேரும் சிங்களவர்களாக இருந்தனர். மன்னாரில் அமைச்சர் ரிசாத்பதியுதீன் பட்டியலிலேயே சிற்றூழியர் பதவிகள் வழங்கப்பட்டன.

அரசாங்கம் இந்தவகையான பச்சை சூறையாடல் நடவடிக்கைகளையே அபிவிருத்தியாகக் காட்டிவருகின்றது. வட கிழக்கில் வாழும் மக்களுக்கு அவர்களின் மூலவளங்களைப் பிரயோகிக்கக் கூடிய, அவர்களுக்குத் தொழில் வாய்ப்பினைத் தரக்கூடிய எந்த உற்பத்தி நடவடிக்கைகளிலும் இதுவரை ஈடுபடவில்லை.

உண்மையில் இனப்படுகொலை என்பதற்குள் இவையெல்லாம் அடங்கும். ஒரு இனத்தினைக் கொலைசெய்வது மட்டும் இனப்படுகொலையல்ல. அந்த இனத்தின் நிலத்தினைப் பறித்தல், அதன் கூட்டிருப்பைச் சிதைத்தல், கூட்டடையாளங்களை அழித்தல், வாழ்வாதாரங்களைப் பறித்தல் என்பவற்றையும் இனப்படுகொலைக்குள் அடங்குபவையே.

உண்மையில் இனப்படுகொலை என்பதற்குள் இவையெல்லாம் அடங்கும். ஒரு இனத்தினைக் கொலைசெய்வது மட்டும் இனப்படுகொலையல்ல. அந்த இனத்தின் நிலத்தினைப் பறித்தல், அதன் கூட்டிருப்பைச் சிதைத்தல், கூட்டடையாளங்களை அழித்தல், வாழ்வாதாரங்களைப் பறித்தல் என்பவற்றையும் இனப்படுகொலைக்குள் அடங்குபவையே.




ஈழப் பெண்போராளிகளின் கவிதைகளடங்கிய 'பெயரிடாத நட்சத்திரங்கள்' என்னும் இக்கவிதைத் தொகுப்பில் 26 கவிஞைகள் எழுதிய 70 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இக்கவிஞைகள் யாரும் இன்று உயிருடன் இல்லை. அவர்கள் அனைவரும் முதன்மையாகத் தம்மைக் களப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டு பலியானவர்கள். இக்கவிஞைகளின் பிறந்த ஆண்டுகள் இன்றி இறந்த ஆண்டுகள் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கும் தன்மையை இத்தொகுப்பில் காணமுடிகிறது. இதில் இடம்பெற்றிருக்கிற கவிதைகள் அனைத்தும் களப்பணி அனுபவங்களினூடாக வெளிப் பட்டவையாகவே உள்ளன. தமிழ்ச்சமூகப் பெண்களின் போர் செயல்பாடுகளை வெளிப்படுத்தும் ஆவணமாக இந்நூல் விளங்குகிறது. எந்தப் பொழுதிலும் பலியாகலாம் என்ற மனநிலையில் களப்பணியாற்றும் பெண்களின் அக மற்றும் புற வெளிகள் எந்த எல்லைகளையும் கடந்து பயணிப்பவையாக உள்ளன. 'நாளையும் நான் வாழவேண்டும்' என்ற எப்பொழுதும் மரணிக்காத நம்பிக்கையைக் கொண்டவர்களாக இக்கவிஞைகள் வெளிப்பட்டிருக்கிறார்கள்.

பெயரிடாத நட்சத்திரங்கள்
ஊடறு + விடியல் வெளியீடு, 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# போரியல் வாழ்புலமும் சூழலியல் பிரச்சினைகளும்

■ எம். மோகனகிருஷ்ணன்

## 1.0 அறிமுகம்

இலங்கையானது சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் இருந்து தமிழ் மக்கள் அல்லது தமிழ் பேசும் மக்கள் இரண்டாம் நிலைப் பிரஜைகளாக நடத்தப்பட்டனர். அவர்களது பாரம்பரியப் பிரதேசங்கள், இலங்கையின் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுமிடத்து பிரதேச சமத்துவமின்மையை எதிர் நோக்கின. ஜனநாயக அரசியல் வழிமுறை மூலம் தமக்கான உரிமையை வென்றெடுக்க முடியும் என நம்பியிருந்தவர்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. இந்நிலையில், தமிழ் மக்களின் பாராளுமன்ற அரசியல் பிரதிநிதித்துவத்தினைக் குறைக்கும் வகையில் பாரிய குடியேற்றத் திட்டங்கள் இம்மக்களின் பாரம்பரியப் பிரதேசத்தில் அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்பட்டிருந்தன. அன்றைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியான கல்லோயா ஆற்றுத்திட்டம் எனும் நீர்ப்பாசனத்திட்டம் உருவாக்கப்பட்டு மாத்தறை, அம்பாந்தோட்டை பகுதிகளில் இருந்து சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். இதன் கீழ் 44 குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப்பட்டு அவற்றுள் 38 கிராமங்கள் சிங்கள மக்களுக்கும் 6 கிராமங்கள் மட்டும் தமிழ் பேசும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டன. இதிலும் தமிழ் கிராமங்கள் நீர்வரத்து குறைந்த அல்லது நீரோட்டத்தின் எல்லையில் இருந்த கிராமங்களாகவே இருந்தன. 1960களில் இக்குடியேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு இன்றைய அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. இது ஓர் உதாரணம் மட்டுமே.

இவ்வாறாகவே தமிழ் மக்களிற்கு உரித்தான காணிகள், விவசாய நிலங்கள், நீர்ப்பங்குகள் அனைத்தும் சுரண்டும் அல்லது கபளீகரம் செய்யும் கைங்கரியத்தில் காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் செய்யத் தவறவில்லை. இவ்வாறாக இந்நிலை உச்சம் பெறத் தொடங்கிய காலங்களில் தமிழ் மக்கள் பெரும் எடுப்பிலான அகிம்சைப் போராட்டம் மூலம் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். அவ்வேளைகளில் எல்லாம் அரச யந்திரம் வன்முறைகள், கைதுகள், விளக்கமறியல்கள் எனத் தனது அதிகார மெத்தனப் போக்கை பயன்படுத்தியது உச்ச கட்டங்களாக 1981, 1983 இனப்படுகொலையையும் நிறைவேற்றியது.

இக்கட்டுரையாசிரியர் புவியியல் சிறப்பு மாணவர். சமூகவியல் மற்றும் பொருளியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையிலேயே அகிம்சைமூலம் உரிமைகள் அபிலாசைகளை வென்றெடுக்க முடியாத நிலைக்கு நிர்க்கதியான தமிழ் மக்கள் புதிதொரு போராட்ட வடிவமான ஆயுதப் போராட்டத்தினை நோக்கிய உந்தலுக்குத் தள்ளப்பட்டிருந்தனர். 1980களின் ஆரம்பத்தில் நிழ்ந்த அப்போராட்ட வடிவமானது அதன் பின்னரான 3 தசாப்த காலங்களில் வீரியம் மிக்கதாகவே இருந்திருக்கின்றது. இவ் மூன்று தசாப்த போரியல் வரலாற்றில் காவு கொள்ளப்பட்ட மனித உயிர்கள் ஏராளம். அங்கவீனர்கள் அநாதைகள், காணாமற் போனவர்கள், எண்ணிக்கை அதிகமானது. இந்நிலையில் தமிழ் மக்களின் நியாயமான போராட்ட வடிவங்கள் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அவர்களது பாரம்பரிய வளம் மிக்க தேசத்தினது இயற்கை வளங்களைச் சுரண்டுவதும் ஒருபடி மேல் போய் வகை தொகையின்றித் சூறையாடுவதும் சூழலியற் கோலங்களை, சட்டமைப்பை மாற்ற முனைவதும் சூழலியற் படுகொலைகளை அரங்கேற்றுவதாகவே அமையும். நீண்ட கால யுத்த நிலைமை வட–கிழக்குப் பகுதியின் இயற்கைச் சூழலைப் பெரிதும் பாதிப்படைய வைத்திருக்கின்றது. போரின் பின்னரான இற்றைக் காலம் வரை சூழலியற் சீர்கேடு இடம்பெற்றே வந்திருக்கிறது. இன்று அபிவிருத்தி என்றும் புணரமைப்பு என்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்னும் கற்பிதங்கள் கூறும் அரசும் அரசியல் கையறு நிலையினை அடைந்த மக்களிற்கும் இடையில் வடகிழக்கு இயற்கைச் சூழல் பெரும் ஆபத்தினையே எதிர் நோக்கியுள்ளது.

## 2.0 கடந்தகாலப் படிப்பினைகள்

சென்ற நூற்றாண்டில் எல்லைக் கோட்டுப் பிரச்சனைகள், இனமுரண்பாடுகள் காரணமாக உருவான யுத்தங்கள், போரியல் நடவடிக்கைகள், தனியே மனித இனத்தைப் பல்வேறு நிலைகளில் பாதித்ததோடு, அவர்கள் வாழ்ந்த பிரதேசங்களின் சூழற் தொகுதியின் அனைத்துப் பரிமாணங்களிலும் நஞ்சேற்றப்பட்டிருக்கின்றது. சுவாசிக்கும் காற்று, அருந்துகின்ற நீர், மெல்லுகின்ற உணவு என அது வியாபித்திருக்கின்றது. 20உம் 21உம் நூற்றாண்டின் முற்பகுதி வரை உலகில் பாரியளவிலான போரியல் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. கொங்கோ போர் எதியோப்பியா யுத்தம், ருவண்டா, சோமாலியா, கம்போடியா, ஈராக், குவைத் யுத்தம், இஸ்ரேல்-லெபனான் யுத்தம் மட்டுமல்லாது இரு உலகமகா யுத்தங்களையும் நாடுகள் நடத்தி முடித்திருக்கின்றன.

அகிம்சைமூலம் உரிமைகள் அபிலாசைகளை வென்றெடுக்க முடியாத நிலைக்கு நிர்க்கதியான தமிழ் மக்கள் புதிதொரு போராட்ட வடிவமான ஆயுதப் போராட்டத்தினை நோக்கிய உந்தலுக்குத் தள்ளப்பட்டிருந்தனர். 1980களின் ஆரம்பத்தில் நிழ்ந்த அப்போராட்ட வடிவமானது அதன் பின்னரான 3 தசாப்த காலங்களில் வீரியம் மிக்கதாகவே இருந்திருக்கின்றது.

போர் ஆரம்பித்து விட்டால் இரத்தமும் சதையும் சாம்பலும் ஓலங்களுமே. இத்தன்மை உடனடியான அல்லது குறிப்பிட்ட காலப் பகுதியிலான நிகழ்வோட்டமாக இருந்தாலும் இந்நிலையில் நிகழ்த்தப்படும் சூழலியற் படுகொலைகள் நீண்ட காலத்திற்குரியவை ஆகின்றன. இவ்வகையில் போரின் பின்னரான ஒவ்வொரு நடவடிக்கைகளும் சூழலியலோடு இணைந்து செல்லுகின்றபோது அதனது தாக்கம் உணரப்படலாம். நடந்து முடிந்த போர்கள் சூழலியல் ரீதியில் நீண்ட குறுகிய காலத்தில் மனித இனம் போரினால் சம்பாதித்திருக்கக்கூடிய அனுபவமாக அல்லது படிப்பினையாகக் கொள்ளலாம்.

கொரில்லா போரினால் (1998-–2003) 3 மில்லியனுக்கு அதிகமான மக்கள் நோய்த்தாக்கத்தினாலும் பட்டினிச்சாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் நோக்கியவர்களாகவும் உள்ளனர். 2 மில்லியனுக்கு அதிகமான மக்கள் தரமான குடிநீரைப் பெறுவதற்கு வாய்ப்பற்றவர்களாகக் காணப்படுகின்றனர். தொடர்ச்சியாக அகதிகளால் இறைச்சிக்காகக் காட்டு விலங்குகள் வேட்டையாடப்படுகின்றன. யானைகளின் குடித்தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. காரணம் யானைகள் தந்தத்திற்காக வேட்டையாடப்படுகின்றன. அதிர்ச்சியளிக்க கூடிய வகையில் இவ்யுத்த அனர்த்தமானது இடம் பெற்றிருக்கின்றது.

2001இல் ஆரம்பமான ஆப்கான் யுத்தம் காரணமாக மக்களது தனிப்பட்ட சுகாதாரம் பாதிப்புற்றது. கிட்டத்தட்ட 1000 கிராமங் களும் அதனை அண்டிய சூழலும் பாதிப்பிற்குள்ளாகியது. தரமான குடிநீர்த் தொகுதிகள் மாசடைந்தன. ஆப்கானின் பெரிய காடுகள் அழிவுற்றன. தலிபான் போராளிகளால் சட்டவிரோதமான முறையில் காடுகள் அழிக்கப்பட்டன. வெடிபொருட்கள் பிரயோகத்தின் விளைவு காற்று, மண், நீர், என அனைத்துமே பாதிப்படைந்தன. இது புற்று நோயை ஏற்படுத்துவதில் முதன்மையானது. ராக்கெட் உந்து கணைகளில் இருந்து இவை ஏற்பட்டன. இதனால் தைரோயிட்டு சுரப்பி மக்களில் பலருக்குப் பாதிப்படைந்தது இதன் விளைவு இன்று ஆண், பெண், குழந்தைகள் எனப் பலர் இறந்துள்ளனர்.

2001இல் ஆரம்பமான ஆப்கான் யுத்தம் காரணமாக மக்களது தனிப்பட்ட சுகாதாரம் பாதிப்புற்றது. கிட்டத்தட்ட 1000 கிராமங் களும் அதனை அண்டிய சூழலும் பாதிப்பிற்குள்ளாகியது தரமான குடிநீர்த் தொகுதிகள் மாசடைந்தன. ஆப்கானின் பெரிய காடுகள் அழிவுற்றன. தலிபான் போராளிகளால் சட்டவிரோதமான முறையில் காடுகள் அழிக்கப்பட்டன.

ஈராக், -குவைத் யுத்தம் 1990களில் ஆரம்பமாகியது. ஈராக் பலமில்லியன் தொன் மசகு எண்ணெய்த் தொகுதியை பதுக்கி வைத்த கசிவு காரணமாக 25000 வரையான குறிப்பிட்ட காலத்தில் புலம்பெயரும் பறவைகள் அழிவடைந்தன. அகக் குடா பகுதியில் எண்ணெய்க் கசிவால் 50 சதுர கிலோமீற்றருக்கு அதிகமான பரப்பளவில் பரவியவுடன் தரைக்கீழ் நீர்ப்படுக்கைகளில் எண்ணெய் தேங்கியது. இதன் விளைவு நீர் மாசடைந்தது.

வியட்னாம் யுத்த காலத்தில் அமெரிக்கா ஏறத்தாழ 19 மில்லியன் காலன்களைக் கொண்ட இரசாயனவியல் ஆயுதத்தினைத் தென் வியட்நாம் பகுதிக் காடுகளில் பிரயோகித்தது. இதன் விளைவு பெரிய காடுகள் மரஞ்செடி கொடிகள் போன்றவற்றின் இலைகள் உதிர்க்கப்பட்டன. இதனால் தென் வியட்நாம் காடுகள் வேருடன் அழிக்கப்பட்டன. யப்பான், ரஸ்யா போன்ற நாடுகளில் இன்றும் கதிர் வீச்சு தாக்கங்கள் காணப்படுகின்றன.

இவை கடந்த காலங்களில் மனித வர்க்கம் சூழலின் மீது ஏற்படுத்திய படுகொலைகளில் ஒரு சிலதே.

## 2.1 வாழ்விழந்த வான்பயிர்கள்

வடகிழக்குப் பகுதியின் காலநிலைப் பண்பு, மண்ணியல் பண்புகளிற்கு ஏற்றவாறு வான்பயிர்களான பனை, தென்னை போன்ற தாவரங்களின் வளர்ச்சியானது காணப்படுகின்றது. பருவகால மழை வீழ்ச்சியே இதன் ஜீவாதாரம். குறுகிய மாரி மற்றும் நீண்ட கோடைக்காலத்திற்கேற்ப இவை நிலை பெற்றுள்ளன. பனை வளம் இப்பிரதேசங்களின் இயற்கை மரத் தாவரங்களில் ஒன்று. பொதுவாகக் கரையோர உவர் நிலப் பகுதிகளை ஆக்கிரமித்து வளரும் இத் தாவரம் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் வட மராட்சிப் பிரிவு, தென் மராட்சிப் பிரிவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப் பகுதிகளிலும் முல்லைத்தீவு, கிளிநொச்சியின் பூனகரிப்பகுதி, மன்னார், திருகோணமலையின் ஈச்சிலம்பற்றை போன்ற பகுதிகளிலும் அதிகமாகவே காணப்படு கின்றன.

இப்பகுதிகளில் சில பகுதி மக்களின் வாழ்வாதாரமானது இவ் கற்பகத் தருவினை நம்பியே உள்ளது. இவ்வளத்தின் பெரும்பாலான பகுதிகள் ஒவ்வொன்றும் பயன்பாடுமிக்கவை. பன்ன வேலைகள், கருப்பணி, பனாட்டு, ஒடியல் மா வகைகள் போன்றவை இவற்றில் சில. தீவுப்பகுதி மக்களில் ஒரு தொகுதியினர் இதனைப் பகுதி நேர/முழு நேரத் தொழிலாக மேற்கொள்வர்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த காலங்களில் இவற்றில் பல இலட்சம் கணக்கான மரங்கள் அழிக்கப்பட்டன. குறிப்பாகப் பாதுகாப்புப் பதுங்கு குழிகள், காவலரண்கள் அமைப்பதற்காகவும் எறிகணை வீச்சுகள் மூலமாகவும் அழிவடைந்துள்ளன. அத்துடன் வடலிகள் பாதுகாப்பு காரணங்களிற்காக எரியூட்டப்பட்டுள்ளன. ஏறக்குறைய 4 மில்லியன் பனை மரங்கள் அழிவடைந்துள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவித்தாலும், அழிக்கப்பட்டவை அத்தொகைக்கு அதிகமானதாகக் கூட இருக்கலாம். இந்நிலை இவ் வளத்தினை நம்பி ஜீவனோபாயம் செய்த மக்களின் நிலையானது நிர்க்கதியானதுடன் இத்தாவரம் வளர்ச்சி பெறுவதற்கு நீண்ட காலமாகும். எனவே உயிர்ச்சூழலியல் ஒழுங்கில் மாற்றத்தை உண்டு பண்ணக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

இப்பகுதிகளில் காணப்பட்ட தென்னைகள் பெரும்பாலும் அழிவடைந்த நிலையில் உள்ளன. தென்னை பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்று. பதுங்கு குழி அமைப்பு, எறிகணை வீச்சுகள் மூலம் இவை அழிக்கப்பட்டன. 2004 வரை 12000 தென்னை மரங்கள் கிளாலி, முகமாலை, நாகர்கோவில் பகுதிகளில் அழிக்கப்பட்டிருக்கின்றன. மணலாற்று இராணுவ நடவடிக்கையின் போது முல்லைத்தீவு, அலம்பில், செம்மலைப் பகுதிகளில் தென்னந்தோப்புகள் பாதிப்படைந்துள்ளன.

ஏறக்குறைய 4 மில்லியன் பனை மரங்கள் அழிவடைந்துள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவித்தாலும், அழிக்கப்பட்டவை அத்தொகைக்கு அதிகமானதாகக் கூட இருக்கலாம். இந்நிலை இவ் வளத்தினை நம்பி ஜீவனோபாயம் செய்த மக்களின் நிலையானது நிர்க்கதியானதுடன் இத்தாவரம் வளர்ச்சி பெறுவதற்கு நீண்ட காலமாகும்.

## 2.2 அகழப்படும் சுண்ணக்கல்

யாழ்ப்பாணக் குடாநாடு மயோசின் காலச் சுண்ணக்கல் பாறையினால் உருவானது. இப்பாறைகளின் வெடிப்புகள், துளைகள், குகைகள் வாயிலாகப் பெய்கின்ற மழை நீர் கீழ் இறங்கித் தரைக்கீழ் நீராகச் சேமிக்கப்படுகின்றது. இதனாலேயே நிரந்தரமான ஆறுகள் இப்பிரதேசத்தில் இல்லை. போர்க்காலங்கள் போருக்குப் பிந்திய இற்றைக் காலம் வரை உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்திய பகுதிகளில் யாழ் குடா நாட்டின் வலிகாமம் வடக்குப் பிரிவும் ஒன்று. இப்பகுதியில்தான் சத்தம் சந்தடியில்லாமல் அதிகளவான சுண்ணக்கற்கள் அகழப்பட்டுத் தென்னிலங்கைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. குறிப்பாகக் கீரிமலை- மாவிட்டபுரம் வீதியின் இருமருங்கும் அகலமாகவும் ஆழமாகவும் அகழப்படுகின்றன. சில இடங்களில் அகழப்படும் குழிகளில் நீர் வெளித் தோன்றியுள்ளது. இதன் காரணமாகக் கோடைக்காலங்களில், நீர்ப்பற்றாக்குறைக் காலங்களில் கடல் நீர் உட்புகும் அபாய நிலை உருவாகியுள்ளது. தரைக்கீழ் நீர் வெப்பம் காரணமாக இலகுவில் துரிதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவியாக்கம் இடம்பெறலாம். இது இயல்பான ஒன்றே.



அத்துடன் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்ற வெப்பநிலைக்கு அல்லது வறட்சிக்குச் சுண்ணக்கல் அகழ்வு பிரதான காரணங்களில் ஒன்றாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது உடைபடாதிருக்கும் 100 கன அடி அளவுள்ள சுண்ணாம்புப் பாறை 10 கன அடி நீரினை உறிஞ்சி வைத்திருக்கும் தன்மை கொண்டதாகும். எனவே 1 கியூப் கற்கள் உடைத்து எடுக்கப் படுமாயின் 10 கன அடி நீர் (62.4 கலன்கள்) வெளியேற்றப் படும். இதனால் குடிநீர் விவசாயம் அனைத்திற்குமே குந்தகம் ஏற்படும். குடா நாட்டின் ஆதி மூலம் தரைக்கீழ் நீரே. இவ்வாறான நிலை நீண்ட காலப் போக்கில் நீர்ப்பற்றாக்குறையினை எதிர் நோக்குவதுடன் உவராக்கம் போன்றவை இலகுவில் ஏற்பட வாய்ப்பேற்படுகின்றது. ஏற்கனவே அராலித் தீவுப்பகுதி மக்கள் குடிநீர்த் தட்டுப் பாட்டினை எதிர் நோக்கியுள்ளனர்.

## 2.3 உருவவியல் மாறிய நிலவியல்

வடகிழக்குப் பகுதியானது நில உருவவியல் ரீதியில் பல பிரிவுகளைக் கொண்டது. மணற்குன்றுகள், சதுப்பு நிலங்கள், எச்சக்குன்றுகள், சமதரை, ஆற்றுச்சிறைகள் வெளியரும்பு பாறைகளேஅவை. போர்க்காலங்களில் இந்நில உருவியல் பெரிதும் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது. விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களால் பாரிய குழிகள் ஏற்பட்டு இருக்கின்றன. நிலக்கண்ணிகள் புதைக்கின்ற வேளையில் மட்கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுகின்றது. மீளப் பெறும் வேளை மீளவும் மாற்றம் பெறுகின்றது. பாதுகாப்புக் குழிகள் காவலரண்கள் அமைப்பு, பாதுகாப்பு அணைகள் ஏற்படுத்தல், கனரக வாகனப் பாவனைகள் போன்றவற்றின் மூலம் உருவவியல் மாற்றம் பெற்றிருக்கின்றது.

வடகிழக்குப் பகுதியானது நில உருவவியல் ரீதியில் பல பிரிவுகளைக் கொண்டது. மணற்குன்றுகள், சதுப்பு நிலங்கள், எச்சக்குன்றுகள், சமதரை, ஆற்றுச்சிறைகள், வெளியரும்பு பாறைகளேஅவை. போர்க்காலங்களில் இந்நில உருவியல் பெரிதும் மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றது. விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களால் பாரிய குழிகள் ஏற்பட்டு இருக்கின்றன.

பாரிய குழிகள் ஏற்படுகின்ற வேளையில் மண் பெயர்க்கப் படுகின்றது, மாசடைகின்றது. மண்ணரிப்பு இலகுவில் ஏற்பட வாய்ப்புள்ளது. பாரிய அணைகள் இயற்கைக்கு முரண் நிலையான தன்மையை ஏற்படுத்துகின்றது. நீரேந்தும் பிரதேசங்கள் பாதிப்படைகின்றன. ஆறுகள் வறண்டு போகலாம்; விவசாய நீர்ப்பாசன முறைகளில் மாற்றம் ஏற்படும். உயிர்ப்பல்வகைமை பாதிப்படையும் முறைகளில் மாற்றம் ஏற்படும். நீர்ப்பற்றாக்குறை, வெள்ளப்பெருக்கிற்கான வாய்ப்புகள் என இயற்கைச் சூழமைவிற்குப் புற நிலையான தாக்கங்கள் ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக மன்னார், அடம்பன்பகுதி, வவுனியா, ஓமந்தை, பாலமோட்டைப் பகுதிகள், கிளிநொச்சி முழங்காவில், முறிப்பு, முறிகண்டி எனப் பாரிய மண் அணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மீட்கப்படும் எறிகணைகள், கண்ணி வெடிகளை மீளச் செயலிழக்க வைக்கப்படும்போது பாரிய குழிகள் அப் பகுதிகளில் ஏற்படுகின்றன. குறிப்பாக அண்மைக் காலங்களில் நாகர்கோவில் பகுதிகளில் இவ்வாறான குழிகள் ஏற்படுவதாக அறிய முடிகின்றது.

அத்துடன் மண்கட்டமைப்பு மாற்றம், மண் மாசடைவு போன்றன இடம்பெற வாய்ப்பேற்படுகின்றது. குறிப்பாகக் கொத்துக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள் போன்றன இறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த காலத்தில் பிரயோகிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனால் நிச்சயமாக மண்மாசடைவு இரசாயனக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

## 2.4 அழிக்கப்படும் காடுகள்

இப் பிரதேச இயற்கைக் காடுகள் எனும் போது பெரும்பாலும் உலர் பருவக் காற்றுக் காடுகளே காணப்படுகின்றன. எனினும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்ளில் ஈரப்பருவக்காற்றுக் காடுகளும் நன்கு வளர்ச்சி அடைந்திருந்தன. இப் பகுதியில் வீரை, பாலை, சமண்டலை, காயா, கொண்டல், மகோகனி, போன்ற பெறுமதி மிக்க மரங்களை அவதானிக்கலாம். இவ்வாறான காட்டுவளமானவை இராணுவப் பாதுகாப்பிற்காக அமைக்கப்படு கின்ற பாதுகாப்பு அரண்கள் மற்றும் பாதுகாப்புக் குழிகள், விறகுத் தேவைகள் மற்றும் பிரதான நெடுஞ்சாலைகளிற் இருமருங்கிலும் உள்ளவை. போக்குவரத்துப் பாதுகாப்பிற்காக அழிக்கப்பட்டிருக் கின்றன.

குறிப்பாக நோக்கின் 1996 காலப் பகுதியில் வவுனியா மன்னார் பகுதியில் இடம் பெற்ற "எடிபல" இராணுவ நடவடிக்கையின் போது வீதிகளின் இரு மருங்கிலும் 50-100 அகலத்தில் காடுகள் அழிக்கப்பட்டிருந்தன.

1997--1999 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற ஜெயசிக்று இராணுவ நடவடிக்கையின்போது ஓமந்தை, மாங்குளம் பிரதேசத்தினை அண்டிய காடுகள் பெரிதும் அழிக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் **A9** நெடுஞ்சாலைக்குக் கிழக்காக ஒட்டிசுட்டான்- டொலர்பண்ணை கொன்ற் பண்ணை வீதிகளில் பெருமளவிலான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 2500 ஏக்கர் காடுகள் அழிவுற்றதாக நம்பப்படுகின்றது.

இன்றும் வடகிழக்குக் காட்டுப்பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் தென்னிலங்கையர்கள் மரத்தளபாட உற்பத்திக்காகத் தேக்கு, மகோகனி போன்ற பெறுமதியான மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக மணலாறு தெற்கு மாங்குளத்தை அண்டிய பகுதியில் இவற்றை அவதானிக்கலாம். மீள் வனமாக்கல் செய்யும் 150 வருட காலப் பகுதியிலேயே இவற்றின் பூரண வளர்ச்சி நிலை அடைய முடியும் எனக் கூறப்படுகின்றது.

இன்றும் வடகிழக்குக் காட்டுப்பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் தென்னிலங்கையர்கள் மரத்தளபாட உற்பத்திக்காகத் தேக்கு, மகோகனி போன்ற பெறுமதியான மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக மணலாறு தெற்கு மாங்குளத்தை அண்டிய பகுதியில் இவற்றை அவதானிக்கலாம். மீள் வனமாக்கல் செய்யும் 150 வருட காலப் பகுதியிலேயே இவற்றின் பூரண வளர்ச்சி நிலை அடைய முடியும் எனக் கூறப்படுகின்றது.

## 2.5 கொள்ளை போகும் மணல் வளம்

வட கிழக்குப் பகுதியின் புவிச்சரித காலங்களின் வண்டல் படிவுகள், மணல் படிவுகள் என்பன கரையோரத்தில் காணப் படுகின்றன. இங்குச் சாதாரண மணல் முதல் கனிய மணல் (சிலிக்கா) மற்றும் இல்மனைற், றூட்டைல் எனும் பெறுமதி மிக்க மணல்கள் காணப்படுகின்றன. குறிப்பாகச் சாதாரண மணல் எனும் போது பூநகரி, மன்னார், அரியாலை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, சாட்டி போன்ற இடங்களிலும், கனிய மணல் வட மராட்சிக்குக் கிழக்கில் அம்மன், குடத்தனை, நாகர்கோவில், நிலாவெளி போன்ற இடங்களிலும் இல்மனைற் புல்மோட்டை, நாயாறு, திருக்கோவில் போன்ற இடங்களிலும் காணப்படுகின்றது. இங்குப் புனரமைப்பு, புதிய கட்டடங்கள் அமைப்பு என வகை தொகையின்றி மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றன. கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டமளவில் அகழப்படுகின்றது. சில இடங்களில் உவர் நீரின் ஊடுருவல் காணப்படுகின்றது. அத்துடன் கரையோரத் தாவரங்கள் பலவும் நீக்கப்பட்டுள்ளன. கிராமங்களுள் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. கரையோர அரிப்புத் தீவிரப்படுத்தப் பட்டிருக்கின்றது. பழமையான கட்டடங்கள், சாலைகள் சேத மடையத் தொடங்கியுள்ளன. மீனவர்களின் ஜீவனோபாயத்தில் பாதிப்பு ஏற்படுகின்றது. குறிப்பாக மணற்காடு சார்ந்த வடமராட்சிக் கிழக்கு, சாவகச்சேரிநகர்ப் பிரதேசங்களில் இச் சூழல் முரண் நிலை உருவாகியுள்ளது.

கிராமங்களுள் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. கரையோர அரிப்புத் தீவிரப்படுத்தப் பட்டிருக்கின்றது. பழமையான கட்டடங்கள், சாலைகள் சேத மடையத் தொடங்கியுள்ளன. மீனவர்களின் ஜீவனோபாயத்தில் பாதிப்பு ஏற்படுகின்றது. குறிப்பாக மணற்காடு சார்ந்த வடமராட்சிக் கிழக்கு, சாவகச்சேரிநகர்ப் பிரதேசங்களில் இச் சூழல் முரண் நிலை உருவாகியுள்ளது.

புல்மோட்டைப் பகுதியில் இல்மனைட் 44 மில்லியன் தொன்னளவில் காணப்படுகின்றது. இவ் கடற்கரை மணலில் 70-72கி இல்மனைற்றும், 8-10கி வரை றூட்டைலும் 8கி ஸேர்கோனும், 0.3கி மொனோசைட்டும் காணப்படுகின்றது. புல்மோட்டை இல்மனைற்றில் 52கி வரை டைட்டானியம் ஒக்சைட் உண்டு. இவை உலகில் மிகச் சிறந்த வகையினப் படிவுகளாகக் கருதப்படுகின்றன. இப்படிவுகள் ஜப்பான் நிறுவனங்களில் தாரைவார்க்கப்பட்டுள்ளன. ஆண்டு தோறும் பிரித்தெடுக்கப்படும் கனியங்கள் யப்பானுக்கு ஏற்றுமதியாகின்றன. இவ்வகை சுரண்டல் மூலம் எதிர்காலத்தில் இவ்வளம் பற்றாக்குறை ஏற்படும்போது பிரதேச அபிவிருத்தித் தொழிற்பாடுகள் முடக்கப்படும்.

## 2.6 கபளீகரமாகும் கண்டல்கள்

வட கிழக்குப் பகுதியானது நீண்டதும் பல்லுருவத் தன்மை கொண்டதுமானதும் ஆற்று வடிநிலங்கள் சங்கமிக்கும் முடிவு களைக் கொண்டதாகவும் அமைவு பெற்றுள்ளது. இயல்பாகவே உவர் நீரும் வெள்ள நீரும் கலக்குமிடங்களாகக் காணப்படும். இவ்விடங்களில் காணப்படும் கண்டல் காடுகள் பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளன. குறிப்பாக யாழ் மாவட்டத்தில் நாகர்கோவில்பகுதி, அரியாலைப் பகுதி, தொண்டைமானாற்றுப் பகுதி, மண்டைத் தீவு, புங்குடு தீவு ஆகிய பகுதிகளிலும் முல்லைத்தீவில் கொக்கிளாய், நாயாறு, மன்னார், திருமலையில் மூதூர், மட்டக்களப்பில் கதிரவெளி, வாழைச்சேனை, காரைத் தீவு, அம்பாறை, பொத்துவில் என வியாபித்துள்ளது. மட்கட்டமைப்பைப் பிடிமானமாக வைத்துக் கொள்ளவும் காற்றுக் காலங்களில் அலைகளின் தாக்கத்தில் இருந்து கரையோரத்தைப் பாதுகாக்கவும் உயிர்ப் பல்வகைமையின் உறைவிடமாகவும் இவை விளங்குகின்றன.

போர்க் காலங்கள், போரின் பின்னரான இக்காலம் வரை இவை அழிக்கப்பட்டிருக்கின்றன. போர்க் காலங்களில் நாகர் கோவில், தொண்டைமானாறு, மண்டைத் தீவு, சத்துருக்கொண்டான், பிரதேசக்கண்டல் காடுகள் ஆனவை பாதுகாப்புக் காரணங்களிற் காக வகைதொகையின்றி அழிக்கப்பட்டன. குறிப்பாகக் கரையோரங்களின் அரணாகவிருந்து அழகுக்கு அழகு சேர்த்த கண்டல் காடுகள் அக்கரைப்பற்றிலிருந்து திருக்கோவில் வரையான சுமார் 10கிமீ வரையான வாவியினை அண்டியிருந்த கண்டல்கள் அழிக்கப்பட்டன.

பெரும்பான்மையினக் குடியேற்றங்கள், இராணுவப் படைத்தள விஸ்தரிப்பகள் என்பவற்றிற்காகக் கொக்கிளாய் சரணாலயப் பகுதியில் 1500 ஹெக்டேர் வரையிலான கண்டற்காடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அம்பாறை, மட்டக்களப்பு வாவிகளில் ஒரு காலத்தில் சிலாகித்துப் பேசப்பட்ட மீனினங்கள் கண்டல்களின் அழிவோடு அழிந்ததாகக் கடற்தொழிலாளர்கள் விசனம் தெரிவித்திருந்தார்கள்.

## 2.7 இழக்கப்படும் ஈர நிலங்கள்

சூழல் தொகுதிகளில் ஈர நிலத் தொகுதிகளும் குறிப்பிடத்தக்கவை. வடகிழக்குப் பிரதேசத்தில் இவற்றின் பரம்பல் அதிகமாகக் காணப்படுகின்றது. இவை இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் யாழ்ப்பாணக் கடனீரேரிக் கட்டுக்கரைக் குளம், வங்காலைக் கடற்கரைச் சரணாலயம், இரணைமடுக்குளம், கல்லோயா நீர்த்தேக்கம், அல்லை, கந்தளாய் போன்றன முக்கியமானவை. இவை தவிரச் சிறியளவிலான ஏராளமான தொகுதிகள் பிரதேசம் எங்கும் பரந்து கிடக்கின்றன. சூழலியல் ரீதியில் அவற்றின் நன்மையோ ஏராளம். நகரக் கழிவுகளை மெல்லவும் கார்பன் சேர்வைகளைத் தேக்கி வைக்கும் இடமாகவும் நுண்கால நிலை, பிரதேச கால நிலை ஆகியவற்றைச் சீர்ப்படுத்தவும் உதவுகின்றன. இவை அண்மைக் காலங்களில் அபிவிருத்திகள் உல்லாச விடுதிகள், கட்டடங்கள் அமைப்பிற்காக ஆக்கிரமிக்கப்பட்டு மேடுறுத்தி ஈர நிலங்களை இல்லாமற்செய்யும் மெத்தனப் போக்கைக் காணலாம்.

அத்துடன் யாழ்குடா நாட்டின் சிறு குளங்கள் அண்டிய பிரதேசங்களில் அமைக்கப்படுவதும், சூழலியல் நியமங்களிற்குப் புறம்பாக குளங்களைப் பயன்படுத்த முனைவதும், நகர மாநகரக் கழிவுகளானவை முகாமைத்துவமிக்க திண்மக்கழிவகற்றல் இன்றிச் சதுப்பு, கைவிடப்பட்ட குளங்களில் கொட்டப்பட்டுத் தொடர்ந்து வருவதும், ஈர நிலங்களின் அச்சுறுத்தலுக்கான ஆரம்பமே. இன்று புல்லுக்குளம், தாராக் குளம் போன்றவற்றின் நிலையும் இதுவே.

> தூர்ந்து போன கால்வாய்கள், குளங்கள், நீர்ப்பாசன அபிவிருத்தி செய்யும் பொருட்டு புனரமைப்புகள் இடம்பெறவே யில்லை. உப்புப் பாத்திகள் வெறுமனே வறண்டு கிடக்கின்றன. ஆனையிறவு உப்பளத்தின் நிலை மீளியங்க வைக்க முயன்றாலும், நிலக் கண்ணிவெடிகளின் ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டிருக்கின்றது.

தூர்ந்து போன கால்வாய்கள், குளங்கள், நீர்ப்பாசன அபிவிருத்தி செய்யும் பொருட்டு புனரமைப்புகள் இடம்பெறவே யில்லை. உப்புப் பாத்திகள் வெறுமனே வறண்டு கிடக்கின்றன. ஆனையிறவு உப்பளத்தின் நிலை மீளியங்க வைக்க முயன்றாலும், நிலக் கண்ணிவெடிகளின் ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டிருக்கின்றது. "வடகிழக்கு ஈர நிலங்கள் மத்திம அளவில் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன. பலவற்றின் ஆய்வுகள், தரவுகள் இடம்பெற வில்லை காரணம் போர்'' என இலங்கையின் ஈரநிலங்களிற்கான அகராதி குறிப்பிடுகின்றது.

## 2.8 காணாமல் போகும் கரையோரச் சூழல்

பரந்த கண்டமேடை, சிறந்த மீன்பிடித் தளங்கள், நீண்டதும் பல்லுருவத் தன்மை கொண்டதுமான கடற்கரை, ஆற்றுப் பொங்கு முகங்களின் அமைவென வடகிழக்கின் சூழல் அமைவு பெற்றுள்ளது. முருகைகள், பவளப்பாறைகள், கடற்சார் பாலூட்டிகள், மீனினங்கள் என உயிர்ப்பல்வகைமைக் கூறுகள் அதீதம் காணப்படுகின்றன. அத்துடன் சுற்றுலாக் கைத் தொழிலுக்கு ஏற்றவாறான பாசிக்குடா, நிலாவெளி, மன்னார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்டி, வடமராட்சிக் கிழக்கு, கசூரினா கடற்கரை வெளிகள் காணப்படுகின்றன.

போர்ச்சூழல் இவ்வாறான கரையோரச் சூழலை சீர்கெட வைத்திருக்கின்றது. போர்க் காலத்தில் கடல் மற்றும் கரையோரங்கள் அதிக முக்கியத்துவம் பெற்றனவாய் விளங்கின. இங்கு நடைபெற்ற யுத்தங்கள், தாக்குதல்கள் என்பனவும் கப்பல்கள், கடற் கலங்கள் போன்றவற்றின் தொடர்ச்சியான ஊடுருவல் போன்றன சூழலை மாசுற வைத்திருக்கின்றன. பாதுகாப்பிற்காகக் கரையோரங்களில் பாதுகாப்பு வேலிகள், கண்ணி வெடிகள் எனக் கரையோரச் சூழல் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது. தாக்குதல் களின் அதிர்வுகள் மீனினங்களின் இயல்பு வாழ்வைப் பாதித்தி ருக்கலாம். முருகைகளில் வெடிப்புகள் ஏற்பட்டிருக்கலாம்.

போரின் பின்னரான இன்றைய காலம் வரை இயல்பான நடைமுறைகளோடு வடகிழக்குப் பகுதி மீனவர்கள் தொழிலில் ஈடுபட முடிவதில்லை. ஆனால், தென்னிலங்கை மீனவர்கள் அண்மைக் காலங்களில் முல்லைத் தீவு, நாயாறு, கொக்கிளாய், வடமராட்சிக் கிழக்கு, தீவுப் பகுதிகள் என மீனவ வாடிகளோடு பலர் குடும்பங்களாகவே குடியேறியுள்ளனர். தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகள், தனியிழை, தங்கூசி வலைகள் என்பன சிறிய மீன் வகைகளை மிகையாகச் சுரண்டுகின்றனர். சிலிண்டர், டைனமற் பாவனைகள் பவளப்பாறைகளைச் சிதைத்து அழிப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்திய மீனவர்களின் ஊடுருவல் வட கடற்பகுதி மீன் வளத்தைக் கபளீகரம் செய்கிறது. அரசுகள் பாராமுகமாக இருக்கின்றன.

காரணம் இரு நாட்டுத் தமிழர்களிடையே நிரந்தரமான பகைமையை ஏற்படுத்துவதே. அத்துமீறி நுழையும் இம் மீனவர்கள் இழுவைப் படகுகள், வத்தைகள் (படகுகள்) மூலம் ஒற்றை இழுவை மடிகள், இரட்டை இழுவை மடிகள் மூலம் வட பகுதிக் கடல் வளம் வாரி எடுத்துச் செல்லப்படுகிறது. மன்னார் வளைகுடாப் பகுதி, பாக்கு நீரிணைப் பகுதியில் இவர்களது பிரசன்னம் அதிகம். பெறுமதி மிக்க கடலட்டை, சங்கு, கணவாய், சிங்கி, நண்டு, மீன் சூறையாடப்படுகின்றது. இவ்வாறான நிலைகள் தொடருமாயின் மன்னார் உயிரினப் பூங்காவின் எதிர்காலம் கடல் பாலைவனமாக மாறும் நிலையுள்ளது.

பாசிக் குடா, நிலாவெளி, புறாத்தீவு எனும் உல்லாசக் கடற்கரைகள் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன. கிழக்குக் கரையோரங்கள் பலவற்றைக் கையகப்படுத்திச் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் நிலையில் சூழலியல்சார் சுற்றுலா பேண் நிலை இங்கு உருவாக்கப்படவில்லை. இது கரையோரச் சூழலை நீண்டகாலத்தில் பாதிப்படைய வைக்கின்றது.

போரின் பின்னரான இன்றைய காலம் வரை இயல்பான நடைமுறைகளோடு வடகிழக்குப் பகுதி மீனவர்கள் தொழிலில் ஈடுபட முடிவதில்லை. ஆனால், தென்னிலங்கை மீனவர்கள் அண்மைக் காலங்களில் முல்லைத் தீவு, நாயாறு, கொக்கிளாய், வடமராட்சிக் கிழக்கு, தீவுப் பகுதிகள் என மீனவ வாடிகளோடு பலர் குடும்பங்களாகவே குடியேறியுள்ளனர்

## 2.9 தரிசாகும் விவசாய நிலங்கள்

இப்பிரதேச மக்களின் பிரதான தொழில் விவசாயம். பெரும்பான்மையினர் இத் தொழில் மூலம் பிழைப்பூதியம் செய்வர். விவசாயம் எனும் போது தோட்டச் செய்கை மற்றும் நெற்செய்கை பிரதானமாக இருப்பினும் கிழக்கு மாகாணத்தில் குறிப்பிட்ட தொகையினர் மரப்பயிர்ச் செய்கையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுகின்றனர். இச்சமூகம் தன்னிறைவான விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்டது. இம்மக்களே இன்று உணவிற்காக நிவாரணங்களை எதிர்பார்த்தபடி உள்ளனர். தொடர்ந்த போர்ச்சூழல் கண்ணிவெடிகள் உருவாக்கப்பட்ட வலயங்கள், மக்களின் விவசாய உள்ளீட்டிற்கான கையறுநிலை எல்லாம் சேர்ந்து வடகிழக்கு விவசாய நிலங்களைத் தலைகீழாக மாற்றியுள்ளது. ஒவ்வொரு மாவட்டங்களிலும் தரிசாகும் விவசாய நிலங்கள் பல்லாயிரம் ஏக்கர்கள் கவனிப்பாரின்றிக் காடு வளர்கின்றது. ஒரு காலத்தில் வட கிழக்குப் பிரதேசத்தில் இருந்து விவசாயப் பொருட்கள் தென்னிலங்கைக்கு ஏற்றுமதியாகியுள்ளன.

தரிசாகும் நிலங்கள் விவசாயத்திற்குத் தொடர்ச்சியாக உட்படுத்தும் வேளையில் அவற்றின் உற்பத்தி, விளைவுத் திறன் அதிகமானதாக இருப்பதுடன் விவசாய உயிர்ச் சூழலியல் ரீதியில் உயிர்ப்புடனான சூழலாக விளங்கமுடியும். இன்று பல இடங் களில் உயிர்ப்பற்ற மனிதனுக்கும் சூழலுக்கும் இடைத்தொடர்பற்ற நிலையினைக் காணக்கூடியாதாக உள்ளது. அத்துடன் பேண்தகு முகாமைத்துவம் இன்றி விவசாயச் செய்கை இடம்பெறுகின்றது. அதாவது திட்டமிடல்களோ, கொள்கைகளோ எதுவுமின்றிச் சூழலோடு இயைந்த நிலைமைகளைக் காண்பதே கடினம் தான். வகைதொகையின்றி கிருமிநாசினி, உரப்பாவனை விவசாய நிலங்களைச் சீரழிக்கத் தொடங்கியுள்ளது. போருக்கு முன்னான காலப்பகுதியில் பெரும்பாலும் இயற்கைப் பாசனப் பாவனையே இப்பிரதேசத்தில் காணப்பட்டது. யாழ் மாவட்டத்தின் விவசாய நிலங்களை இரசாயனப் பாவனை தரைக் கீழ் நீரில் நைட்ரஜன், பொஸ்பரஸ் என்பன அதிகரிப்பதற்குக் காரணம்.

தரிசாகும் நிலங்கள் விவசாயத்திற்குத் தொடர்ச்சியாக உட்படுத்தும் வேளையில் அவற்றின் உற்பத்தி, விளைவுத் திறன் அதிகமானதாக இருப்பதுடன் விவசாய உயிர்ச் சூழலியல் ரீதியில் உயிர்ப்புடனான சூழலாக விளங்கமுடியும். இன்று பல இடங் களில் உயிர்ப்பற்ற மனிதனுக்கும் சூழலுக்கும் இடைத்தொடர்பற்ற நிலையினைக் காணக்கூடியாதாக உள்ளது. அத்துடன் பேண்தகு முகாமைத்துவம் இன்றி விவசாயச் செய்கை இடம்பெறுகின்றது.

பொருத்தமான நிலவகைப்பாட்டுக் கொள்கைகள் இன்றி நிலங்கள் பயன்படுத்தப்படுகின்றது. தோட்டச் செய்கைக்குப் பொருத்தமான நிலங்கள் குடியிருப்புகளாக மாற்றமடைகின்றன. பயனற்ற காணிகளாய்க் கவனிப்பாரின்றிக் கிடக்கின்றது. யாழ்ப்பாணச் செம்மண் வலயங்கள் பெரும்பாலும் இன்று குடியிருப்புகள் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன. இவை தோட்டச் செய்கைக்கு உகந்த மண்ணாகக் காணப்படும். இப்பகுதிகளின் தோட்டப் பொருளாதாரம் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது.

## 2.11 இயற்கைச் சூழலை மாற்றும் திட்டங்கள்

வடகிழக்குப் பகுதியில் உள்ளார்ந்த வளங்களை நோக்கியதாக வல்லரசுகளின் படையெடுப்பு குவிமையப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் சுயலாபம், பிராந்திய அரசியல் நலன் எனும் கோட்பாட்டு வடிவங்களிற்கு அவ்வளங்கள் சுரண்டத் தயார்படுத்தப்படுகிறது. இதற்கு இலங்கை அரசும் துணை செய்கின்றது. சேது சமுத்திரத்திட்டம், சம்பூர் அனல் மின் நிலையம் என்பவற்றிற்கு அப்பால் இன்று மன்னார் கடற்பகுதியில் எண்ணெய்வள அகழ்வும் சாத்தியமாக்கப்பட்டுள்ளது. சேதுசமுத்திரத் திட்டம் ஆரம்பமாகிய வேளை வடபகுதி கடல் மற்றும் கரையோரச் சுற்றாடல் தாக்கமதிப்பீடுகள் உரிய முறையில் மேற்கொள்ளப் படவில்லை. அத்துடன் துறைசார் நிபுணர்களின் நியாயப்பாடுகள் கருத்தில் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே இன்று பேசப்படும் எண்ணெய் வள அகழ்வாய்வுகள் இடம்பெறப் போகின்றன

திருகோணமலையில் நீண்ட காலமாகத் திட்டமிடப்பட்டு வருகின்ற அனல் மின்நிலையத்திற்காகச் சம்பூர் பிரதேச மக்கள் இன்னும் மீள் குடியமர்த்தப்படவில்லை. சம்பூர் பிரதேசத்திலேயே இந்திய அரசின் அனல் மின்நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலப் பொருளாக நிலக்கரி, மசகு எண்ணெய் பயன்படுத்தப்படும். இவற்றின் மூலம் வெளிவிடப்படும் கழிவுப் பொருட்கள் அப்பிரதேசத்திலேயே அகற்றப்படும் வேளை, எத்தகையதான சூழல் சீர்கேடுகள் விளையும் என எண்ணிக் பார்க்க முடியாது. ஒரு திட்டமானது நடைமுறைப்படுவதற்கு முன் முயற்சியாக நிபுணர் குழுவினால் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின் அதனைப் பரிசீலிக்கு எடுத்துச் சூழலுக்கு ஊறுவிளைவிக்காத திட்டங்களே நடைமுறைச் சாத்தியமானவை. ஆனால், இங்கு அவ்வாறில்லை. எழுந்தமானதாக, சுயலாபங்களிற்காக அனைத்துத் திட்டங்க ளிற்கும் செயல்வடிவம் கொடுக்கப்படுகின்றது.

## 3.0 முடிவுரை

மேற்குறிப்பிட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ள சூழலியல் சார் பிரச்சினைகள் நீண்ட காலப் போக்கில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் நிலையில் உள்ளன. 30 வருட கால யுத்த சூழ்நிலையில் அனைத்தினையும் இழந்த மக்களிற்கு எதிராக இயற்கைச் சூழல் மீண்டுமொரு தாக்கத்தினை ஏற்படுத்தப் போகின்றது. பிரதேசங்களிற்குரிய பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக வளாகங்கள், துறைசார்பான நிபுணர்கள் இருந்தும் ஆய்வுகள், பகுப்பாய்வுகள் என்பன பெரிய அளவில் இடம்பெறவில்லை. இத்தகைய நிலையானது மேலும் வளங்களைச் சுரண்டவும் சீரழிக்கவும், சூழலை மாற்றியமைப்போருக்கும் வாய்ப்பளிப் பதாகவே அமைகின்றது. பாரம்பரியமாக, பல நூற்றாண்டுகளாக மண்ணோடும் மரபோடும் இயற்கையோடு ஒட்டி உறவாடிய மக்களிற்கும் இயற்கை ஒழுக்கிற்கும் இடைவெளி அகலப்படுத்தப் படுகின்றது.

போரின் பின்னரான அபிவிருத்தி, புனரமைப்பு போன்றவை எத்தகையதான கற்பிதங்களைக் கூறினாலும் பேண்தகு அபிவிருத்தி நிலையில் சூழலியலோடு இணைந்ததாக நட்பார்ந்த நிலையில் அவை முன்னெடுக்கப்பட வேண்டும். அந்நிலையில் தான் அது நீடித்திருக்கக் கூடியதான வாய்ப்பினை அளிக்கின்றது. இல்லையெனில் அரசியல் ரீதியில் எத்தகையதான கையறு நிலையினைத் தமிழ் மக்கள் எதிர் நோக்குகிறார்களோ அவ்வாறே இயற்கையுடனான நட்பார்ந்த நிலையையும் அடைவார்கள்.

அறிவிப்பு:

மாற்றுவெளி இதழில் அழைப்பாசிரியராகச் செயல்பட அழைக்கி றோம். தாங்கள் உருவாக்க விரும்பும் சிறப்பிதழின் பொருண்மை குறித்தும் அதில் எவ்வகையான ஆக்கங்கள் இடம்பெறச் செய்வீர்கள் என்பதையும் எழுதி அனுப்புங்கள். உங்கள் திட்டத்தை ஆசிரியர் குழுவின் ஒப்புதலோடு நடைமுறைப்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பிரக்ஞையின் உருவாக்கம்: மகாவம்சத்திலிருந்து சிங்களத் தேசியவாதத்தை நோக்கி

■ அர்ஜுன குணரத்ன
தமிழில்: மனோ

சிங்களவர் கொண்டுள்ள வரலாற்றுப் பிரக்ஞை பற்றிப் பல்வேறு எழுத்தாளர்களும் சிலாகித்துப் பேசுவதுண்டு. சிங்களவர்களது கற்பிதத்தில் (Imagination) பல்வேறுவிதமான வரலாற்றுபூர்வமான ஐதீகங்கள் ("Historical Myth") கொண்டுள்ள உறுதியான பிடிப்பை இதற்கு ஆதாரமாகக் காட்டுவர். விஜயன் மற்றும் துட்டகைமுனுவின் கதைகளும் இலங்கைக்கு புத்தர் மேற்கொண்டதாகக் கூறப்படும் மூன்று விஜயங்கள் பற்றிய புராணக் கதையும் இவற்றில் முக்கியமானவையாகும். இந்த ஐதீகங்களுக்கு முதன்மையான ஆதாரமாக அமைவது மகாவம்சம் எனப்படும் மாபெரும் வரலாற்றுக் காப்பியமாகும். இந்தக் காப்பியமானது கிறீஸ்த்துவுக்குப் பின்னர் ஆறாவது நூற்றாண்டில் புனையப்பட்ட தாகும்.

மேற்கூறப்பட்ட எழுத்தாளர்களது கருத்தின்படி இந்த வரலாற்றுப் பிரக்ஞையானது அதன் அடிப்படையான அம்சங்களில் அதிகம் மாற்றமுறாமலேயே இலங்கையின் பெரும்பாலான வரலாற்றுக் காலம் முழுவதும் தொடர்ந்து வந்துள்ளதாக உள்ளூர ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால், வரலாற்றுப் பிரக்ஞை என்பது மக்களது மரபணுவில் காணப்படும் ஒன்றல்ல. அது கலாச்சார ரீதியான ஒரு படைப்பாக்கமாகும்: இது வளர்த்தெடுக்கப்பட்டு மக்களது மனங்களில் நடப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இதுவொரு செயலற்ற (Passive) நடைமுறை அல்ல: மாறாக மக்கள் கூட்டமானது, தமது சமுதாயத்தின் கடந்த காலத்தைக் கட்டமைப்பது தொடர்பான ஒரு செயலூக்கமான (Active) நடவடிக்கையைக் குறிக்கிறது. இந்தப் பிரக்ஞையைக் கட்டமைக்கும் செயற்பாடானது ஒருவித கற்பித்தல் நடைமுறையையும் உள்ளடக்கியதாக அமைகிறது.

குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலானது மக்களது பிரக்ஞையின் வடிவம் மற்றும் அதன் திசையமைவு (Orientation) என்பவற்றைத் தீர்மானிப்பதாக அமைகிறது. வரலாற்றுபூர்வமான பிரக்ஞையைக் கட்டமைப்பதற்கான மூலப் பொருட்களாக அமைவது எப்போதுமே சமகாலமேயாகும்: ஏனைய உற்பத்தித் துறைகளில் போலவே இங்கும் இந்த மூலப் பொருளானது உற்பத்தியின் அடுத்த

இக்கட்டுரையாசிரியர் சமூக அரசியல் ஆய்வாளர். பல்கலைக்கழக மட்டச் செயல்பாட்டாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்ட செயற்பாட்டுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது: ஆவணங்கள், எழுத்துகள், கிராமியக் கதைகள் போன்றவை இப்படிப்பட்ட மூலப் பொருட்களாக அமைகின்றன. ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலின் கீழ், தேசியப் பிரக்ஞையை கட்டமைக்க முன்வருபவர்களான தலைமைகள், (இவர்கள் மதம் சார்ந்தவர்களாகவோ அல்லது மதச்சார்பற்றவர்களாகவோ இருக்கலாம்) தமது நிகழ்ச்சித் திட்டங்களுக்கு (Agenda) அமைய இந்த மூலப் பொருட்களைப் பயன்படுத்தப்படவும், சூழ்ச்சித்திறனுடன் கையாளவுங்கூட(Manipulate) செய்கின்றன.இந்த வகையான சூழ்ச்சித்திறனுடன் கூடிய கையாளல்கள் மூலமாக, இவர்கள் தமது கலாச்சாரத்தின் வரலாற்று ரீதியான தொகுப்பிலிருந்து சிலவற்றைப் பொறுக்கியெடுத்து, 'இவைதாம் தமது இருத்தலுக்கு மிகவும் அத்தியாவசியமான கூறுகள்' எனும் வகையில் அழுத்தமாக மக்களின் முன் வைக்கிறார்கள். இவ்வாறு சொல்வதன் அர்த்தம் யாதெனில், வரலாற்று ரீதியான கலாச்சாரத் தொகுப்பில் மேலே கூறப்பட்ட அம்சங்கள் ஏதோ ஒரு வடிவில் இருக்கவே செய்கின்றன என்பதும், அப்படியாக இருப்பவற்றில் சிலவற்றைத் தான் இவர்கள் பொறுக்கியெடுத்துப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்பதை வலியுறுத்துவதாகும்.

ஆனால், இந்தத் தொகுப்பிலிருந்து ஏன் குறிப்பிட்ட சில கூறுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன, ஏன் சில புறக்கணிக்கப்பட்டன என்பதைப் புரிந்துகொள்வதற்கு நாம் இந்தச் சொல்லாடல்கள் உருவாக்கப்பட்ட வரலாற்றுப் பின்புலத்தைச் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், ஒருக்கால் இந்தச் சொல்லாடல்கள் உருவாக்கப்பட்டு, அவற்றின் கூறுகள் மக்களது பிரக்ஞையிலும் உள்வாங்கப்பட்டுவிட்டாலோ, அதற்குமேல், இந்தப் போக்கானது தனக்கெனத் தனியான ஒரு இயக்கப் போக்கை (dynamic) பெற்றுவிடுகிறது. கிறீஸ்தவம் மற்றும் மேற்கத்தையமயமாதல் போன்றவற்றின் ஊடுருவல் எனக் கருதப்பட்டவற்றிற்கு எதிராக 'சிங்கள பௌத்தர்களை'க் கிளர்ந்தெழச் செய்வதற்கான ஒரு செயல்முறையானது உருவாக்கப்பட்டுவிட்டால், மேலே குறிப்பிட்ட பிரச்சனைகள் ஆபத்தற்றனவாக மாறிய பின்பும் கூட, ஏனைய 'பிரச்சினைகள்' தொடர்பாகவும் இதே வழிமுறைகள் பயன்படுத்தப்படலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில், 'பௌத்த மறுமலர்ச்சி' என்று கூறப்படும் இப்படிப்பட்டதொரு ஆய்வுச் சட்டகம் (Paradigm) உருவாக்கப்பட்டது. இந்த ஆய்வுச்சட்டகத்தின் பிரதான கர்த்தாவாகிய அநாகரிகத் தர்மபாலாவின் எழுத்துக்களில், மேற்கு நாட்டவர்களான, அவர்களிலும் குறிப்பாகக் கீழைத்தேயம் பற்றிய ஆய்வாளர்களான (Orientalist Scholars) கருத்தாக்கங்கள் பெருமளவில் எடுத்தாளப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. பௌத்த மறுமலர்ச்சியானது நவீனச் சிங்களத் தேசிய வாதத்திற்கான அடித்தளத்தையிட்டது.

ஆனால், இந்தத் தேசியவாதத்தைப் புரிந்துகொள்வது என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினர் பிரக்ஞைபூர்வமாகக் கொண்டுள்ள அரசியல் சித்தாந்தம் என்ற வகையில் முடியாது. மாறாக பெனடிக்ட் அன்டர்சன் (Benadict Anderson) வாதிப்பது போல, இதற்கு முன்பு இருந்த கலாச்சார முறைமை பற்றியும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பழைய கலாச்சார முறைமையில் இருந்தும் அவ்வாறே இந்தச் கலாச்சார முறைமைக்கு

வரலாற்றுபூர்வமான பிரக்ஞையைக் கட்டமைப்பதற்கான மூலப் பொருட்களாக அமைவது எப்போதுமே சமகாலமேயாகும்: ஏனைய உற்பத்தித் துறைகளில் போலவே இங்கும் இந்த மூலப் பொருளானது உற்பத்தியின் அடுத்த கட்ட செயற்பாட்டுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது: ஆவணங்கள், எழுத்துகள், கிராமியக் கதைகள் போன்றவை இப்படிப்பட்ட மூலப் பொருட்களாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராகவும் இந்தத் தேசியவாதமானது உருப்பெறுகிறது. சிங்களவர்களது வரலாற்றுப் பிரக்ஞையானது வரலாற்றினால் ஏற்கனவே தயாராக வைக்கப்பட்டிருந்து கையளிக்கப்பட்டதல்ல: மாறாக இலங்கையின் சமூக வரலாற்றுக் கட்டமைப்புகளில் அடிப்படையான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு இருந்த காலத்தில், ஏற்கனவே இருந்து வந்த அம்சங்களைக் பயன்படுத்திக் கட்டமைக்கப்பட்டதே சிங்கள மக்களது இந்த வரலாற்றுப் பிரக்ஞையாகும். இதுவே இந்தக் கட்டுரையின் பிரதான கருப்பொருளாக அமைகிறது.

வரலாற்றுப் பிரக்ஞை பற்றிய சில பிரச்சினைகள்

இலங்கையின் நவீன வரலாற்றாசிரியர்கள் கணிசமான அளவிற்கு மகாவம்சத்தில் தங்கியிருக்கிறார்கள். இதனை அடிப்படையாக வைத்தே இலங்கை வரலாறு தொடர்பான வெகுஜன மட்டத்திலான உரையாடல்களும் அமைகின்றன. பாடசாலையில் மாணாக்கர்களுக்குப் போதிக்கப்படும் வரலாற்று பாடங்களும் இதனை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. வெகுஜன சொல்லாடல்களிலும் அரசியல் சொல்லாடல்களிலும் கூட மகாவம்சத்தின் தாக்கம் இருக்கிறது. மகாவம்சம் சித்திரிக்கும், இனவாத அடிப்படையிலான துட்டகைமுனுவின் கதையானது பாடசாலையில் பயன்படுத்தப்படும் சிங்களமொழிப் பாட நூல்களிலும் பௌத்த சமயப் பாட நூல்களிலும் சிங்கள் நாடக அரங்கிலும் ஜனரஞ்சக இலக்கியங்களிலும் மிக அண்மைக்காலம் வரையில் பயன்படுத்தப்பட்டு வந்ததைச் சிறிவீரா (Siriweera) என்பவர் சுட்டிக் காட்டுகிறார்.

இலங்கையை மற்றும் பிற நாடுகளையும் சேர்ந்த கல்வியாளர்கள் மகாவம்சம் என்பதை ஒரு நம்பகமான வரலாற்று மூலமாக வேறுபட்ட அளவுகளில் ஏற்றுக்கொள்ளும் போக்கைக் கொண்டிருக்கிறார்கள். மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் கடந்த கால சம்பவங்கள் எனப்படுபவை, நிகழ்கால வகையினங்களின் அடிப்படையில் வியாக்கியானம் செய்யப்படுகிறது. மகாவம்சம் மற்றும் ஏனைய சிங்கள, பாளி செவ்வியல் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதும் சிங்கள எழுத்தாளர்களது ஜனரஞ்சகமான வரலாற்று எழுத்துகளைப் பொறுத்தவரையில் இது குறிப்பிடத்தக்க வகையில் உண்மையானதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒப்பியல் மொழி வரலாற்றியலாளர்களால் (comparative Philologists) உருவாக்கப்பட்ட 'ஆரிய இனக் கோட்பாடானது' (Aryan Theory of Race), கடந்த நூறு வருடத்திற்கு மேலாக இவர்களால் தமது வியாக்கியானங்களுடன் நன்கு பிணைக்கப்பட்டுள்ளது. வட இந்தியாவில் இருந்து வந்து குடியேறிய ஆரியர்களது வழித்தோன்றல்களாகச் சிங்களவர்கள் இவர்களால் வர்ணிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தக் கருத்தின்படி, இந்தோ-ஐரோப்பிய மொழிகளைப் பேசுபவர்களான இந்தியா, பேர்சிய, மற்றும் ஐரோப்பியர் யாவரும் ஒரே கலாச்சாரத்தையும் இனத்தையும் சேர்ந்தவர்களாவர். இவர்கள் அனைவருமே இந்துகுஸ் மலைத்தொடருக்கு வடக்கில் வசித்துவந்த ஒரு ஆதிக்குடியின் வழித் தோன்றல்களாவர்: கி.மு.2000ஆம் ஆண்டின் பின்பு இவர்கள் தெற்கு மற்றும் மேற்கு நோக்கிப் படர்ந்து சென்று ஏனைய பிரதேசங்களைக் கைப்பற்றிக் குடியேறினார்கள். இந்தக் கோட்பாடானது பௌத்த மறுமலர்ச்சி

பெனடிக்ட் அன்டர்சன் வாதிப்பது போல, இதற்கு முன்பு இருந்த கலாச்சார முறைமை பற்றியும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பழைய கலாச்சார முறைமையில் இருந்தும் அவ்வாறே இந்தச் கலாச்சார முறைமைக்கு எதிராகவும் இந்தத் தேசியவாதமானது உருப்பெறுகிறது. சிங்களவர்களது வரலாற்றுப் பிரக்ஞையானது வரலாற்றினால் ஏற்கனவே தயாராக வைக்கப்பட்டிருந்து கையளிக்கப்பட்டதல்ல:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தின் முக்கிய பிரமுகரான அநாகரிகத் தர்மபாலாவினால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கையில் நன்கு பிரபல்யப்படுத்தப்பட்டது.

வட இந்தியாவில் இருந்து கி.மு 2500ஆண்டளவில் படையெடுத்து வந்து இலங்கையில் குடியேறிய ஆரியர்களது வாரிசுகளாகச் சிங்களவர்கள் தம்மை இனம் காண்கிறார்கள். மகாவம்சமே இந்த ஐதீகத்தின் பிரதான ஊற்று மூலமாக இருக்கிறது. அடுத்து வந்தவர்களும் மகாவம்சத்தின் அடிப்படையான கருத்துகளை அப்படியே பின்பற்றி வந்ததானது, சிங்களவர்கள் 2500வருடங்களுக்கு மேற்பட்ட எழுதப்பட்ட வரலாற்றைக் கொண்டிருப்பதாக உரிமை பாராட்டுவதற்கு வழிவகுத்தது. இந்த ஜனரஞ்சக வரலாற்றின் படி இலங்கைத் தீவின் முதலாவதாகக் குடியேறியவர்கள் சிங்களவரேயாவர். இந்த ஜனரஞ்சகமான கர்ணபரம்பரைக் கதையின்படி, பௌத்தமானது அதன் தூய்மையான வடிவில் இலங்கைத் தீவில் பேணப்படும்: இந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சிங்கள மக்களாவர். மகாவம்சமும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்து எழுதப்பட்ட ஏனைய படைப்புகளும் பௌத்தத்தின் விதியானது சிங்களத்துடன் பிணைத்தே இனம் காட்டி வந்துள்ளன. எப்படியிருப்பினும் இந்தப் பௌத்த, சிங்கள பிணைப்பானது மகாவம்சத்தின் மீது பிற்காலத்தில் போடப்பட்ட ஒரு உரைவிளக்கமாகவே தோன்றுகிறது.

ஏனெனில் மகாவம்சத்தில் இரண்டே இரண்டு இடத்தில் மாத்திரமே 'சிங்களம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.தென் இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்த தமிழர்கள், மகத்தான சிங்கள நாகரீகத்தின் அழிவுக்குக் காரணமாக இருந்தார்கள் என்றும், இவர்களுக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டம் பற்றிய வரலாற்றுக் கருத்தாக்கத்தினாலேயே இவர்களது உலகக் கண்ணோட்டமானது கூர்மைப்படுத்தப் பட்டுள்ளது. பேச்சுத் திறமையும் செயலாற்றலும் மிக்க அநகாரிக தர்மபாலா போன்ற நபர்களின் கரங்களில் இந்த ஆரிய மாயையானது இலகுவாக இந்த உலகக் கண்ணோட்டத்தினுள் புகுத்தப் பட்டது. அநகாரிகத் தர்மபாலாவின் கூற்றில் கூறுவதானால், 'காட்டுமிராண்டித்தனமான நாசகாரர்களால் அழிவுக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்பு, இந்தப் பிரகாசமான, அழகிய தீவானது ஆரிய சிங்களவர்களால் சொர்க்கமாக ஆக்கப்பட்டிருந்தது'.

நாம் மக்களது வரலாற்றுப் பிரக்ஞை பற்றிப் பேசும் போது, புத்திஜீவிகளான மேட்டுக்குடியின் சிந்தனையாளர்களது தாக்கம் பற்றித்தான் உண்மையில் பேசுகின்றோமே ஒழிய, மக்கள் திரளது கண்ணோட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை. உண்மையில் நாம் மக்கள் திரளினது அபிப்பிராயம் தொடர்பாக ஒரு கருத்தினை (category) கொண்டிருக்க முடியாது. ஏனெனில் அது ஏகவினமான முழுமை அல்ல. உள்ளூர் வரலாறு என்றும் தேசிய வரலாறு என்றும் இரண்டு வரலாறுகள் இருக்கின்றன. இதில் தேசிய வரலாறு என்பது சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளது படைப்பாகும். இதனை இன்னோர் விதத்தில் கூறுவதானால், 'ஒரு சகாப்தத்தின் ஆதிக்கம் செலுத்தும் கருத்துகள் என்பவை அந்தச் சமுதாயத்தில் ஆதிக்கச் சக்திகளது கருத்துகளேயாகும்' (கார்ல்

நாம் மக்களது வரலாற்றுப் பிரக்ஞை பற்றிப் பேசும் போது, புத்திஜீவிகளான மேட்டுக்குடியின் சிந்தனையாளர்களது தாக்கம் பற்றித்தான் உண்மையில் பேசுகின்றோமே ஒழிய, மக்கள் திரளது கண்ணோட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை. உண்மையில் நாம் மக்கள் திரளினது அபிப்பிராயம் தொடர்பாக ஒரு கருத்தினை கொண்டிருக்க முடியாது. ஏனெனில் அது ஏகவினமான முழுமை அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்ஸ்). நவீனத் தேச அரசில் இந்தச் சிந்தனைகள், அந்தச் சமூகத்தின் கல்விமுறை மற்றும் தொடர்பு சாதனங்கள் மூலமாக மனதில் ஆழமாகப் பதிவிக்கப்படுகிறது. இந்தச் சாதனங்களைத் தமது கட்டுப் பாட்டில் வைத்திருப்பவர்களே இப்படிப்பட்ட சொல்லாடல்களை உருவாக்குகிறார்கள். நவீன இலங்கையில் இந்தக் குழுவில் அரசியல்வாதிகள், பௌத்த பிக்குகள், கிராமப்புற ஆசிரியர்கள் போன்றவர்கள் அடங்குகிறார்கள். அறிவார்ந்த தளத்தில் இவர்களது ஆய்வுச் சட்டகத்திற்கு அங்கீகாரத்தை வழங்குவதன் வாயிலாக ஆதிக்கத்தில் உள்ளவர்களும் இந்தச் செயற்பாட்டிற்குத் துணைபோகிறார்கள்.

பிரிட்டிசாரின் ஆட்சியின் கீழ் கிடைத்த அற்பமான பொருள் வகை முன்னேற்றத்திற்குத் தமது பிரதான போட்டியாளர்களாகத் தமிழர்களைக் கண்ட சிங்கள குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினருக்கு மேலே சொன்ன கருத்தியல் நிலைப்பாடுகள் தமக்குச் சாதகமாகச் செயற்படுவதான உணர்வைக் கொடுத்தது. இந்த வர்க்கமே கிராம அளவில் கருத்துகளை உருவாக்குவதில் பிரதான பாத்திரம் வகிப்பவர்களாக இருந்ததனால், இவர்களே இந்தச் சொல்லாடல்களைப் பரப்பவும் ஜனரஞ்சகமயப்படுத்தவும் முக்கியமான பங்காற்றினார்கள். நவீன இலங்கையில் கல்வியறிவின் வீதம் எண்பத்தைந்து என்ற விபரத்தை நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. மிகப் பெரும்பாலான தகவல்களும் அபிப்பிராயங்களும் அச்சு சாதனங்கள் வழியாகவே பரப்பப்படுகின்றன. ஆனால், ஆதிக்கச் சக்திகளது கருத்துகள் விரிவான அளவில் மக்கள் திரளினாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டனவாக இருக்கின்றன என்பது திட்டவட்டமானதாக நிரூபிக்கப்படாத வரையில், ஆவணப் படுத்தப்பட்டுள்ளதாக நாம் காணும் சிந்தனைகள் என்பவை, வரலாற்றுக் கண்ணோட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூற முடியாது. நவீன இலங்கையில் முனைப்பாகத் தெரிகின்ற புத்திஜீவி மேட்டுக்குடியினது வரலாற்றுப் பிரக்ஞையானது, சிங்கள மக்களால் முழுவதுமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பது உண்மையே. ஆனால், இலங்கை வரலாற்றின் பண்டைய காலம் மற்றும் இடைக்காலம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டால், அந்தக் காலத்தில் வரலாற்றுப் பிரக்ஞை எவ்வாறு இருந்திருக்கும் என்பதற்குப் போதிய ஆதாரங்களை நாம் பெற முடியாதவர்களாகவே இருக்கிறோம்.

பண்டைய மற்றும் இடைக்காலத்தில் உருவான சிங்கள, பாளி எழுத்துகள் என்பவை புத்திஜீவி மேட்டுக்குடிகளின் படைப்புக் களாக அமைந்திருந்தன. இவை மக்கட்திரளின் அபிப்பிராயங் களைப் பிரதிநிதித்துவப் படுத்தியிருக்க வேண்டிய அவசியமில்லை. எப்படியிருப்பினும், தொன்மையான இந்தப் பிரதிகளில் வெளிப்படுத்தப்படும் கருத்துகள் என்பவை மொழிவழித் தேசியவாதத்தில் வெளிப்படுத்தப்படும் நவீன அர்த்தத்தில் 'சிங்களவர்' என்பதைக் குறிக்கவில்லை.

பண்டைய மற்றும் இடைக்காலத்தில் உருவான சிங்கள, பாளி எழுத்துகள் என்பவை புத்திஜீவி மேட்டுக்குடிகளின் படைப்புக் களாக அமைந்திருந்தன. இவை மக்கட்திரளின் அபிப்பிராயங் களைப் பிரதிநிதித்துவப் படுத்தியிருக்க வேண்டிய அவசியமில்லை. எப்படியிருப்பினும், தொன்மையான இந்தப் பிரதிகளில் வெளிப்படுத்தப்படும் கருத்துகள் என்பவை மொழிவழித் தேசியவாதத்தில் வெளிப்படுத்தப்படும் நவீன அர்த்தத்தில் 'சிங்களவர்' என்பதைக் குறிக்கவில்லை. மாறாக அதனை நாம் இன்று மதம் சார்ந்ததாகவே அர்த்தப்படுத்தலாம். பெனடிக்ட் அன்டர்சனின் வார்த்தைகளை இரவல் வாங்குவோமானால், கற்பிதம் செய்யப்பட்ட சமூகமானது, குறைந்த பட்சம் பத்தாம் நூற்றாண்டு வரையிலுமாவது, பௌத்தர்கள் பற்றியதானதாகவே இருந்தது. இதில் தமிழ், சிங்களம் பேசிய இரண்டு தரப்பினரும் உள்ளடக்கப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மக்களது வரலாற்றுப் பிரக்ஞை பற்றி எழுத்து பூர்வமான ஆதாரங்களை முன்வைக்க முனையும் எழுத்தாளர்கள், நிகழ்காலத்தின் மதிப்பீடுகளைக் கடந்த காலத்தினுள் நீட்டிச் செல்ல முனைகிறார்கள். இலங்கையின் பண்டைய மற்றும் இடைக்காலத்தைச் சேர்ந்த பாளி, சிங்கள, சமஸ்கிருத இலக்கியங்கள் என்பவை, பௌத்த பிக்குகளையே முதன்மையாகக் கொண்ட மேட்டுக்குடியின் அறிவுத்துறைப் படைப்புகளையே பிரதிநிதித்துவம் செய்கின்றன. இந்தப் படைப்புகள் அந்தக் காலத்தின் கூட்டான பிரக்ஞையின் தொகுப்பு என்பது இதன் அர்த்தமாகாது. ஆயினும் இந்த படைப்புக்கள் அவ்வாறாகவே கருதப்படுகின்றன. மகாவம்சமானது அதுவரை காலமும் நிலவிவந்த வாய்மொழி மூலமான மரபார்ந்த கதைகளின் எழுத்துரீதியான பதிவு என்பது உண்மையே ஆயினும், இந்த வாய்மொழி மரபானது மக்கள் மத்தியில் பிரசித்தம் பெற்ற ஒன்றாக இருக்கவில்லை. இது பௌத்த துறவியரது மடாலயங்களில், அவர்களது பயிற்சிக்கான பாடத்திட்டத்திற்குரிய ஒன்றாகவே விளங்கியது. பௌத்த பிரபந்தங்களுக்கான சிங்கள விளக்கவுரைகளுக்கான அறிமுகத்தையே மகாவம்சமானது அடிப்படையாகக் கொண்டிருந்தது. அந்த வகையில் இது பௌத்த மதநிறுவனத்தை (சங்கத்தை) புனிதப்படுத்தும் நோக்கில் படைக்கப்பட்டதேயன்றி, இலங்கையின் வரலாறை எழுதும் நோக்கிலான ஒரு திட்டவட்டமான வரலாற்றுப் படைப்பாகத் தொகுக்கப்படவில்லை(பெரேரா 1961:30). எமது வாதத்திற்குப் பலம் சேர்க்கும் இன்னொரு விடயத்தையும் இங்கு நாம் கவனத்தில் கொள்வது பயனுடையதாக இருக்கும்: அதாவது அந்தக் காலத்தில் பௌத்தமானது எந்தவொரு இன-மொழிக் குழுவுக்கும் தனியுரிமையாக இருக்கவும் இல்லை. பௌத்தத்திற்கு விளக்கவுரை செய்தவர்களுள் பெரும்பான்மையினர் சோழத் துறவிகளாகவோ அல்லது தென்னிந்தியத் தொடர்பு கொண்டவர்களாகவோ இருந்தார்கள் (ஜெயவிக்கிரம 1969:68).

மக்கள்திரள் மத்தியில் இந்த மேட்டுக்குடிகளின் கருத்துகள் எந்தளவிற்குப் பரம்பியிருந்தது? இங்கு நாம் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைப் பற்றிப் பேசவில்லை: முழுமையான ஒரு வரலாற்றுக் காலகட்டத்தைப் பற்றிப் பேசுகிறோம். இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பது சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது: குறைந்தபட்சம் ஐரோப்பியரது கொலனித்துவத்தின் ஆரம்பத்திற்கு முந்திய கட்டம் குறித்துக் கூடத் தெளிவாகச் சொல்வதற்கில்லை. இந்த விடயமானது சிங்கள மக்களது வரலாற்றுப் பிரக்ஞை பற்றிப் பொதுமைப்படுத்துவது தொடர்பாக அதிக எச்சரிக்கையாக இருப்பதற்கான காரணமாக அமைகிறது. சமகாலச் சிங்களவர்கள் ஒருவிதமான வரலாற்றுப் பிரக்ஞையைக் கொண்டிருப்பதாகக் கருத முடிகிறது: ஆனால், இந்தப் பிரக்ஞையானது 2500வருடங்களுக்கு முந்திய வரலாற்று நினைவுகளில் இருந்து மரபாகப் பெறப்பட்டதாக வாதிட முடியாது. சில எழுத்தாளர்கள் ஐதீகங்கள், வீரகாவியங்கள், சடங்குகள் மற்றும் இது போன்றவற்றைத் தமது ஆய்வுரைகளுக்கு ஆதரவாகக் கொண்டுவர முனைகிறார்கள். சமகால நிகழ்வுகளில் இருந்து கடந்த காலத்தை உய்த்தறிய முனைவதை இங்கு உள்ளார்ந்து காண முடிகிறது.

தற்காலத்தில் காணப்படும் இந்த வரலாற்றுப் பிரக்ஞை என்பது

சிங்கள மக்களது வரலாற்றுப் பிரக்ஞை। பற்றி எழுத்து பூர்வமான ஆதாரங்களை முன்வைக்க முனையும் எழுத்தாளர்கள், நிகழ்காலத்தின் மதிப்பீடுகளைக் கடந்த காலத்தினுள் நீட்டிச் செல்ல முனைகிறார்கள். இலங்கையின் பண்டைய மற்றும் இடைக்காலத்தைச் சேர்ந்த பாளி, சிங்கள, சமஸ்கிருத இலக்கியங்கள் என்பவை, பௌத்த பிக்குகளையே முதன்மையாகக் கொண்ட மேட்டுக்குடியின் அறிவுத்துறைப் படைப்புகளையே பிரதிநிதித்துவம் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே தன்னளவில், பண்டைய காலத்தில் இருந்தே இப்படிப்பட்ட ஒன்று தொடர்ந்து வருவதாக அர்த்தப்படுத்திவிடமாட்டாது. முன்னைய தலைமுறைகளின் கலாச்சார அம்சங்கள் என்பவை, குறிப்பிட்ட மக்களது கலாச்சார மரபுகள் என்ற வகையில், வரலாற்றுபூர்வமான பிரக்ஞையின் மூலப் பொருட்களாக மனங்கொள்ளத் தக்கதாகும். இந்தக் கூறுகள் சொல்லாடல்களாக வடிவமைக்கப்பட வேண்டியுள்ளன. இந்த வடிவமைத்தலானது குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் செயற்பாட்டாளர்கள் (Agent) மூலமாக மட்டுமே நடைபெறுகிறது. இந்தீப் பின்புலம்தான் சொல்லாடலுக்கான பொருத்தப்பாட்டுத் தன்மையை வழங்குகிறது.

இலங்கையை ஆசியாவிலேயே கல்வி கற்றவர்கள் அதிகமாக உள்ள ஒரு நாடாக மாற்றியமைத்த, அனைவருக்குமான இலவச கல்வி என்ற முறைமை காரணமாகவே மகாவம்சத்தின் உள்ளடக்கமானது மக்களுக்குப் பரிச்சயமானதாக இன்று மாறியுள்ளது. மேற்கத்திய பாணியை முன்மாதிரியாகக் கொண்ட கல்விமுறையின் வளர்ச்சியும் அதற்குச் சமாந்தரமாகச் சிங்கள மக்களிடையே தேசியவாதப் பிரக்ஞை வளர்வதும் ஒன்றும் தற்செயலானது அல்ல: ஏனெனில் அண்டர்சன் அவர்கள் தெளிவாகவே சுட்டிக்காட்டியவாறு அச்சிடப்பட்ட தொடர்பு சாதனங்களும் அவற்றின் பரவுகையும் தேசியச் சமுதாயமானது தன்னைத் தேசமாகக் கற்பிதம் செய்து கொள்வதில் முதன்மையான வழிமுறையாக அமைகின்றன. இதற்கு இணையாகப் பிரித்தானியரின் கொலனிய காலத்தில் தொடர்புசாதன வசதிகள் பெருகின: பெருந்தெருக்கள், புகையிரத மார்க்கங்கள் என்பன பெருகின: செய்திப்பத்திரிகை, சஞ்சிகைகள் என்பன பரவின: இந்த நூற்றாண்டில் இது வானொலியின் வருகையுடன் உச்ச நிலையை அடைந்தது. இந்தச் சாதனங்களின் வளர்ச்சியானது இதுவரை காலமும் தொலைவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கிராமங்களைப் பிரதான அரசியல் நீரோட்டத்துடன் இணைப்பதில் உதவின.

இலங்கை வரலாற்றை எழுதுதல்

1826ஆம் ஆண்டு வரையில் மகாவம்சமானது கற்றோர் குழாத்திற்கு வெளியில் இருந்து பெரும்பாலான சிங்களவர்களுக்கு அதிகம் அறியப்பட்டதாக இருக்கவில்லை. சேர் ஜேம்ஸ் ரென்னட் (Sir James Tennet) என்பவர் இந்த வரலாற்றுப் பதிவு பின்வருமாறு எழுதுகிறார்.

இந்த நூலின் மூலமும், அதன் விளக்கவுரைகளும் அறவே கவனிப்பாரற்றுச் சிதைந்து போகும் நிலையில் விடப்பட்டிருந்தன: ரேனர் (Turnour) (இவரே முதலில் மகாவம்சத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்). 1826வரையில் இவற்றில் ஏதாவது ஒன்றை விமர்சனபூர்வமாகப் படித்தவரையோ, அல்லது மற்றையதன் இருப்பு பற்றி மேலெழுந்த வாரியாகவாவது கேள்விப்பட்டிருந்த சிலரையோ அறிந்திருக்கவில்லை. சப்பரங்கம் (Suffrangam) அமைப்பைச் சேர்ந்த உயர் மதகுருவினால் இவருக்குத் தேடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பல்வேறு நூல்களினுள் ஒன்றாக, இந்த நீண்டகாலமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த மகாவம்சத்தின் விளக்கவுரை இருந்தது: மகாவம்சமானது அதன் மூலவடிவில் புரிந்து கொள்ளப்பட முடியாத இறைப்புதிராக

இலங்கையை ஆசியாவிலேயே கல்வி கற்றவர்கள் அதிகமாக உள்ள ஒரு நாடாக மாற்றியமைத்த, அனைவருக்குமான இலவச கல்வி என்ற முறைமை காரணமாகவே மகாவம்சத்தின் உள்ளடக்கமானது மக்களுக்குப் பரிச்சயமானதாக இன்று மாறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது: இந்தக் கிடைத்தற்கரிய ஆவணத்தின் உதவியுடன் நீண்ட காலமாகவே தொலைந்து போயிருந்த வரவாற்று ரீதியான பதிவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியைச் செய்தார்: இந்த செயற்பாட்டின் மூலமாக இலங்கையானது மற்றெல்லா நாடுகளைவிட மிகவும் மேம்பட்ட, நம்பத்தக்க வரலாற்றைக் கொண்டிருப்பதான ஒரு கருத்தானது நிலைநாட்டப் பெற்றது. (Tennent 1859: 314 -315).

வேறு வார்த்தையில் கூறுவதானால், மக்களது சொல்லாடல் தளத்திற்கும் கருத்துப்பரிமாற்றத்திற்கும் மகாவம்சமானது ஆங்கிலேயராலும் அதனைத் தொடர்ந்து ஜேர்மனியராலுமே இழுத்துக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. (கெய்கர் என்ற ஜேர்மனியர் மகாவம்சத்தை முழுமையாக மொழிபெயர்த்து 1912ஆம் ஆண்டில் வெளியிட்டார்). அதன் பின்பு ஆங்கிலேயராலும் ஆங்கிலம் கற்ற இலங்கையராலும் இலங்கை தொடர்பான விடயங்கள் எழுதப்படும் போது மேற்கூறிய நூல்கள் உசாத்துணையாகத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுத்தப்பட்டு வந்தன. உதாரணத்திற்கு நாம் சிலரைக் குறிப்பிடலாம்: ரென்னட் (Tennet) தானே 1859இலும் சிர்;(Sirr) 1850இலும் வில்லியம் னைட்ரொன் ; (William Knighton), இவரது இலங்கையின் வரலாறு (1845) மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்தது: லீசிங் (L.F. Liesching)1861இலும் பொன்னம்பலம் அருணாச்சலம் 1906இலும் இப்படியாக இந்த நூல்களைப் பயன்படுத்தியிருந்தார்கள்.

யாஸ்மின் குணரத்ன (Yasmin Gooneratne) என்பவர் இது பற்றிக் குறிப்பிடும்போது, லீசிங் உடைய 'இலங்கையின் சுருக்கமான வரலாறு' என்பது ரென்னட் என்பவரால் முன்வைக்கப்பட்ட பொதுவான திட்டவரைவைப் பின்தொடர்ந்து சென்று ரென்னட் உடைய வாதங்களை எளிமைப்படுத்தி, இலங்கையின் வரலாறு மற்றும் மரபுகள் பற்றிப் போதிய புலமைத்துவம் அற்ற இளைஞர்களை எட்டக் கூடியதாக அமைந்தது(1968:85). பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இலங்கை தொடர்பான வரலாறுகளானவை, உண்மையிலேயே, ஆங்கிலம் படித்த இலங்கையருக்கு இங்கிலாந்தின் அரசியல் கருத்துகளை வழங்குவதற்காகவே பயன்படுத்தப்பட்டதாக இவர் கூறுகிறார்: இந்த எழுத்துகளானவை, அந்தக் காலத்தில் குறிப்பிட்ட எழுத்தாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளும் நம்பிக்கைகளும் பொதுவில் மனித குலம் முழுமைக்கும் பொதுவானதாக, குறிப்பாகக் கொலனித்துவச் சமூகத்தை வழிநடத்தும் அறுதியான விதிகளாகச் சித்திரித்தன (மேற்கண்ட நூல் பக். 88). ஐவர் ஜென்னிங் (Ivor Jennings) சுட்டிக் காட்டுவது போலச் சுதந்திரத்திற்கு முந்திய இலங்கை மேட்டுக்குடிகளது 'தேசியவாதமானது சாராம்சத்தில் மேற்கத்திய கல்வி மற்றும் சித்தாந்தத்தின் படைப்பாக இருந்தது: இதன் சித்தாந்தமானது பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐரோப்பாவின் சித்தாந்தத்தில் இருந்து அடிப்படையில் வேறுபட்டதாக இருக்க வில்லை' (1953:76).

யாஸ்மின் குணரத்ன என்பவர் இது பற்றிக் குறிப்பிடும்போது, லீசிங் உடைய 'இலங்கையின் சுருக்கமான வரலாறு' என்பது ரென்னட் என்பவரால் முன்வைக்கப்பட்ட பொதுவான திட்டவரைவைப் பின்தொடர்ந்து சென்று ரென்னட் உடைய வாதங்களை எளிமைப்படுத்தி, இலங்கையின் வரலாறு மற்றும் மரபுகள் பற்றிப் போதிய புலமைத்துவம் அற்ற இளைஞர்களை எட்டக் கூடியதாக அமைந்தது

இலங்கையின் 'பாரம்பரிய' இலக்கியங்களானவை, இன்று நாம் மத அம்சங்கள் என அழைக்கும் விடயங்கள் தொடர்பாக அக்கறையுடையனவாக இருந்தன. ரெய்னோல்ட் குறிப்பிடுவது போல 'கவிதைகள் என்பவை கிட்டத்தட்ட முழுக்க முழுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தத்தால் உந்துவிக்கப்பட்டதாகவும் பௌத்தப் பின்னணியையும் கொண்டதாக அமைந்திருந்தன. இவை வரலாற்று அல்லது புராண சம்பவங்கள் தொடர்பான கதைகளின் தொகுப்பாகவோ அல்லது பௌத்தக் கோட்பாட்டின் விளக்கவுரை நூற்களாகவோ இருந்தன' (ரெய்னோல்ட் 1970:20). பதினான்காம் நூற்றாண்டில் ஒரு புதுவிதமான கவிதை உருவாகிய போதிலும் பொதுவில் கவிதைகள் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் பௌத்தக் கதைகளை அவற்றின் உந்தலுக்கான மூலங்களாகக் கொண்டிருந்தன(மே.நூ:21). புதிய கவிதையானது தூது விடும் பாடல்களாக அமைந்திருந்தன: செய்தியைக் காவிச் செல்லும் ஒரு பறவை, நாட்டின் இயற்கைப் பண்புகளை விபரித்துச் செல்வதாக இவற்றின் அமைப்பு வடிவங்கள் அமைந்திருந்தன: இவை சிந்தனையைத் தூண்டுவதற்கான எதனையும் கொடுக்க வில்லை. எல். எஸ். பெரேரோ குறிப்பிடுவது போலப் புத்தரது வாழ்வு மற்றும் அவரது கோட்பாடு தொடர்பானதும், வரிசைக் கிரமமாக அமைந்த மன்னர்களது பட்டியலை உள்ளடக்கிய துமான இந்தப் பாடல்கள் பௌத்தத்தின் முக்கியப் படைப்பு களையும், அவை தொடர்பான பாரிய விளக்கவுரைகளையுமே தமது பிரதான அக்கறைக்குரிய விடயமாகக் கொண்டிருந்தன.

ஒரு மன்னரது தகுதியானது அவர் எந்தளவிற்குப் பௌத்த மடத்திற்கும் பௌத்த மதத்திற்கும் தொண்டாற்றினார் என்பதைக் கொண்டு அளவிடப்பட்டது (பெரேரா 1961:29-30). பரணவிதான அவர்களது கூற்றுப்படி, 'மதச்சார்பற்ற வரலாறு, தனியாக வரலாறு என்ற கண்ணோட்டத்தில் பேசப்பட்டவை வெறும் முப்பத்திரண்டு அத்தியாயங்களுக்குற்பட்டதாகவே இருக்கும்: இவை கூட பெரும்பாலானவை, நல்ல துறவியர் தவிர்க்க வேண்டிய ... மன்னர்களின் கதைகளில் தொடங்குவதாக இவை அமைந்திருக்கும்' (1969:53). பௌத்த அறநெறி தொடர்பான படிப்பினைகளை வழங்கும் விடயங்கள் மாத்திரமே பௌத்தத் துறவியர் கற்பதற்குத் தகுந்தவையாக அக்காலகட்டத்தில் கருதப்பட்டன. பௌத்த ஆலயங்களும் மற்றும் பௌத்தத் துறவியருமே பண்டைக் கால கல்வியின் மையங்களாகும். சாதாரண மக்களது கல்வியானது 'பௌத்த சித்தாந்தம், புத்தரின் வாழ்க்கை மற்றும் வாழ்க்கைமுறை பற்றிய மதச் சொல்லாடல்கள் மூலமாகவே நடைபெற்றன' (அபேவர்தன 1969:197: அதிகாரம் 1969:15-16).

இலங்கையின் 'பாரம்பரிய' இலக்கியங்களானவை, இன்று நாம் மத அம்சங்கள் என அழைக்கும் விடயங்கள் தொடர்பாக அக்கறையுடையனவாக இருந்தன. ரெய்னோல்ட் குறிப்பிடுவது போல 'கவிதைகள் என்பவை கிட்டத்தட்ட முழுக்க முழுக்க பௌத்தத்தால் உந்துவிக்கப்பட்டதாகவும், பௌத்தப் பின்னணியையும் கொண்டதாக அமைந்திருந்தன.

ஆயினும் பதினேழாம் நூற்றாண்டு அளவிலிருந்து, நான் மேலே குறிப்பிட்ட சிங்கள இலக்கிய மரபில் இருந்து வேறுபட்ட இலக்கியப் பாணிகள் (genres) தோன்றத் தொடங்கின. இவை வரலாறு தொடர்பான கதையாடல்களாகவும் பயணக் குறிப்புகளாகவும் இலங்கையுடன் தொடர்புடைய ஐரோப்பியரது நினைவுக் குறிப்புகளாகவும் அமைந்தன. கொலனித்துவமானது ஐரோப்பிய இலக்கியப் பாணிகளை ஒத்த சிங்கள இலக்கிய வகையினங்களைத் தோற்றுவித்தன: இவை முன்னைய இலக்கிய வகையினங்களை மாற்றீடு செய்தன. ஐரோப்பிய எழுத்தாளர் களது எழுத்துகளைச் சற்று நுணுக்கமாக அணுகி, இவர்கள் எப்படிப்பட்ட பின்புலத்தில், எதை, ஏன் சொன்னார்கள் என்பவற்றைப் பரிசீலித்தோமானால், சிங்களத் தேசியவாதத்தின் 'வரலாற்றுத்தன்மை' பற்றிய சில வெளிச்சங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இவற்றுள் மிகவும் முக்கியமானதும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதத்திற்கு அதிகப் பயனுள்ளதாகவும் அமையக் கூடியது, ரொபர்ட் நொக்ஸ் (Robert Knox) எழுதிய இலங்கையின் வரலாற்று உறவுகள் என்ற நூலாகும்.

நொக்ஸ் என்பவர் கிழக்கிந்திய கொம்பனியில் மாலுமியாகப் பணியாற்றியவர். இவரது கப்பல் கிழக்கிலங்கையின் கொட்டியாரக்குடாவில் கரை தட்டியபோது சிங்களவர்களால் 1660இல் சிறை பிடிக்கப்பட்டார். இவர் கிட்டத்தட்ட இருபது வருடங்கள் கண்டிய மன்னனின் கைதியாகச் சிறை வைக்கப்பட்டிருந்தார். இதன்போது இவர் சிங்களத்தை நன்கு கற்று 'கிட்டத்தட்ட சிங்களவர்களில் இருந்து வேறுபடுத்த முடியாதளவிற்கு' மொழியிலும், பழக்கவழக்கங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் கண்டிய இராச்சியத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்ந்திருந்தார். கண்டிய இராச்சியத்தின் சாதாரண விவசாயி போலவே வாழ்ந்த அவர், தனது வரையறுக்கப்பட்ட வாழ்க்கை நிலைமைகளுக்குள், ஊரூராகத் திரிந்து விற்பனை செய்யும் ஒரு வியாபாரியாகக் கணிசமானளவு பயணம் செய்திருந்தார். இவரது நூலானது கண்டிய இராச்சியத்தின் சமூக வரலாறு பற்றிய முதன்மையான மூலாதார நூலாகக் கருதப்படுகிறது. சப்ரமாது (Saparamadu) என்பவரது கருத்துப்படி, இலங்கை பற்றிய நூல்களுள் மிகவும் பக்க சார்பற்ற முறையில் எழுதப்பட்ட நூல் இதுவாகும். அலங்காரங்கள், உருவகங்கள் போன்றவை அதிகம் இல்லாத உரைநடையில் இவரது நூல் எழுதப்பட்டிருந்தது. 'இவரது எழுத்தானது வறட்சியான, விஞ்ஞான மனதின் தன்மையுடையதாகவும் தன்னிடம் இருந்த விடயங்களை இயன்ற வரையில் கவனமாக முன்வைக்க வேண்டும் என்ற அக்கறையில் எழுதப்பட்டதாகவும் இருந்தது' (லுடொவ்கி 1954:269). சிங்களவரது பூர்வீகம் பற்றி நொக்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> இவர்களது பூர்வீகம் என்னவென்று விசாரித்த போது, அதற்கான பதிலைக் கூற முடியாதவர்களாக அவர்கள் இருந்தார்கள். தமது பூமியில் முதலில் பிசாசுகள் குடியிருந்ததாகவும், அது பழங்கதையாகி நீண்டகாலம் ஆகிவிட்டது என்றும் கூறினார்கள் (1966 (1681): 115).

இவர்களது பூர்வீகம் என்னவென்று விசாரித்த போது, அதற்கான பதிலைக் கூற முடியாதவர்களாக அவர்கள் இருந்தார்கள். தமது பூமியில் முதலில் பிசாசுகள் குடியிருந்ததாகவும், அது பழங்கதையாகி நீண்டகாலம் ஆகிவிட்டது என்றும் கூறினார்கள்

சில போர்த்துக்கேயரிடம் இருந்து நொக்ஸ் அவர்கள் விஜயனின் கதையின் சிறிது வேறுபட்ட ஒரு வடிவத்தில் ஏற்கனவே கேட்டிருந்தாலும் கூட, சிங்கள மக்களது பூர்வீகம் பற்றி இந்தளவு தகவலையே கண்டிய இராச்சியத்தில் அப்போது வாழ்ந்த குடியானவர்களிடம் இருந்து அவர் பெறக்கூடியதாக இருந்தது. இந்தக் கூற்றின் மூலமாக நொக்ஸ் அவர்கள், கண்டிய சிங்கள மக்களிடம் பதினேழாம் நூற்றாண்டில் காணப்பட்ட 'வரலாற்றுப் பிரக்ஞை' பற்றி அதிகம் சொல்வதற்கு இருக்கவில்லை என்றே படுகிறது. இந்தத் தகவலுடன் கூடவே, கண்டி இராச்சியம் தொடர்பாக நாமறிந்த ஏனைய தகவல்களையும் ஒப்பு நோக்கினால், இன்று குறிப்பிடப்படும் வரலாற்றுப் பிரக்ஞை என்பது அன்றைய சிங்களவர்களிடையே அறவே காணப்படவில்லை என்பது தெரிகிறது. தர்மதாசா அவர்கள் குறிப்பிடுவது போல, பதினாறாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் பௌத்த நிறுவனங்களும் பௌத்த இலக்கிய மரபும் பெரிதும் வீழ்ச்சி கண்டிருந்தது. கீர்த்தி சிறீ இராஜசிங்கன் அரியாசனம் ஏறிய பின்னரே இந்த நிலைமை சீர் செய்யப்பட்டது. (தர்மதாச 1972: 127: குமாரசாமி 1956 (1980):



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12). கண்டிய மலைப்பிரதேசத்தில் இருந்த பௌத்த மடாலயங்களில் கற்பித்தல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் குமாரசாமி தரும் பட்டியலில் எந்தவொரு படைப்பு கூட 'வரலாற்று' உள்ளடக்கத்தைக் கொண்டிருந்ததாகக் குறிப்பிட முடியாது (குமாரசுவாமி 1956 (1980): 50-51). நொக்ஸ் அவர்களுக்குப் படித்த பௌத்தத் துறவிகளையும் உள்ளடக்கியிருந்த கண்டிய மேட்டுக்குடியிடம் பெரிதாகத் தொடர்பிருக்கவில்லை. ஒருவேளை அப்படிப்பட்ட தொடர்புகள் இருந்திருந்தால் இந்தப் படித்த பிரிவினரிடம் இருந்து சிங்களவரது கடந்த காலம் பற்றிய அவர்களது கருத்துகளைப் பெற்றுக் கொண்டிருந்திருக்கலாம். நொக்ஸ் எழுதியதெல்லாம், அவர் பழகிய சூழலில், அவருக்குக் கிடைத்த தகவல்களை அடிப்டையாகக் கொண்டவையேயாகும்.

நான் எழுதியதெல்லாம் நான் எனது சொந்த வாழ்க்கையில் உண்மை என்று உறுதிப்படுத்திக் கொண்டவையும், ... அல்லது உள்ளூர்வாசிகள் மூலமாகப் பெற்றுக் கொண்ட, அவர்கள் தாம் உண்மை என்று உறுதியாக நம்பிய விடயங்கள் தொடர்பானவையும் ஆகும் (நொக்ஸ் 1966 (1681)).

நாம் இன்று குறிப்பிடும் அர்த்தத்தில் வரலாற்றுப் பிரக்ஞையானது அந்தக் காலத்தில் சிங்கள மக்களிடையே இருந்திருக்குமாயின் நொக்ஸ் அவர்கள் தனது குறிப்புகளில் சேர்த்துக் கொள்வதற்கான தகவல்களை அதிகளவில் பெற்றுக் கொண்டிருந்திருப்பார். ஆனால், வரலாற்றுப் பிரக்ஞையானது, இன்று இருக்கும் கடுமையான எதிரெதிர் வடிவில் கண்டிய இராச்சியத்தில் இருக்கவில்லை (குணவர்தன 1984:29-32). கண்டிய இராச்சியமானது மன்னருக்கும் பிரதானிகளுக்கும் சேவை செய்வதை அடிப்படையாகக் கொண்ட சாதியக் கட்டமைப்பைக் கொண்ட சமூகமாக இருந்தது. பௌத்த மதத்தின்பால் இவர்கள் கொண்டிருந்த பற்றுறுதியானது இவர்கள் அனைவரையும் இணைக்கும் பொதுவான அடையாளமாக இருந்தது. ஒரு நூற்றாண்டு காலம் தென்னிந்தியாவைச் சேர்ந்த நாயக்க அரச பரம்பரையினர் இந்த இராச்சியத்தை ஆண்டனர். இவர்களே நாட்டில் இருந்த ஒரேயொரு சத்திரிய சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களால் தொடர்ச்சியாக ஆட்சி செய்ய முடிந்தது.

இங்கு அரசபதவி என்பது சடங்குரீதியிலான சாதிய அந்தஸ்தினால் நிர்ணயிக்கப்படுவதாக இருந்தது. ஆனால், பொது வாழ்வைப் பொறுத்தவரையில் இவர்கள் பௌத்தத்தைத் தழுவியவர்களாக இருந்தார்கள். இங்கு வலியுறுத்தப்பட வேண்டிய அம்சம் யாதெனில், கண்டியர்கள் ஒரு தென்னிந்திய மன்னரை, அவர் பௌத்தம் என்ற பொதுச் சமூக அடையாளத்திற்கு உட்பட்டவராக இருக்கும் வரையில், ஏற்றுக் கொள்ளத் தயாராகவே இருந்தார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில் ஒரு இந்து மன்னன், பௌத்த ஆட்சி அமைப்பு முறையை ஆட்சி செய்வது என்பது சகிக்க முடியாததாக இருந்திருக்கும்: ஆனால், ஒரு தமிழ் மன்னர் சிங்கள மக்களை ஆள்வதாகப் பிரச்சனை தோன்றியிராது. நான் பின்வரும் பக்கங்களில் தொடர்ந்தும் விவாதிக்க இருப்பது போல, பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் இந்த அழுத்தமானது மதம் என்பதிலிருந்து மொழி தொடர்பானதாக மாறுகிறது.

நான் எழுதியதெல்லாம் நான் எனது சொந்த வாழக்கையில் உண்மை என்று உறுதிப்படுத்திக் கொண்டவையும், ... அல்லது உள்ளூர்வாசிகள் மூலமாகப் பெற்றுக் கொண்ட, அவர்கள் தாம் உண்மை என்று உறுதியாக நம்பிய விடயங்கள் தொடர்பானவை யும் ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'சிங்களம்' என்ற வகையினமானது (category)புறநிலை மற்றும் அகநிலை ஆகிய இரண்டையும் சார்ந்ததாகும். சிங்களவர்கள் தனியான கலாச்சாரக் குழுமமாக இருப்பதனால் இது புறநிலையானதாக இருக்கிறது. இதன் எல்லைகளானவை பிரதானமாக மொழியினால் குறித்துக் காட்டப்படுகின்றன. ஆனால், இந்தப் பிரச்சனையைச் சற்று ஆழமாக அணுகி, சிங்களவர் என்பது எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதற்கு விடைகாண முயன்றால், இங்குதான் பல்வேறு பிரச்சனைகள் தோன்றுகின்றன. இந்தப் பிரச்சனையானது கரவா சாதியினர் தொடர்பான விடயத்தில் மிகவும் முனைப்பாகத் தெரிகிறது.*

*கரையார் சாதியைச் சேர்ந்தவர்கள் சிங்களவர் மத்தியிலும் தமிழர் மத்தியிலும் வாழ்கிறார்கள். இவர்களுள் ஒரு பிரிவினர் சிங்களவர்கள் ஆனமை இந்த விடயத்தின் அகநிலை மற்றும் புறநிலை சார்ந்த அம்சங்களின் முனைப்பான தன்மைகளைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இதில் புறநிலையான அம்சம் யாதெனில், சிங்கள தேசமாக நெய்யப்பட்ட பல்வேறு சமூகக் கூறுகளுள், கரையாரும் ஒரு பிரிவினராவர் தம்மைச் சிங்களவர் களாக அடையாளப்படுத்தும் மக்கள் கூட்டமே இதுவாகும்: இதில் பொதிந்துள்ள அகநிலை அம்சம் யாதெனில், ஆரம்பத்தில் தம்மைக் குறிப்பிட்ட ஒரு சமூகக் குழுவின் அங்கத்தவர்களாக இனம் காணாதவர்கள், ஒரு கட்டத்தில் குறிப்பிட்ட சமூகத்துடன் பகுதியாக இனங்காண தொடங்குகிறார்கள். அகநிலை என்பது 'நான்' என்ற பிரக்ஞையுடன் தொடர்புடையது: புறநிலை என்பது 'பிறர்' என்பதுடன் தொடர்புடையது. ராகவனைப் பொறுத்தவரையில் கரையார்கள் தென்னிந்தியக் கூலிப் படையினரின் வாரிசுகளாவர். இவர்கள் வரலாற்றின் முன்னைய காலங்களில் இருந்தே வரத்தொடங்கியவர்களாவர். கரையாரிடம் ஒரு மரபார்ந்த கதை இருக்கிறது.*

*இதன்படி இவர்கள் மகாபாரதத்தில் காவியத்தில் வரும் கௌரவ குலத்தைச் சேர்ந்தவர்கள். பாரத யுத்தத்தில் பாண்டவர்களிடம் தோல்வியுற்ற பின்னர் இவர்கள் கலைந்து போய் எல்லா இடங்களுக்கும் பரவியதாக இது கூறும் (ராகவன் 1961:6). தற்போது பிரித்தானிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் 'முக்கர ஹட்டானா' என்ற பழைய சிங்கள குறிப்பின்படி, நீர்கொழும்பானது (தற்போதய கரவா மக்களின் பிரதான நகரம்) கோட்டையைச் சேர்ந்த மன்னன் நான்காவது பராக்கிரமபாகுவினால் (1412 .1467) தென்னிந்தியாவில் இருந்து பணிக்கு அமர்த்தப்பட்ட கூலிப்படை வீரர்களுக்குப் பரவேணி நிலமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் குடியமர்த்தப் பட்ட இந்தக் கூலிப்படையினர் 'படிப்படியாகத் தமது அயலவரின் மொழியையும், கலாச்சாரத்தையும் ஏற்றுக் கொள்ளத் தொடங் கினார்கள்' (ராகவன் 1961:5). பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் புதிதாக மேலோங்கி வந்த புதிய மேட்டுக்குடி யினரான கரவா சாதியைச் சேர்ந்த ஜெரொனிஸ் பீரிஸ் (Jeronis Peiris) என்பவர் பற்றி ரொபர்ட்ஸ் (Michael Roberts) அவர்கள் வாய்வழியாக வழங்கப்பட்டு வந்து ஒரு கதையைக் கூறுவார். இந்தக் குடும்பக் கதையின்படி ஜெரோனிஸ் பீரிஸினுடைய தந்தையார் வட இந்தியாவைச் சேர்ந்த ராஜ்புட் மறவர் சாதியைச் சார்ந்தவர். இவர் கண்டிய அரசனான கீர்த்தி சிறீ இராஜசிங்கனது*

'சிங்களம்' என்ற வகையினமானது புறநிலை மற்றும் அகநிலை ஆகிய இரண்டையும் சார்ந்ததாகும். சிங்களவர்கள் தனியான கலாச்சாரக் குழுமமாக இருப்பதனால் இது புறநிலையான தாக இருக்கிறது. இதன் எல்லைகளானவை பிரதானமாக மொழியினால் குறித்துக் காட்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1747. 1782) கூலிப்படையினரின் தலைமை அதிகாரியாக இருந்தவராம். இவர் தனது பணிக்காலம் முடிந்த பின்பும் நாட்டிலேயே தங்கிவிட்டாராம்: கண்டிய உடை மற்றும் சிங்களப் பெயர் போன்றவற்றையும் ஏற்றுக் கொண்டாராம் (ரொபர்ட்ஸ் 1975: 6).

இது தொடர்பாக ரொபர்ட்ஸ் குறிப்பிடும் போது "இவரது கதையானது, சிங்களக் கரையாரிடையே பெருவழக்காக உள்ள இந்தியப் பூர்வீகம், சத்திரிய வம்சம் பற்றிய கருத்துகளை மறுதலிப்பதாக இருப்பதாகச் சுட்டிக்காட்டுகிறார். கரவா சாதியினர் தம்மைச் சத்திரியர்களாக இனங்காட்ட முனைவதானது, கொவிகம சிங்களவரது ஆதிக்க நிலைக்கு எதிரான கரவா சாதியினரின் எதிர்வினையாகக் குறிப்பிடுகிறார். இது தொடர்பாக நாம் இன்னமும் விரிவாகக் கீழே பார்க்கலாம். கரவா சாதியினரின் ஒன்றுகலத்தல் மற்றும் மாற்றமடைவது என்ற போக்கானது இப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கரவா சாதியினரிடையே ஆய்வை மேற்கொண்ட ஸ்டிரார்ட் (Stirret) என்பவரது அவதானிப்பின்படி, இவர்கள் கடலிலும் வீட்டிலும் தமிழைப் பேசுகிறார்கள்: சந்தையிலும், அன்றாடப் பொது விடயங்களில் மற்றவர்களோடு தொடர்பாடச் சிங்களத்தைப் பயன்படுத்துகிறார்கள். ... அறுபதுகளின் ஆரம்பத்தில் இருந்து சிங்களம் அதிகளவு முக்கியத்தைப் பெற்று வருகிறது. ...இந்தப் போக்கைக் கத்தோலிக்க ஆலயங்கள் ஊக்கப்படுத்துகின்றன. பௌத்தக் கரையாரைப் பொறுத்த வரையில் அவர்கள் முற்றிலும் சிங்களவர்கள் ஆகிவிட்டார்கள்".

மதம் என்ற அம்சமானது கரையாரது வகையினங்களின் வரையறைகளை இன்னமும் தெளிவற்றதாக ஆக்குகிறது. கரையார் என்ற பதமானது கத்தோலிக்க, புரொடெஸ்தாந்த, இந்து, பௌத்த அனைத்து வகையினரையும் உள்ளடக்கக் கூடியதாகும். கத்தோலிக்கக் கரையார்கள் கொழும்பின் வடக்கே சிலாபம் வரையான கரையோரங்களில் பெரும்பாலும் செறிவாக வாழ்கிறார்கள். இவர்கள் போத்துக்கீசரினால் மதமாற்றம் செய்யப்பட்டவர்கள். பௌத்தக் கரையார்கள் தெற்கு, தென்மேற்குக் கரையோரங்களில் செறிவாக வாழ்கிறார்கள். இந்து கரையார்கள் தமிழ்ச் சமூகத்துடன் இணைந்து வாழ்கிறார்கள். நவீன இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் மற்றும் சிங்கள இந்துக்கள் என்ற வகையினங்கள் காணப்படவில்லை. ராகவனது கருத்துப்படி, 'பாதுகாக்கப்பட்ட போர்த்துக்கீச தோம்புகளில் (காணிப்பதிவு பத்திரங்கள்-tombo) புறச்சமயம் சார்ந்த (Pagan) பெயர்கள் இருப்பதானது, நீர்கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் உள்ள கரையார்கள் மதமாற்றத்திற்கு முன்பு இந்துக்களாக இருந்திருக்கலாம் என்பதற்குச் சான்றாக அமைகிறது (ராகவன் 1961:31).

மைக்கல் ரொபர்ட்ஸினுடைய கருத்தின் படி, பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் மற்றும் இருபதாம் நூற்றாண்டின் முன் பகுதியிலும் கரவா மற்றும் கொவிகம சாதியினருக்கு இடையில் தான் குழுக்கள் என்ற வகையில் பிரதான சமூக ஊடாட்டம் நடைபெற்றது. எண்ணிக்கையினாலும், அந்தஸ்த்தினாலும் கொவிகம சாதியினர் சிங்களச் சாதியப் படிநிலை அமைப்பில் மிகவும் பலமான நிலையில் இருந்தார்கள். 'தனிச்சலுகை பெற்ற

மதம் என்ற அம்சமானது கரையாரது வகையினங்களின் வரையறைகளை இன்னமும் தெளிவற்றதாக ஆக்குகிறது. கரையார் என்ற பதமானது கத்தோலிக்க, புரொடெஸ்தாந்த, இந்து, பௌத்த அனைத்து வகையினரையும் உள்ளடக்கக் கூடியதாகும். கத்தோலிக்கக் கரையார்கள் கொழும்பின் வடக்கே சிலாபம் வரையான கரையோரங்களில் பெரும்பாலும் செறிவாக வாழ்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் இருந்த கொவிகம சாதியினரை வெல்வதே வளர்ந்துவரும் புதிக கரவா மேட்டுக்குடியின் பிரதான இலக்காக இருந்தது' (ரொபர்ட்ஸ் 1982: 290; ரயன் 1953: 332_-33). பிரித்தானியரது ஆட்சியின் கீழ் வழங்கப்பட்ட பொருளாதார வாய்ப்புகளைப் பற்றிக் கொண்டே கரவா சாதியினர், சாதி அடுக்கமைவில் உயர்வான அந்தஸ்த்து நிலையை வந்தடைந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடைபெற்ற பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திலும் முக்கியக் காரணியாக விளங்கினார்கள். வரலாற்று விபத்தாக, டச்சுக்காரது வருகையானது இந்தக் கரையாரை, சிங்களவரது பக்கத்திற்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கலாம் என்ற கருத்தொன்று ரொபர்ட்ஸ் வாதங்களில் உள்ளோட்டமாகக் காணப்படுகிறது:

கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கீசர்களது ஆட்சியானது தொடர்ந்திருக்குமானால், பெரும்பான்மையினரான கரையார்கள் கத்தோலிக்கர்களாகவே இருந்திருப்பார்க. இதனால் ஒருவித மைய நோக்குவிசை செயற்பட்டு இவர்களை மேல்நிலையாக்கத்திற்கு வழி வகுத்திருக்கலாம். பதினெட்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பிந்திய பகுதியிலும் சிங்கள மக்கள் ஒன்றாக இணைவதும் ஒன்று கலப்பதும் இப்படியாகவே நடந்தேறியது (ரொபர்ட்ஸ் 1982:285).

கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கீசர்களது ஆட்சியானது தொடர்ந்திருக்கு மானால், பெரும்பான்மை யினரான கரையார்கள் கத்தோலிக்கர்களாகவே இருந்திருப்பார்க. இதனால் ஒருவித மைய நோக்குவிசை செயற்பட்டு இவர்களை மேல்நிலையாக்கத் திற்கு வழி வகுத்திருக்கலாம்.

கரையார் எப்படிப்பட்ட நிகழ்வுப்போக்கினால் சிங்களவர் களானார்கள் என்பது தொடர்பாக விரிவாக விவாதிப்பதற்கு இங்குப் போதிய சந்தர்ப்பம் இல்லை. ஆனால், நாம் இங்குச் சில விடயங்களைக் குறித்துக் கொள்வது முக்கியமானதாகிறது. சிங்கள மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் வாழ்ந்த கரையார்கள் மட்டுமே 'சிங்களமயப்படுத்தப்பட்டார்கள்' என்பது மிகவும் வெளிப்படையானது. குறிப்பிட்ட ஒரு மொழியை ஏற்றுக் கொள்வதானது, காலப்போக்கில் ஏனைய கலாச்சார அம்சங்களையும் ஏற்றுக் கொள்வதற்கான ஒரு பாலமாக அமைந்துவிடுகிறது.

சிங்கள மொழியானது மேல்நிலைக்கு வர, பல பழங்குடிகள் சார்ந்த (ஊர்வழக்கில் இருக்கும் indigeneous)கலாச்சார நடைமுறைகள் (உதாரணமாகக் குணமளிக்கும் சடங்குகள்) விரிவாகப் பின்பற்றப்படத் தொடங்கின. கத்தோலிக்கர்களின் பெரும்பான்மையானோர் கூட இந்த உள்ளூர் மயமாதலில் இருந்து தப்பிக்கவில்லை (ரொபர்ட்ஸ் 1982: 3).

இந்தப் போக்கானது இன்னமும் தொடர்வதாக ஸ்ரிராட் (Stirrat) என்பவர் காட்டுகிறார். இந்தக் கரையாரது ஒன்று கலத்தலானது, சிங்கள அடையாளம் என்பதானது, ஒரே கல்லில் செதுக்கியது போல ஒரேவகையான, பிளவுகள், சேர்க்கைகளற்ற ஒன்றல்ல என்பதைக் காட்டுகிறது. சிங்களவர்கள் ஒரு கலாச்சார, மொழி சார்ந்த சமூகம் என்பதையும் அது பல நூற்றாண்டு காலமாகக் குடிபெயர்ந்து வந்த பல்வேறு குழுக்களையும் இவர்களில் பெரும்பான்மையினரானவர் இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்கள், அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்கள் முதன்மையானவர்கள், இவர்களையும் உள்வாங்கி, ஒன்று கலந்துதான் இந்த சிங்கள அடையாளம் உருப்பெற்று வந்துள்ளது என்பதையும் காண முடிகிறது. இந்த ஒன்றுகலக்கும் நிகழ்வுப்போக்கானது இப்போதும் தொடர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமே இருக்கிறது. இப்போது ஒன்று கலத்தலுக்கான சாதனமாக மதத்திற்குப் பதிலாக மொழி அமைகிறது.

சிங்களவர்கள் மாத்திரம் என்ற வரையறையானது மேற்கொண்டும் பௌத்தர்களை மாத்திரம் உள்ளடக்கும் ஒரு வரையறையாக அமையவில்லை. யாரெல்லாம் தமது தாய்மொழி சிங்களம் என்று தோறாயமாக(Putative) சொல்லக் கூடியவர்களாக இருக்கிறார்களோ, இவர்களையெல்லாம் உள்ளடக்கும் விதமாக இது அமைந்துள்ளது. சிங்களவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் பௌத்தர்களாக இருப்பதனால் பௌத்தமானது சிங்கள அடையாளத்தை நிர்ணயிப்பதில் மிகவும் அடிப்படையானதும் முக்கியமானதுமான பாத்திரம் வகிக்கிறது என்பது உண்மையே. ஆனால், இது சிங்களவர்கள் என்ற வகையினத்தை நிர்ணயிப்பதில் ஆதிக்கம் செலுத்தும் வகையினமாக இல்லை என்று நான் வாதிடுவேன். இந்த விடயங்கள் மகாவம்சத்தால் முன்வைக்கப்படும் சம்பவங்களுடன் முரண்படுகின்றன. மகாவம்சத்தைப் பொறுத்த வரையில், அதில் நடைபெறும் போராட்டங்கள் பௌத்தர்களுக்கும், அதனை விசுவாசிக்காதவர்களுக்கும் இடைப்பட்டதாகும். நவீன இலங்கையில் நடைபெறுவதோ சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடைப்பட்ட போராட்டமாகும். ஆய்வுச் சட்டகத்திலேயே ஒரு மாற்றம் (Paradigm shift) நடந்தேறியிருக்கிறது. அது எவ்வாறு நடந்தேறியது என்பதில்தான் நாம் இனிமேல் கவனத்தைக் குவிப்போம்.

சிங்களத் தேசியவாதமும் பௌத்தத்தில் மாற்றமும்

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கலாச்சாரப் பொதியிலுள்ள எந்தெந்தக் குறிப்பான அம்சங்கள் முன்னணிக்குக் கொண்டு வரப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கு, அந்த முன்னணிக்குக் கொண்டு வரப்படும் செயல் நடைபெற்ற சமூகச் சூழலைச் சரிவரப் புரிந்துகொள்வது அவசியம் என்று நான் இந்தக் கட்டுரையில் முன்னரே வாதிட்டுள்ளேன். ஒல்லாந்தர் காலத்திலிருந்து சமூக, பொருளாதாரத் தளங்களில் இலங்கையில் நடைபெற்ற அடிப்படையான மாற்றங்கள் இந்த நோக்கில் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான அம்சமாகும். இப்படிப்பட்ட மாற்றங்களினூடாக, அப்போது நடப்பிலிருந்த நிலப்பிரபுத்துவ உறவுகளானவை, புதிய முதலாளித்துவ உறவுகளினால் பிரதியீடு செய்யப்பட்டன. இதன் மூலமாகப் புதிய மேட்டுக்குடியொன்று உருப்பெற்று அரங்கிற்கு வந்தது. இந்த மாற்றமானது பௌத்தம் பற்றிய சிங்களவர்களது கருத்தோட்டத்தில் முக்கியமான மாற்றங்களை உருவாக்கியது. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் பொருள்வகை அடித்தளத்தில் நடைபெற்ற இந்த மாற்றமானது சிங்களம் பேசும் மக்களிடையே கூட்டான பிரக்ஞையை மறுவரையறை செய்வதில் முக்கியப் பாத்திரம் வகித்ததாக நான் இந்தப் பகுதியில் வாதிடப் போகிறேன்.

இந்தக் காலகட்டத்தில் சிங்களவர்களது சுய-அடையாளமானது பௌத்தர்கள் -மதத்தை முதன்மையாகக் கொண்டது என்ற நிலையில் இருந்து, சிங்களவர்கள் மொழியை முதன்மையாகக் கொள்ளும் அர்த்தத்தில் - என மாறியது. இந்த அடையாளப்படுத்தலில் மதம் என்பதைத் தள்ளிவிட்டு மொழி என்பது முனைப்பான அம்சமாக மாறியது. கடந்த பத்தாண்டு

மகாவம்சத்தைப் பொறுத்த வரையில், அதில் நடைபெறும் போராட்டங்கள் பௌத்தர்களுக்கும், அதனை விசுவாசிக்காதவர் களுக்கும் இடைப்பட்டதாகும். நவீன இலங்கையில் நடைபெறுவதோ சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடைப்பட்ட போராட்டமாகும். ஆய்வுச் சட்டகத்திலேயே ஒரு மாற்றம் நடந்தேறியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் நடைபெற்றவை இதே விடயத்தை இன்னும் பலப்படுத்த உதவியுள்ளன. 1950களில் பிரய்ஸ் ரயன் (Bryce Ryan) என்பவர் சுட்டிக்காட்டிய நிலைமைகளில் இருந்து வேறுபட்டதாக, அதாவது சாதிய, மதப் பிளவுகள் தற்காலிகமாகவாவது பின்தள்ளப்பட்டுள்ளன. சிங்களம் பேசும் பௌத்தர்கள் தங்களைத் தொடர்ந்தும் சிங்களப் பௌத்தர்களாகவே கருதிவருகின்ற போதிலும் கூட, அவர்கள் பௌத்த மதத்தைச் சாராத சிங்களவர்களைச் சிங்கள மொழி பேசுபவர்களாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். சிங்கள முதலாளி வர்க்கத்தில் கிறீஸ்தவர்களது விகிதாச்சாரம் அவர்களது குடிசன விகிதாச்சாரத்தை விட மிகவும் வேறுபடுவது ஒன்றும் தற்செயலான நிகழ்வல்ல. இன்றைய சொல்லாடலானது அகன்ற- சிங்கள அடையாளத்தை (Pan-Sinhala Identity) வலியுறுத்துகிறது.

பொருள்வகை அடித்தளம் என்பது வெறுமனே தொழில் நுட்பம் மற்றும் 'பொருள்வகை' அம்சங்களை மாத்திரம் குறிப்பதல்ல. மனிதச் செயல்பாடு என்பதே ஒருவிதப் பொருள்வகை அம்சமேதான். மார்க்ஸ் அவர்கள் தனது 'ஜெர்மன் சித்தாந்தம்' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'செயலூக்கமுள்ள, யதார்த்தமான மனிதர்கள் என்பவர்கள் உற்பத்தி' சக்திகளில் ஏற்படும் திட்டவட்டமான வளர்ச்சிகள் மற்றும் அவற்றுடனான உறவுகள் என்பவற்றால் வரையறுக்கப்படும் போதிலேயே, தமது சிந்தனைகள், கருத்துகள் ஆகியவற்றின் படைப்பாளிகளும் ஆவர். மார்க்சைப் பொறுத்தவரையில் உற்பத்தி சக்திகள் என்பவை மனிதப் பிரக்ஞைக்கு அப்பாற்பட்ட புறநிலையான உண்மைகள் அல்ல, மாறாக, அவிநெரி (Avineri) என்பவரது வார்த்தைகளில் கூறுவதானால் மனிதச் செயற்பாடு மற்றும் மனிதப் பிரக்ஞையின் ஒழுங்கமைப்புகளும் பொருள்வகை அம்சங்களேயாகும். ... இதன் விளைவாகப் பொருள்வகை அடித்தளத்திற்கும் மேற்கட்டுமானத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் தெளிவற்றதாகின்றன. அதாவது, மனித வாழ்க்கை நிலைமைகளை உருவாக்குவதற்கும் அவற்றைத் தொடர்ந்து பேணுவதற்கும் அவசியமான மனிதரது பிரக்ஞைபூர்வமான செயற்பாட்டிற்கும் இந்தக் குறிப்பான வடிவிலமைந்த செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கும் முறைமைப்படுத்துவதற்கும் அவசியமான பகுத்தறிவு மற்றும் நியாயங்களை வழங்கும் மனிதப் பிரக்ஞைக்கும் இடையிலான வேறுபாடுகள் மங்குகின்றன (அவிநெரி 1968:76).

மார்க்சின் கருத்துப்படி, ஒவ்வொரு தலைமுறையும் அதன் முன்னைய தலைமுறையிடம் இருந்து பெருமளவிலான உற்பத்தி சக்திகள், மூலதனம், மற்றும் வாழ்க்கை நிலைமைகளைக் கைவரப்பெறுகின்றன. புதிய தலைமுறையானது இவற்றை மாற்றியமைக்கும் பொழுதிலேயே... வாழ்க்கையின் திட்டவட்டமான வளர்ச்சிக்கான நிலைமைகளையும் குறிப்பான பண்புகளையும் முன்மொழிகிறது. ... அதாவது சூழ்நிலைகள் மனிதரை உருவாக்கும் அதே சமயத்தில் மனிதரும் தம்பங்கிற்குச் சூழ்நிலைகளை உருவாக்குகிறார்கள் (in Tucker 1972;128-129). ஒவ்வொரு தலைமுறையும் சமூக மறுஉற்பத்தியை ஒழுங்கமைக்கும் போதே, அது தொடர்பான குறிப்பிட்ட வடிவிலமைந்த அறிவார்ந்த புரிதலையும் உருவாக்கிக் கொள்கிறது. தான் எவற்றைக் கைவரப்பெற்றதோ அவற்றின் மேலேயே இந்தப் புரிதலையும் கட்டிச் செல்கிறது. பழைய சிந்தனைகள் புதிய

'செயலூக்கமுள்ள, யதார்த்தமான மனிதர்கள் என்பவர்கள் உற்பத்தி சக்திகளில் ஏற்படும் திட்டவட்டமான வளர்ச்சிகள் மற்றும் அவற்றுடனான உறவுகள் என்பவற்றால் வரையறுக்கப்படும் போதிலேயே, தமது சிந்தனைகள், கருத்துகள் ஆகியவற்றின் படைப்பாளிகளும் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளால் பிரதியீடு செய்யப்படும் போதிலேயே, பழைய சிந்தனைகள் புதிய சிந்தனைகளின் வெளிச்சத்தில் மீள்-அர்த்தம் செய்யவும் படுகிறது. பல்வேறு தரப்பட்ட சிந்தனைகளுக்கு இடையிலான முரண்பாடானது சமூக, அரசியல் காரணிகளின் தாக்கத்தினால் அடிக்கடி தீர்வு காணப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடைபெற்ற சிங்களத் தேசியவாதத்தின் வளர்ச்சியானது இந்த விதமான வளர்ச்சிப் போக்கிற்கு ஒரு வகை மாதிரியான உதாரணமாக அமைகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் நிலப்பிரபுத்துவ சமூகத்திலிருந்து பண்ட உற்பத்தி அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்திற்கான மாற்றமானது மிகவும் முன்னேறிய நிலையில் இருந்தது. பிரித்தானியாவிலிருந்து இங்குக் குடியேறியிருந்த முதலாளி வர்க்கத்துடன் உற்பத்தி சாதனங்களின் கட்டுப்பாட்டை முதன்மையாகப் பெருந்தோட்டத்துறையில் பகிர்ந்துகொள்ளும் ஒரு உள்ளூர் முதலாளி வர்க்கமானது உருவாகியிருந்தது. இந்த மாற்றமானது குறைந்தபட்சம் ஒல்லாந்தர் காலத்திலிருந்தே தொடங்கியிருந்தது (கொத்தலாவலை 1967). பத்தொன்பதாம் நூற்றாண்டில் கரையோரப் பிரதேசங்களில் இருந்த ஒல்லாந்தரது நிர்வாகமானது கடைப்பிடித்த கொள்கைகளின் விளைவாக வர்த்தக முதலாளித்துவத்தில் அனுபவமுள்ள உள்ளூர் மக்கள் பிரிவொன்று உருவாகியிருந்தது. அத்துடன் சில தனிநபர்களாலும் குடும்பங்களினாலுமான இந்தப் பிரிவானது இலகுவில் பணமாக மாற்றப்படக் கூடியதும் இலகுவில் பணமாக மாற்ற முடியாததுமான சொத்துகளாலான பெருமளவு மூலதனத்தையும் கொண்டிருந்தது: இந்த மூலதனத்தை இந்தப் பிரிவானது புதிய வாய்ப்புகளை நோக்கி நகர்த்தக் கூடிய நிலையில் இருந்தது (ரொபர்ட்ஸ் 1979 :159). பிரித்தானியரது காலகட்டமானது இந்த முதலாளி வர்க்கமும் அவர்களது மூலதனமும் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்ட'களை வழங்கியது. ஆங்கிலக் கல்வியைக் கற்றவர்களாகவும் கிறீஸ்தவ மதத்திற்கு மாறியவர்களாகவும் பெரும்பாலும் இருந்த இந்த மேட்டுக்குடிப் பிரிவானது இன, சாதிய, மத பிரிவுகள் அனைத்தையும் ஊடறுத்துச் செல்வதாக இருந்தது.

> பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் நிலப்பிரபுத்துவ சமூகத்திலிருந்து பண்ட உற்பத்தி அடிப்படை யாகக் கொண்ட ஒரு சமுதாயத்திற்கான மாற்றமானது மிகவும் முன்னேறிய நிலையில் இருந்தது. பிரித்தானியாவிலிருந்து இங்குக் குடியேறியிருந்த முதலாளி வர்க்கத்துடன் உற்பத்தி சாதனங்களின் கட்டுப்பாட்டை முதன்மையாகப் பகிர்ந்துகொள்ளும் ஒரு உள்ளூர் முதலாளி வர்க்கமானது உருவாகியிருந்தது.

இந்த வளர்ந்துவரும் மேட்டுக்குடியானது பெற்றுக் கொண்ட செல்வமானது, அது தன் அந்தஸ்தைத் திடப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளுடன் நெருக்கமான தொடர்புடையதாக இருந்தது. கொலனித்துவ நிர்வாகத்தாலும், மிசனரியினராலும் நடத்தப்பட்ட ஆங்கில மொழி மூலமான கல்வியே அந்தச் சாதனமாகும். இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள் ஆங்கிலமொழி, ஆங்கிலப் பழக்கவழக்கங்கள், ஆங்கிலச் சிந்தனைகள், ஆங்கில நாகரீகம், ஆங்கில உடைகள் போன்ற அனைத்தையும் கடைப்பிடித்தார்கள். ஆனால், அவர்களால் ஒருபோதும் ஆங்கிலேயர்களாக மாறிவிட முடியவில்லை. இலங்கையில் இருந்த பிரித்தானியத் தரகு முதலாளிகளுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவே இவர்கள் தொடர்ந்தும் இருந்து வந்தார்கள் (ரொபர்ட்ஸ் 1979 :153).

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறீஸ்தவ மிசனரிமார்களது தீவிரமான மதத்தைப் பரப்பும் நடவடிக்கைகள் உள்ளூர் மக்களது பிரக்ஞையை உருவாக்கும் முக்கிய காரணியாக இருந்தது. இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீஸ்தவ மிசனரிமாரின் நோக்கங்கள் பற்றிக் கொழும்பு பைபிள் சங்கத்தினரால் பின்வருமாறு இரத்தினச் சுருக்கமாக கூறப்பட்டிருந்தது. 'உருவ வழிபாட்டிற்குப் பலியாகிப்போன அப்பாவிகளை மீட்டெடுப்பது, பெயரளவிலான கிறீஸ்த்தவர் களைத் தேவவாக்கிற்கு உண்மையான விசுவாசிகளாக மாற்றுவது, உண்மையான விசுவாசிகளுக்கு அவர்களது வாழ்வின் பணிகளை அறிவுறுத்துவது' (மலகொட என்பவரால் மேற்கோள் காட்டப் பட்டபடி). ஒல்லாந்தரே முதன்முதலாக 1736இல் சிங்கள அச்சகத்தை முதலில் அமைத்திருந்த போதிலும், பிரித்தானிய மிசனரிமாரே அதனை மிகுந்த ஆவலுடன் பயன்படுத்தலானார்கள். இவர்கள் தமது விசுவாசிகள் வாசிப்பதற்கான விடயதானங்களை உருவாக்கியதுடன் நின்றுவிடாமல், பௌத்த மதத்தின் மீதான தாக்குதலைத் தொடுக்கலானார்கள்.

'உருவ வழிபாட்டிற்குப் பலியாகிப்போன அப்பாவிகளை மீட்டெடுப்பது, பெயரளவிலான கிறீஸ்த்தவர் களைத் தேவவாக்கிற்கு உண்மையான விசுவாசிகளாக மாற்றுவது, உண்மையான விசுவாசிகளுக்கு அவர்களது வாழ்வின் பணிகளை அறிவுறுத்துவது'

மிசனரிமாரது பிரச்சார வெளியீடுகள் இலங்கையில் மிகவும் விரிவாகச் சுற்றுக்கு விடப்பட்டது. நாற்பது வருடங்களுக்கு மேலாக இவர்களுக்குப் பௌத்தர்களிடம் இருந்து போட்டியே இருக்கவில்லை. இவர்களால் வெளியிடப்பட்ட பிரசுரங்களது எண்ணிக்கைகள் பற்றித் திட்டவட்டமான தகவல்கள் இல்லாத போதிலும் 1849--61இடைக்காலத்தில் பதினைந்து இலட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டிருப்பதாக மொர்டோக், நிக்கல்சன் (Murdoch and Nicholson)ஆகியோர் மதிப்பிட்டுள்ளார்கள். இந்தப் பிரசுரங்களது விரிவான பரவலானது கிறீஸ்தவ மிசனரிமாரது நோக்கத்தை மதம் மாற்றத்திற்கு உதவுவது நிறைவேற்றியதா என்பதைவிட, அது பௌத்தர்களை, உடனடியாக இல்லாவிட்டாலும் கூடச் சற்று காலம் கடந்தாவது, செயற்படுமாறு தூண்டிவிட்டது என்பதிலேயே இதன் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. பௌத்தர்கள் மிசனரிமாரை அவர்களது தளத்திலேயே முகம் கொடுக்கலானார்கள் (மலகொட 1973:181).

தம்மீதான தாக்குதல்களைப் பௌத்தர்கள் மூன்று முனைகளில் முகம் கொடுக்கலானார்கள்: பிரசுரங்கள், பிரசங்கங்கள் மற்றும் விவாதங்கள் வாயிலாக, மற்றும் கல்வியின் மூலமாக இவர்கள் பதிலடி கொடுக்கத் தொடங்கினார்கள். கொழும்பில் முதலில் ஒரு அச்சகம் 1855இல் நிறுவப்பட்டது. பின்பு காலியில் 1862இல் இன்னொன்று தொடங்கப்பட்டது. இந்த அச்சகங்கள் பௌத்த மதம் தொடர்பான பிரசுரங்கள், விவாதங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வெளியிடுவதற்கென்றே முற்றாகச் செயற்பட்டன (மலகொட 1973:191-3). 1860களில் நன்கு ஒழுங்கமைந்த அச்சு சாதனங்கள் மூலமாகப் பதில் கொடுப்பதுடன் நின்றுவிடாது, பௌத்த மறுமலர்ச்சியை முன்னெடுத்த பௌத்த பிக்குகள் மிசனரிமாருடன் பகிரங்கமான தொடர்விவாதங்களை ஏற்பாடு செய்து நடத்தினார்கள்: 1873இல் கொழும்பிற்குத் தெற்கே உள்ள பாணத்துறை நகரத்தில் நடைபெற்ற விவாதமானது மிகவும் பிரபல்யமானது. இதில் ஈடுபட்ட 'துறவி புத்திஜீவிகளுள்' மிகட்டுவட்ட குணானந்த தேரரும் (Ven Migettuwatte Gunanda), ஹிக்கடுவ சிறீ சுமங்கல தேரரும் (Ven Hikkaduve Sri Sumangala) மிகவும் முக்கியமானவர்கள். இவர்களே பிற்காலத்தில் அநாகரிகத் தர்மபாலாவின் வழிகாட்டிகளாக விளங்கினார்கள்.

கல்வி என்பதுதான் பௌத்தர்களது பலவீனமான பகுதியாக இருந்தது. பௌத்த கோயில்களில் அமைந்திருந்த சில பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பெரிய மிசனரி பாடசாலைகளுடன் அந்தஸ்த்து அளவில் போட்டியிட முடியாதனவாக இருந்தன. அக்காலத்தில் பலரும் தேடிச் சென்ற 'விஞ்ஞானபூர்வமான' கல்வியை இவற்றால் வழங்கவும் முடியவில்லை. 1880இல் பிரம்மஞான சமூகத்தைச் (Theosophical Society) சேர்ந்த கேர்ணல் ஒல்கொட் (Colonal Olcott) என்பவரும், மெடம் பிலாவட்ஸ்கி (Madam Vlavatsky) என்பவரும் இலங்கைக்கு வரும் வரையில் இந்த நிலைமைகளில் அதிகம் மாற்றம் ஏற்படவில்லை. 1873இல் பாணத்துறையில் நடைபெற்ற பிரபல்யமான பகிரங்க விவாதமே கேர்ணல் ஒல்கொட் அவர்களைப் பௌத்த மதத்தைத் தழுவும் படி ஆழமாகச் செல்வாக்கு செலுத்திய அம்சமாக இருந்து எனக் கிர்திசிங்க மற்றும் அமரசூரிய (Kirthisinghe and Amarasuriya) ஆகியோர் தெரிவிக்கின்றனர் (1981:3). ஒல்கொட் அவர்கள் இலங்கையில் பன்னிரண்டு கல்லூரிகளையும் நானூற்றிற்கு அதிகமான பாடசாலைகளையும் நிறுவியதாகக் கூறப்படுகிறது (கிர்திசிங்கவும், அமரசூரியவும் 1981:11)

எப்படியிருப்பினும் பௌத்த மறுமலர்ச்சியில் மிகவும் முக்கியப் பங்காற்றிய முதன்மையான நபர் அநாகரிகத் தர்மபால அவர்களேயாவார். இவர் கிராமப் புறத்திலிருந்து கொழும்பிற்கு நிரந்தரமாகக் குடிபெயர்ந்து, அங்கு வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொண்ட ஒரு தீவிர பௌத்த குடும்பத்தில் பிறந்தவர். தனது ஏனைய மேட்டுக்குடி சகாக்களைப் போலவே இவரும் மேற்கத்தைய கல்வியைப் பெற்று, பெரிதும் அதன் செல்வாக்குக்கு உட்பட்டு, அதனால் வடிவாக்கம் செய்யப்பட்டவர். பௌத்த மறுமலர்ச்சியில் பெரிதும் பங்குகொண்ட ஒரு குடும்பத்தில் வளர்ந்த இவர், தனது இளமைப் பருவத்திலேயே மிகெட்டுவட்ட குணானந்த தேரர் மற்றும் ஹிக்கடுவ சிறீ சுமங்கள தேரர் ஆகியோரது செல்வாக்கிற்கு உட்பட்டவராக இருந்தார் (ஒபயசேகர 1976:229). இவரது வாழ்க்கை பற்றி நான் இங்கு அதிகம் விபரிக்கப் போவதில்லை. ஆயினும் சிங்கள சுய-அடையாளத்தை உருவாக்குவதில் இவரது பங்கு பற்றி இங்கு நான் பேசியாக வேண்டியுள்ளது.

தர்மபாலா அவர்கள் பௌத்த முதலாளித்துவ வர்க்கத்தினது மேல்நோக்கிய அசைவியக்கத்தால் மாத்திரமன்றி, ஆசிரியர்கள், ஆயுர்வேதமருத்துவர்கள், கீழ்நிலை அரச அதிகாரிகள், பௌத்தபிக்குகள் ஆகியோரை உள்ளடக்கிய சிங்கள கிராம புத்திஜீவிகள் என்போராலும் அதிகம் செல்வாக்குக்குட்படுத்தப் பட்டார் (ஒபேசேகர:1976:244). இந்தப் பிரிவினரே கிராம மட்டத்தில் சொல்லாடல்களை உருவாக்கி ஆதிக்கம் செலுத்துவதுடன், கிராம மக்களுக்குத் தலைமையும் வழங்குபவர்களாவர். சிங்கள மக்களுக்கு அவர்களது சிங்கள அடையாளம் தொடர்பாக ஒரு பெருமித உணர்வைத் தர்மபால அவர்கள் வழங்கினார்: இதற்கு ஒபேசேகரா வழங்கும் உதாரணத்தைப் பார்ப்போம். தர்மபாலவின் போதனைகளின் உடனடி விளைவாகப் பெருமளவிலான பெயர் மாற்றங்கள் இடம் பெற்றன. ... 1930களில் கிறீஸ்தவர்கள் உட்பட எல்லாச் சிங்கள பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்குச் சிங்கள அல்லது பௌத்த பெயர்களை வைத்தனர் (1976:245).

தர்மபாலா அவர்கள் பௌத்த முதலாளித்துவ வர்க்கத்தினது மேல்நோக்கிய அசைவியக்கத்தால் மாத்திரமன்றி, ஆசிரியர்கள், ஆயுர்வேதமருத்துவர்கள், கீழ்நிலை அரச அதிகாரிகள், பௌத்தபிக்குகள் ஆகியோரை உள்ளடக்கிய சிங்கள கிராம புத்திஜீவிகள் என்போராலும் அதிகம் செல்வாக்குக்குட்படுத்தப் பட்டார்

தர்மபாலாவின் மீது இருந்த மேற்கத்தைய செல்வாக்கானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தப் பண்புகளுடன் மேற்கத்தைய விழுமியங்களை இணைத்துக்கொண்டதில் மட்டுமல்லாமல், சிங்கள அடையாளப் படுத்தலில் மேற்கத்தைய சிந்தனைகளை இணைத்துக் கொண்டதில் அடங்கியிருந்தது. சிங்களவர்களது ஆரிய மூலம் பற்றிய நம்பிக்கையைப் பற்றி ஏற்கனவே பார்த்திருந்தோம். அவர் மேற்கத்தைய சிந்தனையான 'தேச-அரசு' என்பதை ஏற்றுக் கொண்டிருந்தார். ஆனால், அதனை அவர் சிங்களவர்களுடன் மாத்திரம் அடையாளப்படுத்தினார். இவர் தனது வாதங்களிலும் எழுத்துகளிலும் மண்ணின் மைந்தர்களான தூய சிங்கத்தின் வாரிசுகளான சிங்களவர் மாத்திரமே உரிமைக்குரியவர்களாக இருந்தார்கள். ஏனைய இதே மண்ணில் பிறந்த சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சமத்துவமான உரிமையைச் சில சந்தர்ப்பங்களில் பகிரங்கமாகவும் பல சந்தர்ப்பங்களில் அவ்வளவு வெளிப்படையாக இல்லாத முறையிலும் மறுத்தார் (தர்மபால 1965:483). இப்போது 'ஆரிய கோட்பாடானது' சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தின் பிரக்ஞையில் நன்கு பதிந்து விட்டிருக்கிறது. இத்தோடு சர்வதேச செய்தி ஊடகங்களிலும்தான் என்பதை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இவர் தனது வாதங்களிலும், எழுத்துகளிலும் மண்ணின் மைந்தர்களான தூய சிங்கத்தின் வாரிசுகளான சிங்களவர் மாத்திரமே உரிமைக்குரியவர்களாக இருந்தார்கள். ஏனைய இதே மண்ணில் பிறந்த சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சமத்துவமான உரிமையைச் சில சந்தர்ப்பங்களில் பகிரங்கமாகவும், பல சந்தர்ப்பங்களில் அவ்வளவு வெளிப்படையாக இல்லாத முறையிலும் மறுத்தார்

கிறீஸ்தவர்களது தாக்குதல்களில் இருந்து பௌத்தத்தைப் பாதுகாப்பது என்ற நோக்கில் தொடங்கிய பௌத்த மறுமலர்ச்சி இயக்கமானது, சிங்களவரது பிரக்ஞையை உருவாக்கும் ஒரு சாதனமாக மாற்றமடைந்து, அதன் ஆரம்பத்திலிருந்ததை விட மிகவும் வேறுபட்ட வடிவில் வந்து நிற்கிறது. பௌத்த மறுமலர்ச்சிக்கான கோரிக்கையானது, பௌத்த மக்களைக் கடந்து போய் அனைத்துச் சிங்களம் பேசுபவர்களையும் உள்ளடக்கும் விதத்தில் போய் முடிந்ததை அடுத்து வந்த இருபதாம் நூற்றாண்டின் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. நவீனச் சிங்களச் சமூகத்தை உருவாக்கும் பிரதான பாத்திரத்தை இது ஆற்றியது. கிறீஸ்தவத்தின் பொதுவான செல்வாக்கானது இவர்களுக்கு ஒரு அமைப்புவடிவ மாதிரியை வழங்கியது. கூடவே தர்மபாலாவிடம் காணப்பட்ட வசீகரமுமாகச் சேர்ந்து, ஒபேசேகரவின் வார்த்தையில் கூறுவதானால், 'புரட்டஸ் தாந்து பௌத்தத்தை', அதாவது மரபார்ந்த சிங்கள பௌத்தத்திலிருந்து மிகவும் வேறுபட்ட ஒன்றை உருவாக்கிவிட்டுள்ளது. மரபார்ந்த பௌத்தமானது தனிநபர்கள் தமது மீட்சிக்காகப் போராடுமாறு வழிகாட்டுவதாகவும் உள்ளூர் மற்றும் இந்துக்களது பல தெய்வ வழிபாடுகளையும் உள்ளடக்கியதாகவும் இருந்தது. புதிய பௌத்தமானது அழுத்தக் குழுக்களது செயற்பாடுகளை நோக்கித் தன்னைத் திசையமைவு கொண்டுள்ளதுடன், பௌத்த மதத்தை பொய்யான கடவுள்களில் நின்றும் தூய்மைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது. இந்த மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவாக மரபார்ந்த சிங்கள பௌத்தமானது (குறைந்த பட்சம் முதலாளித்துவக் கண்ணோட்டத்தைப் பொறுத்தவரையில் என்றாலும்) மேற்கத்தைய விழுமியங்களுக்குள் கட்டமைத்தது.

முதலாளித்துவ வர்க்கமானது ஏற்கனவே தமது ஆங்கிலக் கல்வியின் ஊடாக இந்த விழுமியங்களை ஏற்கனவே கைவரப் பெற்றதாகவே இருந்தது. இங்கு முக்கியமான ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, இந்த மேற்கத்தைய விழுமியங்களானவை, அவற்றை ஏற்கனவே தம்வயப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளவர்களுக்கு மேற்கொண்டும் அவை மேற்கத்தைய விழுமியங்களாகவே தெரிவதில்லை. இந்த விழுமியங்கள் முற்றாக உள்வாங்கப்பட்டு, அவர்களது பிரக்ஞையில் மாற்றத்தை ஏற்படுத்திச் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் 'சிங்களமயமாகி' விட்டுள்ளது.

இலங்கையில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியானது புதிய வர்க்கங்களது தோற்றத்திற்கு வழிவகுத்தது. ஆங்கிலம் கற்ற மேட்டுக்குடித் தட்டும் இதில் அடங்கும். இந்தத் தட்டானது சிங்களத் தேசியவாத சித்தாந்தத்தை வடிவமைத்தது. இலக்கியம் மற்றும் மரபு போன்றவற்றால் வரலாறானது சிங்கள மேட்டுக்குடிக்குக் கையளித்த "அகின்ற கலாச்சார முறைமையானது'' இவர்கள் தம்மைப் பௌத்த சமூகமாக இனம் காண்பதற்கான ஆய்வுச் சட்டகத்தைக் கொடுத்தது. கிறீஸ்தவ மிசனரிமாரின் செயற்பாடுகள் என்ற குறிப்பான வரலாற்று நிகழ்வானது இவர்கள் தமது கலாச்சாரப் பொதியில் இருந்து சில குறிப்பான அம்சங்களை, தற்காப்பு நோக்கில் முன்தள்ளுவதை அவசியப்படுத்தியது. இவ்வாறு சில குறிப்பான கலாச்சார அம்சங்களை முன்னே தள்ளும் போக்கிற்கும் அந்தக் காலகட்டத்தில் நிலவிய பொருள் வகை அடித்தளத்திற்கும் இடையிலான இயங்கியல் உறவானது சிங்களவர்களது சுய-அடையாளத்தின் தன்மையை மாற்றியமைத்தது.

இங்கு முக்கியமான அம்சம் என்னவென்றால், ஒருக்கால் இந்த மாற்றமானது நடந்தேறிவிட்டால், அதற்கு மேல் அது எதிர்காலத்தில் முகம் கொடுக்க நேரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வளர்ச்சியடைந்து செல்லும் என்பதாகும். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தச் சிங்களவர்களது பிரக்ஞையை நிர்ணயித்த பிரதான வரலாற்றுச் சூழ்நிலையாக அமைந்தது. தமிழ் மற்றும் சிங்கள முதலாளித்துவப் பிரிவினரிடையே பொருளாதார மற்றும் அரசியல் தளங்களில் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக நடைபெற்ற போட்டியாகும்.பௌத்த மறுமலர்ச்சியால் உருவாக்கப்பட்ட சிங்களவரது வரலாற்றுப் பிரக்ஞையானது சூழ்ச்சித் திறத்துடன் பயன்படுத்தப்பட்ட விதமானது, தமிழரை, சிங்களவரது 'வரலாற்று பூர்வமான எதிரியாக' உருவகப்படுத்தும் நிலைமை தோற்றுவித்தது. இலங்கையின் வரலாற்றைச் சமூகத்தில் இருந்த மேட்டுக்குடியினரிடையே பிரபல்யப்படுத்தியவர்கள் ஐரோப்பாவில் இருந்து வந்திருந்த ஆசிரியர்கள், கல்வியாளர்கள், மற்றும் எழுத்தாளர்கள் போன்றவர்களாவர். இவர்கள் தமக்குக் கிடைத்த முக்கியமான பிரதிகளை, தமது சொந்த சிந்தனைகளான தேசங்கள், தேசியவாதம் என்பவற்றின் வெளிச்சத்தின் ஊடாகவே அணுகினார்கள். இந்தச் சிந்தனைகள் இலங்கை முதலாளிகளிடையே பிரக்ஞையை உருவாக்குவதற்குப் பயன்பட்டது. இந்த முதலாளித்துவச் சக்திகள் இந்தக் கருத்துகளை இலங்கையின் நவீனத் தேச- அரசில் நன்கு வளர்ச்சியடைந்திருந்த தொடர்பு சாதனங்களின் வாயிலாக விரைவாகப் பரப்பினார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தச் சிங்களவர்களது பிரக்ஞையை நிர்ணயித்த பிரதான வரலாற்றுச் சூழ்நிலையாக அமைந்தது. தமிழ் மற்றும் சிங்கள முதலாளித்துவப் பிரிவினரிடையே பொருளாதார மற்றும் அரசியல் தளங்களில் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக நடைபெற்ற போட்டியாகும்.

ஒரு விதத்தில் பார்த்தால் இது இவர்கள் தாம் பெற்றதைத் திருப்பிக் கொடுக்கும் முறைமை போலவும் படுகிறது. ஒரு குறிப்பிட்ட சூழலில் உருவான சிந்தனைகளும் கருத்தாக்கங்களும் இன்னொரு சூழலில் அதில் செயற்படுபவர்களால் அவர்களது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் மாற்றப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிட்ட புதிய பொருள்வகை அடித்தளமானது, இந்தப் புதிய சிந்தனை மற்றும் கருத்தாக்க மாற்றங்களை இலகுவாக ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக மக்களைத் தயார்படுத்துகிறது. அதற்குமேல் இவர்கள் இந்தப் புதிய சிந்தனைகளைத் தமது சொந்த சிந்தனைகள் போல நன்கு உட்செறித்துக் கொள்கிறார்கள்.

நன்றி

Chicago Anthropology Exchange, Volume 16, Autum 1987 viyooham

இலங்கையில் சமாதானம் பேசுதல் என்னும் இந்நூல் தொகுதிகள் இலங்கையின் முரண்பாடு பற்றிய பல்வேறு எழுத்தாளர்களின் விரிவான கருத்துக்களைப் பன்முகத்தன்மையில் எடுத்துரைக்கிறது. மிகப்பெரிய அளவில் இலங்கையில் இன அழிப்பு நிகழ்ந்துவிட்ட இச்சூழலில் இந்நூல் தற்போது பல்வேறு வகையிலான புரிதல்களைத் தருவதாக உள்ளது. கடந்து முப்பது ஆண்டுகால வெளியில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள், தோல்விகள் அவற்றினூடாகப் பெறப்பட்ட படிப்பினைகள் என விரிந்த தளத்தில் கடந்தகால வரலாற்றைப் பதிவுசெய்கிறது. 'இலங்கையின் இன்னல்களுக்குத் தீர்வொன்றைத் தேடுவதில் பெரும் தியாகத்துடன் ஈடுபட்ட பலரது அரிய கருத்துக்களையும் அனுபவங்களையும் ஒருங்கு சேர்ப்பதன் மூலம் அக்கற்றல் செயன்முறைக்கு வசதியேற்படுத்த இந்நூல் உதவுமென்பது எனது எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாகும்' என்ற பதிப்பாசிரியரின் கூற்று நடந்தேறா நிலையில், இந்நூலுக்கானத் தேவை அதிகரித்திருக்கிறது என்றே கூறமுடியும். திம்புக் கோட்பாடுகளை மீட்டுப் பார்த்தல், மூன்றாம் தரப்புத் தலையீடு: இந்திய - இலங்கை ஒப்பந்தமும் முரண்படும் கருத்துக்களும், இலங்கைக்கான தீர்வுத் தேடலில் பிரேமதாச - எல்டிடிஈ பேச்சு வார்த்தைகள் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையிலான காலமாக அமைந்த சந்திரிகா - எல்டிடிஈ பேச்சுவார்த்தைகள், இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் - பாதுகாப்புப் பரிமாணங்கள் உள்ளிட்ட மேலும் சில பகுப்புகளின் அடிப்படையில் இந்நூல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஒட்டு மொத்த நிலையில் கடந்த காலங்களில் இரண்டு தரப்பின் நிலைப்பாடுகள் எவ்வெப் பரிமாணங்களில் செயல்பட்டு வந்திருக்கின்றன என்ற புரிதலை இத்தொகுப்புகள் முன்வைக்கின்றன. இரண்டு தரப்பிலும் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்கள், ஒப்பந்தங்கள், படத்தொகுப்புகள், நிகழ்வுகளின் காலவரிசை என இத்தொகுப்புகள் அதன் பொருண்மையில் முழுமை பெற்றதாய் அமைந்துள்ளது.



இலங்கையில் சமாதானம் பேசுதல்
முயற்சிகள், தோல்விகள், படிப்பினைகள் (இரண்டு தொகுதிகள்)

பதிப்பு: கலாநிதி குமார் ரூபசிங்க
இந்தியப் பதிப்பு: அடையாளம், 2008

- தே.சிவகணேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் ஊடகப் பண்பாடும்

■ துரை. மதங்கன்

இலங்கையில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகள் தாக்குதல்கள் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. இதுவரையான வன்முறை அனுபவங்கள் ஊடகத் தொழிற்பாடுகளில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனால் அவரவர் சுயதணிக்கைக்கு உட்பட்டு இயங்கும் மனோ பாவத்தை வளர்த்துள்ளன. அப்படி முடியாதவர்கள் ஊடகத் துறையை விட்டு வெளியேறி அல்லது நாட்டைவிட்டு வெளியேறும் அவலம் பொது நடைமுறையாக மாற்றமுற்று வளர்ந்துள்ளன.

இலங்கையில் 1990ஆம் ஆண்டு ஐ. தே. கட்சி ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சொய்ஸா முதல் 2009ஆம் ஆண்டு ஊடகவியலாளர் சசிமதன் வரை 41 ஊடகவியலாளர்கள் வன்முறைகளினால் தமது உயிரை இழந்துள்ளனர். படுகொலை செய்யப்பட்ட இந்த 41 ஊடகவியலாளர்களில் 36 பேர் தமிழ்பேசும் இனங்களைச் சேர்ந்தவர்களாகவும் 5 பேர் சிங்களவர்களாகவும் உள்ளனர். சனநாயக நாடெனக் கூறப்படும் இலங்கையில் ஊடகங்கள் அதிலும் குறிப்பாகத் தமிழ் ஊடகங்கள் எதிர்நோக்கும் ஆபத்தையும் சவால்களையும் இவை தெட்டத்தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

முன்னாள் சனாதிபதிகளான பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் 2 ஊடகவியலாளர்களும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா வின் ஆட்சிக்காலத்தில் 13 ஊடகவியலாளர்களும் தற்போதைய மகிந்தா ராஜபக்சாவின் ஆட்சியில் 26 ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுவது, கடத்தப்படுவது, காணாமல் போவது, தாக்கப்படுவது, மிரட்டப் படுவது என வன்முறைகள் பல வடிவங்களில் நடைபெறுகின்றன. சமூக அக்கறையும் அரசியல் நோக்கமும் உள்ள ஊடகவியலாளர் கள் ஒதுங்கவும் ஓரங்கட்டப்படவும் தள்ளப்படுகின்றனர். தமது தாய்நாட்டில் இருந்தால் தமது உயிருக்கு உத்தரவாதம் இல்லையென்பதால் வெளிநாடுகளில் தஞ்சமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுதான் உள்ளது.

இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் ஆபத்தையும் அச்சுறுத்தலையும் எதிர்கொள்பவர்களாகவே உள்ளனர். 1992ஆம் ஆண்டு முதல் இற்றை வரை உலகில் 580 ஊடகவியலாளர்கள் படுகொலை

இக்கட்டுரையாசிரியர்
ஊடகவியலாளர்
மற்றும் விமர்சகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டுள்ளனர். 2010ஆம் ஆண்டு மட்டும் 57 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும் 51 ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டுள்ளதாக 'எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு' தெரிவிக்கின்றது. இலங்கையில் 1998 ஜுன் 5ஆம் திகதி அவசர காலச் சட்டத்தின் கீழ் சில குறிப்பிட்ட செய்திகள் வெளியிடுதல் மீதான தணிக்கை சனாதிபதியால் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. முன்பு 1995 செப்டம்பர் 21 முதல் டிசம்பர் 20 வரையும் பிறகு 1996 ஏப்ரல் 19 முதல் ஒக்டோபர் 8 வரையும் செய்தித் தணிக்கை அமுலில் இருந்தது. இந்தத் தணிக்கையைக் கண்காணிக்கும் பொறுப்பு சிவில் அதிகாரியிடம் வழங்கப்பட்டிருந்தது.

1998இல் அமுல்படுத்தப்பட்ட செய்தித் தணிக்கையைக் கண்காணிக்கும் பொறுப்பதிகாரியாக இராணுவத்தின் உயரதிகாரி ஒருவர் அப்பொழுது நியமிக்கப்பட்டார். இலங்கையின் வரலாற்றிலேயே முதற்தடவையாகத் தணிக்கைச் சட்டத்தின்கீழ் ஒரு இராணுவ அதிகாரி பொறுப்புக்கு நியமிக்கப்பட்டது குறித்துத் தொடர்பூடக அமைப்புகள் பலவும் அப்போது தமது எதிர்ப்பைத் தெரிவித்தன.

தொடர்பூடகச் சுதந்திரம் பேணுவதில் இலங்கை மிக மோசமாகத் தாழ்ந்திருந்தது. 1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட யுத்த செய்தித் தணிக்கை இலங்கையின் தொடர்பூடகச் சுதந்திரத்தை மட்டுப்படுத்தியிருந்தது. அதுபோல இராணுவ நடவடிக்கைகளாலும் அவற்றுடன் தொடர்புடைய காரணங்களாலும் அறிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டன. மக்களுக்கு உண்மையை அறிவதற்காக உள்ள அடிப்படை உரிமையை மறுதலிக்கும் இந்தத் தணிக்கை அரசாங்கம் தான் நினைத்தவற்றைத் தனக்குச் சாதகமானவற்றை மட்டுமே மக்களுக்குத் தெரிவிக்கும் நோக்கிற்காகத் தொடர்ந்து அமுல்படுத்தி வந்தது.

யுத்தம், யுத்த அழிவுகள் போன்ற விபரங்கள் தொடர்பான உண்மைத் தகவல்கள் எவையும் மக்களுக்குச் சொல்லாமல் இருப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்தத் தணிக்கைமுறை யுத்தத்தினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படும் மக்களை மட்டுமல்லாமல் அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆயுதப்படையினரையும் கூடப்பாதித்தது. கொல்லப்பட்ட படையினரின் குடும்பங்களுக்கு அவர்கள் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்படாதது முதல் படையினருக்குக் கூட அவர்கள் தமது உயிரைக் கொடுத்து நடத்தும் யுத்தம் எந்தளவுக்கு வெற்றிகரமாக நடத்தப்படுகிறது என்பது கூடக் கூறப்படாமல் இருந்தது.

சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வருவதற்காக மக்கள் முன்வைத்த பல்வேறு கவர்ச்சித் திட்டங்களில் ஒன்று கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திர உரிமையும் வெளிப்படைத் தன்மையும் பற்றியதாகும். ஆனால், பின்னர் யுத்தம் பற்றியோ அதன் விபரங்கள் பற்றியோ எல்லாத் தகவல்களையும் பாராளுமன்றத்தில் கூடத் தெரிவிக்க முடியாது என்று கூறுமளவிற்கு அதன் வெளிப்படைத் தன்மை வாக்குறுதி தூக்கி வீசப்பட்டது. 17 வருட ஐ.தே.க. அரசாங்க காலத்தில் நடந்த அத்துமீறல்களை அணுஅணுவாக மக்களுக்குத் தொடர்பூடகங்கள் குறிப்பாகப் பத்திரிகைகள் அறிவித்து வந்ததன் விளைவாகவே ஐ.தே.க. அரசாங்கத்தினை

யுத்தம், யுத்த அழிவுகள் போன்ற விபரங்கள் தொடர்பான உண்மைத் தகவல்கள் எவையும் மக்களுக்குச் சொல்லாமல் இருப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்தத் தணிக்கைமுறை யுத்தத்தினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படும் மக்களை மட்டுமல்லாமல் அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆயுதப்படையினரையும் கூடப்பாதித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்த்தி, சந்திரிகா அம்மையார் அரசாங்கம் ஆட்சிக்கு வரவழிவகுத்தது. இந்த வளர்ச்சிக் கட்டம் பின்னர் மகிந்தா தலைமையிலான ஆட்சியில் இன்னும் உச்சம் பெற்றது. 26 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டு இன்னும் பலர் தாய்நாட்டில் வாழமுடியாது உயிரைத் தக்கவைக்க வெளி நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். இன்னும் பலர் ஊடகத்தொழிலே வேண்டாமெனக் கூறி ஒதுங்கிவிட்டனர். அரச சிவில் நிருவாகக் கட்டமைப்பில் இராணுவத் தரப்பாலின் செல்வாக்கு அதிகரித்து விட்டது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அரசாங்க உயரதிகாரிகளாக முன்னாள் இராணுவத் தளபதிகள் நியமிக்கப் படும் நடைமுறை அரசாங்க முறைமையாக வளர்ச்சியடைகிறது. ஆளுநர், மாவட்டச் செயலாளர் மற்றும் மாகாண ஆளுநர் போன்ற பதவிகளுக்கு ஓய்வுபெற்ற இராணுவத் தளபதிகளைக் கொண்டே நிரப்பும் புதிய நடைமுறை எழுச்சி பெற்றுள்ளது.

மேலும், அவசரகாலச் சட்டத்தை நீக்கும் பிரேரணை மீது பாராளுமன்றத்தில் சனாதிபதி மகிந்த ராஜபக்ச உரையாற்றும் போது கூறிய கருத்தொன்று இங்குக் கவனிக்கத்தக்கது. அதாவது 2005ஆம் ஆண்டுக்குப் பின்னரான தமது தலைமையிலான ஆட்சியில் பத்திரிகைத் தணிக்கை செய்யப்படவில்லை என்றும் எழுத்துச்சுதந்திரம் யுத்த உச்சக் கட்டத்திலும் பேணப்பட்டது என்றும் கூறி இருக்கிறார். ஆனால், இவர் காலத்திலேயே அதிக மான ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள், நாட்டைவிட்டு ஓடியிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அரசாங்க உயரதிகாரிகளாக முன்னாள் இராணுவத் தளபதிகள் நியமிக்கப்படும் நடைமுறை அரசாங்க முறைமையாக வளர்ச்சியடைகிறது. ஆளுநர், மாவட்டச் செயலாளர் மற்றும் மாகாண ஆளுநர் போன்ற பதவிகளுக்கு ஓய்வுபெற்ற இராணுவத் தளபதிகளைக் கொண்டே நிரப்பும் புதிய நடைமுறை எழுச்சி பெற்றுள்ளது.

சனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நிருவாகமும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவும் ஊடகச் சுதந்திரத்தைப் படுமோசமாகப் பாதித்த இந்தச் செயற்பாடுகளுக்கு அவர்கள் எந்தளவு பொறுப்பாக இருந்தார்கள் என்பது பற்றி அவர்களுக்குள்ளேயே சர்ச்சைகள் எழுந்தன. இவை வெளியிலும் தெரிய வந்தன. நாட்டில் ஏற்பட்ட விநோதமான மாற்றங்களால் சனாதிபதியும் தளபதியும் ஊடகச் சுதந்திரத்தின் முக்கியத்துவம் ஊடகவியலாளர்களின் நலன்கள் பற்றியெல்லாம் அளவுகடந்த அக்கறையைக் காண்பித்தனர். அவை தேர்தல்கால கொண்டாட் டங்களில் பின்பற்றப்படும் ஏமாற்று வேலைகளாக இருந்து விட்டன.

பின்னர் ஜெனரல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார். இந்த நிகழ்வுக்குப் பின்னால் உள்ள அரசியல் நலன்கள் தொடர்பான விரிவான செய்திகள் விமரிசனங்கள் முழுமையாக வெளிப்படாத வகையில் செய்தித்தணிக்கை தன்னியல்பாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனைக் கண்காணிக்கும் பொறிமுறையாக அரசாங்க நிருவாகம் மாற்றப்பட்டிருப்பதையும் மறப்பதற்கில்லை.

'ஊடகச் சுதந்திரம்', 'தகவலுக்கான உரிமை' போன்ற அம்சங்கள் இலங்கையின் அரசியல் மரபில் இழையோட முடியாதவையாக மாற்றப்பட்டுள்ளன. ஆரோக்கியமான சனநாயக நடைமுறை களைப் பின்பற்றும் "ஆட்சிமுறை'' இலங்கையில் இன்னும் நிலைபெறவில்லை. இன்று சனநாயக நடைமுறையில் அல்லது நாட்டின் ஆட்சி முறையில் மக்கள் பங்குகொள்ளக்கூடிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வழிமுறையாக 'தகவல் அறியும் முறை' காணப்படுகிறது. உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் இந்தத் தகவல் அறியும் சட்டம் பாராளுமன்றத்தில் சட்டமாக இயற்றப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, அயர்லாந்து, அவுஸ்திரேலியா, நேபாளம், பங்களாதேஷ் உட்பட 70 நாடுகளில் இச்சட்டம் அமுலில் உள்ளது.

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 14ஆவது சரத்தின் கீழ் பிரஜை ஒருவருக்குக் கருத்து மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளடங்கிய கருத்துச் சுதந்திரம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தபோதும் இலங்கைப் பிரஜை ஒருவருக்குத் தகவல்களை அறியும் சுதந்திரம் இருப்பதாகவும் உள்ளதை அரசியலமைப்புச் சட்டமூலமோ பாராளுமன்றத்தின் எந்தவொரு சட்டமோ தெளிவாக இதுவரை குறிப்பிடப்படவில்லை.

அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் சிந்திக்கும் மற்றும் கருத்து வெளியிடும் உரிமை அடிப்படை உரிமையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனால் தகவல் அறியும் உரிமை மறைமுக மாக வழங்கப்பட்டுள்ளதாக இலங்கையில் உயர்நீதிமன்றம் பலமுறை குறிப்பிட்டுள்ளது. இருப்பினும் அதற்கான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு இதுவரை உண்மையான அக்கறை எதுவும் காட்டப்படவில்லை. இலங்கையில் தகவல் அறியும் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுமா? 1994ஆம் ஆண்டு முதல் அரசியல் கட்சிகள் ஊடக அமைப்புகள் இதற்காகக் குரல் கொடுத்து வருகின்றன. ஆனால், இந்த உரிமை இதுவரை மக்களுக்குக் கிடைக்கவில்லை.

ஆனால், அயல் நாடான இந்தியாவில் மத்திய அரசாங்கமும் அதேபோன்று மாநில அரசாங்கங்களும் தகவல் அறியும் சட்டத்தை முழுமையாக அமுல்நடத்தி வருகின்றன. இந்த நடைமுறையால் அந்நாட்டில் நல்லாட்சிக்கான சிறப்புகளை மக்கள் உணரவும் ஓரளவு அவற்றை அனுபவிக்கவும் முடிகிறது. இதற்குப் பல்வேறு உதாரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும். ஆனால், இலங்கையில் ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் இச்சட்டத்தை அமுல்படுத்துவதிலும் புதிய ஊடகப் பண்பாட்டை, சனநாயக நடைமுறைகளை ஏற்படுத்துவதிலும் பெரும் அக்கறை செலுத்துவதாக இல்லை. தொடர்ந்து சிங்களப் பேரினவாத அரசியலை உறுதிப்படுத்தவும் தமது எதிர்கால நன்மைக்காகவும் சனநாயக விரோதப் போக்குகளைக் கடைப்பிடிக்கவும் உறுதி பூண்டுள்ளார்கள். இதனால் சிறுபான்மை இனங்களை நசுக்கவும் ஒடுக்கவும் மற்றும் சிங்களத் தொழிலாள விவசாயிகளின் நியாயமான போராட்டங்கள் வெளியில் தெரியவிடாமல் தடுக்கவும் 'தகவல் அறியும் சட்டம்' போன்றவற்றை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை.

தற்போது "போருக்குப் பிந்திய" என்னும் சொல்லாடலை அரசாங்கம் தாராளமாகப் பயன்படுத்தி வருகிறது. ஆனால், ஊடகங்கள் சுதந்திரமாக இயங்குவதையோ தகவல் அறியும் உரிமை பாதுகாப்பதற்கான சட்டத்தை அமுல் படுத்துவதிலோ பெரும் அக்கறை செலுத்துவதாக இல்லை. ஊடகங்கள் மீது வன்முறைகள் தொடர்கின்றன. அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் சிந்திக்கும் மற்றும் கருத்து வெளியிடும் உரிமை அடிப்படை உரிமையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனால் தகவல் அறியும் உரிமை மறைமுக மாக வழங்கப்பட்டுள்ளதாக இலங்கையில் உயர்நீதிமன்றம் பலமுறை குறிப்பிட்டுள்ளது. இருப்பினும் அதற்கான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு இதுவரை உண்மையான அக்கறை எதுவும் காட்டப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களைக் குறிவைக்கும் புதிய இராணுவ நடவடிக்கை

■ நிராஜ் டேவிட்

'ஒப்பரேஸன் ட்ரஸ்ட்ஷ்?

*(ஆரம்பத்தில் சோவியத் ஒன்றியத்தின் உளவு அமைப்பு OGPU என்ற பெயரில்தான் செயற்பட்டுவந்தது. பின்நாட்களில்தான் கே.ஜீ.பி. என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது. ஆனாலும் பின்னாட்களில் பிரபல்யமான கே.ஜீ.பி. என்ற பெயரையே பரிட்சயம் காரணமாக இந்தக் கட்டுரையில் பாவிக்கின்றேன்.)*

ரஷ்யப் புரட்சி முடிவடைந்து நான்கு ஆண்டுகளின் பின்னர் ரஷ்யாவில் மன்னராட்சியை உருவாக்கும் நோக்கோடு ஒரு புரட்சிகர அமைப்பு உருவானது. அதன் பெயர் Monarchist Union of Central Russia (MUCR). 1921ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த இயக்கம், ரஷ்யாவில் எப்படியும் மீண்டும் மன்னராட்சியை உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு போராடி வந்தது. சோவியத் ஒன்றியம் முழுவதிலும் அப்போதைய போல்ஸ்விக் ஆட்சிக்கு எதிராகப் போராடி வந்த பல்வேறு இயக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு மிகவும் மும்முரமான போராட்டத்தை மேற்கொண்டுவந்தது இந்த MUCR அமைப்பு.

இந்த நேரத்தில்தான் கே.ஜீ.பி. ஒரு இரகசிய ஒப்பரேஸ்னை மேற்கொண்டது. மிகவும் கவனமாகத் திட்டமிட்டு, நிதானமாக, மிகவும் இரகசியமாகக் காய்களை நகர்த்தியது. கே.ஜீ.பி. இனது நோக்கமும், திட்டமும் வெறும் MUCR இயக்கத்தை முடக்குவது மாத்திரமல்ல. அதனையும் தாண்டி நீண்ட, விரிந்த திட்டத்தைத் தீட்டியது.

சோவியத் ஒன்றியத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருந்த அனைத்து இயக்கங்களையும் கூண்டோடு அழித்துவிடத் திட்டம் தீட்டியது. அது மாத்திரமல்ல. சோவியத்தில் இருந்து வெளியேறி மேற்குலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து அங்கிருந்தபடி போராடி வரும் அமைப்புகளுக்கும் சேர்த்து கே.ஜீ.பி. வலை விரித்தது. நுணுக்கமானதும், மிகவும் கஷ்டமானதுமான ஒரு உளவுச் சதி. ஆனாலும் அதனை வெற்றிகரமாக மேற்கொண்டு பிரபல்யமான ஒரு உலகச் சாதனை கே.ஜீ.பி. படைத்தது. இந்த இரகசிய உளவு நடவடிக்கைக்கு கே.ஜீ.பி. சூட்டிய பெயர் Operation Trust.

இக்கட்டுரையாசிரியர் மூத்த ஊடகவியலாளர் அரசியல் ஆய்வாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் அந்தப் புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்தவர்களைச் சுதந்திரமாகச் செயற்படவிட்டார்கள். அழைத்துப் பேசினார்கள். பகிரங்கமாக ஆர்ப்பாட்டம் செய்ய, கூட்டம் கூட, கருத்துக் கூறவெல்லாம் அனுமதித்தார்கள். திடீரென்று ஒருநாள் ஒட்டுமொத்தமாக அனைத்துச் செயற்பாட்டாளர்களையும் தலைமையையும் கைதுசெய்தார்கள். ஆனால், இந்தக் கைது விவகாரம் வெளியே யாருக்குமே தெரியாது. காதும் காதும் வைத்தாற்போன்று அனைவரையும் பிடித்து உள்ளேபோட்டு விட்டு, கே.ஜீ.பி. ஏஜன்டுகள் MUCR இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் போன்று செயற்பட ஆரம்பித்தார்கள். கைதுசெய்யப்பட்ட MUCR இயக்கத் தலைமைகளையும் மிரட்டி, சித்திரவதை செய்து பணிய வைத்துத் தங்களது கைப்பாவைகளாகச் செயற்பட வைத்தார்கள். (மனைவி, பிள்ளைகளை இரகசியச் சிறைகளில் பணயம் வைத்துக்கொண்டு, தாம் சொல்கின்றபடி நடந்தாகவேண்டும் என்று மிரட்டினால் பாவம் அந்த இயக்க உறுப்பினர்களால் வேறு என்னதான் செய்யமுடியும்?)

MUCR இயக்கத்தினரைப் போன்று வேடமணிந்து செயற்பட ஆரம்பித்த கே.ஜீ.பி. உறுப்பினர்கள், முன்னர் இருந்த MUCR இயக்கத்தைவிட இன்னும் வேகமாகப் புரட்சி பேசினார்கள். செயற்பட்டார்கள். வெற்றிகரமாகச் சில தாக்குதல்களைக்கூட மேற்கொண்டார்கள். அத்தோடு, சோவியத்தின் போல்ஷ்விக் ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியபடி ரஷ்யாவிலும் வேறு பல நாடுகளிலும் செயற்பட்டு வந்த மற்றைய அமைப்புகளுக்கு நிதி உதவிகளும் வேறு பல உதவிகளும் செய்யத் தலைப்பட்டார்கள்.

இது, MUCR இயக்கம் என்ற பெயரில் செயற்பட்ட கே.ஜீ.பி. உளவு அமைப்பிற்குச் சோவியத் ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்ட அனைத்துத் தரப்பினர் பற்றிய முழு விபரங்களையும் திரட்டுவதற்குப் பெரிதும் உதவியாக இருந்தது. விபரங்களைத் திரட்டினார்கள். முக்கியமானவர்களைக் கைதுசெய்தார்கள். கைதுசெய்ய முடியாதவர்களைப் படுகொலை செய்தார்கள். பல்வேறு இயக்கங்கள் மத்தியிலும் இயக்கங்களுக்கு உள்ளேயும் கூடப் பிளவுகளை ஏற்படுத்தினார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் சோவியத் ஒன்றியத்தின் போல்ஷ்விக் ஆட்சிக்கு எதிராகப் போராடி வந்த அனைத்து இயக்கங்களையும் முடக்கிவிடுவதில் கே.ஜீ.பி. உளவு அமைப்பு வெற்றி பெற்றிருந்தது.

ஆனால், இந்த ஒப்பரேஷனைப் பொறுத்தவரையில் கே.ஜீ.பி. உளவு அமைப்பிற்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்பது, அவர்கள் சோவியத்தில் மாத்திரமல்லாமல் மேற்குலக நாடுகளில் செயற்பட்டு வந்த பல்வேறு இயக்கங்களையும், செயற்பாட்டாளர் களையும் ஒடுக்குவதின் ஊடாகத்தான் கிடைத்தது. ஆம், சோவியத் ஒன்றியத்தில் மாத்திரமல்ல ரஷ்யர்கள் புலம்பெயர்ந்து செயற்பட்ட மேற்குல நாடுகளிலும் கூட, கே.ஜீ.பியின் இந்த Operation Trust என்ற இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது.

ரஷ்யாவில் இருந்து பிரித்தானியாவிற்கு வந்து தஞ்சம் அடைந்த சில கே.ஜீ.பி. ஏஜன்டுகள், தம்மை MUCR இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று வெளிக்காண்பித்து நடித்துக்கொண்டு

சோவியத் ஒன்றியத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருந்த அனைத்து இயக்கங்களையும் கூண்டோடு அழித்துவிடத் திட்டம் தீட்டியது. அது மாத்திரமல்ல. சோவியத்தில் இருந்து வெளியேறி மேற்குலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து அங்கிருந்தபடி போராடி வரும் அமைப்புகளுக்கும் சேர்த்து கே.ஜீ.பி. வலை விரித்தது. நுணுக்கமானதும், மிகவும் கஷ்டமானதுமான ஒரு உளவுச் சதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் அரசிற்கு எதிராகப் புரட்சி பேசினார்கள். தம்மைத் தீவிரவாதிகளாக வெளிக்காண்பித்துக் கொண்டு சோவியத் ஆட்சிக்கு எதிராகச் சதி செய்வதாகப் 'பவ்லா' காண்பித்தார்கள். புலம்பெயர் நாடுகளில் சோவியத் ஒன்றியத்தின் போல்ஷ்விக் ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்டுக்கொண்டிருந்த பல்வேறு சக்திகளையும் ஒன்றுதிரட்டிச் சோவியத் ஒன்றியத்தின் ஆட்சியைத் தாம் வீழ்த்தப்போவதாக அறைகூவல் விடுத்தார்கள்.

சோவியத்தில் இருந்து புலம்பெயர்ந்து பலநாடுகளிலும் சோவியத் ஆட்சிக்கு எதிராகக் கொதித்துக்கொண்டிருந்த பல இளைஞர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், பெரும் பணக்காரர்கள், ஊடகவியலாளர்கள் இந்த MUCR இயக்கத்தின் வெளிநாட்டுப் பிரிவுடன் சேர்ந்து செயற்பட முன்வந்தார்கள். பலவிதமான உதவிகள் ஒத்தாசைகளை வழங்கினார்கள். பணத்தை அள்ளி இறைத்தார்கள். MUCR என்ற அந்தப் புரட்சிகர அமைப்பைப் பயன்படுத்தி எப்படிச் சோவியத் ஆட்சியைக் கலைக்கலாம் என்று திட்டம் தீட்டினார்கள். ஆனால் MUCR இயக்கம் என்ற பெயரில் செயற்பட்ட சோவியத்தின் உளவுப் பிரிவினரோ மிகவும் கவனமாகச் செயற்பட்டு ஒரு பெரிய உளவுச் சதியை அரங்கேற்ற ஆரம்பித்தார்கள். அந்த உளவுச் சதி, உலகின் போரியல் வரலாற்றில் மிகவும் உறுதியாகப் பதியப்படும் அளவிற்கு ஒரு மிகப் பெரிய வெற்றியைச் சோவியத்தின் உளவுப் பிரிவான கே.ஜீ.பிக்குப் பெற்றுக்கொடுத்தது.

இப்பொழுது ஒரு வரலாற்றுச் சம்பவத்தைப் பார்ப்போம்.

எங்கள் அனைவருக்கும் ஜேம்ஸ் பொண்ட் 007 என்ற சினிமா கதாபாத்திரத்தை நன்றாகத் தெரியும். இந்த ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரம் ஒரு பிரித்தானிய இரகசிய உளவாளி. மிகப் பெரிய வீர சாகசங்களைத் தனி ஒருவனாகச் செய்வதில் வல்லவனாக இந்தக் கதாபாத்திரம் அமைக்கப்பட்டிருந்தது. ஜேம்ஸ் பொண்ட் 007 என்ற வீர கதாபாத்திரத்தை உருவாக்கிய எழுத்தாளரின் பெயர் இயான் பிளேமிங் (Ian Fleming). தனது இந்த ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரம் பற்றி இவர் பின்நாட்களில் கருத்துத் தெரிவிக்கும் பொழுது, "சிட்னி ரெய்லி (Sidney Reily) என்ற ஒரு பிரித்தானிய உளவாளியின் உண்மையான வீர சாகசம்தான் என்னை ஜேம்ஸ் பொண்ட் 007 கதாபாத்திரத்தை உருவாக்க வைத்தது. இந்தப் பிரித்தானிய உளவாளியையும் அவனது சாகசங்களையும் அடிப்படையாக வைத்துத்தான் நான் ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரத்தை உருவாக்கினேன்'' என்று தெரிவித்திருந்தார்.

அந்த அளவிற்குப் பிரபல்யமான இந்த சிட்னி ரெய்லி என்ற பிரித்தானிய உளவாளி உண்மையிலேயே ஒரு ரஷ்யர். ரஷ்யாவில் பிறந்த இவர் ஏதோ காரணத்திற்காக ரஷ்ய ஆட்சியை வெறுக்கத் தொடங்கினார். சிறு வயதிலேயே தனது குடும்பத்தினருடன் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் தஞ்சம் அடைந்திருந்தார். பிரித்தானியாவின் இரகசியப் பொலிஸ் பிரிவில் இணைந்து இவர் செய்த சாகசங்கள் கொஞ்சநஞ்சமல்ல. உளவாளியாக ரஷ்யாவிற்குச் சென்று அங்கிருந்து பலவிதமாக இரகசியங்களைத் திருடிப் பிரித்தானியாவிற்குக் கொண்டு வந்து பல சாதனைகளைப் புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலகட்டத்தில் ரஷ்யா என்பது உலகைப் பொறுத்த வரையில் ஒரு இரும்புத் திரையின் பின்னால் இருந்த ஒரு தேசம். அங்கு என்ன நடக்கின்றது என்று உலகில் யாருக்குமே தெரியாது. அப்படிப்பட்ட ரஷ்யாவிற்குள் பல்வேறு வேஷங்களில் நுழைந்து, அங்கிருந்து இரகசியங்களைத் திருடுவதும், அந்த இரகசியங்களைப் பிரித்தானியாவுக்குக் கடத்தி வருவதும் இலகுவான ஒரு காரியமல்ல. ஆனால், அதனைச் சாதித்துக் காட்டினார் சிட்னி ரெய்லி. அது மாத்திரமல்ல, அப்பொழுது இருந்த லெனினின் ஆட்சியைக் கலைத்துவிட்டுச் சிட்னி ரெய்லியை அதிபராக்கும் இரகசியச் சதித்திட்டமும் பிரித்தானியாவிடம் இருந்தது. அந்த நோக்கத்திலும் பல காய்கள் ரஷ்யாவில் நகர்த்தப்பட்டுக்கொண்டிருந்தன.

சோவியத்தின் இராணுவத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தில் சிட்னி ரெய்லி என்ற இந்த மோசமான உளவாளி பற்றித் தெரியவந்த பொழுது, ரஷ்யாவில் தங்கியிருந்த அவர் மிகவும் சாதூர்யமாகத் தப்பிப் பிரித்தானியா வந்து சேர்ந்தார். மிகவும் பாதுகாப்பாக அங்கு அமர்ந்தும் கொண்டார். அதன் பின்னர் பிரித்தானியாவில் இருந்தபடியே ரஷ்யாவின் ஆட்சியைக் கவிழ்க்கும் சதிவேலைகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தார். இந்தச் சிட்னி ரெய்லியைக் கைதுசெய்ததுதான் Operation Trust என்ற இராணுவ நடவடிக்கையின் மிகப் பெரிய வெற்றி என்று வரலாற்றில் பதிவாகி இருக்கின்றது.

எப்படிக் கைதுசெய்தார்கள்?

கைது செய்யவில்லை, ஒரு வகையில் சதி செய்து கடத்திச் சென்றார்கள் என்று கூறலாம். லெனினின் ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்று சதா சிந்தித்துக்கொண்டிருந்த சிட்னி ரெய்லிக்கு, MUCR என்ற புரட்சிகர அமைப்பின் ஐரோப்பிய வருகை பற்றிய செய்தி இனிப்பாகக் கிடைத்தது. அந்த அமைப்பைத் தொடர்பு கொண்டு தனது ஆதரவைத் தெரிவித்தார். மிகவும் சந்தோசம் என்று அவரைக் கைகுலுக்கி வரவேற்றது MUCRஇனது ஐரோப்பியப் பிரிவு. MUCR என்ற பெயரில் ரஷ்யாவின் கே.ஜீ.பி. உறுப்பினர்கள்தான் அங்கு வந்திருக்கின்றார்கள் என்று சிட்னி ரெய்லிக்குத் தெரியாது. தானாகவே சென்று வலையில் வீழ்ந்தார். லெனினின் ஆட்சியை எப்படி வீழ்த்தலாம் என்று அவர்களுடன் சேர்ந்து நுணுக்கமாகத் திட்டம் தீட்டினார்.

ஆனால், இங்கே லண்டனில் அமர்ந்துகொண்டு லெனினை வீழ்த்துவது எப்படி? ரஷ்யாவில் ஆட்சிதான் அமைப்பது எப்படி? அதற்கு ரஷ்யாவிற்கு நேரில் போகவேண்டும் அல்லவா? 'ரஷ்யாவில் மிகவும் பலமாகச் செயற்படும் எங்களது உறுப்பினர்களூடாக உங்கள் இரகசியப் பயணத்திற்கு நாங்கள் ஏற்பாடு செய்து தருகின்றோம்'' என்றது MUCRஇனது ஐரோப்பியப் பிரிவு. 'நீங்களே நேரடியாகச் சென்று ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டம் பற்றி விளக்கிச்சொன்னால் அங்குள்ள எங்கள் உறுப்பினர்களுக்குத் தெம்பாக இருக்கும்.. மேலும் உற்சாகமாகச் செயற்படுவார்கள்.'' சிட்னி ரெய்லிக்கு ஐடியா கொடுத்தார்கள் MUCRஇனது ஐரோப்பியப் பிரிவு.

ரஷ்யாவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு என்று மிகவும் இரகசிய

அந்தக் காலகட்டத்தில் ரஷ்யா என்பது உலகைப் பொறுத்த வரையில் ஒரு இரும்புத் திரையின் பின்னால் இருந்த ஒரு தேசம். அங்கு என்ன நடக்கின்றது என்று உலகில் யாருக்குமே தெரியாது. அப்படிப்பட்ட ரஷ்யாவிற்குள் பல்வேறு வேஷங்களில் நுழைந்து, அங்கிருந்து இரகசியங்களைத் திருடுவதும், அந்த இரகசியங்களைப் பிரித்தானியாவுக்குக் கடத்தி வருவதும் இலகுவான ஒரு காரியமல்ல. ஆனால், அதனைச் சாதித்துக் காட்டினார் சிட்னி ரெய்லி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகப் புறப்பட்ட சிட்னி ரெய்லி, ரஷ்யாவில் பகிரங்கமாகக் கைது செய்யப்பட்டார். அவரை ரஷ்யாவிற்கு இரகசியமாக அழைத்துச் சென்ற கே.ஜீ.பி. உறுப்பினர்களே, ரஷ்ய எல்லையை அடைந்ததும் அவரைக் கைதுசெய்தார்கள். சித்திரவதைகள், விசாரணை, துப்பாக்கிச் சூடு என்று மிகவும் சோகமாக முடிவடைந்தது பிரபல்யமான, திறமையான ஒரு வீரனின் வாழ்க்கை.

அது மாத்திரமல்ல, இவர் போன்று புலம்பெயர்ந்த நாடுகளில் ரஷ்ய ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த பல புரட்சியாளர்கள், தேசப்பற்றாளர்கள், தேசியவாதிகள் ஏமாற்றப் பட்டார்கள். படுகொலை செய்யப்பட்டார்கள். காணாமல் போனார்கள், கடத்தப்பட்டார்கள். செயலிழக்க வைக்கப் பட்டார்கள். இதுதான் Operation Trust என்ற இராணுவ நடவடிக்கை. உலக அளவில் மிகவும் வெற்றிகரமான ஒரு உளவு நடவடிக்கை.

உலக நாடுகளின் புலனாய்வுப் பிரிவினருக்கான ஒரு முக்கிய பாலர் பாடம்தான் Operation Trust என்ற இந்த இராணுவ நடவடிக்கை. இப்பொழுது உள்ள மிகப் பெரிய கேள்வி இதுதான். Operation Trust போன்ற ஒரு உளவு நடவடிக்கையைப் புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்துச் சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளு கின்றதா?

கொஞ்சம் சிக்கலான கேள்விதான். ஆனாலும் புலம்பெயர் தமிழர்கள் பெரிதாக யோசித்தேயாக வேண்டிய கேள்வி. ஆம் மேற்கொள்ளப்படுகின்றது என்று உறுதியாகக் கூறுவதற்கு என்னிடம் போதியளவு ஆதாரம் கிடையாது. ஆனால், அப்படியான ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான சந்தர்ப்பங்களும், சாத்தியங்களும் நிறையவே இருக்கின்றன என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

அந்தச் சாத்தியங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முள்ளிவாய்க்காலில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள், தளபதிகள், போராளிகள் என்று ஏராளமானவர்கள் கொத்தாகச் சிறிலங்கா இராணுவத்தின் கரங்களில் கிடைத்தார்கள். அவர்களை முழுக்க முழுக்கச் சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர்தான் கையாண்டு வருகின்றார்கள். அப்படித் தமது கரங்களில் கிடைத்தவர்களை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பயன்படுத்தி வருகின்ற சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு, அவர்களை நிச்சயம் தமது புலனாய்வுத் தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் வைத்திருக்கமாட்டார்கள்.

இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்துச் செயற்பாடுகளும்; இலங்கையில் ஓரளவு முழுமையாகவே அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், விடுதலைப் புலிகள்வசம் இருந்த ஆயுதங்கள், அவற்றை இயக்கக் கூடியவர்கள் என்று அனைத்துமே சிறிலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில், புலம்பெயர் சமூகத்தின் செயற்பாடுகள்தாம் சிறிலங்கா தேசத்தைக் கொஞ்சம் சங்கடத்தில் ஆழ்த்தும்படியாக இருந்து வருகின்றன. எனவே, சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு தனது அத்தனை பலத்தையும் நிச்சயமாகப் புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்துத்தான் திருப்பி

> உலக நாடுகளின் புலனாய்வுப் பிரிவினருக்கான ஒரு முக்கிய பாலர் பாடம்தான் என்ற இந்த இராணுவ நடவடிக்கை. இப்பொழுது உள்ள மிகப் பெரிய கேள்வி இதுதான். இதுபோன்ற ஒரு உளவு நடவடிக்கையைப் புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்துச் சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளு கின்றதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சரி, புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்துச் சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவு என்ன செய்யலாம்?

செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்கள், சமூகத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போன்றவர்களை விலைபேசலாம். மிரட்டலாம். ஆனால், விலைபோகக்கூடியவர்கள் அனைவரும் ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்னரே விலைபோய்விட்டார்கள். சிங்களத்தின் மிரட்டல்களுக்குக் கலங்கக்கூடிவர்கள் மீதும் சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவும் அதன் கூலிகளும் கைவைத்து நீண்டநாட்களாகிவிட்டன. இவை எதற்கும் அகப்படாமல் எஞ்சியிருப்பவர்கள்தான் சிங்களத்திற்குத் தற்பொழுது பிரச்சினை. எதற்கும் அஞ்சாமல், எதற்கும் விலைபோகாமல் புலம்பெயர் தேசங்களில் ஓர்மமாக நின்றுகொண்டிருப்பவர்கள் பற்றித்தான் சிறிலங்கா கொஞ்சம் சிந்திக்கின்றது. கவனமெடுக்கின்றது.

எதற்கும் அடிப்பணியாமல் வீரமாகப் புலம்பெயர் தேசங்களில் நின்று போராடும் அப்படிப்பட்ட மறத் தமிழர்களை என்ன செய்யலாம்?

இது பற்றிப் பார்ப்பதானால், சுமார் ஒன்றரை வருடங்கள் நாம் பின்நோக்கிச் செல்லவேண்டும். முள்ளிவாய்க்கால் முடிவினைத் தொடர்ந்து அப்பொழுது ஒரு பெரிய வெற்றிடம் காணப்பட்டது. புலிகளைத் தாம் முற்றாகவே அழித்துவிட்டதாகச் சிறிலங்கா அரசாங்கம் அறிவித்தது. தளபதிகள், போராளிகள், ஆதரவாளர்கள், மக்கள் என்று அனைவரையுமே சிறைக்குள் தள்ளிவிட்டு, தனது வெற்றியைப் பல நாட்கள் கொண்டாடியது சிங்களத் தலைமை.

ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில் தமது வெற்றிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய சில ஆபத்துகள் இலங்கையில் பரவலாக மறைந்து இருந்ததைச் சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு உணர்ந்தது. அதாவது, வடக்கு கிழக்கு மற்றும் தென் இலங்கைக் காடுகளில் ஆயுதங்களுடன் புலிகளின் சிறிய சிறிய அணிகள் நிலைகொண்டிருந்தன. அதேபோன்று கொழும்பிலும், தென் இலங்கையிலும், புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் மக்களோடு மக்களாகக் கலந்து வாழ்ந்துகொண்டிருந்தார்கள். உத்தரவு கிடைத்ததும் செயற்படுவதற்கென்று ஏராளமான தற்கொலைப் போராளிகளும் பல இடங்களிலும் மறைந்திருந்தார்கள். புலிகள் மீதான வெற்றி என்று கொண்டாடிக்கொண்டிருந்த சிங்களத்திற்கு, இந்த விடயம் ஒரு பெரிய அச்சுறுத்தலாகவே இருந்தது.

வடக்கு கிழக்கில் உள்ள காடுகளிலும், தென் இலங்கை மற்றும் தலைநகர் கொழும்பிலும் பயங்கர ஆயுதங்களுடன் மறைந்திருக்கும் நூற்றிற்கும் அதிகமான விடுதலைப் புலி உறுப்பினர்களைக் கண்டுபிடிக்கவேண்டும். அழிக்கவேண்டும். இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு, ஒரு இரகசிய நடவடிக்கையை மேற்கொண்டது. அந்த நடவடிக்கை கிட்டத்தட்ட Operation Trust உளவு நடவடிக்கையை ஒத்ததாகவே இருந்தது.

தம்மிடம் சரணடைந்த அல்லது தம்மால் கைதுசெய்யப்பட்ட சில விடுதலைப் புலி முக்கியஸ்தர்களைச் சித்திரவதை செய்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது மனைவி குழந்தைகளைப் பணயம் வைத்து, மிகவும் கவனமாக ஒரு இரகசிய நடவடிக்கையை மேற்கொண்டது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு. அதாவது, முள்ளி வாய்க்கால் நடவடிக்கையின் பொழுது சிறிலங்கா இராணு வத்தால் கைப்பற்றப்படாமல் சில தளபதிகள், ஒரு தொகுதி விடுதலைப் புலி உறுப்பினர்கள் தப்பித்து வன்னிக் காடுகளில் உள்ள நிலக்கீழ் சுரங்கங்களில் மறைந்திருந்து செயற்படுவது போன்ற ஒரு தோற்றப்பாடு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.

சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்பாடு செய்த குழு, பல்வேறு இடங்களில் மறைந்திருந்த போராளிகளுடன் தொடர்பு களை ஏற்படுத்தித் தாம் மீள ஒருங்கிணைந்து போராடவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்கள். தம்மை அழித்த சிறிலங்காப் படையினரைப் பழிவாங்கவேண்டும் என்று சபதம் எடுத்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் புலம்பெயர் நாடுகளில் தேசியம் பேசிக்கொண்டிருந்த ஒரு தரப்பினரால் அவிழ்த்துவிடப்பட்ட கதைகளும், மாயைகளும் கூட, சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவின ரின் இந்த இரகசிய நடவடிக்கைக்குப் பெரிதும் உதவவே செய்தன. "அதோ அவர் அங்கே இருக்கின்றார்". "இதோ ஐயாயிரம் பேருடன் அந்தத் தளபதி வன்னியில் மறைந்திருக்கிறார்''. ''புலிகள் வன்னியில் இன்று தாக்குதல்'' "பல இராணுவத்தினர் காயம் ஆனால் செய்தியைச் சிறிலங்கா அரசாங்கம் மறைத்துவிட்டது''. "வன்னியில் பல சிறிலங்கா படையினரைக் காணவில்லை.''- இதுபோன்று புலம்பெயர் தமிழர்களில் ஒரு பிரிவினர் ஆர்வக்கோளாறினால் மேற்கொண்ட பிரச்சாரங்கள், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட அந்த இரகசிய நடவடிக்கைக்குப் பெரிய அளவில் கைகொடுத்தது.

மீள ஒருங்கிணைய முயன்றவர்கள் சிறிலங்காப் படையினரிடம் வசமாகவே மாட்டிக்கொண்டார்கள். பல கரும்புலிகள்கூட இந்த இரகசியச் சதி நடவடிக்கையின் பொழுது அகப்பட்டுக்கொண் டார்கள். பல ஆண்டுகள் கொழும்பிலும் அதன் சுற்றுவட்டத்தி லும் இரகசியமாகச் செயற்பட்டு வந்த புலிகளின் பல உளவாளிகள் சிறிலங்காப் படையினரிடம் மிக இலகுவாகவே அகப்பட்டுக் கொண்டார்கள்.

மீள ஒருங்கிணைய முயன்றவர்கள் சிறிலங்காப் படையினரிடம் வசமாகவே மாட்டிக்கொண்டார்கள். பல கரும்புலிகள்கூட இந்த இரகசியச் சதி நடவடிக்கையின் பொழுது அகப்பட்டுக்கொண் டார்கள். பல ஆண்டுகள் கொழும்பிலும் அதன் சுற்றுவட்டத்தி லும் இரகசியமாகச் செயற்பட்டு வந்த புலிகளின் பல உளவாளிகள் சிறிலங்காப் படையினரிடம் மிக இலகுவாகவே அகப்பட்டுக் கொண்டார்கள்.

சிறிலங்காப் புலனாய்வாளர்களால் இயக்கப்பட்ட இந்த அணி யினர் புலம்பெயர் தேசங்களில் செயற்பட்ட முக்கியச் செயற்பாட் டாளர்களையும் தொடர்புகொண்டு, பல்வேறு தகவல்களைப் பெற்றார்கள். பெருமளவு பணத்தை அனுப்பிவைக்கும்படி கேட்டு அதனைப் பெற்றார்கள். வெளிநாடுகளில் இருந்த செயற்பாட் டாளர்களுடன் இலங்கையில் தொடர்புகளில் இருந்த நபர்களை யும் தமது இந்த நடவடிக்கையினூடாகக் கண்டுபிடித்தார்கள்.

இப்பொழுது மறுபடியும் பழைய கேள்விக்கு வருவோம்.

இதே வகையிலான நடவடிக்கையைப் புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்துச் சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளதா?

நிச்சயமாக உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழ்த் தேசியத்தின் மீது புலம்பெயர் தமிழர்கள் கொண்டுள்ள வெறி புலம்பெயர் தமிழர்களின் மிகப் பெரிய பலம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையே. அதேவேளை இந்த 'வெறி'தான் புலம்பெயர் தமிழர்களின் மிகப் பெரிய பலவீனம் என்பதையும் நாம் ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். 'தமிழ்த் தேசியம்' என்று கூறிக்கொண்டு யாரும் எம்மை இலகுவாக ஏமாற்றிவிடும் அளவிற்கு இந்த வெறிக்கு நாம் அடிமையாகிக் கிடக்கின்றோம். பல வியாபாரிகள் தேசியம் பேசி எம்மை, எமது பொருளாதாரத்தை வளைத்துப் போடுவதை நாம் தெரிந்துகொண்டே அனுமதித்துக் கொண்டிருக்கின்றோம்- தேசியத்தின் பெயரால்.

எனவே, எமது மிகப் பெரிய பலமாக நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கின்ற தேசியத்தின் மீதான எமது கண்மூடித்தனமான பற்று, மிதமிஞ்சிய வெறி -இவற்றினையே எமக்கு எதிரான தமது நகர்வுகளுக்கு எமது எதிரி பயன்படுத்த முனையும் சந்தர்ப்பம் இருக்கவே செய்கின்றது.

"இல்லை இல்லை. அது ஒருபோதும் முடியாது.'' என்று சிலர் கூறலாம்.

ஆனால், தாம் நேசிக்கின்ற தேசியத்தின் பெயரால் இன்று சில தேசியவாதிகள் தெருவில் நின்று சட்டையைக் கிழித்துக்கொண்டு அடிபடுவது எமது பலவீனத்திற்கு ஒரு சிறந்த உதாரணம்.

எம்மைவிட வேகமாகத் தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு Operation Trust உளவு நடவடிக்கை எம்மத்தியில் மேற்கொள்ளப் படக்கூடியதற்கான சாத்தியத்தை நாம் இலகுவாக உதறித் தள்ளிவிட முடியாது.

இந்தியாவில் புலிகள் மீள ஒருங்கிணைகின்றார்கள் என்ற கதை எம்மவர்கள் மத்தியில் தற்பொழுது மிக வேகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது. இந்தக் கதையின் தோற்றுவாய் எது என்று பார்த்தால் சிறிலங்காவின் பாராளுமன்றத்தில்தான் இந்தக் கதை முதன்முதலில் அவிழ்த்துவிடப்பட்டது. அதுவும் சிறிலங்காவின் பிரதமர்தான் இந்தக் கதையைப் பகிரங்கமாகத் தெரிவித்தார். அவர் சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள்காட்டித்தான் இந்தக் கதையைத் தெரிவித்திருந்தது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் புலிகள் மீள ஒருங்கிணைகின்றார்கள் என்ற கதை எம்மவர்கள் மத்தியில் தற்பொழுது மிக வேகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது. இந்தக் கதையின் தோற்றுவாய் எது என்று பார்த்தால் சிறிலங்காவின் பாராளுமன்றத்தில்தான் இந்தக் கதை முதன்முதலில் அவிழ்த்துவிடப்பட்டது. அதுவும் சிறிலங்காவின் பிரதமர்தான் இந்தக் கதையைப் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்பட்ட பல விடுதலைப் புலி முக்கியஸ்தர்கள், திடீரென்று புலம்பெயர் நாடுகளில் தோன்றித் தேசியம் பேசுவது இன்று சாதாரண நிகழ்வாக மாறி வருகின்றது. "நான் வன்னியில் தலைவருடன் நின்றனான்..'' என்று கூறிக்கொண்டு நிறையப் பேர் ஐரோப்பாவில் தற்பொழுது அரசியல் செய்ய ஆரம்பித்துள்ளார் கள். தலைவருடன் நின்ற நீங்கள் எப்படித் தப்பி வந்தீர்கள்? ஏன் தலைவரை விட்டுவிட்டு இங்கு வந்தீர்கள்? இதுபோன்ற கேள்விகளை நாங்களும் கேட்பதில்லை. அதற்கான பதிலை அவர்களும் சொல்வதில்லை.

இன்றும் குறிப்பாகப் பார்த்தால், இவர்களில் அனேகமானோர் சிறிலங்கா விமான நிலையம் வழியாகவே வந்திருக்கின்றார்கள். இவர்களில் பலர், வவுனியாவில் சிறிலங்காத் தடுப்பு முகாமில் மாதக் கணக்காகச் சிறிலங்காப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள். வன்னியில் புலிகளுக்குச் சாப்பாடு கொடுத்தவர்கள், சென்றியில் நின்றவர்கள், எல்லைக் காவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளில் ஈடுபட்டவர்கள் என்று பலரும் இப்பொழுது கூடச் சிறிலங்கா படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நிலையில், அனைவரும் அறிந்த விடுதலைப்புலி முக்கியஸ்தர்கள், தவைருடன் இருந்தவர்களால் எப்படிச் சிறிலங்கா இராணுவத்தின் வாய்களுக்குள் இருந்து வெளியேற முடிந்தது? எப்படிச் சிறிலங்காப் படையினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுச் சிறிலங்காவின் ஒரே சர்வதேச விமான நிலையம் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு வர முடிந்தது? இது பலராலும் சந்தேகத்துடனேயே பார்க்கப்படுகின்றது. இவர்கள் Operation Trust உளவு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டவர்களா என்கின்ற கோணத்திலும் சிந்திக்கவேண்டிய நிலையில்தான் இன்று புலம்பெயர் தமிழர்கள் இருக்கின்றார்கள்.

இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் கடந்த காலங்களில் தமிழ்த் தேசிய எதிரிகளாக வலம் வந்தவர்களின்; செயற்பாடுகளைச் சற்று ஆழமாக நோக்குகின்ற பொழுது இந்தச் சந்தேகம் மேலும் வலுவடைகின்றது. ஐரோப்பிய நாடுகளில் தமிழ்த் தேசியவாதிகளால் மேற்கொள்ளப்படுகின்ற சாதாரணமான ஒரு மே தின ஊர்வலத்திலேயே புகுந்து கலாட்டா பண்ணுகின்ற மாற்றுக் குழுவினர் அல்லது சிறிலங்காவின் கைக்கூலிகள், தற்பொழுது புலம்பெயர் தமிழர்கள் மேற்கொள்ளுகின்ற போராட்டங்கள் தொடர்பில் பெரிய அளவில் அக்கறை காண்பிப்பதைக் காணமுடிவதில்லை.

மகிந்தவிற்கு எதிராகப் புலம்பெயர் மண்ணில் ஒரு பெரிய வேள்வியே நடைபெற்று வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூட, இப்படிப்பட்டவர்கள் ஒரு புன்சிரிப்புடன் மௌனம் கடைப்பிடித்து வருவதை ஒரு வித்தியாசமான – அதேவேளை அவதானிக்கப் படவேண்டிய ஒரு நகர்வாகவே நான் பார்க்கின்றேன். இது, சிறிலங்கா இராணுவம் புலம்பெயர் மண்ணில் மேற்கொள்ளுகின்ற Operation Trust போன்ற ஒரு ஒரு உறுதியான, நீண்ட காலச் செயற்பாட்டுக்கான வழிவிடுதலாகக் கூட இருக்கலாம்.

புலம்பெயர் தமிழர்கள் சற்று ஆழமாகச் சிந்திக்கவேண்டிய தருணம் இது.

இந்த இடத்தில் ஒரு முக்கிய விடயத்தைத் தெளிவுபடுத்திவிட விரும்புகின்றேன். வன்னி மற்றும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மரணத்தின் பிடியில் இருந்து மயிரிழையில் தப்பித்து, உயிரைக் கையில் பிடித்தபடி மேற்குலகில் தஞ்சடைந்திருக்கும் பலர் இன்று எம்மத்தியில் இருக்கின்றார்கள். அவர்களின் உண்மையும் தூய்மையும் உண்மையிலேயே மெச்சத்தக்கது. அவர்களது வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் புலம்பெயர் தமிழர்களுக்கு நிச்சயம் தேவை என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும் இவர்கள் மத்தியில் கலந்து சிறிலங்காப் புலனாய்வாளர்களால் அனுப்பப்படும் உளவு ஏஜன்டுகள் பற்றிய எச்சரிக்கை உணர்வையும் நாம் கொண்டிருப்பது இச்சந்தர்ப்பத்தில் மிக மிக அவசியம்.

இல்லாவிட்டால், புலம்பெயர் தமிழர்களின் விடுதலை உணர்வைத் திசைதிருப்பும் ஒருவகை Operation Trust உளவு நடவடிக்கைக்கு அநியாயமாகப் பலியாகிப்போன மற்றொரு இனம் என்கின்ற பெயர் வரலாற்றில் எமக்குக் கிடைத்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்குள் உள்ளதா தமிழ்த் தேசியம்?

■ டி.சிவராம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் பலதையும் பத்தையும் பற்றி ஒரு முறை பேசிக்கொண்டிருந்தபோது அவர் 'நான் எது வந்தாலும் தேசியத்தின் பக்கந்தான், நாம் தேசியத்தைக் கடைசிவரை விட்டுக்கொடுக்க முடியாது' எனக் கூறினார். தேசியம் எனப் பேசும் போது நீங்கள் எதை கருதுகின்றீர்கள்? எதை விளங்கிக் கொள்கின்றீர்கள்? என அவரிடம் கேள்வி கேட்டு உரையாட அப்போது சூழ்நிலை அனுமதிக்கவில்லை. ஆயினும் அங்குமிங்குமாகத் தொடர்கின்ற பயணங்களின் தனிமையில் இக்கேள்வியை அசைபோட்ட போது மேலும் சில கேள்விகளும் எண்ணங்களும் தோன்றின. தமிழ் தேசியம் பற்றி ஒரு மறுபார்வையை வேண்டி மேற்படி கேள்விகளையும் எண்ணங்களையும் உங்களிடம் சமர்ப்பிக் கின்றேன்.

முதலாவது தமிழ்தேசியம் என்றால் புரிந்து கொள்ளப்படுவது என்ன? நான் மேற்குறிப்பிட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரைப் போல் தேசியம் பேசுகின்றவர்கள் அதற்கேதாவது வரைவிலக்கணம் வைத்திருக்கின்றார்களா? தமிழ் தேசியம் என்பது ஒரு கருத்தியலா? அதாவது இதுதான் தமிழ் தேசியம் என நாம் அனைவரும் இனங்கண்டிடக் கூடிய கருத்துக்களின் தொகுப்பா? அல்லது அது தமிழனாய் தம்மைக் கருதுகின்ற ஒவ்வொருவரிடமும் இருக்கக் கூடிய ஒரு சமூக உள்ளுணர்வா? அல்லது தமிழ் மொழியைத் தம் தாய் மொழியாகக் கருதுகின்ற அனைவரிடமும் நாடு, மதம் எனும் பேதங்களை மேவி பரந்து கிடக்கின்ற ஒரு உளப்பாங்கு எனத் தமிழ்த் தேசியத்தை நாம் கூறலாமா?

இந்த உணர்வு அல்லது உளப்பாங்கு தமிழர் எனத் தம்மைக் கருதுகின்ற அனைவரிடமும் இன்று காணப்படுகின்றதா? அன்றி இலங்கையின் வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் இன மக்களிடம் மட்டுமே ஒரு அரசியல் உந்து விசையாக உள்ளதா? இப்படியான கேள்விகளை நான் அடுக்கிக்கொண்டு போவதற்குக் காரணமுண்டு. எமது உரிமைப் போராட்டத்தின் வெற்றிகளும் சரி, பின்னடைவுகளும் சரி, தோல்விகளும் சரி, தமிழ்த்தேசியத்தின் பல்வேறு விளைவுகளாகவேயுள்ளன.

உதாரணமாகத் தமிழ்த் தேசியம் பற்றித் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை முன்னாள் சிறப்புத் தளபதி கருணாவிற்கு இருந்த புரிதலும் அவர் ஏற்படுத்திய குழப்பங்களுக்கு ஒரு முக்கிய காரணம் என்றே நாம் கொள்ள வேண்டியிருக்கிறது.

மறைந்த சிவராம் அவர்கள்
ஊடகவியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளால் துரோகிகள் எனக் கண்டிக்கப்படும் மாற்றியக்கத் தலைவர்கள் கூட செய்யாத ஒரு கைங்கரியத்தை அவர் செய்துள்ளார். இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் அடிப்படையே வடக்கு கிழக்கு ஆகிய ஸ்ரீலங்கா அரசின் நிர்வாக மாகாணங்கள் இணைந்த தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயக பூமி எனும் கருத்தாகும். இது இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் கேள்விக்குட் படுத்த முடியாத கருத்தாக, நம்பிக்கையாகக் கடந்த 56 ஆண்டுகளாக நிலைத்து வந்துள்ளது. நான் அறிந்தவரை ஸ்ரீலங்காப் படைகளோடு இன்று முற்றாகச் சங்கமமாகிப் போய்விட்ட ராசீக் குழுவின் தலைவர் கூட தமிழ்பேசும் மக்களுடைய தாயக ஒருமைப்பாடு சிதைக்கப்பட வேண்டுமெனக் குரல் கொடுத்தது கிடையாது. (ஸ்ரீலங்காப் படைகளுடன் இவர் இணைந்து வேலை செய்த போது நடைமுறையில் அவரது செயல், தாயக ஒருமைப்பாட்டை சிதைப்பதற்கே உதவிற்று என ஒருசாரார் கூறலாம். ஆனால் இங்கு வலியுறுத்த முனையும் விடயத்திற்கு ராசீக் கிழக்கைப் பிரி என அறிக்கை மேல் அறிக்கை விடவில்லை என்பது தான் முக்கியம்).

எம்மைப் போன்றவர்கள் ஒரு காலத்தில் மட்டக்களப்பிற்கெனத் தனி இயக்கம் தொடங்கிய போதும் அதை தமிழ் பேசும் மக்களது தாயக ஒருமைப்பாட்டை காக்கின்ற ஒரு விடுதலை அமைப்பாகவே கருதினோம். பின்னர் விடுதலைப் புலிகள் ஏனைய இயக்கங்களைத் தடைசெய்து தாக்குதல்களில் ஈடுபட்டபோதும் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தைப் பிரி என்று யாரும் கிளம்பவில்லை. ஆனால் இன்று கிழக்குத் தனியாக வேண்டும் என்ற கூச்சலோடு புறப்பட்டுள்ளார் புலிகளின் முன்னாள் தளபதி. தமிழ்த்தேசியத்தில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியின் பிரதிபலிப்புத்தான் கருணா என்ற நபர். இது விளிம்பிற்குத் தள்ளப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தை அணி திரட்டி மிக வெற்றிகரமான ஒரு ஆயுதப் போராட்டத்தை நடத்துவதற்கு தமிழ் தேசிய உணர்வும் அதன் வழிப்பட்ட கருத்தியலும் அடித்தளமாயிருந்தன என்ற உண்மை ஒரு புறம்.

அதேவேளை பிராந்தியம், மதம், வர்க்கம் என தமிழ் பேசும் தாயக மக்களை கூறுபோடக் கூடிய அக முரண்பாடுகளைத் தெளிவுடன் மேவி இல்லாது செய்யக்கூடிய ஆற்றல் மிக்கதொரு கருத்தியலாகத் தமிழ் தேசியத்தை நாம் வளர்த்தெடுக்கத் தவறியதன் விளைவுகளை நாம் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகச் சந்தித்து வந்துள்ளோம் என்ற உண்மையை நாம் மறுபுறம் நோக்க வேண்டும்.

அதேவேளை பிராந்தியம், மதம், வர்க்கம் என தமிழ் பேசும் தாயக மக்களை கூறுபோடக் கூடிய அக முரண்பாடுகளைத் தெளிவுடன் மேவி இல்லாது செய்யக்கூடிய ஆற்றல் மிக்கதொரு கருத்தியலாகத் தமிழ் தேசியத்தை நாம் வளர்த்தெடுக்கத் தவறியதன் விளைவுகளை நாம் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகச் சந்தித்து வந்துள்ளோம் என்ற உண்மையை நாம் மறுபுறம் நோக்க வேண்டும்.

முஸ்லிம்களை அந்நியப்படுத்தி சிங்கள மேலாண்மையாளரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு எமது போராட்டம் ஆட்படுவதற்கும் இன்று பிராந்தியப் பிரிவினைப் பேசும் ஒருவர் உருவாகியதற்கும் அடிப்படைக் காரணம் தமிழ்த் தேசியம் பற்றி எம்மிடையே நிலவி வரும் விமர்சனமற்ற அறிவியல் வரட்டுத்தனமே அன்றி வேறில்லை.

வெளியிலிருந்து இன அழிப்பை நோக்கிய ஒரு இராணுவ அச்சுறுத்தல் தோன்றும் போது அக முரண்பாடுகள் தாமாக மறைந்து போய் சாதி, மதம், பிராந்தியம், வர்க்கம் என்பவற்றை மேவிய ஒரு தமிழ் தேசிய ஒருமைப்பாடு இயல்பாகவும் தானாகவும் தோன்றிவிடும் என்ற கருத்தையும் நாம் இங்கு நோக்க வேண்டும்.

எதிரி முட்டாளாக இருக்கும் வரைதான் இந்தக் கருத்து சரிபடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடையே இருக்கின்ற அனைத்து அகமுரண்பாடுகளையும் சிங்கள மேலாண்மையாளர் சரியாகவும் நுணுக்கமாகவும் இனங்கண்டு அதனடிப்படையிலான போரியல் அணுகுமுறையை கைக்கொள்வார்களேயானால் நாம் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும். எமது அகமுரண்பாடுகள் போர் தொடங்கியவுடன் தாமாகவே மறைந்துவிடும் என்ற எடுகோளினடிப்படையில் யாரும் செயற்பட முடியாது. சிங்கள மேலாண்மையாளர் எமது அகமுரண்பாடுகளை நுணுகிக் கற்க இன்று முன்நிற்கின்றனர். கருணா புலிகளை விட்டுப் பிரிந்தபோது மட்டக்களப்பினுடைய சாதியமைப்பு, அதன் குடிமுறைகள், அவை யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலிருந்து எங்ஙனம் வேறுபடுகின்றன என்பதைப் பற்றி ஒரு ஆய்வரங்கு நடைபெற்றதை நாம் கவனிக்க வேண்டும். (ஆனால் அதில் உரையாற்றிய பேராசிரியர் கணநாத் ஒபயசேகர கூறிய முடிவுரை ஒழுங்கு செய்தவர்களுக்கு பிடிக்கவில்லை என்பது வேறு விடயம்).

தமிழ்த் தேசியமானது தமிழ்பேசும் சமூகத்தின் அகமுரண்பாடுகளைத் தீர்த்து அதை சரியான அரசியல் பாதையில் அணிதிரட்டிடக்கூடிய ஒரு கருத்தியலாக வளர்த்தெடுக்கப்படாமல் அதன் பாட்டிலேயே விடப்படுமானால் சந்தர்ப்பவாதிகளின் நுனி நாவில் புரட்டப்படும் ஒரு வெற்றுச் சொற்றொடராக அது இருக்குமாயின் எதிர்காலத்தில் மீண்டும் நேரடியாகவோ மறை முகமாகவோ ஏற்படப்போகும் இன அழிப்புப் போர் அச்சுறுத்தல் கூட எமது சமூகத்தை ஒன்று திரட்டுவதற்கு போதாததாகிவிடும்.

தமிழ்த் தேசியமானது தமிழ்பேசும் சமூகத்தின் அகமுரண்பாடுகளைத் தீர்த்து அதை சரியான அரசியல் பாதையில் அணிதிரட்டிடக்கூடிய ஒரு கருத்தியலாக வளர்த்தெடுக்கப்படாமல் அதன் பாட்டிலேயே விடப்படுமானால் சந்தர்ப்பவாதிகளின் நுனி நாவில் புரட்டப்படும் ஒரு வெற்றுச் சொற்றொடராக அது இருக்குமாயின் எதிர்காலத்தில் மீண்டும் நேரடியாகவோ மறை முகமாகவோ ஏற்படப்போகும் இன அழிப்புப் போர் அச்சுறுத்தல் கூட எமது சமூகத்தை ஒன்று திரட்டுவதற்கு போதாததாகிவிடும்.

1983 இலே நாம் மாபெரும் இன அழிப்பு முயற்சி ஒன்றை எதிர்கொண்டோம். சிங்கள மேலாண்மையாளரின் படைகள் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை அழிப்பதற்கு முனைப்புடன் நின்ற காலமது. நானும் எனது நண்பர் ஒருவரும் புத்தூர் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினரின் சுற்றி வளைப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள எண்ணி பற்றைக் காடும் கட்டாந்தரையுமாகக் கிடந்த ஒரு பக்கமாக ஒளித்து ஓடினோம். அங்கு ஒரு குக்கிராமம் பொழுது சற்றுச் சாய்ந்ததும் ஊருக்குள் சென்றோம். தண்ணீர் தாகம் எமக்கு. ஆனால் அங்கிருந்தவர்களுக்கு நாம் அவர்களிடமிருந்து நீர் அருந்துவோமா என்று சந்தேகம். வெளியூரவராகிய எமக்கு இது அதிசயமாகவிருந்தது.

எனவே அவ்வூர் மச்களைப் பற்றி அறியும் ஆவலிலும் அரசியல் கூட்டம் ஒன்றை நடத்தும் நோக்கிலும் நாம் அன்றிரவு அங்கேயே தங்கிவிட்டோம். பனி நிலவில் கோப்பாய் வெளியிலிருந்து வீசிய காற்றின் சரசரப்பில் அம்மக்கள் கூறிய கதை தேச விடுதலைக் கனவுகளையே நெஞ்சில் நிறைத்திருந்த எம்மைத் திடுக்கிட வைத்தது. அவர்கள் காணியற்ற விவசாயக் கூலிகள். தமிழ்ச் சமூகத்தின் பெருவிழுமியமெனப் போற்றப்படும் கல்வி அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. இதை மீறி அவர்களுக்காக அமைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலைகள் எரிக்கப்பட்டன. இந்த வேளையில் தென்னிலங்கையிலிருந்து அங்கு ஒரு சிங்களப் பௌத்த பிக்கு சென்றார். க.பொ.த சாதாரண தரம் வரை வகுப்புகள் கொண்ட கல்விக் கூடத்தை அவர் அங்கு நிறுவினார். பிக்குவின் செல்வாக்கிற்குப் பயந்த உயர் குடியினர் அதில் கைவைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வூர் மக்கள் பௌத்தத்தைத் தழுவினர். சிங்களம் கற்றனர். அவர்களுக்குத் தமிழ் தேசியம் பற்றித் தெரியாது. நாம் திகைத்தோம்.

எமது தேச விடுதலைப் போராட்டம் என்பது எங்ஙனம் ஒரு சமூக சாதி ஒடுக்கு முறைகளை உடைத்தெறியும் குறிக்கோளையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பன போன்ற பல விடயங்களையும் விளங்கப்படுத்தி அவர்களைப் போன்று இழப்பதற்கு ஒன்றுமில்லாத உழைக்கும் மக்களே ஒரு விடுதலைப்போரின் இறுதி வெற்றிவரை சமரசத்திற்கு இடங்கொடாது போராடுவர் என்பதையும் நாம் எடுத்துரைத்து அம்மக்களோடு அளவளாவி முடித்தபோது சாமக்கோழி கூவிவிட்டது.

இப்படியாக யாழ்ப்பாணத்தில் பல ஊர்கள் தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தோடும் அதன் கருத்தியலோடும். படித்த தமிழ் நடுத்தரவர்க்கங்களிடையே அது அன்று ஏற்படுத்திய உணர்வலைகளோடும் எம் தொடர்புற்றிருந்தன. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்று. வன்னியின் சில பகுதிகளிலும் மட்டக்களப்பில் இரு இடங்களிலும் தமிழ் தேசிய வாதிகளுக்கு அன்று தெரிந்திருக்க வில்லை. 1983இல் சிங்கள மேலாண்மையாளர் எம்மண் மீது கட்டவிழ்த்து விட்ட இன அழிப்புப் போர் எம்மிடையே வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களை இயல்பாகத் தமிழ்த்தேசியத்தின் பால் அணிதிரட்டிடவில்லை. மாறாக, தமிழ்த் தேசியம் என்பது அன்று கடுமையான மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. அதை ஒரு குறுகிய படித்த யாழ்.நடுத்தர வர்க்கக் கருத்தியல் என்ற நிலையிலிருந்து மாற்றுவதற்கும், அதை அனைத்துத் தமிழ் பேசும் மக்களுக்கான கோட்பாடாக்குவதற்கும், அவர்களுடைய சமூகச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையிலும் பலர் தொடர் முயற்சிகளை மேற்கொண்டனர். இதன் விளைவாகவே எமது தாயகத்தின் மூலைமுடுக்குகளிலிருந்த மக்களையெல்லாம் சாதி, மத, பிராந்திய, வர்க்க வேறுபாடுகளுக்கப்பால் சிங்கள மேலாண்மையின் ஒடுக்குமுறைக்கெதிராக அணிதிரட்ட கூடியதாயிற்று.

தமிழ்த் தேசியம் என்பது அன்று கடுமையான மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. அதை ஒரு குறுகிய படித்த யாழ்.நடுத்தர வர்க்கக் கருத்தியல் என்ற நிலையிலிருந்து மாற்றுவதற்கும், அதை அனைத்துத் தமிழ் பேசும் மக்களுக்கான கோட்பாடாக்குவதற்கும், அவர்களுடைய சமூகச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையிலும் பலர் தொடர் முயற்சிகளை மேற்கொண்டனர். இதன் விளைவாகவே எமது தாயகத்தின் மூலைமுடுக்குகளிலிருந்த மக்களையெல்லாம் சாதி, மத, பிராந்திய, வர்க்க வேறுபாடுகளுக்கப்பால் சிங்கள மேலாண்மையின் ஒடுக்குமுறைக்கெதிராக அணிதிரட்ட கூடியதாயிற்று.

ஒரு சந்தர்ப்பவாதத் தலைமையின் கையிலிருந்து பறித்தெடுத்து அதன் வீச்செல்லைக்கு, அது காலவரை உட்படாதிருந்த மக்களிடமும் அதைக் கொடுக்க, எடுக்கப்பட்ட கருத்தியல் முயற்சிகள் இல்லாதிருந்திருந்தால் தமிழ்த் தேசியம் இன்று வறண்டு சுருங்கியிருக்கும்.

திராவிட முன்னேற்ற கழகம் தமிழகத்தில் ஆட்சி பீடமேறிய போது தமிழ்த் தேசியம் வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைத்து விட்டதாக அறிஞர் அண்ணாத்துரையும் அவரது சீடர்களும் அன்று கூறினர். நடந்தது என்ன? அதன் பிறகுதான் தமிழகத்தின் பல பகுதிகளிலும் சாதி, வர்க்க ஒடுக்குமுறைகளுக்கெதிரான கிளர்ச்சிகள் வெடித்தன. நக்சலைட்டுகளின் (ஆயுதமேந்திய இடதுசாரிப் புரட்சி அமைப்புகள்) தலைமையில் தமிழகத்தின் பெரும்பாலான வறிய விவசாயக் கிராமங்கள் அணிதிரண்டன. இது தி.மு.க. பேசிய தமிழ்த் தேசியத்தின் தோல்வியின் வெளிப்பாடே. இந்திய மத்திய அரசின் பார்வை எமது போராட்டத்தின் பக்கம் திரும்புவதற்கு முன்னர் இந்த நக்சலைட்டுகளும் திராவிட முன்னேற்ற கழகத்தின் சமரசத் தமிழ் தேசிய வெற்றியை நிராகரித்த பெருஞ்சித்திரனார் போன்றவர்களுமே எம்மை தமிழகத்தில் ஆதரித்தவர்கள் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நோக்க வேண்டும்.

திராவிட முன்னேற்ற கழகத்தின் தமிழ்த் தேசியத்திற்கு அடித்தளமாக இருந்த தமிழக நடுத்தர வர்க்கத்திற்கு இன்று தமிழ் மொழியும், பண்பாடும் தனது சமூக எழுச்சிக்கு தேவையற்றவை யாகிவிட்டன. அது இன்று ஆங்கில மோகத்தில் மிகக் கேவலமாக உழல்கிறது.

அதன் உச்ச வெளிப்பாடாக சன்டிவி தமிழ் மொழியையும் தமிழ் அடையாளத்தையும் படுகொலை செய்து வருகிறது. இங்கு பழமைவாதிகள் போல 'ஐயகோ நமது மொழியும் கலாசாரமும் அழிகின்றன' எனப் புலம்புவதில் பயனில்லை. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்பது நன்னூலாரின் கருத்து. ஆனால் தமிழ்த் தேசியம் என்பது இன்று அரசியல் கலாசார சமரச நிலைக்கு வந்துவிட்ட ஒரு நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் கையிற் சிக்குண்டு தனது போர்க்குணத்தையும் சாதி, மத, பிராந்திய பொருளாதார பேதங்களை மேவிய கருத்தியல் வீச்சையும் இழந்து பரிதவிப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

உரிமைகளைப் பெறுவதை விட தாம் தற்போது அனுபவிக்கின்ற சலுகைகளைப் பாதுகாப்பதில் தீவிர அக்கறையுள்ள ஒரு வர்க்கத்தின் கையில் தமிழ் தேசியக் கருத்தியல் இன்று சிக்கிக் கொண்டிருக்கிறது. இதன் ஒரு வெளிப்பாடுதான் கருணா என்ற மனிதன். சிங்கள மேலாண்மை மற்றும் மேலைத்தேய ஏகாதிபத்தியச் சுரண்டல் என்பவற்றுக்கெதிராக தனது அடையாளத்தையும், தனது மொழி, கலாசார சுயமரியாதையையும் பேணுவதில் எந்த அக்கறையுமின்றிக் கிடக்கும் ஒரு படித்த நகர்ப்புற நடுத்தரவர்க்கத்தின் தயவில் தமிழ் தேசியக் கருத்தியல் தங்கியிருக்க நேரிடுமாயின் ஒடுக்கு முறையை சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது எமது மக்களை அணிதிரட்டக்கூடிய வலுவை இன்று தமிழ்த் தேசியம் இழந்து வருகிறது.

சிங்கள மேலாண்மை மற்றும் மேலைத்தேய ஏகாதிபத்தியச் சுரண்டல் என்பவற்றுக்கெதிராக தனது அடையாளத்தையும், தனது மொழி, கலாசார சுயமரியாதையையும் பேணுவதில் எந்த அக்கறையுமின்றிக் கிடக்கும் ஒரு படித்த நகர்ப்புற நடுத்தரவர்க்கத்தின் தயவில் தமிழ் தேசியக் கருத்தியல் தங்கியிருக்க நேரிடுமாயின் ஒடுக்கு முறையை சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது எமது மக்களை அணிதிரட்டக்கூடிய வலுவை இன்று தமிழ்த் தேசியம் இழந்து வருகிறது.

மேல்நிலையாக்கமடைந்துவரும் நமது நடுத்தர வர்க்கங்கள் தமது குழந்தைகளுக்கு வைக்கும் கோமாளித்தனமான அர்த்தமற்ற பெயர்களும் சன் டிவி கலாசாரமும் தமிழ்த் தேசியத்தின் எதிர்கால நெருக்கடியை எதிர்வு கூறி நிற்கின்றன. இப்படியாகத் தமிழ்த் தேசியக் கருத்தியல் வலுவிழந்து வரும் சூழலில் சாதி, மதம், பிராந்தியம் போன்ற பிரிவுகள் தலைதூக்குகின்றன. (அண்மையில் புலிகளைச் சார்ந்த ஒருவர் வெளியிட்ட நூலொன்றில் அவருடைய சாதி பேசப்படுமளவிற்கு நிலைமை போயுள்ளது)

தமிழ்தேசியத்தை கடுமையாக மறுபரிசீலனைக்குட்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. அதை நாம் செய்யாவிடின் வரலாறு எம்மைக் கவிழ்த்து விடும்.

*(டி.சிவராம் அமரராவதற்கு ஒருசில மாதங்களுக்கு முன்னர் இக்கட்டுரை எழுதப்பட்டது. பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கணக்கிலெடுத்து வாசிக்கும் பொழுது தமிழ்த் தேசியம் குறித்து இன்னும் ஆழமான புரிதல் ஏற்படும். கருணா குழுவிற்குப் பின்னர் உருவான கே.பி குழுவினரையும் இணைத்து இதனுடன் புரிந்துகொள்ளலாம்.*

*-ஆ-ர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியம்: சிந்தனையும் தேடலும்

■ த.சுரேன்

இலங்கை அரசின் இருப்பு என்பது சிங்கள - பௌத்தத்தை பாதுகாப்பது, வளர்த்தெடுப்பது எனும் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. இதுவரை ஆட்சிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் இந்த இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதில் தீவிரத் தன்மையும் அக்கறையையும் வெளிப்படுத்தி வந்துள்ளன. சுதந்திரத்திற்கு பின்னர் வந்த எல்லா அரசாங்கங்களும் அரசாங்கம் கைமாறுகின்றபோதெல்லாம் தமது இருப்புக்கு அடிப்படையாக இருக்கும் சிங்கள - பௌத்த சித்தாந்தத்தை தீவிரமாக பற்றிப் பிடித்து வந்துள்ளன.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிங்கள- பௌத்த பேரினவாதம் மேலாதிக்கம் செலுத்தும் அம்சமாக எழுச்சி யடைந்துள்ளது. தமிழ்பேசும் மக்களது வாழ்வாதார உரிமைகள் சமூக பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் சனநாயகம் சமத்துவம் போன்றவை யாவும் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டன. இது அரசியலாகவும் சமூகநீதியாகவும் புதுப்பரிணாமம் பெற்றது. சிங்கள - பௌத்த பேரினவாத இயக்கப் போக்கு அனைத்தையும் மீறி நிறுவனமயப்பட்டது. தமிழ் மக்கள் ஒரு தனியான தேசம் என்ற உயர்ந்த பரிமாணம் எதிர்காலம் நோக்கிய ஆத்மார்த்தத் தெரிவுகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தது.

தொடர்ந்து சிங்கள-பௌத்த அரசின் இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக நீண்டகாலமாகப் போராடி வந்த தமிழ்தேசம் 1970களில் தனது போராட்டத்தை சாத்வீக வடிவிலிருந்து வன்முறை வடிவத்துக்கு மாற்றியது. இத்தகைய வடிவமாற்றத்துக்கேற்ப அப்போராட்டத்தில் தீவிரமாகப் பங்குகொள்கின்ற பிரிவினரிலும் போராட்டத்தை வழிநடத்திச் செல்கின்ற தலைமையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

இப்போது போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடுகின்ற பிரிவினராக இளைஞர்களும் மாணவர்களும் விளங்கினர். இவர்களில் இருந்தே போராட்டத் தலைமையும் உருவானது. இந்த நிகழ்வுடன் தமிழ்த் தேசத்தின் போராட்டத்தில் திருப்புமுனை ஏற்பட்டது. தமிழ் தலைமையின் ஐக்கியமும் சிதறியது. தமிழ்மக்களின் ஒன்றிணைந்த அரசியல் தலைமையானது நீண்டகால முயற்சியின் பின்னர் உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் தலைமை திடீர் திடீரென தோன்றிய ஆயுதக் குழுக்களினால் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

இக்கட்டுரையாசிரியர்
மாற்று ஊடகச்
சிந்தனையாளர்,
களப்பணியாளர்

தமிழ் மக்களின் போராட்டத்தில் 1980களின் முற்பகுதி கிளர்ச்சியும் கொந்தளிப்பும் மிக்க காலப்பகுதியாக விளங்கியது. வட-கிழக்குத் தழுவியதாக முழுத் தமிழ் மக்களும் போராட்டத்தின் பால் அக்கறையும் அனுதாபமும் வெளிப்படுத்தினர். போராட்டம் சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளில் மறைமுகமாகவும் நேரடியாகவும் ஈடுபட்டனர். எனினும் இவர்களை ஒன்றுதிரட்டி அமைப்பாக்கி பல்வேறுபட்ட வெகுசனப் போராட்டங்களை முன்னெடுக்கின்ற ஆற்றலைக் கொண்டதாக எந்த ஒரு விடுதலை அமைப்பும் தன்னை வெளிப்படுத்தவில்லை.

இந்த அமைப்புகள் தமிழீழ விடுதலையை நோக்கி உறுதியாக முன்னேறுவதிலும் பார்க்க, தம்மைத் தமிழ் மக்களின் தலைமையாக நிலைநாட்டுவதையே பிரதான இலக்காகக் கொண்டிருந்தன. எனினும் இதனைச் சாதிப்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.

தமிழ் மக்களின் தலைமையைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையோடு, இப்போது புதிதாக உருவாகி வந்த ஆயுதக் குழுக்களும் போட்டியிட்டன. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் பொதுவாக இந்த எல்லா ஆயுதக் குழுக்களையும் அனுதாபத்தோடும் அக்கறையோடும் மதித்து அவற்றுக்கு தமது ஆதரவை வழங்கி வந்தனர்.

தமிழ் மக்களின் தலைமை என தம்மைக் கூறிக்கொண்ட அமைப்புகள் பௌத்த - சிங்கள அரசுக்கு எதிரான போராட்டத்தை உறுதியாக முன்னெடுப்பதன் மூலமாக தமது தலைமையை நிலைநாட்ட முயற்சிக்கவில்லை. தமக்கு அரசியல் வழிமுறையை உருவாக்கவில்லை.

போராட்டத்தின் நோக்கம் அதில் பங்குகொள்கின்ற சமூகப் பிரிவுகள், போராட்ட வழிமுறைகள், ஏனைய சமூகங்களுடனான உறவுகள் என ஒரு போராட்டம் எதிர்கொள்கின்ற அடிப்படை விடயங்கள் உள்ளடக்கியதாக பலமான 'ஐக்கிய முன்னணி' அவசியம் என்பதை உணர்ந்து அதை நோக்கியதான தமது வேலைத்திட்டங்களை வகுக்கக்கூடிய அரசியல் முதிர்ச்சியை எந்த அமைப்பும் வெளிப்படுத்தவில்லை.

போராட்டத்தின் நோக்கம் அதில் பங்குகொள்கின்ற சமூகப் பிரிவுகள், போராட்ட வழிமுறைகள், ஏனைய சமூகங்களுடனான உறவுகள் என ஒரு போராட்டம் எதிர்கொள்கின்ற அடிப்படை விடயங்கள் உள்ளடக்கியதாக பலமான 'ஐக்கிய முன்னணி' அவசியம் என்பதை உணர்ந்து அதை நோக்கியதான தமது வேலைத்திட்டங்களை வகுக்கக்கூடிய அரசியல் முதிர்ச்சியை எந்த அமைப்பும் வெளிப்படுத்த வில்லை.

இவற்றுக்குப் பதிலாக ஆயுத பலத்தின் மூலம் தமிழ் மக்களைக் கட்டுப்படுத்தி தமது தலைமையை ஏற்படுத்த அவை முயற்சித்தன. தமிழ் மக்களின் விமரிசனச் சுதந்திரங்களையும் தொடர்பூடகங்களையும் சுயமான சமூகப் பண்பாட்டு நிறுவனங்களையும் இவை கட்டுப்படுத்தின. விரிவான ஜனநாயக சூழலை ஏற்படுத்துவதற்குப் பதிலாக ஒவ்வொரு அமைப்பிலும் அதிகார ஆதிக்க உணர்வுகளே வெளிப்பட்டன. தமக்குள்ளே உட்கொலைகளை நிகழ்த்துமளவிற்கு நிலைமைகள் வளர்ந்தன. இத்தகைய அராஜக அரசியல் அழித்தொழிப்பு அரசியலாக மாற்றம் பெற்றது. மக்களுக்கு எதிராகவும் ஆயுதம் திரும்பியது.

தம்முன் முரண்பட்டு பிரிந்து சென்றவர்கள் வேறு அமைப்புகளில் இணைவதைத் தடுப்பதாகவும் தம்மைப் பற்றி அவர்கள் வெளியிடக்கூடிய கருத்துகளின் காரணமாகத் தாம் தமிழ் மக்களினால் நிராகரிக்கப்படலாம் என்பதனாலும் அவர்களை உடனடியாக அழித்தனர். மேலும் தமக்குப் போட்டியாக இருக்கின்ற ஏனைய அமைப்புகளை வீழ்த்துகின்ற செயற்பாடுகளில் விதிவிலக்கின்றி ஒவ்வொரு அமைப்பும் ஈடுபட்டது. இவ்வாறு தமிழ் மக்களில் எந்தப் பிரிவினரும் தமக்கு எதிரான நிலையை எடுக்கவிடாது தடுப்பதில் ஒவ்வொரு அமைப்பும் தீவிரமாகச் செயல்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் தம்மீது விடுதலை அமைப்புகளால் மேற் கொள்ளப்பட்ட அராஜக நடவடிக்கைகளை, ஜனநாயக விரோதப் போக்குகளை 'தேசவிடுதலைப் போராட்டம்' என்ற உயரிய இலட்சியத்தின் பெயரால் வெகுஜனரீதியான எதிர்ப்புகள் எதுவுமின்றி ஏற்றுக்கொள்ளும்படி செய்யப்பட்டார்கள். அதே நேரம் ஆங்காங்கு அமைப்புகளுக்கு எதிரான சில எதிர்ப்புப் போராட்டங்களும் வெளிப்பட்டன. ஆனால் அவை தொடர முடியாமல் பார்த்துக் கொண்டன.

தேச விடுதலைப் போராட்டத்தின்போது இத்தகைய அராஜகங்கள் ஜனநாயகமின்மை குறிப்பிட்ட காலத்திற்குத் தவிர்க்க முடியாதவை என்று அமைப்புகளால் நியாயப்படுத்தப்பட்டன. இவ்வாறு பல அமைப்புகளுள் இழையோடிய சனநாயகமின்மை, அராஜகம், உட்கொலை, மக்களுடனான முரண்பாடு... முதலானவற்றை புலிகள் அமைப்பு தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அதிகார மையத்தை நோக்கி வேகமாக முன்னேறியது. ஒவ்வொரு அமைப்பும் படிப்படியாக தடைசெய்யப்பட்டு அழித்தொழிக்கப்பட்டன. ஜனநாயக பூர்வமாக சிந்தித்து கருத்து வெளிப்படுத்தும் சக்திகளுக்கும் மிரட்டல் விடப்பட்டது. பலர் கொலை செய்யப்பட்டனர். இதனால் மிக மோசமான அச்சவுணர்வு ஜனநாயகமற்ற சூழல் உருவானது. விடுதலை உணர்வும் அரசியல் தெளிவும் உள்ள பலர் நாட்டைவிட்டு வெளியேறினர். இன்னும் பலர் எந்த அரசாங்கத்தை எதிரியாகக் கொண்டு செயற்பட்டார்களோ அந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தொடங்கினர்.

தமிழ் மக்கள் தம்மீது விடுதலை அமைப்புகளால் மேற் கொள்ளப்பட்ட அராஜக நடவடிக்கைகளை, ஜனநாயக விரோதப் போக்குகளை 'தேசவிடுதலைப் போராட்டம்' என்ற உயரிய இலட்சியத்தின் பெயரால் வெகுஜனரீதியான எதிர்ப்புகள் எதுவுமின்றி ஏற்றுக்கொள்ளும்படி செய்யப்பட்டார்கள். அதே நேரம் ஆங்காங்கு அமைப்புகளுக்கு எதிரான சில எதிர்ப்புப் போராட்டங்களும் வெளிப்பட்டன. ஆனால் அவை தொடர முடியாமல் பார்த்துக் கொண்டன.

தமிழ்மக்களை அழிக்கும் நடவடிக்கைக்குத் துணைபோயினர். விடுதலைப் புலிகளது ஏகபோகத் தலைமைத்துவம் எழுச்சி பெற்றது. இன்னும் சிலர் தேச விடுதலைப் போராட்டம் என்ற உயரிய இலட்சியத்தின் பெயரால் புலிகளை அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. புலிகள் இயக்கத்தின் ஆதிக்கம் வட கிழக்குப் பிரதேசங்களில் புதுவடிவம் பெற்றது.

தமிழ் மக்களிடமிருந்து வெகுசன ரீதியான எதிர்ப்புகளை முகங்கொடுக்காத புலிகள் உள்ளிட்ட அமைப்புகள் வடகிழக்கு முஸ்லிம்கள் மீதும் அராஜகங்களைக் கட்டவிழ்த்துவிட்டனர். இதன் உச்சமாக புலிகள் அமைப்பு வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களைத் துரத்தியது. பல வருடங்களாக அகதிகளாக வாழ அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இந்த இடத்தில் இன்னொரு உண்மையையும் நாம் பதிவு செய்ய வேண்டும். ஒரு கட்டத்தில் ஜே.ஆர் தலைமையிலான அரசாங்கம் முஸ்லிம்களையும் தமிழர்களையும் கிழக்கில் நிரந்தரமாக பிரித்துவிடும் சூழ்ச்சியில் திட்டமிட்டுச் செயற்பட்டது. குறிப்பாக முஸ்லிம் தலைமைகளை தமிழர்களுக்கெதிராகப் பயன்படுத்துவதில் புதிய வியூகம் வகுத்துச் செயற்பட்டது. இது தனியாக ஆராயப்பட வேண்டும். இதனை அப்போது இயக்கங்கள் அறியாமல் இருந்தது வேதனைக்குரியதே. எதிரியின் சூழ்ச்சி வலைக்குள் தமிழ்த் தலைமைகள் வீழ்ந்துவிட்டன. இந்தப் பின்புலத்தில் தமிழ் - முஸ்லிம் உறவு இன்னும் கூர்மையாகப் பார்க்கப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்கம் தமிழ் தேசத்தின் இருப்பைச் சிதைத்து அழித்துவிட பல்வேறு வழிமுறைகளிலும் முயற்சித்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்தேசத்தை நிராயுதபாணியாக்கி தனது ஆயுதபலம் கொண்டு நசுக்கிவிட கடுமையாக பிரயத்தனப்பட்டது. இந்நிலையில் தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைக்கப்பட வேண்டிய இணைந்து நின்ற முஸ்லிம் மக்களை அழித்தொழிக்க நினைத்தது பெரும் வரலாற்றுத் தவறு என்றே புரிந்துகொள்ளப்பட வேண்டும். தமிழ் தேசமானது ஒரே தாயத்துக்குள் வாழும் இன்னோர் தனித்துவமான சமூகமாகிய முஸ்லிம் மக்களை உதாசீனப்படுத்தி விட்டு தனது விடுதலையை அடைந்து விட முடியாது. ஏனெனில் முஸ்லிம்கள் தொடர்பான பிரச்சினை என்பது தமிழ்தேசம் தனது விடுதலைக்கான பாதையில் முகங்கொடுத்து தீர்வு கண்டாக வேண்டிய ஓர் அரசியல் பிரச்சினை ஆகும். இவ்வாறு நோக்குவதற்கான / புரிந்துகொள்வதற்கான அரசியல் முதிர்ச்சியை புலிகள் உள்ளிட்ட தமிழ்த்தரப்பு கொண்டிருக்கவில்லை. அரசியல் தூரநோக்கற்ற செயற்பாடுகள் தமிழ் தேசத்தின் விடுதலை அரசியலை இன்றும் பலகாலம் பின்னோக்கியே இழுத்துச் செல்லும். இதற்கு புலிகள் இயக்கமும் பதில் சொல்ல வேண்டும்

2009 மே 18 க்கு பிறகு தமிழ்த்தேச விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மாற்றங்கள் அழிவுகள்... யாவும் ஆழமான பரிசீலனைக்குரியவை. மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் புறப்பட்ட எமது பயணம் நந்திக்கடற்கரையில் முடிந்துள்ளது. இலட்சக்கணக்கான மக்களின் இழப்புகள் மனிதப் படுகொலையின் உச்சம் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தி உள்ளன. தாம் மட்டுமே விடுதலைப் போராட்டத்தை நடத்தி முடிப்போம் என்று கூறி ஏனைய அமைப்புகளை அழித்து தனியொரு அமைப்பாக புலிகள் அமைப்பு வளர்ந்து நின்றது. ஆனால், இறுதிப் போரில் அவர்களால் நின்றுபிடிக்க முடியவில்லை. இயக்கம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்தின் தயவில் உள்ளார்கள். அரசாங்கத்துடன் இணைந்து நின்று செயற்படுகின்றனர். முன்னைய காலங்களில் ஏனைய அமைப்புகளில் இருந்த பலர் அரசாங்கத்துடன் இணைந்து துரோக அரசியலில் ஈடுபட்டனர். இதுபோல் இன்று புலிகளின் பிரதிநிதிகளும் துரோக அரசியலில் ஈடுபடுகின்றனர். தமிழ்த்தேச விடுதலைப் போராட்டம் எந்த வடிவிலும் வெளிப்படாத முன்னெடுக்கப்படாத வகையில் புலி உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து நின்று முழுமையாகக் கண்காணித்து வருகின்றனர்.

யுத்தம் முடிந்ததும் யுத்தத்திற்கு காரணமான அரசியல் என்பது மறக்கப்பட்டு மக்களின் அவலம் துன்பம் என்பதே பிரச்சினையாக மாற்றப்படுகிறது. மக்களது துயரம் என்பது முக்கியமான பிரச்சினை. இதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால் இந்த அவலம் துன்பம் ஏன் நேர்ந்தது என்பது மறக்கப்பட முடியாத விடயம் அல்லவா? யுத்தம் என்பது அரசியலின் தொடர்ச்சியே. தேசிய ஒடுக்குமுறை என்ற அரசியலின் தொடர்ச்சியாகவே இந்த ஆயுதப் போராட்டமானது தோன்றியது. அதன் உச்சக்கட்ட விளைவுகளே இந்த அவலங்களும் துன்பங்களும் ஆகும். இதில் புலிகளின் பாத்திரம் பற்றி பேசுபவர்கள் சிங்கள இனவாத அரசின் பாத்திரம் பற்றியும் பேச வேண்டும். குறிப்பாக யுத்தத்தின் பின்பு அரசு தான் விடுவித்ததாகக் கூறப்படும், மக்கள் தொடர்பாக நடந்து கொண்ட விதம், இன்றுவரை நடந்துகொண்டு வரும் விதம் மறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதவை. இவ்வளவு கால துன்பங்களுக்கும் இழப்புகளுக்கும் ஈடுசெய்யக்கூடிய வகையில் தமிழ் மக்களுக்கான உயர்வான வாழ்வு பற்றி அரசு எந்தவித அக்கறையும் செலுத்துவதாக இல்லை.

போர் முடிவுக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆயிற்று. ஒவ்வொரு வருடமும் போர் வெற்றித் தினத்தை தேசிய நிகழ்வாக அரசாங்கம் கொண்டாடி வருகிறது. இலங்கைப் படைகள் இன்னொரு நாட்டின் படைகளைப் போரில் தோற்கடிக்கவில்லை. அதிகாரத்தில் இருந்த அரசாங்கங்கள் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வைக் காணத் தவறியதன் விளைவே வடகிழக்கில் தோன்றிய ஆயுதப் போராட்டம் ஆகும். இந்த ஆயுதப் போராட்டத்தை இறுதிவரை கைவிடாமல் சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒரு இயக்கமே - புலிகள் அமைப்பே - தோற்கடிக்கப்பட்டுள்ளது. அந்த இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்கள் அரசாங்கப் படைகளின்கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. அடிப்படையில் இந்தப் போர் இந்தியா உட்பட பல வெளிநாடுகளின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்தினால் அதன் சொந்தப் பிரஜைகளில் ஒரு பிரிவினருக்கு எதிராகவே நடத்தி முடிக்கப்பட்டது. இந்த உண்மை தெளிவாக உணரப்பட வேண்டும்.

எந்த அரசும் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததும் அந்த யுத்தத்திற்கு இட்டுச்சென்ற காரணங்களை இனங்கண்டு அவற்றைக் களைவதற்கு முயற்சி செய்யும். இதுவே அரசின் முதன்மை கடமை ஆகும். ஆனால் அந்தக் கடமையை முற்றாகக் கைவிட்டுவிட்டு ஒரு ஆக்கிரமிப்பு படையின் செயற்பாடுகளே சிங்களப் படைகள் மேற்கொண்டு வருகின்றன.

உள்நாட்டு யுத்தத்தில் ஒரு தரப்பானது முற்றாகத் தோற்கடிக்கப்பட்டால் அரசானது படைக்குறைப்பை மேற்கொள்ளும். பெரிய படைமுகாம்களை அகற்றும். மிகவும் அடிப்படையான சட்டம் ஒழுங்கைப் பேண முயற்சிகளை மேற்கொள்ளும். உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றும். மக்கள் வதிவிடங்களிலிருந்து முற்றாகப் படைகளை வெளியேற்றும். மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீள்குடியேறுவதை ஊக்குவிக்கும். அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யும். இதுபோன்ற உயரிய பண்புகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்ப்பதில் தவறில்லை.

ஆனால் இலங்கையில் நடைபெறுவது என்ன? வடகிழக்குப் பிரதேசம் இன்னும் யுத்தப் பிரதேசமாகவே தொடர்கிறது. எங்கும் படைமுகாம்கள், சிவில் நிர்வாகக் கடமைகளில் இராணுவத்தினரின் தலையீடு நேரடியாக உள்ளது. தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம். ஆங்காங்கு பௌத்த விகாரைகள் திட்டமிட்ட ரீதியில் அமைக்கப்படுகின்றன.

தமிழ்த் தேசியத்தை முறியடிப்பதற்கான முயற்சிகளே சிறிலங்கா அரசானது டக்ளஸ், பிள்ளையான், கருணா போன்றவர்களை களத்தில் இறக்கி அழிப்பு அரசியலை துரிதப்படுத்தி வருகிறது. இந்தக் கூட்டணியுடன் கே.பி எனும் முன்னாள் புலியையும் இறக்கியுள்ளது. இன்னும் பல முன்னாள் புலிகளையும் இறக்கியுள்ளது.

எமது சமூகம் முப்பது ஆண்டுகளுக்கு மேலான உக்கிரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதப் போராட்டத்தினூடாக வளர்ச்சியடைந்த சமூகம் என்பதற்கான தடங்கல் எதுவுமற்ற சமூகமாக மாற்றுவதில் சிங்கள அரசும் அதற்குத் துணைபோகும் தமிழ் பேசும் சிங்கள பேரினவாதிகளும் கூட்டணி அமைத்துச் செயற்படுவதில் முனைப்பாக உள்ளன.

தமிழ் மக்கள் ஒரு தனியான தேசம் என்ற பரிமாணத்தை அடைந்துள்ளார்கள். எனவே ஒரு தேசத்திற்குரிய பிரிக்க முடியாத அனைத்து உரிமைகளையும் அனுபவிக்கக் கூடிய தெரிவை நாம் கொண்டிருக்கிறோம். ஆகவே தனியான இறைமைமிக்க தேச அரசை அமைப்பது நமது தேவை சார்ந்தது மட்டுமல்ல. கூடவே நம்மிடமிருந்து பிரிக்க முடியாத உரிமையும் கூட. ஆனால் சமூக மட்டத்தில் செல்வாக்குப் பெற்றுள்ள பிற்போக்குச் சிந்தனை களையும் உணர்வுகளையும் புரிந்துகொண்டு அவற்றை மாற்றி அமைக்கும் நிதானமான முறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங் களுக்கு தயாராக வேண்டும். வெறும் உணர்ச்சிகள், ஆவேசங்கள் மட்டும் நமக்கான விடுதலை உணர்வை வளர்க்கப் போதுமானவை அல்ல.

தேசம், தேசியம், தேசியவாதம் மீதான அறிவார்ந்த சிந்தனைத் தேடல் உருவாக்கப்பட வேண்டும். அரசியல் கோட்பாட்டாக்க மரபு, கல்வி, சமூகமயப்பட வேண்டும். இதுவரை நாம் கண்டுள்ள தோல்விகளில் இதுவும் ஒன்றாகும்.

எவ்வாறாயினும் எமது தமிழ்ச் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திய சாதியம், ஆணாதிக்கம், பிரதேச வாதம், முஸ்லிம் - சிங்கள மக்கள் மீதான தப்பெண்ணங்கள் மற்றும் வர்க்க வாதம் போன்றவற்றுக்கு சவால் விடும் வேலைத்திட்டங்கள் தீவிரமாக முன்னெடுக்கப் படவில்லை. இந்த ஆதிக்க சித்தாந்தங்கள் எமது போராட்டத்தில் அதிகம் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இதன் விளைவுகள்தான் இந்தத் தோல்விகளில் வெளிப்பட்டதாகும்.

இலங்கையில் தேசிய முரண்பாடுகளுக்கும் யுத்தத்திற்கும் காரணமான அம்சங்கள் அப்படியே இருக்க வெறுமனே யுத்தத்தில் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டது மாத்திரம் அரசினால் தீர்வைக் கொண்டுவந்துவிட முடியாது. அப்படி முடியுமானால் சிங்கள தேசமே அதனை முன்வைக்க வேண்டும். இது சாத்தியமா?

தேசம், தேசியம், தேசியவாதம் மீதான அறிவார்ந்த சிந்தனைத் தேடல் உருவாக்கப்பட வேண்டும். அரசியல் கோட்பாட்டாக்க மரபு, கல்வி, சமூகமயப்பட வேண்டும். இதுவரை நாம் கண்டுள்ள தோல்விகளில் இதுவும் ஒன்றாகும்.

எவ்வாறாயினும் எமது தமிழ்ச் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திய சாதியம், ஆணாதிக்கம், பிரதேச வாதம், முஸ்லிம் - சிங்கள மக்கள் மீதான தப்பெண்ணங்கள் மற்றும் வர்க்க வாதம் போன்றவற்றுக்கு சவால் விடும் வேலைத்திட்டங்கள் தீவிரமாக முன்னெடுக்கப் படவில்லை.

வெளிவரவுள்ள சிறப்பிதழ்கள்

மாற்றுவெளி – 9

சித்திரக்கதைகள்

தமிழ்ச் சூழலில் சித்திரக்கதை அல்லது படக்கதை உருவான காலம் தொடங்கி இன்று செயல்படும் பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கிய கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

மாற்றுவெளி – 10

தமிழ்ச் சிறுகதைகள் (1980–2010)

1980க்குப் பின் உருவான தமிழ்ச் சிறுகதைகள் குறித்த பதிவுகள் முழுமையாக இதுவரை தொகுக்கப்படவில்லை. இப்பணியை இவ்விதழில் மேற்கொள்ளத் திட்டமிடுகிறோம். இதில் சுமார் முப்பதுக்கு மேற்பட்ட தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளிகளை ஆவணப்படுத்த திட்டமிடுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இன்றைய பிரச்சனைகள்: இந்தியாவில் இருக்கும் களச் செயல்பாட்டாளர்களுடன் ஓர் உரையாடல்

■ பொன்னி அரசு

பல நேரங்களில் இலங்கை சம்பந்தப்பட்ட விவாதங்கள் ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாதவையாகப் பிரித்துப் பேசப்படுகின்றன. பெரும்பாலான நேரங்களில் நமக்கு முழுமையான புரிதல் இருப்பதில்லை. இலங்கை சம்பந்தப்பட நிலைப்பாடுகளில் பல பிரச்சனைகள் வருவதற்கும் இதுவே காரணம். நமக்குத் தேவை தற்கால நிகழ்வுகள் பற்றிய முழுமையான புரிதல் மட்டுமல்ல, கடந்த காலம் பற்றியான புரிதலும் தான். இந்த முழுமையான புரிதல், அந்தத் தளத்தில் தொடர்ந்த செயல்பாடுகளையும், தகவல் சேகரிப்பையும் அடிப்படையாகக் கொண்டு கவனத்துடனும், உண்மையுடன் இருக்க வேண்டும். உலகத்தில் உள்ள பல விஷயங்களை போன்று இலங்கையைப் பொறுத்தவரையிலும் மேலே கூறப்பட்டுள்ள விஷயங்களின் முக்கியத்துவம் பிரதானமானது. இலங்கையில் இருந்து போதுமான அளவு தகவல்கள் வெளிவரவில்லை, வெளிவரும் தகவல்களும் மிகுந்த சிரத்தைக்குப் பிறகே கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றை வெளிக் கொணர்ந்தவர்கள் சில நேரம் தங்கள் உயிரையே அதற்கு விலையாகக் கொடுத்திருக்கிறர்கள்.

இக்கட்டுரையாளர், கடந்த எட்டு ஆண்டுகளில் இலங்கைக்குப் பலமுறை சென்று வந்துள்ளார். பெண்கள் குழுக்களுக்கு நாடகப் பட்டறை நடத்தியுள்ளார். இலங்கை தொடர்பான பல திட்ட ஆய்வுகளில் ஈடுபட்டவர்.

கொழும்புவில் வசிக்கும் தோழர் கூறும்போது, போர்க் காலத்தில் இருந்ததைவிடத் தற்போதைய நிலைமை ஒரு சில வகைகளில் இன்னும் மோசமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார். மறைமுகமான வன்முறையும், கண்காணிப்பும் பரவிக் கிடக்கும் வேளையில் அதிலிருந்து தப்பிப்பது கடினமானதாக உள்ளது. பல நேரங்களில் போதிய அறிவிப்பும் இருப்பதில்லை. இலங்கையை சிங்கள பௌத்த தேசமாக மாற்றி ஒரு பாசிச ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் ஜனநாயகம் என்ற போர்வைக்குள் இருந்து செய்யப்படுகின்றன. இதை ஊடுருவி உண்மையைப் பார்ப்பது ஒன்றும் கடினமானதாக இல்லை.

இலங்கையுடனான என்னுடைய தொடர்பை எடுத்துக் கூற வேண்டியது அவசியம். இதைச் சொல்வதற்கான காரணம் என்னவென்றால், தமிழ்நாட்டில் உள்ள என்னுடைய உடன்பணியாற்றுவோர் போல், இலங்கையுடனான என்னுடைய உறவு வெறும் தமிழன் என்ற அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. அது ஒரு பகுதியாக இருந்தாலும், அது மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான உறவாக இருந்தது கிடையாது. தமிழ் மக்கள் என்ற அடிப்படையில் எனக்கும், இலங்கைத் தமிழருக்கும் இருக்கும் பொதுவான வரலாறும், பொதுவான பாரம்பரியக் கூறுகள் போன்றவையும் என்னை இலங்கைக்குச் சென்று வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாயத்தையும் உந்துதலையும் பல வருடத்திற்கு முன்னேயே என்னுள் ஏற்படுத்தியது. இன்று இலங்கை என்னுடைய இன்னொரு வீடு. நான் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ளும் இன்னொரு வீடு. அதுமட்டுமின்றி இந்தியனாகப் பிறந்துள்ள நான், அதன் அடிப்படையில் எனக்கு ஏற்பட்டுள்ள சாதகமான சூழ்நிலையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு என்னுடைய அரசியலை இசைவிணக்கம் செய்ய முற்படும் ஒரு தளம், எங்களுக்குள் பொதுவாக இருக்கும் ஒரு பகுதி வரலாற்றையும் மொழியையும் அடிப்படையாகக் கொண்டு மட்டுமே இலங்கையில் உள்ள தமிழர்களின் வரலாற்றையும் வலியையும் போராட்டத்தையும் என்னுடையதாக்கிக் கொள்ள முடியாது. அதேபோல, 'தமிழ் மக்கள்' என்ற பொதுப்படையான, எளிமையான அரசியலையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் இது போன்ற புரிதல் பல நேரங்களில் குறுகிய சூளுரை அரசியலை முன்னெடுப்பதோடு, யாரைப் பிரதிநிதியாகச் செயல்படுத்துகிறோமோ அவர்களையே குரூரமாக அமைதிப்படுத்தவும் அழிக்கவும் செய்யக்கூடிய தன்மையுடையது.

மேலே கூறியுள்ள விளக்கத்திற்கான காரணம், இலங்கையின் மீது அக்கறை எடுத்துள்ள பெரும்பான்மை இந்தியர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால். எப்படி இந்தியப் பெருநிலத்தில் வசிக்கக்கூடிய மக்களுக்கு, நாகாலாந்து ஒரு தொலைதூர உண்மையாக இருக்கிறதோ, அதேபோல விந்திய மலைத் தொடர்களுக்கும் மேலே இருக்கும் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு, இலங்கையும் இருக்கிறது. அதனால் அதைப் பற்றித் தெரிந்து கொள்ளவோ புரிந்து கொள்ளவோ பங்கெடுக்கவோ செய்வதில்லை. தமிழ்நாட்டில் உள்ள நம்மில் பலருக்குக் காஷ்மீர் ஒரு தொலைதூரப் போராட்டமாக இருப்பது போன்றதுதான் இதுவும். மொத்தத்தில் இந்தியாவில், இலங்கைக்குத் தொடர்புடைய பல குரல்கள், தமிழ்நாட்டில் இருந்து வெளிவருகின்றன. அதனால் இந்த அரசியல் தொடர்பை விளக்க வேண்டியது அவசியமாகிறது, மேலே குறிப்பிடப்பட்டுள்ள சாதகமான சூழ்நிலை என்னை இந்த அரசியல் விவாதத்தில் இருத்திக் கொள்வதற்கான விளக்கம்.

இந்தக் கட்டுரை, இன்றைய சூழலில் வட கிழக்கு இலங்கையைச் சூழ்ந்துள்ள பிரச்சனைகளை எடுத்துக்கூறுவதற்கான முயற்சி.

தென் இலங்கையில் பிரச்சனைகளே இல்லை என்று சொல்லிவிட முடியாது. அப்பகுதியில் வேலையின்மை, வறுமை போன்ற பல வளரும் நாடுகளில் இருக்கும் பிரச்சனைகள் இருக்கின்றன. மிக முக்கியமாக, சாதாரண மக்கள் மத்தியில் "பிறர்" மீதான வெறுப்பை ஏற்படுத்தக்கூடிய, ஒரு சர்வாதிகாரியின் பிடியில் இருக்கும் அவர்களின் மதம், மொழி மற்றும் வாழ்வே அவர்களை அடிமைப்படுத்தப் பயன்படுத்தப்படும் ஆயுதமாக மாறியுள்ளது. இலங்கையின் தென் பகுதியில் வாழும் தமிழ்மக்கள் இத்தனை வருடகாலங்கள் மறைவான வாழ்க்கை வாழ்ந்தது போலவே இப்போதும் வாழ்ந்து வருகிறார்கள்.

சாதாரண மக்கள் மத்தியில் "பிறர்" மீதான வெறுப்பை ஏற்படுத்தக்கூடிய, ஒரு சர்வாதிகாரியின் பிடியில் இருக்கும் அவர்களின் மதம், மொழி மற்றும் வாழ்வே அவர்களை அடிமைப்படுத்தப் பயன்படுத்தப்படும் ஆயுதமாக மாறியுள்ளது. இலங்கையின் தென் பகுதியில் வாழும் தமிழ்மக்கள் இத்தனை வருடகாலங்கள் மறைவான வாழ்க்கை வாழ்ந்தது போலவே இப்போதும் வாழ்ந்து வருகிறார்கள்.

வட கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்கள், ஒரு கொடூரமான போர் காலகட்டத்தில் வாழ்ந்த தழும்புகளைத் தாங்கியுள்ளார்கள், ஒரு தலைமுறையே போரைத் தவிர வேறெதுவும் தெரியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்துள்ளார்கள். இந்த அடிப்படையில் தான் போரின் "முடிவை' பற்றியும் அது விட்டுச்சென்றுள்ள ஓடுகளையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

இலங்கையின் வட கிழக்குப் பகுதியில் வேலை செய்துவரும் பல இலங்கை நண்பர்களிடம் அப்பகுதியில் இருக்கும் பிரச்சனைகள் அடங்கிய பட்டியலை அனுப்புமாறு கேட்டிருந்தேன். போர்ச் சூழலில் நீண்ட காலம் பணிபுரிந்து வந்துள்ளதால் ஏற்பட்டுள்ள மரத்துப்போன வலியுடன் அவர்களுக்கு முதலில் தோன்றிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலை அனுப்பி வைத்தார்கள். இந்த இடத்தில் எச்சரிக்க விரும்புகிறேன். கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியல் நம்மைக் கையாலாகாதவர்களாக உணர வைக்கும். ஆனால், இந்தக் கட்டுரையிலேயே, நம்முடைய கையாலாகாததனத்திலிருந்து மீண்டு சென்று, நாம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யலாம் என்ற கேள்விகளை எழுப்ப முற்படுவோம்.

பிரச்சனைகளின் பட்டியல்:

1. "வளர்ச்சித் திட்டங்கள்" என்ற பெயரில் ஏற்கனவே நடந்து வரும் அழிவுகள். சுற்றுலா துறையை வளர்ப்பதற்காக அதிகமான செலவில் ஹோட்டல்கள் ஆகியவை கட்டப்பட்டு வருகின்றன. அங்கு நடக்கவிருக்கும் காமன்வெல்த் போட்டிகளும் மக்களின் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் குழப்பத்துக்கு உள்ளாக்கிவருகின்றன.

2. கேள்வி கேட்கப்படாமல் தொடரும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கெதிரானத் தடையால் தீவு தேசத்திலிருந்து வெளிவரும் உண்மைச் செய்திகள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் தான் இருக்கின்றன. பத்திரிக்கையாளர்கள் பலர் தொடர்ந்த கண்காணிப்பில் வைக்கப்பட்டும் மிரட்டப்பட்டும் வருகின்றனர்.

3. போர் சமயத்திலும் அதன் பிறகும் கைதிகளாகக் கூட்டிச்செல்லப்பட்ட பலரின் உரிமைகள் முழுவதுமாக மறுக்கப்பட்டு வருகின்றன. பல குடும்பங்களுக்குத் தங்களின் உறவினர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதே தெரியாத நிலைமையில், அவர்களைக் கண்டுபிடிக்கவும் எந்த வழியும் இல்லை. சிறையினுள் கொடுமையும் இன்னும் பல அக்கிரமங்களும் தொடர்ந்து வரும் நிலையில், கைதிகளின் மீது குற்ற வழக்குத் தொடர்வதோ, அவர்களை விடுவிப்பதற்கான அறிகுறிகளோ இல்லை.

4. அரசுடனான "அமைதிப் பேச்சுவார்த்தை" என்று கூறப்படும் முயற்சியில் அரசின் பிடியில் மட்டுமே இருக்கிறது. அரசல்லாத அமைப்புகள் இவற்றைக் கையிலெடுப்பது முடியாத காரியமாகவே இருக்கிறது. இந்த முயற்சிகளைத் தடுப்பதற்காக இவ்வமைப்புகள் தொடர்ந்த கண்காணிப்பில் வைக்கப்பட்டு வருகின்றன. அரசுக்கு எதிரான சின்னதொரு குரல் எழுப்பியதால் பல அமைப்புகள் கொடுமையான விளைவுகளைச் சந்தித்துள்ளன.

அரசுடனான "அமைதிப் பேச்சுவார்த்தை" என்று கூறப்படும் முயற்சியில் அரசின் பிடியில் மட்டுமே இருக்கிறது. அரசல்லாத அமைப்புகள் இவற்றைக் கையிலெடுப்பது முடியாத காரியமாகவே இருக்கிறது. இந்த முயற்சிகளைத் தடுப்பதற்காக இவ்வமைப்புகள் தொடர்ந்த கண்காணிப்பில் வைக்கப்பட்டு வருகின்றன. அரசுக்கு எதிரான சின்னதொரு குரல் எழுப்பியதால் பல அமைப்புகள் கொடுமையான விளைவுகளைச் சந்தித்துள்ளன.

5. மறுகுடியமர்த்தல் தொடர்பான எண்ணற்ற பிரச்சனைகள் தொடர்ந்து வருகின்றன. ஜனநாயக ரீதியான, அனைவரும் அணுகும் வண்ணமான, உறுதியான எந்த ஒரு முறையும் செயல்படுத்தப் படவில்லை. நிலம் அளிப்பதற்கு மக்கள் சில ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்கிறது. தொடர்ந்த வெளியேற்றம் மற்றும் போரினால் ஏற்பட்டுள்ள அழிவினால் பெரும்பாலான மக்களுக்கு ஆவணங்கள் சமர்ப்பிப்பது என்பது முடியாத காரியமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. எந்த அதிகார அமைப்பை அணுகவேண்டும் என்பது கூட மக்களுக்குத் தெளிவாக இல்லை. தங்களின் பழைய இருப்பிடங்களிலேயே நிலம் வழங்கப்படும் என்ற நம்பிக்கையில், முகாம்களில் தங்களது இடங்களை விட்டுக் கொடுத்துவிட்டுப் பரிதவிக்கும் அந்த இடைக்காலத்திற்கு அரசு கணக்குக் காட்டுவதில்லை. இதனால் பல குடும்பங்கள் இருக்க இடமில்லாமல், உணவில்லாமல் எந்த அடிப்படை வசதியுமில்லாமல் இருக்கின்றன. மறுகுடியமர்த்தப்படும் மக்களுக்குத் தங்கள் வாழ்வைக் கட்டமைத்துக் கொள்வதற்குத் தேவையான எந்த உதவிகளும் செய்யப்படுவதில்லை. தாங்கள் இழந்த வாழ்வை, சில நேரங்களில் 30 வருடங்களுக்கும் மேலாக, கட்டமைத்துக் கொள்வதற்கான பணமோ, மற்ற அடிப்படைத் தேவைகளோ வழங்கப்படுவதில்லை. ஊழல் மலிந்து கிடக்கிறது என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இதனால் சமூகத்தின் அடிமட்டத்தில் இருக்கும் மக்களால் எந்த உதவிகளையும் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. இந்தப் பணிகளில் பெரும்பான்மை இந்திய மற்றும் இலங்கையைச் சேர்ந்த தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், மக்கள் தங்கள் அரசினைக் கேள்வி கேட்கும் உரிமையை இழந்துள்ளனர்.

6. வட கிழக்குப் பகுதிகள் பலவற்றிலும் இராணுவக் கட்டுப்பாடு அதிகரிக்கப்பட்டுள்ளது. பல பகுதிகள் முழுக்க முழுக்க எந்த ஒரு அரசு பாதுகாப்பும் இல்லாமல், வெறும் இராணுவத்தால் மட்டுமே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அதிபரின் சிறப்புப் படைபிரிவு போன்ற பிற இராணுவப் பிரிவுகள் தங்கு தடையற்ற அதிகாரத்துடன் சில பகுதிகளின் மீது ஆளுமை செலுத்தி வருகின்றன. இங்குப் பல பகுதிகளில் எந்த வேலையையும் செய்ய அதிபரின் சிறப்புப் படையிடம் அனுமதி வாங்க வேண்டும். அவசர காலம் நீட்டிக்கப்பட்டு வருவதாலும், தீவிரவாதச் செயல்கள் தடுப்புச் சட்டம் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வருவதாலும் இப்பகுதிகளில் தொடர்ந்த இராணுவக் கட்டுப்பாட்டை எந்தத் தடையுமின்றிச் செயல்படுத்த முடிகிறது.

அதிபரின் சிறப்புப் படைபிரிவு போன்ற பிற இராணுவப் பிரிவுகள் தங்கு தடையற்ற அதிகாரத்துடன் சில பகுதிகளின் மீது ஆளுமை செலுத்தி வருகின்றன. இங்குப் பல பகுதிகளில் எந்த வேலையையும் செய்ய அதிபரின் சிறப்புப் படையிடம் அனுமதி வாங்க வேண்டும். அவசர காலம் நீட்டிக்கப்பட்டு வருவதாலும், தீவிரவாதச் செயல்கள் தடுப்புச் சட்டம் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வருவதாலும் இப்பகுதிகளில் தொடர்ந்த இராணுவக் கட்டுப்பாட்டை எந்தத் தடையுமின்றிச் செயல்படுத்த முடிகிறது.

7. இந்தப் பிரச்சனைகள் அனைத்தும் குடும்பங்களிலும் வெளிப்படுவதால், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறை அதிகரித்து வருகிறது. இராணுவக் கட்டுப்பாட்டின் இறுக்கத்தில் இருப்பதால், பெண்கள் தங்களுக்கு எதிரான வன்முறை பற்றி முறையிடுவதற்குக் கூடச் சட்டத்தை அணுகுவதில்லை.

8. மனிதாபிமான பணிகள் கூட ஜப்பான், சீனா மற்றும் இந்திய நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் கட்டுவது, மின் உலைகள் கட்டுவது போன்ற பணிகள் மட்டுமன்றி, சாலைகள், சாலை மீதான பறக்கும் பாலம் அமைப்பது போன்ற பணிகளையும் மேற்கொண்டுள்ளன. இது போன்ற பணிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தருவது, சமமான பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும். இதுபோன்ற முயற்சிகள் கண்மூடித்தனமாகச் செய்யப்பட்டு வருகின்றன. நமக்குக் கிடைக்கும் செய்தியின்படி, இந்தியாவைச் சேர்ந்த அரசு சாராப் பெண்கள் அமைப்புக்கு இலங்கையில் மனிதாபிமான வேலைகள் செய்வதற்கான பண உதவியை இலங்கை அரசு வழங்கிவருகிறது. இலங்கையில் எண்ணற்ற அரசு சாரா அமைப்புகள் இருந்தபோதும், அவர்கள் காலம் காலமாக வேலை செய்துவரும் பகுதிகளில் 'பாதுகாப்பான வெளியாட்கள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து வேலை செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

9. இறுதியாக ஆனால் முக்கியமாக, போர்க் குற்றத்தை விசாரிக்கவோ அல்லது ஒப்புக் கொள்ளவோ தேவையான சர்வதேச நெருக்கடி ஏற்படாதது. போதுமான அளவு கவனம் இல்லாதபோதும், ஐநா அறிக்கை மற்றும் சேனல் 4 ஆவணப்படம் போன்றவை வரவேற்கத்தக்கன. இந்த ஆதாரங்கள் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டும், அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் சந்தேகத்துக்கு இடமில்லாதவண்ணம் இருந்தபோதும் ( இது போன்ற அப்பட்டமான போர்க் குற்றங்களை நிரூபிக்க வேண்டிய நிலைமையின் முட்டாள்தனத்தை ஒதுக்கிவைத்துப் பார்த்தால் கூட) இந்த ஆதாரங்களைப் பொய்கள் கொண்டு எதிர்த்துள்ளனர். சர்வதேசத் தலையீடு தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்துள்ளது. இதை ஆதரிப்பவர்கள் தொடர்ந்து மிரட்டலுக்கு ஆளாக்கப் பட்டுள்ளார்கள். இதைச் செய்வதற்குத் துணையாக இருப்பது தேசியம் மற்றும் தேசிய இறையாண்மை என்பதன் அடிப்படையில் எழுப்பப்படும் வாதங்கள். இவைதான் ஒரு சர்வாதிகாரத்தில் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள். இலங்கை சர்வதேசத் தலையீட்டை மறுப்பதற்கு ஆதரவாக இருப்பது, இப்பகுதியின் வல்லரசாக விளங்கும் இந்தியாவின் அக்கறையின்மையும், இலங்கை அரசின் அனைத்து நடவடிக்கைகளிலும் இந்தியா முனைப்புடன் பங்கேற்பதும் தான்.

இந்தக் கட்டுரையில் "மறுகுடியமர்த்தல்" தொடர்பான செய்திகளையும் அதிலும் குறிப்பாக நிலம் பிரித்துக் கொடுத்தல் தொடர்பான பிரச்சனைகளையும் தீர ஆராய்வோம். இந்தப் பிரச்சனைகள் எவ்வளவு நுணுக்கமானவை என்றும், இவற்றைக் கையிலெடுப்பதற்குத் தேவை அதே அளவு நுணுக்கமான வேலைகளும்

மே 2011இலிருந்து இலங்கையின் வடக்குப் பகுதியில் இருக்கும் உள்நாட்டு அகதிகள் மற்றும் இப்பகுதிகளுக்குத் திரும்பி வந்தோர்

| | மொத்த மக்கள் தொகை | திரும்பி வந்தவர்கள் | அகதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | முகாம்களில் உள்ள உள்நாட்டு அகதிகள் | ஆதரவளிக்கும் குடும்பங்களுடன் வசிக்கும் உள்நாட்டு அகதிகள் | தற்காலிக இடமாற்றத்தில் உள்ள உள்நாட்டு அகதிகள் | மொத்த அகதிகள் |
| 'புதிய' அகதிகள் | 287,712 | 209,138 | 17,488 | 59,319 | 1,767 | 78,574 |
| 'பழைய' அகதிகள் | 299,557 | 157,269 | 8,521 | 129,902 | 3,865 | 142,288 |
| மொத்தம் | 587,269 | 366,407 | 26,009 | 189,221 | 5,632 | 220,862 |

குறிப்புகள்: Source: UN OCHA, 24 June 2011, pp.1-2

'புதிய' உள்நாட்டு அகதிகள் ஏப்ரல் 2008ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து ஜூன் 2009 ஆண்டு வரை இடம்பெயர்க்கப்பட்டவர்கள்.

'பழைய' உள்நாட்டு அகதிகள் ஏப்ரல் 2008க்கு முன் இடம்பெயர்க்கப்பட்டவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டியிருக்கின்றன, வெறும் ஆடம்பர முழக்கங்கள் மட்டும் போதுமானதாக இருக்காது.



எண்ணிக்கை தொடர்பான கேள்வி

மறுகுடியமர்த்தல் பற்றிப் பேசும்போது எத்தனை மக்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள முன்பக்கம் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பார்க்கவும்.

இவை வெறும் அரசு எண்ணிக்கை மட்டுமேயென்பதால், இலங்கையில் உள்ள களச்செயல்பாட்டாளர்கள் இந்தக் கணக்குகளை மிகக் கவனமாகவே பயன்படுத்துகிறார்கள். பவானி பொன்சேகா விளக்குவது போல:

"உள்நாட்டு அகதிகள் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரபூர்வ எண்ணிக்கை இருந்தபோதிலும், அரசின் அதிகாரபூர்வ அமைப்புகளில் பதிவு செய்யப்படாதோர் அல்லது இடப்பெயர்வு என்னும் விளக்கத்தில் விடுபட்டோர் எண்ணற்றோர் உள்ளனர். இவர்களுள், ஆதரவளிக்கும் குடும்பங்களுடன் வசிப்போர், இரவு நேர உள்நாட்டு அகதிகள் மற்றும் தங்களின் சொந்த மாவட்டங்களுக்குத் திரும்பி வந்த பிறகு கைவிடப்பட்டுள்ள நிலையில் இருக்கும் மக்கள் ஆகியோர் அடங்குவர். எனவே, இடப்பெயர்ப்பின் உண்மையான இயல்பை அறிந்து கொள்ள, வெறும் அரசு எண்ணிக்கையை மட்டும் சார்ந்திராமல், சொந்த மாவட்டங்களுக்குத் திரும்பிச் செல்லும் மக்களின் வாழ்நிலை, அவர்களால் தங்கள் சொந்த வீட்டிற்கோ, நிலங்களுக்கோ திரும்பிச் செல்ல முடிகிறதா அல்லது மறுகுடியமர முடிகிறதா என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அரசு, கள உண்மைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நிலைமையைக் கட்டமைப்பதற்காக மட்டுமே இந்த எண்ணிக்கைகளைப் பயன்படுத்தி வருகிறது."

இந்த எண்ணிக்கைகளில் குறைபாடு இருந்த பொழுதும், எத்தனை மக்கள் இடம்பெயர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதையும், இவர்களை மறுகுடியமர்த்தல் எவ்வளவு சவாலான விஷயம் என்பதையும் இந்த எண்ணிக்கையின் மூலம் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. 20,238,000 மக்கள் இருக்கின்ற ஒரு நாட்டில், இதிலும் 18 சதவிகிதம் தமிழர்களும் (மலையகத் தமிழர்கள் உட்பட) 7 சதவிகிதம் இஸ்லாமியர்களும் இருப்பதாகச் சொல்லப்படும் நாட்டில், அகதிகளின் எண்ணிக்கை இவ்வளவு என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்தகவல்களின் மூலம், தமிழ் மற்றும் இஸ்லாமிய மக்கள் தொடர்ந்து இடப்பெயர்வுக்கு ஆளாகியுள்ளார்கள் என்பது விளங்குகிறது. மறுகுடியமர்த்தல் இலகுவான வேலையாக இருக்கப்போவதில்லை. இதற்குத் தேவை திறமையான செயல்பாடும், அதைவிட முக்கியமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் நலனை முதன்மையாகக் கொண்ட அரசியல் விருப்பமும் தான். இந்த அரசியல் விருப்பம் இலங்கை அரசிடம் சுத்தமாக இல்லை. இலங்கை அரசின் இத்தகைய விருப்பமின்மையை ஆதரிக்கும் வண்ணமும், ஊக்கமளிக்கும் வண்ணமும் அண்டை நாடுகள் செயல்படுகின்றன. இந்தப் பட்டியலில் முதலிடத்தை இந்தியா பிடித்துள்ளது.

மறுகுடியமர்த்தல் இலகுவான வேலையாக இருக்கப்போவதில்லை. இதற்குத் தேவை திறமையான செயல்பாடும், அதைவிட முக்கியமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் நலனை முதன்மையாகக் கொண்ட அரசியல் விருப்பமும் தான். இந்த அரசியல் விருப்பம் இலங்கை அரசிடம் சுத்தமாக இல்லை. இலங்கை அரசின் இத்தகைய விருப்பமின்மையை ஆதரிக்கும் வண்ணமும், ஊக்கமளிக்கும் வண்ணமும் அண்டை நாடுகள் செயல்படுகின்றன. இந்தப் பட்டியலில் முதலிடத்தை இந்தியா பிடித்துள்ளது.

மக்கள் தங்கள் நிலத்தை விட்டு எதற்காக வெளியேறினார்கள்?

இடம்பெயர்க்கப்பட்ட தமிழ் அல்லது இஸ்லாமியரின் மறுகுடியமர்த்தல் பற்றிச் சிந்திக்கத் தொடங்குவதற்கு முன், இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்க்கப்பட்ட காரணத்தை நினைவுறுத்திக் கொள்வது அவசியம். காரணங்கள் பின்வருமாறு:

1. முதல் காரணம் போர். இதன்மூலம் பல காரணங்களுக்காக இந்தப் போர் நடக்கும் பகுதியில் வசிக்கும் மக்கள் இடம்பெயர்க்கப்பட்டார்கள். அதில் முக்கியமான காரணம், அரசு மற்றும் அரசல்லாத குழுக்களால் இவர்களின் நிலம், வீடுகள் மற்றும் பொது இடங்களான பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவை ஆக்கிரமிக்கப்பட்டன. அரசல்லாத குழுக்களைப் பொறுத்தவரையில், தன்னார்வ "தானம்" என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. இது போன்ற ஒரு செயலின் "தன்னார்வம்" வட கிழக்கு இலங்கையில், போரின் தொடக்கத்திலிருந்தே, புரிந்து கொள்வதற்கு இலகுவான கதையாக இருந்ததில்லை. இரு தரப்பு ஆக்கிரமிப்பும் வெவ்வேறு நிலையில் நடப்பதால் இவற்றை ஒப்பிட முடியாது என்ற போதிலும் இரண்டில் ஒன்றை நியாயப்படுத்த முயற்சிப்பது என்பது தவறானதாகவும் மூன்று வருட களஆய்வு உண்மையின் வரலாற்றிற்கு எதிரானதாகவும் இருக்கும்.

2. போரின் உக்கிரம் தாங்கமுடியாமல் மக்கள் தங்கள் இடங்களை விட்டு வெளியேறுவது என்பது கண்கூடான காரணம். பலர் மரணத்திலிருந்து நூலிழையில் தப்பித்ததாலும், இன்னும் பலர் குடும்ப உறுப்பினர்கள் கணக்கற்றோரை இழந்ததாலும் தங்கள் வாழ்விடங்களிலிருந்து வெளியேறினார்கள். சில நேரங்களில் வாழ்வாதார இழப்பும் கடுமையான கட்டுப்பாடுகளின் கீழ் வாழ முடியாத நிலையும் மக்களை அவர்களின் இடங்களிலிருந்து வெளியேற வைத்திருக்கிறது. பெரும்பாலான நேரங்களில் மேலே கூறப்பட்டுள்ள காரணங்களில் கூட்டுப் பாதிப்புகள் காரணமாக இருந்துள்ளன.

3. மக்கள் வெளியேறுவதற்கான மற்றொரு காரணம்; அவர்களை அப்பகுதியிலிருந்து வெளியேறுமாறு கூறிய சந்தர்ப்பங்கள் மிக முக்கியமான எடுத்துக்காட்டுகளில் ஒன்று. அக்டோபர் மாதம் 1990 ஆம் வருடம், வடக்கு மாகாணங்களிலிருந்து இஸ்லாமியர்களை புலிகள் வெளியேற்றியது. 24 மணிநேரக் கெடு கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்ட அவர்களில் பெரும்பாலானோர் புட்டலம் மற்றும் பிற பகுதிகளில் தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள்.இப்போது தான் வடக்கு இலங்கைக்குத் திரும்பிச் செல்லத் தொடங்கியுள்ளனர். இது ஒரு சமூகத்தைக் குறிவைத்து நடந்த இடப்பெயர்வு என்பதால் முக்கியமானதாகக் கருதப்பட வேண்டி இருக்கிறது. போர்ச் சூழலில், இலங்கை இராணுவம் தொடர்ந்து அதிக அளவிலான மக்களை அவர்கள் வசிக்கும் இடத்திலிருந்து வெளியேற்றியிருக்கிறது என்பது நாம் அறிந்ததுதான்.

4. இயற்கைப் பாதிப்புகள், இலங்கையில் மக்கள் வெளியேறுவதற்கான முக்கியமான காரணமாக இருந்துள்ளன. இந்தப் பாதிப்புகளுள் ஒரு மில்லியன் மக்களை வெளியேற்றிய சுனாமியும் ஒன்று. இந்தத் தீவு தேசம் சுனாமியால் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கான உயிரிழப்புகளையும் இடப்பெயர்வுகளையும் சந்தித்துள்ளது. இந்தத் தேசத்தின் 1000 கிமீ கடற்கரை பாதிக்கப்பட்டதோடு, 26 மாவட்டங்களில் 13 மாவட்டங்கள் முற்றிலும் முடங்கிப் போயின. இலங்கையில் மழையினால் ஏற்படும் பாதிப்புகள் வழக்கமான ஒன்று. 2010 திசெம்பர் மாதம் அதிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்புகளை ஏற்படுத்திய சிறிது காலத்திலேயே, 2011 ஆம் வருடம் பிப்ரவரி மாதத்தில், 15 மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இவற்றுள், கிழக்கு மாகாண மாவட்டங்களான அம்பாறை, திரிகோணமலை மற்றும் மட்டக்களப்பு, வடக்கு மாகாண மாவட்டங்களான வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சியில் மட்டுமே 873, 106 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதைத்தவிர 75,245 பேர் இந்த மாவட்டங்களில் உள்ள உள்நாட்டு அகதிகள் முகாம்களிலிருந்தும் நல மையங்களிலிருந்தும் வெளியேறியுள்ளார்கள்.



5. உயர் பாதுகாப்பு மண்டலங்கள் இடப்பெயர்வுக்கான இன்னொரு முக்கியக் காரணம். எடுத்துக்காட்டாக, 2003 ஆம் வருடம் இந்த இடப்பெயர்வுகளின் விவரம் பின்வருமாறு: யாழ்பாணத்தில் மட்டும் 160 சதுர கிலோமீட்டர் அளவுக்கு, அதாவது மொத்த நிலப்பரப்பில் 18% நிலப்பரப்பில் 18 உயர் பாதுகாப்பு மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. புலிகளின் கணக்குப்படி, உயர் பாதுகாப்பு மண்டலங்களுக்குள் 30,000 வீடுகளும் 300 பள்ளிக்கூடங்களும் 25 சாலைகளும் 40 தொழில்மையங்களும் 42,000 ஏக்கர்களுக்கும் மேற்பட்ட பயிரிடக்கூடிய நிலங்களும் இருக்கின்றன. இலங்கையின் சட்டப்படியும் சர்வதேச சட்டப்படியும் உயர் பாதுகாப்பு மண்டலங்கள் அமைப்பதற்கோ, அதற்காக குடிமக்களின் நிலங்களை எடுப்பதற்கோ எந்த அடிப்படையும் கிடையாது. போரின் 'முடிவிலாவது' இந்த நிலங்கள் மக்களுக்கு மீண்டும் தரப்படும் என்று எதிர்பார்க்கலாம். இதற்கு மாறாக இலங்கை அரசு, உயர் பாதுகாப்பு மண்டலங்களை, சிறப்புப் பொருளாதார மண்டலங்களாக மாற்றியுள்ளது. இதற்கு உரிய எடுத்துக்காட்டு திரிகோணமலை மாவட்டத்தில் இருக்கும், சம்பூர் தான். இந்த நிலத்தை முதலில் உயர் பாதுகாப்பு மண்டலமாக அறிவித்ததால், 4000 குடும்பங்கள் இப்பகுதிககளுக்குத் திரும்புவது தடுக்கப்பட்டது. இதன்பிறகு, 2008 ஆம் வருடம், அரசுப் பதிவேடுகளில் இந்த நிலம் சம்பந்தப்பட்ட விவரங்கள் மாற்றப்பட்டுச் சிலர் திரும்பிச் செல்ல முடிந்தது. ஆனால், இந்த நிலக் கையகப்படுத்தலால் பாதிக்கப்பட்டு நிலமின்றி இன்னும் 6000 மக்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில் மகிந்தா ராஜபக்சாவின் அரசு இந்த நிலத்தைச் சிறப்புப் பொருளாதார மண்டலமாக மாற்றும் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த நிலத்தில், இலங்கை அரசு நிறுவனமான இலங்கை மின் வாரியம் மற்றும் இந்திய அரசிற்கும் இடையே கையெழுத்தாகியுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், 500 மெகாவாட் மின் உலை அமைக்கப்படவிருக்கிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இலங்கை அரசு நிலம் கையகப்படுத்துவது புதிய விஷயமில்லை. இந்தக் கையகப்படுத்தலின் போது சிங்களவர்கள் இந்த இடங்களில் குடியமர்த்தப்படுவதும் வழக்கம். வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மற்றும் இஸ்லாமிய மக்களின் நிலங்களைத் திட்டமிட்டுக் கையகப்படுத்தியதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக, மகாவேலித் திட்டத்தின் வரைபடங்கள் இருக்கும். பாசிசத்திற்கும், சமமற்ற வளர்ச்சிக்குமான இணக்கத்திற்கும் இதுவே எடுத்துக்காட்டு.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இலங்கை அரசு நிலம் கையகப்படுத்துவது புதிய விஷயமில்லை. இந்தக் கையகப்படுத்தலின் போது சிங்களவர்கள் இந்த இடங்களில் குடியமர்த்தப்படுவதும் வழக்கம். வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மற்றும் இஸ்லாமிய மக்களின் நிலங்களைத் திட்டமிட்டுக் கையகப்படுத்தியதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக, மகாவேலித் திட்டத்தின் வரைபடங்கள் இருக்கும். பாசிசத்திற்கும், சமமற்ற வளர்ச்சிக்குமான இணக்கத்திற்கும் இதுவே எடுத்துக்காட்டு.

6. மேலே குறிபிட்டுள்ள அனைத்தும் "இடப்பெயர்வு" பிரச்சனையைப் பற்றிப் பேசுவன. இன்னும் பலர், தங்களின் நாட்டை விட்டு வெளியேறி அவர்களால் வேறு எந்த நாட்டிற்குச் செல்ல இயலுமோ அங்குச் செல்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் 73,000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகள், 122 முகாம்களில் வசித்து வருகிறார்கள். இன்னும் 34,000 பேர் முகாம்களுக்கு வெளியில் வசித்து வருகிறார்கள் என்பது அரசு தரும் கணக்கு. 2009ஆம் ஆண்டிற்குப் பிறகு தங்கள் நாட்டிற்குத் திரும்பியவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. உலக நாடுகள் 64இலிருந்து அகதிகளாகப் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 1,46,000. நம்முடைய பொது அறிவு நமக்குக் கூறுவது போல இது பனிப்பாறையின் நுனி மட்டுமே.

மக்களால் ஏன் அவர்களின் நிலங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாது?

"பிரச்சனையின் நேரடித் தாக்கத்தினால் 300,000 மக்கள் இடம்பெயர்க்கப்பட்டுள்ளார்கள். ஆகஸ்டு 12, 2010 ஆம் ஆண்டின் கணக்குப்படி 196, 909 பேர் தங்களுடைய சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றுள்ளார்கள். ஆயினும், இவர்கள் திரும்பிச்சென்றதன் தன்மை என்ன என்பதற்குச் சம்பந்தப்பட்ட கேள்விகளும் நிலையான தீர்வுகளை ஒட்டிய கேள்விகளும் பதிலளிக்கப்படாமலேயே உள்ளன. அதே அமைப்பின் கணக்குப்படி, 34,370 பேர் வவுனியாவில் உள்ள மேனிக் பார்ம் முகாம்களிலும் 2,239 பேர் யாழ்ப்பாணத்தில் உள்ள முகாம்களிலும் - மொத்தத்தில் 36, 609 உள்நாட்டு அகதிகள் முகாம்களில் இன்னும் இருக்கின்றனர். மேலும் 70,949 பேர் ஆதரவு அளிக்கும் குடும்பங்களுடன் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் வசித்து வருகின்றனர். வடக்கு இலங்கையில் 90% மக்கள் மறுகுடியமர்த்தப்பட்டுவிட்டார்கள் என்று அரசும், ஐக்கிய நாடுகள் சபையும் கூறும்போதும், "திரும்பிச் செல்லுதல்" மற்றும் "மறுகுடியேறுதல்" ஆகிய சொற்றொடர்களின் குழப்பத்தினால் அப்பகுதிகளில் உள்ள உண்மை நிலவரத்தைப் பற்றிய கேள்விகள் தொடர்ந்து வருகின்றன. குறிப்பாக, தங்களின் சொந்த மாவட்டங்களுக்குத் திரும்பிச் சென்று ஆனால் மீண்டும் இடப்பெயர்விற்கு ஆளாகிக் கைவிடப்பட்ட நிலையிலோ, மிக மோசமான வாழ்நிலைகளிலோ இருக்கிறவர்கள் சம்பந்தப்பட்ட கேள்விகள் தொடர்கின்றன."

வடக்கு இலங்கையில் 90% மக்கள் மறுகுடியமர்த்தப்பட்டு விட்டார்கள் என்று அரசும், ஐக்கிய நாடுகள் சபையும் கூறும்போதும், "திரும்பிச் செல்லுதல்" மற்றும் "மறுகுடியேறுதல்" ஆகிய சொற்றொடர்களின் குழப்பத்தினால் அப்பகுதிகளில் உள்ள உண்மை நிலவரத்தைப் பற்றிய கேள்விகள் தொடர்ந்து வருகின்றன.

இந்த மேற்கோள் நாம் கையில் எடுத்துள்ள பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதற்கான அடித்தளமாகப் பல வகைகளில் இருக்கிறது.

1. முதலாவதாக, ஒரு குடும்பத்துக்குச் சொந்தமான நிலம் திரும்பத் தரும் நிலையில் இருக்க வேண்டும். தற்போது பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இந்த நிலங்கள், முன்னாள் உயர் பாதுகாப்பு மண்டலங்கள், இந்நாள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக எடுக்கப்பட்டிருக்கலாம்; இராணுவத்தால் 'பாதுகாப்பு காரணங்களுக்காக' கையகப்படுத்தப்பட்டிருக்கலாம். தற்போதைய ஆட்சியின் கீழ் அந்தக் கையகப்படுத்தலைக் கேள்வி கேட்க முடியாது; கண்ணிவெடிகள் இந்த நிலங்களில் இருப்பதும் மிகப் பெரிய தடையாக இருக்கிறது. மக்கள் வசிக்கும் நிலங்களிலிருந்து கண்ணி வெடிகள் களையப்பட்டாலும் விவசாயம் இல்லாதால் வாழ்வாதாரத்திற்கான உத்தரவாதம் ஏதும் இல்லை.

2. அடுத்ததாக எழும் கேள்வி, இந்த மக்கள் எங்கு தான் திரும்பச் செல்வது? சில கிராமங்களில் இருந்த மக்களின் விவரங்கள் முகாமில் குறிக்கப்பட்டிருக்கும். அது போன்ற சந்தர்ப்பங்களில் அவர்கள் அந்தக் கிராமத்திற்குத் திரும்பச் செல்லலாம். இது போன்ற பாதிப்புகள் இல்லாத நேரத்தில், எந்த முறையான திட்டமோ, பாதிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுடனான கலந்தாய்வோ இன்றி வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். தொடர்ந்த இடம்பெயர்தலுக்கு ஆளாக்கப்பட்ட மக்களுக்குக் குறிப்பாக இந்த நிலைமை ஏற்படுகிறது.

3. திரும்பச் செல்வதற்கான இடம் ஒரு குடும்பத்துக்கு இருக்கும் பட்சத்தில், அவர்களின் சொத்துரிமைக்கான சரியான ஆவண ஆதாரம் இருக்க வேண்டும். தொடர்ந்த பிரச்சனைகளால், இது போன்ற ஆதாரங்கள் தொலைந்தோ, அழிந்தோ போயிருக்கும் நிலையில், இம்மக்களிடம் ஆதாரம் எதுவும் இருப்பதில்லை. அசல் ஆவணங்கள் தொலைந்த நிலையில், அதற்கான மாற்று ஆவணங்களைப் பெறுவதற்காக எந்த அதிகாரிகளைச் சந்திப்பது என்று மக்களுக்குத் தெளிவாகத் தெரிவதில்லை. இதற்கான அரசுத் துறையைத் தெரிந்து கொண்டாலும், ஆவணங்களைப் பெறுவதற்காக ஒரு வருடம் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

4. ஆவணங்கள் இருக்கும்போது கூட நிறையக் குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஏற்கனவே குறிக்கப்பட்டிருந்த எல்லைகள் போர்ச் சூழலினால் மாற்றத்திற்குள்ளாகியுள்ளன. மாவட்டங்கள் மாற்றி அமைக்கப்படுவதால், எந்த அரசுத் துறையின் கீழ் அந்த நிலம் வருகிறது என்பதும் குழப்பமாகத் தான் இருக்கிறது. இதனால், அரசுத் துறைகளுக்குள்ளும், மக்கள் மத்தியிலும் நிறையச் சச்சரவுகள் ஏற்படுகின்றன. இந்தச் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கான எந்த வழிமுறையும் அரசிடம் இல்லை. இதற்கும் மேல், இரண்டாம் சொத்துடமை என்ற பிரச்சனையும் இருக்கிறது. இந்தப் பகுதிகளில் இருக்கும் நிலங்கள் பலபத்தாண்டுகளாக நிலத்திற்கு சொந்தக்காரர்கள் அல்லாதவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இதனால் நிலம் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சனை எழுகிறது. இது போன்ற அடிப்படைப் பிரச்சனைகளை அரசாங்கம் கையாளத் தொடங்கவில்லை.

அரசுத் துறைகளுக்குள்ளும், மக்கள் மத்தியிலும் நிறையச் சச்சரவுகள் ஏற்படுகின்றன. இந்தச் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கான எந்த வழிமுறையும் அரசிடம் இல்லை. இதற்கும் மேல், இரண்டாம் சொத்துடமை என்ற பிரச்சனையும் இருக்கிறது. இந்தப் பகுதிகளில் இருக்கும் நிலங்கள் பலபத்தாண்டுகளாக நிலத்திற்கு சொந்தக்காரர்கள் அல்லாதவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இதனால் நிலம் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சனை எழுகிறது. இது போன்ற அடிப்படைப் பிரச்சனைகளை அரசாங்கம் கையாளத் தொடங்கவில்லை.

5. இங்கு நாம் நினைவில் இருத்திக் கொள்ளவேண்டிய விஷயம் என்னவென்றால், மறுகுடியமர்த்தலுக்கான பயணத்தைத் தொடங்குவதற்கு, முகாமில் உள்ள ஒருவர் தன் இடத்தை விட்டுக் கொடுத்துவிட்டு வெளியேற வேண்டும். ஆவணங்கள் இல்லாத காலகட்டத்தில் அல்லது திறமையற்ற இந்த நிர்வாகம் அவருக்கான நிலத்தை அவருக்கு அளிக்கும் வரையில், அவர் தங்க இடமின்றி அடிப்படை வசதிகள் இன்றித் தத்தளிக்கும் நிலை ஏற்படுகிறது. இவர்கள் அரசின் எந்த உதவியும் இல்லாமல் ஆதரவளிக்கும் குடும்பங்களுடன் நீண்ட காலம் தங்கி இருக்க நேருவதால் இந்த இடைபட்ட காலகட்டம் மிக பிரதானமான பிரச்சனையாக இருந்து வருகிறது.

6. அப்படியே நிலம் ஒதுக்கப்பட்டாலும், வசிக்கும் நிலத்திற்கு, விளைநிலத்தைவிட முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே கூறியது போல, அவர்களின் முக்கியமான தொழிலான விவசாயத்தை மீண்டும் தொடங்குவது கடினமாகிறது. மேலும், உள்நாட்டு அகதிகளின் மறுகுடியமர்த்தலுக்கு எந்த உதவியும் செய்யப்படுவது கிடையாது. அவர்களின் நிலங்களுக்கு, சில நேரங்களில் 25 வருடங்களுக்குப் பிறகு, திரும்புவோருக்கு அவர்கள் வாழ ஏதுவான எந்த உதவியும் செய்யப்படாமல் நிர்க்கதியாக விடப்படுகிறார்கள். தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கான காலம் வரையிலும் அவர்களுக்கு எந்த அடிப்படை வசதியும் கூடச் செய்து தரப்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. மனித உரிமை அமைப்புகளின் மீதான கட்டுப்பாடுகள் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் தடுக்க வழிவகை செய்கின்றன.

7. மேலும், ஏற்கனவே சொந்த நிலம் இல்லாதவர்களுக்கோ மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டதன் பிறகும், நிலத்திற்குரிய ஆவணங்கள் கண்டுபிடிக்க முடியாதவர்களுக்கோ, இலங்கையின் புதிய சட்டத்தின்படி நிலம் ஒதுக்கப்படமாட்டாது.

8. இங்கு நினைவுகொள்ள வேண்டிய இன்னொரு விஷயம் என்னவென்றால் வாழ்வைக் கட்டமைத்துக் கொள்வதற்கான எந்த அடிப்படை வசதிகளும் இல்லாதவர்களே , தங்கள் ஊர்களுக்குத் திரும்பச் செல்ல வேண்டும் என்று எண்ணுகிறார்கள். உதாரணமாக யாழ்ப்பாணத்திற்குத் திரும்பச் செல்லும் இஸ்லாமியர்கள் அனைவரும், 1990இல் வெளியேற்றப்பட்ட இஸ்லாமியர்களில் தாங்கள் இடம்பெயர்ந்த புதிய இடங்களில் வாழ்வைக் கட்டமைத்துக் கொள்ள முடியாத ஏழ்மையான நிலையில், முகாம்களில் இருக்கும் இஸ்லாமியர்களே யாழ்ப்பாணத்திற்குத் திரும்பச் செல்ல வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். இந்த நிலையில் மேற்சொல்லப்பட்டுள்ள அனைத்துப் பிரச்சனைகளும் பன்மடங்காக அதிகரிக்கின்றன.

முதற்கட்டமாக 1000 வீடுகளைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாமதத்திற்கான காரணம் இத்திட்டத்தில் யாருக்கு அதிக அதிகாரம் உள்ளது என்பதைப் பற்றியதாக இருக்கிறது என்று இன்னும் உறுதிசெய்யப்படாத தகவல் தெரிவிக்கிறது. இதில் வழக்கம் போல இந்திய அரசு முழு அதிகாரம் கேட்டுத் தனது 'பெரிய அண்ணன்' போக்கைப் பின்பற்றுவதாகத் தெரிகிறது.

இந்தச் சூழ்நிலைகளில் தான், வடக்கு இலங்கையில் உள்நாட்டு அகதிகளுக்கு வீடு கட்டித் தரும் பெரியளவிலான ஒரு திட்டத்தை இந்திய அரசு கையில் எடுத்துள்ளது. இந்திய அரசும், அதன் " ஆலோசனை நிறுவனங்கள்" இரண்டும், இந்துஸ்தான் ப்ரிஃப்பாப் லிமிடெட் மற்றும் ஆர்பிபி இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட், வடக்கு இலங்கையில் 50,000 வீடுகளைக் கட்டித் தரும் திட்டத்தைக் கையிலெடுத்துள்ளன. முதற்கட்டமாக 1000 வீடுகளைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாமதத்திற்கான காரணம் இத்திட்டத்தில் யாருக்கு அதிக அதிகாரம் உள்ளது என்பதைப் பற்றியதாக இருக்கிறது என்று இன்னும் உறுதிசெய்யப்படாத தகவல் தெரிவிக்கிறது. இதில் வழக்கம் போல இந்திய அரசு முழு அதிகாரம் கேட்டுத் தனது 'பெரிய அண்ணன்' போக்கைப் பின்பற்றுவதாகத் தெரிகிறது. இரண்டு அரசாங்கங்களும், நிறுவனங்களும் பணத்திற்காக இத்திட்டத்தைப் பயன்படுத்திச் சண்டையிடுவதால், இதற்கான தீர்வு விரைவில் கிடைக்காது.

இந்திய அரசின் அதிகாரபூர்வச் செய்திக் குறிப்பில், முதற்கட்டத் திட்டத்திற்குத் தேவையான பயனாளிகளின் தகவல் அடங்கிய பட்டியலைக் கூட இலங்கை அரசு தாமதிக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சரியான நில உரிமை உள்ளவர்களுக்கு மட்டுமே நிலம் வழங்கப்படும் என்பது நாம் அறிந்ததே. இதனால் ஆவணங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் வரும். இங்கு ஆளுமைத் துறைகள் அடிப்படையான விஷயங்களைக் கூடச் சரியாகச் செயல்படுத்தாமல் இருக்கும் நிலையில், வெளிப்படையான செயல்பாடுகளை எதிர்பார்ப்பதே தவறு. ஊழல் மற்றும் நமக்குப் பரிச்சயமான இன்னும் பல பிரச்சனைகளும் அதிக அளவில் இருக்கும். இதையெல்லாம் மீறி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு கட்டாய இழப்பீடு தருவது போன்ற அடிப்படை மனித உரிமைகளைப் பற்றிக் கூட இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தாத இந்திய அரசு, வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை மட்டும் நடத்துவது சரியா என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கேள்வி தொக்கி நிற்கிறது.

வரலாற்றில், நிலம் தொடர்பான கேள்விகள் அரசு, வர்த்தக நிறுவனங்கள் மற்றும் மக்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையாக இருந்தது கிடையாது, குடும்பத்திற்குள்ளான பேச்சுவார்த்தையாகவே இருந்திருக்கிறது. பெண்வழிக் குடும்பங்கள் பற்றியும், நிலத்திற்கான உரிமையைப் பெண்களுக்கு வழங்குவது போன்ற விவாதங்கள் இருந்தாலும், இவற்றை நடைமுறைப்படுத்துவது இயலாத ஒன்றாகவே இருந்துள்ளது. ஆண் துணை இல்லாதபோதே பெண்கள் பெயரில் ஆவணங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆண்கள் இல்லாத நிலையையும், நிரூபிக்க வேண்டிய பொறுப்பு பெண்ணினுடையதே. அவளுக்கான சம அதிகாரமும், பாதுகாப்பும் சட்டதிட்டங்களின் ( உள்ளூர் மற்றும் பிற) மூலம் வழங்கப்பட்டுள்ளதா என்பதெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவது கிடையாது.

வரலாற்றில், நிலம் தொடர்பான கேள்விகள் அரசு, வர்த்தக நிறுவனங்கள் மற்றும் மக்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையாக இருந்தது கிடையாது, குடும்பத்திற்குள்ளான பேச்சுவார்த்தையாகவே இருந்திருக்கிறது. பெண்வழிக் குடும்பங்கள் பற்றியும், நிலத்திற்கான உரிமையைப் பெண்களுக்கு வழங்குவது போன்ற விவாதங்கள் இருந்தாலும், இவற்றை நடைமுறைப்படுத்துவது இயலாத ஒன்றாகவே இருந்துள்ளது. ஆண் துணை இல்லாதபோதே பெண்கள் பெயரில் ஆவணங்கள் கொடுக்கப்படுகின்றன.

முடிவுரை:

நாம் இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சனையைப் பகுத்துப் பார்த்தது போல மேலே குறிப்பிடப்படுள்ள அனைத்துப் பிரச்சனைகளையும் சிறு சிறு விஷயங்களாகப் பகுத்துப் பார்க்க முடியும். இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை தொடர்பான பிரச்சனைகளில் வேலை செய்வதற்குத் தொடர்ந்த, ஆழ்ந்த புரிதலும் சின்னஞ்சிறு தகவலையும் ஆராய்வதற்கான கவனத்துடனும் செயல்பட வேண்டியுள்ளது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலில் கூறியது போலப் பெரிய சூளுரைகளால் நாம் யாரின் பிரதிநிதியாகப் பேசுகிறோமோ அவர்களையே ஒதுக்கிவிட நேரும் என்பது ஒரு காரணம். இரண்டாவதாக, சிறு தகவல்களில் கவனம் செலுத்துவதின் மூலம் மக்கள் நலன் சம்பந்தப்பட்ட பணிகளில் குறுகிய காலத்தில் நிறையச் சாதிக்க முடியும், நீண்ட காலத்தில் இலங்கையின் சர்வாதிகார ஆட்சியைக் கேள்விக்குள்ளாக்கும் வேலைகளுக்கும் பயன்படும்.

இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, "இந்தியக் குடிமகளாக" நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள கட்டாய அடையாளத்தைச் சுமந்தவர்களாகவும் இந்த அடையாளத்தை எதிர்ப்பவர்களாகவும் படுகொலை செய்யப்பட்ட மக்களின் மீது அக்கறை கொண்டுள்ளவர்களாகவும் இலங்கையின் இன்றைய நிலையை அணுகினால், ஒரு சில வழிகள் புலப்படும்.

முதலில் பலபத்தாண்டுகளாக நாம் மேற்கொண்டு வரும் ஆடம்பரச் சூளுரை அரசியலில் இருந்து விலகுவது அவசியமாகிறது. முற்றும் அழிந்து, அதனால் ஏற்படும் குழப்பத்திலிருந்து புரட்சிகரமான மாற்றங்களும் புதிய கற்பனைகளும் உருவாவதற்கான வாய்ப்புகள் நமக்குப் பல நேரங்களில் புலப்பட்டுள்ளன. இன்று இலங்கையில் நிலவுவது அப்படி ஒரு சூழ்நிலை தான். இந்தச் சூழ்நிலையில் இலங்கைப் பிரச்சனையை நாம் அணுகி வந்துள்ள விதத்தையும் அதை விளக்க நாம் பயன்படுத்தி வந்துள்ள மொழிநடையையும் நாம் மறுபரிசீலனை செய்ய ஏதுவான நேரம் இது. அன்றாட வாழ்க்கையின் ஒரு முக்கியமான அங்கமாக இருந்த கிளர்ச்சிக் குழுக்கள் இப்போது இலங்கையில் இல்லாத நிலையில், இலங்கையின் வரலாற்றைத் திறந்த மனதுடன் திரும்பிப் பார்க்கவும் இலங்கைப் பிரச்சனையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளின் அரசியலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களையும் பகுத்தறியும் சமயம் வாய்த்துள்ளது. மிக முக்கியமாக இலங்கையில் இருக்கும் இஸ்லாமியர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள், மட்டக்களப்புத் தமிழர்கள், திரிகோணமலைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், தமிழ்க் கிறித்தவர்கள், மீனவச் சமூகத்தைச் சேர்ந்த ஏழை மக்கள் மற்றும் சிங்களவர்கள் என்ற பன்முகப்பட்ட அடையாளங்களை உண்மையில் உணர்ந்து கொள்வதற்கான தருணம் இது. இக்குழுக்களுக்கு இடையேயான வரலாற்றுப் பாரம்பரிய அனுபவ வித்தியாசங்களையும், தற்காலத் தேவைகளையும் புரிந்து கொண்டால் மட்டுமே, இது தொடர்பான வேலைகளில் நம்முடைய ஈடுபாடு அர்த்தமுள்ளதாக அமையும். பரந்துபட்ட பேச்சுகளால் ஈடு செய்ய முடியாத இழப்புகள் ஏற்பட்டுத் தற்போது ஒரு சர்வாதிகாரத்தின் கீழ் நம்மைக் கொண்டுவந்துள்ளது. இதற்கு மேலும் இந்தப் போக்குகளைத் தொடர முடியாது.

இரண்டாவதாக, இந்தியாவில் உள்ள களப்பணியாளர்கள் என்ற முறையில் நமக்கு உள்ள பாதுகாப்பையும், பாஸ்போர்டையும் பயன்படுத்திக் கொண்டு , வடக்கு மற்றும் கிழக்கு இலங்கையின் நிலையை நாம் நேரில் சென்று பார்க்கவேண்டியது அவசியமாகிறது. உடன் பணியாற்றுவோர் பலர், தாங்கள் பல வருடங்களாகப் போராடிக்கொண்டிருக்கும் இந்த நிலத்தை ஒரு முறை கூட நேரில் சென்று பார்க்காதது என்னை ஆழ்ந்த குழப்பத்தில் ஆழ்த்துகிறது. இலங்கை போன்ற போர்ச் சூழலில் இல்லாதவர்களாக நமக்கு இருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அங்குச் சென்று நேரில் நிலைமையைப் பார்த்தால் மட்டுமே,போர்ச் சூழலும் இழப்பும் போரின் நிதர்சனமான உண்மைகளும் நமக்குப் புரியும். வடக்கு இலங்கையின் ஏ9 நெடுஞ்சாலை வழியே முதன்முறையாக நான் பயணம் செய்தது என் வாழ்க்கை முழுக்கவும் நினைவில் இருக்கும். கடந்த பத்து ஆண்டுகளாக இந்தியாவில் இலங்கை பற்றியான களவேலை செய்பவர்களுக்கு, இலங்கைக்குச் செல்வது ஏறக்குறைய இயலாத காரியமாகவே இருந்துள்ளது. இதற்கு முந்தைய தலைமுறைகளில் களச் செயல்பாட்டாளர்களால், இலங்கை அரசுடனோ, LTTE உடனோ, பிற அமைப்புகளுடனோ பயணம் செய்யும் வாய்ப்பு இருந்தது. நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களை நேரில் சென்று பார்க்க வேண்டியது அவசியம் என்பதால், நமக்குக் கருத்தளவில் ஒப்புதல் இல்லாத அமைப்புகள், வெளிநாட்டு அரசல்லாத அமைப்புகளுடன் அங்கே செல்வது அவசியமாகிறது. இலங்கை அரசுடன் பயணம் செய்யும் வாய்ப்பும் இல்லை, அதனால் எந்தப் பயனும் இல்லை என்பது நாம் நன்கு அறிந்ததே. அதேநேரத்தில், அரசுக்கு ஆபத்தற்றதாகப் பார்க்கப்படும் மனிதாபிமான அடிப்படையிலான வேலைகளைச் செய்யும் அரசல்லாத அமைப்புகளுடன் அங்குச் செல்வது அவசியமாகிறது. இது போன்ற வேலைகளுக்கான இடமும் இலங்கையில் குறைக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ள களச்செயல்பாட்டாளர்கள், இலங்கையின் மக்களின் தமிழுடன் ஒத்துபோகக் கூடிய விதமான தமிழைப் பேசக்கூடியவர்களாக நமக்கு இந்தப் பொறுப்பு அதிகமாகவே இருக்கிறது. உண்மையற்ற, ஆழமற்ற செய்தி ஊடகங்களுக்கு மத்தியில் நாமே நேரில் சென்று தகவல் சேகரிப்பது மிக அவசியமாகிறது. பகுத்தறியும் தன்மை அதிகப் பயன்பாட்டில் இருக்க வேண்டியது இலங்கைப் பிரச்சனைகள் போன்றவற்றில் மிக அவசியம். அதுமட்டுமின்றி, எப்போதுமே அதிக உதவி ஆபத்தை

இந்தியாவில் உள்ள களப்பணியாளர்கள் என்ற முறையில் நமக்கு உள்ள பாதுகாப்பையும், பாஸ்போர்டையும் பயன்படுத்திக் கொண்டு , வடக்கு மற்றும் கிழக்கு இலங்கையின் நிலையை நாம் நேரில் சென்று பார்க்கவேண்டியது அவசியமாகிறது. உடன் பணியாற்றுவோர் பலர், தாங்கள் பல வருடங்களாகப் போராடிக்கொண்டிருக்கும் இந்த நிலத்தை ஒரு முறை கூட நேரில் சென்று பார்க்காதது என்னை ஆழ்ந்த குழப்பத்தில் ஆழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவிக்கப் போவதில்லை.

இப்போது ஊடக செய்திகளைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. ஊடக உலகின் ஒரு பகுதி கோட்பாடுகளற்று, பொறுப்பற்றுச் செயல்பட்டு வரும் நிலையையும், மறு பகுதி கருத்துச் சுதந்திரமின்றி மொத்தமாக வேட்டையாடப்பட்டு வருவதையும் பார்க்கிறோம். இதனால் நமக்குக் கிடைக்கும் செய்திகளை ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமாகிறது. நமக்குக் கிடைக்கும் செய்திகள் எங்கிருந்து வருகின்றன என்பதைத் தெரிந்து கொண்டு அந்தச் செய்திகளைப் படிக்கும் போது இவற்றை மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

உச்சகட்ட சந்தர்ப்பங்களில் நேர்மையான எண்ணம் கொண்ட இந்திய அமைப்புகள் கூட இலங்கை அரசுடன் இணைந்து வேலைகள் செய்ய வேண்டியிருகிறது. இலங்கையில் உள்ள தொண்டு நிறுவனங்களைத் தவிர்த்து இலங்கை அரசு தங்களுடன் இணைந்து வேலைகள் செய்வது எதற்காக என்று அவர்களே, அவர்களைக் கேட்டுக் கொள்வார்கள் என்று நாம் கற்பனை செய்து கொள்வோம். அதனைத் தொடர்ந்து தாங்கள் ஏன் அங்குக் கொண்டு வரப்பட்டுள்ளோம் என்பதன் அரசியலை அவர்கள் அறிந்து கொள்ள நேரிடும். தோழமை நல்குதலிலும் பிறர் பிரச்சனையைத் நமதாக்கிக் கொள்வதிலும் நாம் கவனத்துடன் செயல்பட வேண்டும். பொதுவான வரலாறு நமது பலம் என்ற போதிலும் அதே வரலாற்றில், வாழிடங்களில், அடையாளங்களில் ( அரசால் புகுத்தப்பட்டவை என்னும் போதிலும்) நமக்குள் இருக்கும் வித்தியாசங்கள், வேறுபட்ட வரலாற்றை எடுத்துக் காட்டுகின்றன.

உறுதியாக, நாம் ஒரு சூளுரையின் பின்னால் நமது உழைப்பைச் செலுத்த வேண்டும் என்று எண்ணினால், அது "இராஜபக்சேவை சர்வாதிகாரியாக அறிவிக்க வேண்டும்" என்ற சூளுரையாகத் தான் இருக்க வேண்டும். குழப்பங்களும், நிலைபுரியாத தன்மையும் நீண்டு கொண்டிருக்கும் வேளைகளில் இதனைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கலாம். போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலை ஆகிய வாதங்கள் எளிமையானதும், மீள யுத்தியின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மக்களுக்கு எதிரானதாகவும் இருக்கின்றன. மேலும், இந்த வாதங்கள் இலங்கையின் இன்றைய நிலைமையை முழுமையாக எடுத்துக் கூறுவதாக இல்லை.

சர்வாதிகாரம் நிலம், சொத்து, மக்களை மட்டும் கைப்பற்றுவது அல்ல, மனதையும் உள்ளத்தையும் கைப்பற்றுவது. சர்வாதிகாரம் மக்களையும் மரங்களையும் மட்டும் கொலை செய்வது அல்ல, நம்பிக்கையையும் கனவுகளையும் எண்ணங்களையும் கொலை செய்வது. நம்மை நாமாக ஆக்கும் விஷயங்களை அத்தனை தடைகளையும் மீறித் தொடர வேண்டியது நமது பொறுப்பு. இலங்கை தற்போது சர்வாதிகாரத்தின் பிடியில் இருக்கிறது என்பதையும் தழும்புகள் பட்ட இந்த நிலத்தில் தன்னுடைய குதிகாலை அழுத்த நினைக்கும் இந்தச் சர்வாதிகாரத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை உரக்கச் சொல்ல வேண்டும்.

இறுதியாக, நமக்கு நம்பிக்கையற்ற தன்மையும் அயர்ச்சியும் மட்டுமே மீதமிருக்கின்றன. இந்த எண்ணத்தைக் கவனமாகக் கையாள்வது அவசியம். இந்த எண்ணம் நியாயமானது என்பது நமக்குத் தெரியும். இருந்தபோதிலும், அயர்ச்சியைத் தாண்டி நம்மைச் சிந்திக்கக் கூடிய தளத்துக்கு எடுத்துச் செல்லும் சில உண்மைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் உணர வேண்டும். போர், அழியாத்தன்மைக்கான குரூர ஆதாரம், குழப்பத்திலும் புதியன பிறப்பதற்கான அடையாளம், கொடுமைகளையும், பிழைத்தலையும் போதுமான அளவு சந்தித்துள்ள புத்துணர்ச்சி.


வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு நாம் முன்னே செல்வது அவசியம். வேறு எதுக்காக இல்லாவிட்டாலும் நாம் ஒரே இடத்தில் நிற்க முடியாது என்பதற்காகவாவது நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். அவதிகள், இழப்புகள், பிழைப்புகள், பொறுப்பு, அன்பு, வெறுப்பு இவற்றுக்கிடையே உள்ள அனைத்து உணர்ச்சிகளையும் தாண்டி இருக்கும் நீண்ட வரலாறு நம்முடையது. இந்தப் பரம்பரையைக் கௌரவப்படுத்த வேண்டாம், பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை மரியாதையோடும் அதே நேரத்தில் மரியாதையில்லாமலும் பார்த்தால், பிறர் செல்லாத நீண்ட தொலைவிற்கு நாம் செல்ல முடியும், சிலர் கற்பனை செய்து வைத்த உலகத்தை நாம் பார்க்க முடியும்.

குறிப்பு:
இக்கட்டுரையை மொழிபெயர்த்தவர்
ஜென்னி

உலகளாவிய நிதி நெருக்கடி அதனைத் தொடர்ந்து பொருளாதாரப் பின்னடைவு 2008, 2009 இல் அனுபவிக்கப்பட்ட சூழ்நிலையில் நிதி நிறுவனங்கள் -வங்கி மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் - என்பவற்றின் உறுதிப்பாடு கேள்விக் குறியாக மாறியுள்ளது. இலங்கையிலும் நிதி நிறுவனங்கள் சரியாக இயங்குவது, இயக்கப்படுவது அவற்றிடையே உறுதியல்லா தன்மைகள் (குறிப்பாக நிதிக் கம்பெனிகள்) பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கக் கூடியவை. இத்தகைய விடயங்களை உள்ளடக்கிய கட்டுரையும் இத் தொகுப்பில் தரப்பட்டுள்ளது. இலங்கைப் பொருளாதாரம் என்பதுகள் மற்றும் தொண்ணூறுகளிலும் அதற்குப் பின்னரும் உயர்ந்த பணவீக்க நிலையினை அனுபவித்துள்ளது. தற்பொழுது பணவீக்கத்தின் வீச்சு குறைந்துவிட்டது. ஆனால் ஒரு கட்டத்தில் ஏறத்தாழ 20 சதவீத வருடாந்த பணவீக்கம் அனுபவிக்கப்பட்டது. ஆசியாவில் இலங்கை உயர்ந்த பணவீக்க நிலையில் உள்ள நாடாகக் கருதப்பட்டது. பணவீக்கத்தின் போக்குகளும் தாக்கங்களும் ஆராயப்படும் கட்டுரையும் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

அறிவுப் பொருளாதாரம், அறிவுச் சமூகம் என்ற எண்ணக் கருக்கள் சமீப காலத்தில் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் அறிமுகம் செய்யப் பட்டதைத் தொடர்ந்து, அத்தகைய முறைமையிலிருந்து விலகிக் கொள்ள முடியாத நிலையில் அதற்குள் சேருவதில் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. உலக மயமாக்கலின் பின்னணியில் இது தவிர்க்க முடியாத நிபந்தனையுமாகின்றது. அவை பற்றிய பிரச்சினைகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும் நோக்கிலான கட்டுரையும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

- முன்னுரையிலிருந்து XIII - XIV




என்.பாலகிருஷ்ணன்
இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திப் பிரச்சினைகள்
- ஓர் சமகால மீளாய்வு.

குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை - 2010.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனத் தமிழ்க் கவிதைப் புலத்தில் ஈழத்துப் பெண் கவிஞர்கள்

■ ரமேஷ்

ஆதிகாலம் தொட்டு இற்றை வரை, மதம் இனம் பண்பாடுகளுடன் இணைந்த சமூக மறுப்புகளும் அதன் வரையறைகளும் பெண்களுக்கெதிரான இறுக்கமான கட்டுப்பாட்டு நிலையைத் தோற்றுவித்தன. பெண் இருப்பும் அதன் இயங்கு நிலையும் ஆண் அதிகாரத்துக்குட்பட்டுச் செயற்படும் ஒன்றாகவே காணப்பட்டது. உடல், உளம், உணர்வுநிலை, மொழிவயப்பட்ட அதன் கருத்தியல், இருப்பு என ஒரு பெண்ணின் அத்தனை கூறுகளையும் இயக்கும் சூத்திரதாரியாக ஆண்மையக் கோட்பாடே செயற்பட்டது. இதன் விளைவாகப் பெண்ணைப் பெண்ணாகப் பார்க்கும் நிலை மாறிப் பெண்ணைத் தம் அடிமையாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் பெண்கள் தாம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம் என்னும் உணர்வின்றிப் பெண்கள் அதிகார மையத்துக்கு உட்பட்டு அடங்கி ஒடுங்கி நசுங்கி வாழ்ந்தனர்.

ஐரோப்பா கண்டத்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் விளைவாகவும் பெண்கல்வியின் தாக்கத்தாலும் சமூகப் பொருளாதார, மத, அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் பெண்மீதான மரபுசார்ந்த சமூகக் கட்டுமானம் தகர்க்கப்பட்டுப் பெண், பெண்ணியம், பெண்ணுரிமை குறித்தான விழிப்புணர்வுகள் ஏற்படத்தொடங்கின. இதன் ஆதார சுருதியாக ஐக்கியநாடுகள் சபை 1975ஆம் ஆண்டை மகளிர் ஆண்டாக அறிவித்ததையும் 1975 தொடங்கி 1985 வரையான பதினொரு ஆண்டுகளை அனைத்துலக மகளிர் ஆண்டாகக் கொண்டாடத் தீர்மானித்ததையும் கூறலாம். இதனையடுத்துப் பெண்களுக்கான, பெண்களை மையமிட்ட, பெண் பிரச்சனைகளை வெளிக்கொணரும் எழுத்துக்களின் தேவை பெண் எழுத்தாளர்களாலும் சிறு சஞ்சிகையாளர்களாலும் உணரப்பட்டன.

சமூக பேதங்களை மையமாகக் கொண்டு பெண்ணடிமையின் பரிணாமங்களை விளக்கும் பொருட்டும்; சமூக தரிசனங்களூடாகச் சமூக அவலங்களை வெளிக்கொணரும் வகையிலும் பெண்ணிலை வாத எழுத்தாளர்களால் ஆக்க இலக்கியங்கள் பல இக்காலப் பகுதியில் படைக்கப்பட்டன. சமூக மதிப்பில் இழிந்த நிலை, சமய தத்துவநோக்கில் வெறுத்து ஒதுக்கப்பட்ட நிலை, கல்வி உரிமை மறுக்கப்பட்ட நிலை, அறியாமை மூடத்தனத்திலும் அமிழ்ந்தநிலை, பெண்சிசுக் கொலை, பால்யவிவாகம், பெண்

இக்கட்டுரையாசிரியர் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். ஆசிரியர் மற்றும் விமர்சகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமையாக்கப்படல், ஆண்களின் பலதாரத்திருமணம், தேவதாசித் திருமணம் (பொட்டுக்கட்டல்), கைம்பெண் மறுமணமறுப்பு, உடன்கட்டைஏறல், பெண்உரிமை மறுப்பு எனப் பிரச்சனைகள் பலவற்றை உள்வாங்கிப் பெண் எழுத்துகள் உருவாகின. கருத்தியலற்ற சூன்ய வாதத்துக்குள் முடங்காத இவ்வெழுத்துகள் சமூகப் பிரக்ஞை மிக்க உயிர்த்துடிப்புள்ள இலக்கியங்களாகப் பரிணமித்தன. இவ்விலக்கிய முயற்சிகள் கண்ணீர்க் கதையாகவோ, கவின் கதையாகவோ அன்றி எளிய மொழியில் காயம்பட்ட அநுபவத்தைக் கனத்த வாத்தையால் வெளிப்படுத்தின. அநுபவச் சூட்டில் மிளிரும் உணர்வுகளை ஆத்ம சுத்தியுடன் உரத்த குரலாக வெளிப்படுத்தக் கவிதையே முக்கிய ஊடகமாகப் பெண்களால் கையாளப்பட்டது.

பெண்ணின் நுண்ணுணர்வுத் தளத்தில் கட்டுருவாக்கம் பெறும் அன்பு, கருணை, வேட்கை, வலி, கனவு ஆகியன உள்ளிட்ட இன்னோரன்ன அகநிகழ்வுகள், கவிதை அழகியல் சார்ந்து பெண் சொல்லாடலுக்கூடாக வெளிப்படும்போது, நவீனக் கவிதை பெண்ணுக்கேயான பிரத்தியேக மனப்படிமங்களை உள்வாங்கிப் பெண்மொழியைச் சாத்தியப்படுத்துகிறது. இவ்வகையில் நுட்பமான அந்தரங்க வெளிப்பாடுகளை மொழியசைவுடன் அதீதப் புனைவாக நடப்பியலுக்கேற்ப வாசகனுக்கு எடுத்துரைக்கும் ஈழத்துப் பெண் கவிதைகள் 1980களுக்குப் பின், அமைப்பாலும் அனுபவ வெளிப்பாட்டாலும் மொழி நடையாலும் மாற்றம் கண்டன. இம்மாற்றங்களுக்கான அடிப்படைக் காரணங்களாக ஆயுதப் போராட்டம், தமிழ்த்தேசியத்தின் எழுச்சி, பெண்நிலைவாதச் சிந்தனைக்கூடாக ஏற்பட்ட விழிப்புணர்வு, ஊடக சுதந்திரம், கல்வித் தகைமைக்கூடான தொழில்சார் நிலையின் மீள் உருவாக்கம் போன்றவற்றைக் கூறலாம். இக்காலகட்டத்தில் வெளிவந்த *பெண் விடுதலை, தாகம், தோழி, விளக்கு, செந்தழல், சுதந்திரப் பறவைகள், நங்கை, மருதாணி, நிவேதினி, பெண்* போன்ற ஈழத்துப் பெண் சஞ்சிகைகளும், *நமது குரல்* (ஜேர்மனி), *கண்* (பிரான்ஸ்), *சக்தி* (நோர்வே) போன்ற புகலிடப் பெண்நிலைவாதச் சஞ்சிகைகளும் பெண்ணியக் கருத்துகளை உள்வாங்கி வெளிவந்ததுடன் ஆளுமைமிக்க பெண்ணிலக்கியப் படைப்பாளிகளையும் ஈழத்திலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்தன.

> பெண்ணின் நுண்ணுணர்வுத் தளத்தில் கட்டுருவாக்கம் பெறும் அன்பு, கருணை, வேட்கை, வலி, கனவு ஆகியன உள்ளிட்ட இன்னோரன்ன அகநிகழ்வுகள், கவிதை அழகியல் சார்ந்து பெண் சொல்லாடலுக்கூடாக வெளிப்படும்போது, நவீனக் கவிதை பெண்ணுக்கேயான பிரத்தியேக மனப்படிமங்களை உள்வாங்கிப் பெண்மொழியைச் சாத்தியப்படுத்துகிறது.

*1980களுக்குப் பின் ஈழத்தின் பல்வேறு பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்த தொகுப்புகளாகச் 'சொல்லாத சேதிகள்' (1986), 'மறையாத மறுபாதி' (1992), 'கனல்' (1997), 'உயிர்வெளி' (1999), 'எழுதாத உன் கவிதை' (2001), 'வெளிப்படுத்தல்' (2001), 'பெயல் மணக்கும் பொழுது' (2007), 'மை' (2007), 'இசை பிழியப்பட்ட வீணை' (2007), 'ஒலிக்காத இளவேனில்' (2009),* பெயரிடாத நட்சத்திரங்கள் (2011) போன்றவற்றைக் கூறலாம்.

இத்தொகுப்புகளில் பெண்களின் உணர்வுகளையும் எண்ணங்களையும் கருத்துகளையும் ஈழத்தில் முதன்முதலில் வெளிப்படுத்திய தொகுப்பாகச் 'சொல்லாத சேதி' காணப்படுகிறது. பெண்கள் ஆய்வு வட்டத்தால் வெளியிடப்பட்ட இச்சிறுதொகுதி அ.சங்கரி, சி.சிவரமணி, சன்மார்க்கா, ரங்கா, ஒளவை, செல்வி, பிரேமி, மசூறா, ஏ.மஜித், ஊர்வசி உள்ளிட்ட பத்துப் பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்களின் இருபத்தி நான்கு கவிதைகளை உள்ளடக்கியது. பெண்கள் தொடர்பான சிந்தனைகள் குறித்த ஆய்வை நவீனத் தமிழுலகு வேண்டி நின்ற காலத்தில் காத்திரமான கவிதை மொழிக்கூடாகப் பெண்களின் பெண்ணிய உணர்வுகளை நிதர்சனமாக வெளிப்படுத்திய தொகுப்பு இது எனலாம். ஈழத்துப் சிந்தனையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய, சொல்லாத சேதிகள் 'ஈழத்துப் பெண்களின் சமூகப் பார்வையிலும் சிந்தனையிலும் மாற்றத்தை ஏற்படுத்தவும் அவர்கள் தமது சிந்தனைகளையும் உணர்வுகளையும் ஒளிவுமறைவின்றிச் சுதந்திரமாக வெளிக்கொணரவும் அவர்களது சிந்தனைகளைத் தூண்டக்கூடிய அல்லது புடம் போடக்கூடிய தகுந்த முன் மாதிரிகளை அடையாளங் காட்டவும்' இத்தொகுப்பு முக்கிய நிலைக்களனாக விளங்கியது எனலாம்.

ஈழத்துப் சிந்தனையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய சொல்லாத சேதிகள் 'ஈழத்துப் பெண்களின் சமூகப் பார்வையிலும் சிந்தனையிலும் மாற்றத்தை ஏற்படுத்தவும் அவர்கள் தமது சிந்தனைகளையும் உணர்வுகளையும் ஒளிவுமறைவின்றிச் சுகந்திரமாக வெளிக்கொணரவும் அவர்களது சிந்தனைகளைத் தூண்டக்கூடிய அல்லது புடம் போடக்கூடிய தகுந்த முன் மாதிரிகளை அடையாளங் காட்டவும்' இத்தொகுப்பு முக்கிய நிலைக்களனாக விளங்கியது எனலாம்.

சொல்லாத சேதிகள் சுவட்டில் வெளியான 'மறையாத மறுபாதி' புகலிடத்திலிருந்து பதினெண் பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்தது. பெண்களின் ஒடுக்கு முறைக்கெதிரான உணர்ச்சிக் குரலாய் எழுந்த இத்தொகுப்பு பேராசிரியர் சி. சிவசேகரம் கூறுவதைப் போன்று 'இதுவரை ஈழத்தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் எழுதத் தயங்கிய விஷயங் களையும் எழுப்பத் தவறிய கேள்விகளையும் இதிலுள்ள கவிதைகள் எழுப்புகின்றன.' பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான ஆணாதிக்க வழி வந்த பழமைக்கோட்பாட்டின் வகுப்புவாத ஏற்றத்தாழ்வுகளையும் முகமாக எழுந்த மறையாத மறுபாதி பெண்ணுரிமை, பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், ஆணாதிக்க எதிர்ப்பு, சீதனக்கொடுமை முதலான இன்னோரன்ன விடயங்களையும் பேசுகின்றன. உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் பெண்ணிற்கு இழைக்கப்படும் கொடுமை களையும் அதிலிருந்து விடுபடுதலையும் விளக்கி நிற்கும் இந்நூல் பெண்ணியக் கருத்துகளினூடாகப் பெண் மனஉணர்வுகளையும் அதன் எதிர்பார்ப்புகளையும் ஏக்கங்களையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

தமிழகத்திலிருந்து முதன்முதலில் வெளிவந்த இலங்கை, இந்தியப் புலம்பெயர் பெண் கவிஞர்களின் தொகுப்பாக 'பறத்தல் அதன் சுதந்திரம்' காணப்படுகிறது.ஐம்பத்திரண்டு பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வந்த இத் தொகுப்பு பெண்ணிருப்பைத் தனக்கான இயக்க வெளிக்குள் மொழி யினூடாகச் சாத்தியமாக்கியுள்ளது. சமூக மறுதலிப்பும் நிராகரிப்பினூடாக எழும் வலியும் ஆற்றாமையின் துயர்களாக இத்தொகுப்பெங்கும் விரிந்து செல்கின்றன. காவ்யாவால் வெளியிடப்பட்ட இத்தொகுப்பின் தொகுப்பாசிரியர் க்ருஷாங்கினி, உதவியாசிரியர் மாலதி மைத்ரி ஆவார். ஆயினும் இத்தொகுப்பு மலின எழுத்துப் பிழையுடனும் ஆள்மாறாட்டக் கவிதைகளுடனும் (சிவரமணியின் 'வையகத்தை வெற்றி கொள்ள' என்னும் கவிதை கவனக் குறைவால் சன்மார்க்காவின் கவிதை எனப் பிரசுரிக்கப்பட்டது) வெளிவந்தது. இத்தொகுப்பில் ஆழியாள், ஊர்வசி, ஔவை, சங்கரி, சன்மார்க்கா, சிவரமணி, சுமதிரூபன், செல்வி, ரஞ்சனி போன்றோரின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

பெண் எழுத்தின் ஆளுமைகளை வெளிக்கொணரும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர் நாட்டிலிருந்து வெளிவந்து அதிகக் கவனத்தைப் பெற்ற தொகுப்புகளாக மை, ஒலிக்காத இளவேனில் முதலானவற்றைக் கூறலாம். முப்பத்தைந்து கவிஞைகளின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்தமை, உள்ளுணர்வின் தடத்தில் எழும் பெண்ணுக்கேயான மனப் படிமங்களைப் பெண் சிந்தனாவழித் தனித்துவ அடையாளங்களுடன் எடுத்துரைக்கிறது. சமகால வாழ்வியலுக்கூடாகப் பகிர்ந்த, பகிரப்படாத பெண் அனுபவங்களை வெளிக்கொணர்ந்த தொகுப்புகளில் முக்கிய ஒன்றாக ஒலிக்காத இளவேனிலைக் கூறலாம்.வட அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கும் பரவலாக அறியப்படாத 19, பெண் கவிஞைகளின் தொகுப்பாக அமைந்துள்ள இது, புதிய இடத்தில், புதிய சூழ்நிலையில் தனிமைப் பிறழ்வுக்குள்ளான பெண்ணின் மன உணர்வுகளை வெகு துல்லியமாகப் பதிவு செய்கிறது. சமூகப் பிரக்ஞையுடைய இளம் தலைமுறையினரின் தொகுப்பாக வெளிவந்த இந்நூல் புதிய பாய்ச்சலுக்கூடாக நவீனத் தமிழ்க் கவிதைக்கு வளம் சேர்க்கின்றது எனலாம்.

மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சனைகளைப் பெண்மொழிக் கூடாக வெளிப்படுத்திய தொகுப்புகளில் மிகச்சிறந்த தொகுப்பாக 'இசை பிழியப்பட்ட வீணை' கருதப்படுகிறது. மலையகத்தில் மிக அருகிப்போன பெண் எழுத்துக்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் முயற்சியாக வெளிக்கொணரப்பட்ட இத்தொகுப்பு, 45 பெண் படைப்பாளிகளின் கவிதைகளைத் தாங்கி நிற்கிறது. ஆளும் வர்க்கத்தினராலும் அரசியல்வாதிகளாலும் முதலாளிமார்களாலும் உடல்,உள,பொருளாதார ரீதியில் சுரண்டப்பட்டு, அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு,வஞ்சிக்கப்பட்ட மலையக மக்களின் வாழ்வியல் அவலங்களை மென்னுணர்வுத் தளத்தில் வெளிப்படுத்தும் இந்நூல், அம்மக்களின் பண்பாட்டு, கலாச்சார வாழ்வியல் அம்சங்களையும் அதன் வகைமாதிரிகளையும் எடுத்துரைக்கிறது.

ஈழத்தின் போராட்டச் சூழலில் இருபத்தாறு பெண்களின் அநுபவங்களை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்திய தொகுப்பாக 'எழுதாத உன் கவிதை'யைக் கூறலாம்.போராளிகளின் போரியல் வாழ்வையும் போருக்குள் வாழ்பவரின் வாழ்வாதாரப் பிரச்சனைகளையும் எடுத்துரைக்கும் இந்நூல், கட்டிறுக்கமற்று எளிமையான மொழி நடையில் இயல்பான நடைமுறை வாழ்வை அவாவி நிற்கிறது. உயிர் வாழ்வதற்கான போராட்டத்தை அரசியல் நெடி கலந்து வெளிப்படுத்தும் இத்தொகுப்பு, ஈழத்துப் பெண்கவிஞர்களின் பிறிதொரு பரிமாணத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஈழத்தின் போராட்டச் சூழலில் இருபத்தாறு பெண்களின் அநுபவங்களை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்திய தொகுப்பாக 'எழுதாத உன் கவிதை'யைக் கூறலாம்.போராளிகளின் போரியல் வாழ்வையும் போருக்குள் வாழ்பவரின் வாழ்வாதாரப் பிரச்சனை களையும் எடுத்துரைக்கும் இந்நூல், கட்டிறுக்கமற்று எளிமையான மொழி நடையில் இயல்பான நடைமுறை வாழ்வை அவாவி நிற்கிறது.

பெண்ணிருப்பின் அடையாளத்தை வெளிப்படுத்தி நிற்கும் பிறிதொரு தொகுப்பாக 'பெயல் மணக்கும் பொழுது' காணப்படுகிறது. ஈழத்தில் யுத்தம் உக்கிரமடைந்த காலகட்டத்தில் அதன் அகோரத்தையும் அதன் விளைவுகளையும் போரின் வன்முறைக்கூடாக வெளிப்படுத்தும் இத்தொகுப்பு ஈழத்து நவீனக் கவிதையின் வீச்சைப் புடமிட்டுக்காட்டுகிறது.புதிய சுதந்திரமான வாழ்வைப் பற்றிய கனவும் பெண்ணின் சுயம் சார்ந்த வேட்கை, அதன் ஏக்கம், பரிதவிப்பு என்பனவற்றை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தும் இத்தொகுதி பெண்ணுடல், மனம், அவள் அகப்புற அநுபவங்கள், அவ்அநுபவங்களுக்கூடாக விளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகள், கிளர்ச்சிகள் என்பவற்றைக் காட்சிப் படுத்துகிறது. ஆமிரபாலி போன்ற ஆண் கவிஞர்களும் இத்தொகுப்பில் பெண் கவிஞைகளாக அடையாளப் படுத்தப்பட்டிருப்பதும் இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது. அண்மையில் 26 போராளிக் கவிஞைகளின் 70கவிதைகள் 'பெயரிடாத நட்சத்திரங்கள்'எனும் பெயரில் வெளிவந்துள்ளது. ஊடறு மற்றும் விடியல் வெளியீடு ஆகியவை இணைந்து இத்தொகுப்பைக் கொண்டுவந்துள்ளன. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிஞைகள் யாவரும் போராளிகள் ஆவர்.

1990களின் பின் தனித்துவ அடையாளங்களுடனும் ஆளுமைகளுடனும் ஈழத்தில் வெளிவந்து என் பார்வைக்குக் கிடைத்த பெண் கவிஞர்களின் தொகுப்புகளாக 'வானதியின் கவிதைகள் (1990), கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), பாரதியின் காதோடு சொல்லிவிடு (1992), சிவரமணி கவிதைகள் (1993), தூயவளின் நிமிர்வு (1993), சுல்பிகாவின் விலங்கிடப்பட்ட மானிடம் (1995), உயிர்த்தெழல் (2001), செல்வி - சிவரமணி கவிதைகள் (1997), ஔவையின் எல்லை கடத்தல் (2000), ஆழியாளின் உரத்துப் பேச (2000), துவிதம் (2006), நாகபூசனி கருப்பையாவின் நெற்றிக்கண் (2001), தர்மினியின் உதயத்தைத் தேடி (2002),மைதிலியின் இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள் (2003), மைத்ரேயியின் கல்லறை நெருஞ்சிகள் (2004), அனாரின் ஓவியம் வரையாத தூரிகை (2004), எனக்குக் கவிதை முகம் (2007),உடல் பச்சைவானம்(2009), அம்புலியின் மீண்டும் துடிக்கும் வசந்தம் (2004), ஆதிலட்சுமி சிவகுமாரின் என் கவிதை (2000), ஃபஹீமா ஜஹானின் ஒரு கடல் நீரூற்றி (2007), அபராதி(2009), ஆதித்துயர்(2010), பெண்ணியாவின் என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை! (2006), இது நதியின் நாள்(2008), றஞ்சனி கவிதைகள் (2005), மலராவின் புதிய இலைகளால் ஆதல்(2009), வி.கலைமகளின் முடிவில்லாப் பேச்சுக்கள்(2007), யோ.கார்த்திகாவின் ஆணிவேராகிடுமோ நளாயினிதாமரைச்செல்வனின் நங்கூரம் (2005), உயிர்த்தீ, லுணுகலைஹஸீனாபுஹாரின் மண்ணிழந்த வேர்கள்(2003), ரிஷானாபாரூகின் என் விழியில் தங்கிய நினைவுகள், சுதாகினி சுப்ரமணியத்தின் அடையாளம்(2005) போன்றவற்றைக் கூறலாம்.

தொகுப்புகள் வெளிவரா நிலையில் சிற்றிதழ்கள் ஊடாகவும் இணையத் தளங்கள் ஊடாகவும் அடையாளம் காணப்பட்டுத் தனி முத்திரை பதித்த கவிஞர்களாகப் பிரதீபா தில்லைநாதன் தான்யா, துர்க்கா, ராசு, கலா, ஆகர்ஷியா, ரி. உருத்திரா, வினோதினி, தமிழ்நதி, றபீக்கா, உலகமங்கை, லரீனா. ஏ. க, விஜயலட்சுமி சேகர் (சினேகா), தில்லை, ஜெயந்தி தளையசிங்கம், கற்பகம், யசோதரா, யாழினி, ரேவதி, நிவேதா, கமலாவாசுகி போன்றோரைக் குறிப்பிடலாம்.

இக்காலப் பகுதியில் ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இருந்து வெளிவந்த சிறு சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் பெண்களின் ஆக்கபூர்வமான கவிதைகளுக்கு அடித்தளமிட்டன. 1990களின் முற்கூற்றில் 'திசை' வழியே அறிமுகமாகும் மைதிலி கவிதை, உள்ளம், களம், சரிநிகர், சக்தி, காலச்சுவடு போன்ற சிற்றிதழ்களுக்கூடாகத் தன்னை அடையாளப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். மூன்றாவது மனிதன், சரிநிகர் ஆகிய சிறு சஞ்சிகைகள் பெண்ணிலக்கிய ஆக்க கர்த்தாக்களின் பிரதான பிரசுர தளமாக இயங்கின. இவ்விரு இதழ்களுக்கூடாகச் சிறப்பாக அறியப்பட்டவர்களாகப் பெண்ணியா, ஔவை, ஆழியாள், அனார், கலா, ஃபஹீமா ஜஹான் போன்றோர் விளங்குகின்றனர். இதனைத்தவிர ஔவைக்குத் தோழி, சக்தி, புதுசு, தூண்டில் போன்ற சிற்றேடுகள் பிரசுர களமாய் விளங்கியதைப் போன்று ஆழியாளுக்குக் *கணையாழி, உயிர் நிழல்*, பத்மநாப ஐயரின் *இன்னொரு காலடி, யுகம் மாறுது* போன்ற சிற்றிதழ்களும் பிரசுர களமாய் இயங்கின. பிரதீபா தில்லைநாதன், தான்யா, துர்க்கா, சுமதிரூபன் ஆகிய புலம்பெயர் படைப்பாளிகளுக்குக் காலம், *உயிர்நிழல், கண்ணில் தெரியுது வானம், அற்றம்* ஆகிய இதழ்கள் களம் அமைத்துக் கொடுத்ததைப் போன்று ஈழத்துப் பெண் கவிதை சொல்லிகளின் பிரதான படைப்பியல் தளமாக மூன்றாவது *மனிதன், சரிநிகர், யாத்ரா, வெளிச்சம், சுதந்திரப் பறவை, கலைமுகம், களம், ஞானம், மறுபாதி, கவிதை, ஜீவநதி* போன்ற சிறு சஞ்சிகைகளும் *வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி, ஈழநாதம்* போன்ற வாரப் பத்திரிகைகளும் களம் அமைத்துக்கொடுத்தன.

வன்னிநில வாழ் மக்களின் வாழ்வியல் அவலங்களைப் பெண் அல்லது பெண்ணியவாதப் படைப்புக்களுக்கூடாக வெளிக் கொணர்ந்த இதழ்களில் முக்கிய இதழ்களாக *வெளிச்சம், சுதந்திரப்பறவை, எரிமலை, ஈழநாதம்* (வெள்ளி வாரமலர்) போன்றன காணப்படுகின்றன. *அம்புலி, ஆதிலட்சுமி சிவகுமார், கஸ்தூரி, மலைமகள், தமிழவள், தமிழ்க்கவி, சுதாமதி, நாமகள், தூயவள், செந்தணல், பிரேமினி சுந்தரலிங்கம், மன்னார் ரூபி மாக்கிரெட், சோழநிலா, அலைஇசை*போன்றோர் சிற்றிதழ்களின் ஊடாக மாத்திரம் அறியப்பட்டவர்கள் அல்ல. வெளிச்சம் கவிதைகள் *(1996)*, காலம் எழுதிய வரிகள் *(1994)*, ஆனையிறவு *(2000)*, வானம் எம்வசம் *(1995)*, செம்மணி *(1998)* ஆகிய கவிதைத் தொகுப்புகளினூடாகவும் அறியப்பட்டவர்கள். போரையும் போரியல் வாழ்வையும் பாடும் இவர்கள் போரின் பங்காளிகளும் ஆவர். தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று அனுபவங்கள் இவர்களின் கவிதையின் பாடுபொருளாயின. ஆயுதம் தரித்த போராளிகளாக மாறித் தமிழ் ஒழுக்கவியல் கோட்பாடுகளைச் சாடுமிவர்கள் கவிதைகள், பெண் விழிப்புணர்வுக் கூடாகப் பெண் விடுதலையைச் சாத்தியமாக்கு கின்றன. இவர்களின் பெரும்பாலான கவிதைகள் செப்பனிடப் படா வார்த்தைப் பிரமாணங்களுக்குள் சிக்கி, உணர்வுத் தளமற்றுக் கருத்துருவாக்கங்களுக்குள் சிதைந்து போவதாகக் காணப்படுகின்ற போதிலும் பெண்ணியல் அனுபவங்களுக்கூடாக விரியும் பெண்ணிய மொழி ஆங்காங்கே வீரியம் மிக்க சிறந்த கவிதைகளையும் தமிழ் இலக்கிய உலகுக்கு அளித்துள்ளது. ஈழத்து நவீனக் கவிதைப் பரப்பில் 1980கள் முக்கியமான காலகட்டமாகும். 14--05--1976 வட்டுக் கோட்டை மாநாட்டில் 'சுதந்திர இறைமை உள்ள மதச்சார்பற்ற சோசலிசத் தமிழீழத்தை அமைத்தல்' என்று எடுக்கப்பட்ட தீர்மானத்தை அடுத்து 1980களில் தாயக விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெறுகிறது. இக்காலப்பகுதியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் *(21--07--1977)*, யாழ் நூலக எரிப்பு *(01--06--1981)*, இனக்கலவரம் *(24--07--1983)*, குமுதினிப் படகுப்

போரையும் போரியல் வாழ்வையும் பாடும் இவர்கள் போரின் பங்காளிகளும் ஆவர். தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று அனுபவங்கள் இவர்களின் கவிதையின் பாடுபொருளாயின. ஆயுதம் தரித்த போராளிகளாக மாறித் தமிழ் ஒழுக்கவியல் கோட்பாடுகளைச் சாடுமிவர்கள் கவிதைகள், பெண் விழிப்புணர்வுக் கூடாகப் பெண் விடுதலையைச் சாத்தியமாக்கு கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகொலை (15--05--1985) எனத் தமிழருக்கு எதிரான வன்முறைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. போரினை அவாவி நின்ற இளைஞர், யுவதிகளின் மனம் அரசியல் ஓர்மைக்குள் தம்மைக் கட்டமைத்துக் கொண்டது. இவ்வரசியல் சூழ்நிலையே பல்வேறு இயக்கங்களின் தோற்றுவாய்க்கும் கால்கோளிட்டது. இக்காலப் பகுதியில் விடுதலை இயக்கங்களைச் சார்ந்தும் சார்பற்றும் உருவாக்கப்பட்ட பெண் அணிகள் பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையில் பெண் சமத்துவம், பெண் விடுதலையைக் கோரி நின்றன. இச்சூழ்நிலையில் பெண் தன்னிருப்பை முன்னிலைப்படுத்த வேண்டிய தேவையேற்பட்டது. இதன் ஊற்றே ஈழத்தில் நவீனக் கவிதைக்கு வித்திட்டது.

பெண் சுயத்துவத்துக்கூடாகப் பெண்ணிருப்பை முன்னிறுத்தி 'முரண்' என்னும் சரடு வழியே மென்னுணர்வுத் தளத்தில் இயங்கும் ஈழத்துப் பெண்மொழி தனக்கெனத் தனித்துவ அடையாளங் களைக் கொண்டது. பாலின நடத்தையாலும் நியதியாலும் வடிவமைக்கப்பட்ட பெண்ணிருப்பியலின் இவ் அனுபவ வெளி எளிமையானது, நேர்த்தியானது, சொற் சிக்கனத்துக்கூடான உள்ளுணர்வுத் தளத்தில் இயங்குவது. விரிந்த தளத்தில் கனதியான ஆய்வை வேண்டி நிற்கும் பெண் கவிதைகள் ஈழத்தின் முறையான விமர்சனங்களோடோ மதிப்பீடுகளோடோ முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. தமிழகத்தோடு ஒப்பிடும்போது ஈழத்து நவீனப் பெண் கவிதைகள் பற்றி வெளிவந்த ஆய்வுகள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உள்ளன. எனவே, ஆக்கபூர்வமான விமர்சனங்களும் மதிப்பீடுகளும் ஈழத்துப் பெண் கவிதைகளைப் பிறிதொரு தளத்துக்குக் கொண்டு செல்லும்.

உசாத்துணை நூல்கள்

சிவகுமார், ஆர்., பிரம்மராஜன், (2001) அவ்வை மண்ணில் பெண் எழுத்தாளர்கள், மருதா, சென்னை

சிவசேகரம், சி., (1995), விமர்சனங்கள், தேசிய கலை இலக்கியப் பேரவை, சென்னை

யோகராசா, செ., (2007) ஈழத்து நவீனக் கவிதை, குமரன் புத்தக இல்லம், சென்னை, - கொழும்பு

விஜயலட்சுமி, ச., (2002), தமிழ்க் கவிதைகளில் பெண்ணுரிமை, தி. பார்க்கர், சென்னை.

*கட்டுரைகள்*

ஐங்கரன், பெரிய., (வைகாசி ஆனி 2008), 'பெண்மொழி' ஜீவநதி, யாழ்ப்பாணம்.

ஔவை, (1996 - 1997) 'நவீனத் தமிழ்க்கவிதைகள் ஒரு பெண்ணிய நோக்கு', நிவேதினி, கொழும்பு

சேரன், உ., (அக்டோபர் - 2007), 'பெயல் மணக்கும் பொழுது' காலச்சுவடு 94வது இதழ், நாகர்கோவில்

பஹீமா ஜஹான், (2002) 'பெண்மொழி' யாத்ரா இதழ் 8, கொழும்பு

மித்ரா (மே - ஜூன், 2007) 'நீரளவேதானா நீராம்பல்', சரிநிகர், கொழும்பு

யோகராசா, செ., (2005) 'ஈழத்துக்கவிதை', தமிழ் இனி, 2000, இருபதாம் நூற்றாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் போராளிகள்: புதிய பார்வை

■ அடேல் பாலசிங்கம்

*அடேல் பாலசிங்கம் "தமிழீழ விடுதலைப் போராட்டம் உள்ளிருந்து ஒரு நோக்கு" என்பதனை "சுதந்திர வேட்கை" எனும் தலைப்பில் நூலாக எழுதியுள்ளார். இந்நூல் 2002இல் வெளிவந்தது.*

*இந்நூலில் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைத் தலைமைதாங்கி முன்னெடுத்த "விடுதலைப் புலிகள்" அமைப்பை மையப்படுத்திய நிகழ்வுகள், சம்பவங்கள், அனுபவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தது முதல் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டது வரையான அறிமுகம் தொடங்கி பிரேமதாசா - விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை, யாழ்ப்பாணப் போருக்குள் வாழ்க்கை, வன்னியில் அனுபவித்த இன்னல்கள்... எனப் பல்வேறு காலகட்டப் பதிவுகள் உள்ளன.*

*குறிப்பாகப் பெண் போராளிகள் பற்றிய பதிவுகளில் இருந்து சில பகுதிகளை இங்குத் தொகுத்துள்ளோம். புலிகள் இயக்க அழிவுக்குப் பின்னர் பெண் போராளிகள் பற்றிய பார்வையும் பதிவும் எமக்கு முக்கியம். பெண் போராளிகள் இலங்கை இராணுவத்தால் மிக மோசமான வன்முறைக்கு முகங்கொடுத்தவர்கள். அதைவிட இன்று தினமும் அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் சொல்லிமாளாது. இந்த நிலையில் அவர்கள் பற்றிய பிம்பம் மறக்கப்பட்டு விடக்கூடாது. அவர்களது தியாகங்களும் உழைப்பும் எப்போதும் நினைவு கூரப்பட வேண்டும் என்ற கடப்பாட்டால் இந்தப் பகுதி இங்கு இடம்பெறுகிறது.*

*-(அழைப்பாசிரியர்)*

இக்கட்டுரையாசிரியர் விடுதலைப்புலிகள் இயக்க ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார். சமூகவியல் ஆய்வாளர், பல நூல்களை எழுதியிருப்பவர்.

கோட்டை இராணுவத் தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாண நகரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழ்ந்த மக்களுக்கு அமைதியான பாதுகாப்பான சூழல் பிறந்தது. அரசியல் நடவடிக்கைகளின் மையமாக விளங்கிய யாழ்ப்பாண நகரத்தில் குடியமர நாமும் முடிவெடுத்தோம். இந்த இருப்பிடம் பாலாவின் அரசியல் வேலைகளுக்கு வசதியாக அமைந்தது. அத்தோடு, இங்கிருந்து விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் போராளிகளையும் அவர் அடிக்கடி சந்தித்துப் பேச முடிந்தது. பெண் போராளிகளும் பல அரசியல் சிக்கல்களை எதிர்கொள்ள நேர்ந்தது. அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் வந்து இவை பற்றி விவாதிப்பார்கள். அவர்களில் ஒருவர் காயத்திரி. இவர் ஒரு மூத்த பெண் போராளி, 'சுதந்திரப் பறவைகள்' என்ற பெண்களுக்கான மாத இதழுக்கு ஆசிரியையாக பணி புரிந்தவர். தனது சஞ்சிகையின் வளர்ச்சிக்காகப் புதிய கருத்துகளைத் தேடிக் காயத்திரி என்னிடம் அடிக்கடி வருவார். அப்பொழுது பெண்களின் இராணுவப் பிரிவுக்குத் தளபதியாகப் பணிபுரிந்தவர் ஜெயந்தி. அரசியல் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தவர் ஜெயா. இவர்கள் இருவரும் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள். 1985இல் தமிழ்நாட்டில், பெண்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சிப் பாசறையில் முதலாவது அணியாகப் பயின்றவர்கள். அடுத்து மூத்த பெண் போராளி தீபா. தீபாவும் ஜெயாவும் ஆரம்பத்தில் சென்னையில் எமது வீட்டில் வசித்து வந்தவர்கள். ஜெயந்தி, ஜெயா, தீபா ஆகிய மூவரும் எமக்கு நெருக்கமானவர்கள். எமது இருப்பிடத்திற்கு அடிக்கடி வருவார்கள். ஜெயந்தி, என்னையும் பாலாவையும் தனது பயிற்சி முகாம்களுக்கு அழைத்து விருந்து தருவார். அவ்வேளை, ஜெயந்தியின் பொறுப்பில், தென்மராட்சியிலுள்ள கிளாலியிலும் வடமராட்சியிலுள்ள பொலிகண்டியிலும் இரு பெரும் பயிற்சிப் பாசறைகள் அமைந்திருந்தன. இங்கு நாம் அடிக்கடி அழைக்கப்பட்டிருக்கிறோம். பாலா என்னோடு இங்கு வரும்பொழுது அன்றைய அரசியல் நிலைமையை விளக்கிப் பெண் போராளிகளுக்கு வகுப்புகளை நடத்துவார்.

இப்பொழுது, யாழ்ப்பாணத்தில் பெண் போராளிகள் பற்றிய படிமம் அடிப்படையான மாற்றத்தைக் கண்டிருந்தது. 1990இல் இந்திய அமைதிப்படை வெளியேறியதை அடுத்து, ஆயுதம் தாங்கியபடி கம்பீரமான சீருடை அணிந்து யாழ்ப்பாண வீதி வழியே வலம் வந்த பெண் போராளிகளுக்கும் அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இந்திய இராணுவப் படையெடுப்பின் போது சாதாரண உடையுடன் வன்னிக்குப் பின்வாங்கிய பெண் போராளிகளுக்கும் மத்தியில் அடிப்படை வேறுபாடு இருக்கத் தான் செய்தது. இப்போதைய பெண் போராளிகள் சிறந்த போர்ப் பயிற்சி பெற்றவர்கள்; நிறையக் கள அனுபவம் உடையவர்கள்; தன்னம்பிக்கை நிறைந்தவர்கள், இவ்வாறான புதிய பெண் போராளிகள், அணி அணியாகக் காவல் வலம் வருவதைக் கண்டு வியப்படைந்த பொதுமக்கள், சமுதாயத்தில் ஒரு புரட்சிகர மாற்றம் நிகழ்ந்துள்ளதை உணர்ந்தனர். இது சர்ச்சைக்குரிய விவாதங்களை எழுப்பியது. பெண் போராளிகளின் இலட்சியப் பற்றையும் அர்ப்பணிப்புகளையும் தமிழ் மக்கள் போற்றிப் பாராட்டத் தவறவில்லை. ஆயினும் அதேவேளை ஆயுதப் போராட்டம் தமிழ்ப் பெண்களின் படிமத்திலும் பாரம்பரிய பங்குகளிலும் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்திவிடுவது சாத்தியமென்றும் மக்கள் அஞ்சினார்கள். மரபுக்கும் மாற்றத்திற்கும் மத்தியில் காலம் காலமாக நடைபெற்றுவரும் விவாதம் இது. பெண் போராளிகளை மையமாகக் கொண்டு இப்பொழுது இச் சர்ச்சை மீண்டும் தலைதூக்கியிருக்கிறது. நீளமாக முடிவளர்த்து, சேலை உடுத்தி அல்லது பாவாடை அணிந்து, தலை குனிந்தபடி பணிவடக்கத்துடன் நடந்து செல்லும் பண்டைய தமிழ் இளம் பெண்ணின் படிமத்தோடு பழகிய யாழ்ப்பாணத்துப் பழமைவாதிகளில் சில பிரிவினருக்கு, திருமணமாகாத இளம் பெண்

புதிய பெண் போராளிகள், அணி அணியாகக் காவல் வலம் வருவதைக் கண்டு வியப்படைந்த பொதுமக்கள், சமுதாயத்தில் ஒரு புரட்சிகர மாற்றம் நிகழ்ந்துள்ளதை உணர்ந்தனர். இது சர்ச்சைக்குரிய விவாதங்களை எழுப்பியது. பெண் போராளிகளின் இலட்சியப் பற்றையும் அர்ப்பணிப்புகளையும் தமிழ் மக்கள் போற்றிப் பாராட்டத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராளிகள் ஆயுதம் தரித்தபடி, சீருடையுடன் வீதிகளில் வலம் வருவது தமிழ்ப் பாரம்பரிய மரபிற்கும் பண்பாட்டிற்கும் ஆபத்தான அச்சுறுத்தலாகவே தென்பட்டது.

வீடு தோறும் விவாதங்களும் சர்ச்சைகளும் கிளர்ந்தன. இயற்கை செயற்கை என்றும் மரபு மாற்றம் என்றும் சாதாரண பகுத்தறிவு மட்டத்தில் தர்க்கங்கள் சூடுபிடித்தன. ஆயுதம் தரித்த விடுதலைப் போராளிகளாகப் பெண்கள் புதிய பங்கு வகிப்பதை விரும்பாத சிலர், அது இயற்கைக்கு மாறானதென வாதிட்டனர். இயற்கைதான் பெண்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தி. ஆண்களைவிடப் பெண்கள் பலவீனமானவர்கள் மட்டுமன்றி, குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதே வாழ்க்கையில் பெண்கள் வகிக்கும் முக்கியமான பங்கு என்பது இவர்களது கருத்து. வாழ்வின் நியதியாக இயற்கையால் அருளப்பட்ட இந்தப் பங்கை பெண்கள் மீறினால் அதன் விளைவு பாரதூரமாக அமையும் என்றும் அது சமூகக் கட்டமைப்பையும் ஒழுங்கையும் சீர்குலைத்து விடும் என்றும் இவர்கள் வாதிடுவர். திருமணத்திற்கும் குடும்ப வாழ்விற்கும் அச்சாணியாக விளங்குபவள் பெண் என்றும் இந்த உறவுமுறைகளுக்கு மாறாக அவள் சிந்தித்தாலும் செயற்பட்டாலும் அது குடும்பத்தை மையமாகக் கொண்ட தமிழ்ப் பண்பாட்டிற்குப் பங்கம் ஏற்படுத்திவிடும் என்பதும் ஒரு சாரார‌து கருத்து. தமிழ்ப் பெண்களையும் யாழ்ப்பாணச் சமூகத்தையும் பொறுத்தவரை, 'பெண்விடுதலை' என்பது அவசியமில்லை என்ற பிற்போக்கான வாதத்தை முன்வைப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த வாதங்கள் எல்லாமே தவறானவை என்பதும், பொருத்தமற்றவை என்பதும் எனது கருத்து.

தமிழ்ப் பெண்களுக்கான விடுதலை எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் தெளிவான பார்வை இல்லாத காரணத்தினாலேயே இத்தவறான கருத்துகள் எழுகின்றன. ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் பங்குகொள்வது என்பது, தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் வாழ்நிலை சம்பந்தப்படுத்தப்பட்ட மட்டில், ஒரு புரட்சிகரமான மாற்றத்தைக் குறிக்கின்றது என்பது உண்மை. எனினும் பெண்களின் மீட்சி என்பது ஆயுதப் போராட்டத்தில் பங்குகொள்வதோடு முடிவடைவதில்லை. மாறாகப் பரந்த குறிக்கோள்களை அடையும் நோக்கத்துடனேயே பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் குதிக்கிறார்கள். இந்தப் பரந்த குறிக்கோள்கள் என்ன என்பது பற்றிய விவாதம், ஆரம்ப காலத்தில், யாழ்ப்பாணச் சமூகத்தில் பெரிதாக எழவில்லை. ஆயுதம் தரித்த பெண்ணின் உருவகம் மட்டுமே முக்கியமாகத் தென்பட்டது. இதனால் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஆயுதம் தரித்த பெண்ணின் வடிவமே பெண் விடுதலையின் குறியீடாகத் தோற்றம் எடுத்தது. இந்தப் படிமம், பரந்துபட்ட பெண் சமூகத்தினரையும் பொது மக்களையும் கவர்ந்து விடவில்லை. அத்தோடு பெண் போராளிகள் தமது நீண்ட கருங்கூந்தலைக் கத்தரித்து விடுவதென மேற்கொண்ட துணிச்சலான தீர்மானம் பெரிய சர்ச்சையைக் கிளப்பியது. தமது நீண்ட முடியை இரட்டையாகப் பின்னி, சுற்றிவளைத்துக் கட்டுவதுதான் பெண்போராளிகளின் பாணியாக இருந்தது. ஆனால், திடீரெனக் குறுக வெட்டிய முடியுடன் பெண் போராளிகள் தென்பட்டபோது, அது சமூகத்தில் ஒரு பரபரப்பை

பெண் போராளிகள் தமது நீண்ட கருங்கூந்தலைக் கத்தரித்து விடுவதென மேற்கொண்ட துணிச்சலான தீர்மானம் பெரிய சர்ச்சையைக் கிளப்பியது. தமது நீண்ட முடியை இரட்டையாகப் பின்னி, சுற்றிவளைத்துக் கட்டுவதுதான் பெண்போராளிகளின் பாணியாக இருந்தது. ஆனால், திடீரெனக் குறுக வெட்டிய முடியுடன் பெண் போராளிகள் தென்பட்டபோது, அது சமூகத்தில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. கண்டனங்களும் கிளம்பின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது. கண்டனங்களும் கிளம்பின. தமிழ்ப் பண்பாட்டிற்கு விரோதமான நடவடிக்கையெனப் பெண் போராளிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால், பெண் போராளிகள் இது பற்றிப் பெரிதும் அலட்டிக் கொள்ளவில்லை. விரும்பினால், முடியைக் குறுக வெட்டலாம் என்ற இயக்கத்தின் முடிவு பெண் போராளிகள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றது. நேரத்தைப் பிடிக்கும் சிகை அலங்கார மரபிலிருந்து விடுபடுவதற்குத் தமக்கு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு அவர்களுக்கு மகிழ்ச்சி. ஆனால், உண்மையில் இந்த முடிவு இராணுவத் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டது. போர்ப் பயிற்சியின்போதும், போர் நடவடிக்கைகளின்போதும் நீண்ட பின்னிய முடிகளை வைத்திருப்பது, இளம் பெண்போராளி களுக்கு ஒரு தொல்லை கொடுக்கும் விடயம். எனினும் எல்லாப் போராளிகளுமே முடியைக் குறுக வெட்டவில்லை. அனேகமானோர் இரட்டையாக முடியைப் பின்னி, அவர்களது பாணியில் சுற்றி வளைத்துக் கட்டுவார்கள். என்னைப் பொறுத்தவரையில், முடியை எவ்விதம் வைத்துக்கொள்வது என்பது பற்றி ஒரு தேர்வுச் சுதந்திரம் அவர்களுக்கு உண்டு என்பது ஒரு முற்போக்கான விடயமே.

ஆயுதப் போராட்டத்தில் பங்குகொள்வது குறித்துத் தமக்கு முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றிப் பெண் போராளிகள் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. இலட்சியத்தில் உறுதியாக நின்ற அவர்கள், இந்த எதிர்ப்பு அலைகளைத் தன்நம்பிக்கை யோடும் பெருந்தன்மையோடும் முகம்கொடுத்தார்கள். இதேவேளை போராட்டத்தில் பெருந்தொகையான இளம் பெண்கள் இணைந்தார்கள். பெற்றோர்களுக்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி காலப்போக்கில் தணிந்து போனது. பெண்களும் போராட்டத்தில் பங்குகொள்ளும் யதார்த்த புற நிலையைத் தம்மால் மாற்றிவிட முடியாது என உணர்ந்து அவர்கள் நிலைமையை ஏற்றுக்கொண்டார்கள். எனவே, ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் பங்குகொள்வது என்பது தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபாகிவிட்டது. பலர் எதிர்பார்த்ததுபோல அன்றி எச்சரித்தது போலத் தமிழ்ப் பண்பாடு சீர்குலையவில்லை.

ஆயுதப் போராட்டத்தில் பங்குகொள்வது குறித்துத் தமக்கு முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றிப் பெண் போராளிகள் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. இலட்சியத்தில் உறுதியாக நின்ற அவர்கள், இந்த எதிர்ப்பு அலைகளைத் தன்நம்பிக்கை யோடும் பெருந்தன்மையோடும் முகம்கொடுத்தார்கள். இதேவேளை போராட்டத்தில் பெருந்தொகையான இளம் பெண்கள் இணைந்தார்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவக் கட்டமைப்பான பெண் போராளிகளின் படையணிகள் வளர்ச்சி பெற்று விரிவாக்கம் கண்டதுடன், விடுதலைப் போரிலும் முக்கியப் பங்காற்றியது. 1991 ஜூலை 10ஆம் திகதி தொடங்கிய ஆனையிறவுச் சமரின்போது இது புலனாகியது. இந்தப் பெரும் சமரில் பெண் போராளிகளைக் கொண்ட பல படைப்பிரிவுகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் துணிவாற்றலுடன் வீரசாதனை படைத்தன. விடுதலைப் புலிகளுக்கும் சிங்களப் படையினருக்கும் மத்தியில் நிகழ்ந்த இந்த உக்கிரமான மோதல்கள் 24 நாட்கள் வரை நீடித்தன. அப்பொழுது விடுதலைப் புலிகளிடம் மரபு வழிப்போருக்கான கனரக ஆயுதங்கள் இருக்கவில்லை. நவீன ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் இருக்கவில்லை. அத்தோடு, புலிகளுக்கு அனுகூலமற்ற திறந்தவெளி நிலப்பரப்புகளிலேயே சண்டைகள் நிகழ்ந்தன. இந்தக் காரணங்களால் புலிகள் தரப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டது. இறுதியில், புலிகளின் படையணிகள் சமர்க்களத்திலிருந்து தந்திரோபாயமாகப் பின்வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டன. இந்தச் சமரில் 123 பெண் போராளிகள் உட்பட 573 புலிவீரர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்தனர். இந்தப் பின்னடைவிலிருந்து விடுதலைப் புலிகள் ஒரு முக்கியப் பாடத்தைக் கற்றுக் கொண்டனர்.

அதாவது, தமது படையணிகளை ஒரு மரபு வழி இராணுவக் கட்டமைப்பாக உருவாக்க வேண்டும் என்ற அவசியத்தையும் தேவையையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இந்தப் போர் நடவடிக்கையைத் திட்டமிட்ட வேளையிலும் செயற்படுத்திய வேளையிலும் மக்கள் வழங்கிய பங்களிப்பே ஆனையிறவுச் சமரின் முக்கிய அம்சமாக அமைந்தது. புவியியல் ரீதியாகப் பார்க்கப் போனால், யாழ்ப்பாணக் குடாநாட்டின் தொண்டையை நெரிடுவதுபோல அமைந்திருந்த இப்படைத்தளம் தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாகவே எரிச்சலூட்டி வந்திருக்கிறது. இப்படைத் தளம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்படவுள்ளதும் அது சாத்தியமானால், யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் வன்னி மாநிலத்திற்குச் சுதந்திரமாகச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படுமென்பதும் தமிழ் மக்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்தியது. இதனால், உணவு வகைகள் வழங்குவதிலிருந்து, போக்குவரத்து வாகன வசதிகள் செய்வது வரை, பல்வேறு வழிகளில் யாழ்ப்பாணப் பொது மக்கள் ஆனையிறவுச் சமருக்குப் பங்களிப்புச் செய்தனர். எனக்கிருந்த மருத்துவ அனுபவத்தின் அடிப்படையில், காயமடைந்த போராளிகளுக்கு உதவி செய்ய நானும் முன்வந்தேன்.

நாம் வசித்த வீட்டுக்கு அருகாமையில் இரண்டு மருத்துவ நிலைகளை ஜெயந்தியும் ஜெயாவும் நிறுவியிருந்தனர். அங்குக் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பெண் போராளிகளைப் பராமரிக்கும் பொறுப்பு எனக்குத் தரப்பட்டது. இது எனக்குப் புதிய அனுபவத்தைத் தந்தது. முன்னேறிய நாடுகளில் பிரமாண்டமான வைத்திய வசதிகள் கொண்ட பின்புலத்துடன் மருத்துவ, சத்திரசிகிச்சை நோயாளிகளைப் பராமரிப்பது வேறு; மருத்துவ வசதிகளற்ற, தற்காலிகமான ஒழுங்கு செய்யப்பட்ட நிலைகளில் காயமடைந்தோரைப் பராமரிப்பது வேறு. இரண்டிற்கும் பாரிய வேறுபாடுகள் உண்டு என்பதைப் பட்டறிந்து கொண்டேன். குடல்-முளை அகற்றும் அறுவைச் சிகிச்சையின் பின்னர் ஏற்படும் துப்பரவான காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பது வேறு; கூர்மையான பீரங்கிக் குண்டு சிராய்களால் பிளக்கும் தசைகளுக்கு மருந்து கட்டுவது வேறு. இளம் பெண்களுக்கு உடற்பயிற்சி விபத்தின் போது ஏற்படும் சிறிய முறிவுகள் வேறு. 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கி ரவை ஊடறுத்து 18 வயது இளம் பெண் ஒருத்தியின் கால் எலும்பு சிதறுவது வேறு.

மருத்துவப் பிரிவில் பணிபுரியும் பெண் போராளிகளுக்கு இயக்கத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் சிறப்பான மருத்துவத் தாதிப் பயிற்சி அளித்திருக்கிறார்கள். இந்த அடிப்படையான தாதிப் பயிற்சியோடு, மருத்துவக் கருவிகளும் போதிய மருந்துகளும் இல்லாத சூழ்நிலையில், இந்த இளம் தாதிகள் அங்கு வந்து சேரும் மிகவும் சிக்கலான, ஆபத்தான காயங்களுக்குச் சிகிச்சை அளிக்கும்

மருத்துவப் பிரிவில் பணிபுரியும் பெண் போராளிகளுக்கு இயக்கத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் சிறப்பான மருத்துவத் தாதிப் பயிற்சி அளித்திருக்கிறார்கள். இந்த அடிப்படையான தாதிப் பயிற்சியோடு, மருத்துவக் கருவிகளும் போதிய மருந்துகளும் இல்லாத சூழ்நிலையில், இந்த இளம் தாதிகள் அங்கு வந்து சேரும் மிகவும் சிக்கலான, ஆபத்தான காயங்களுக்குச் சிகிச்சை அளிக்கும் திறன் அபாரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன் அபாரமானது. இயக்கத்தின் மருத்துவ நிலையங்களினால் ஏராளமான படுகாயமடைந்த பெண் போராளிகள் சிகிச்சை பெற்று வந்தனர். படுகாயமடைந்தவர்கள், காயத்தின் வேதனை தாங்கமுடியாது புலம்பும் வேளைகளில் சிறுகாயமடைந்தோர் அவர்களைத் தோற்றுவது மனதை உருக்கும். காயமடைந்த பெண் போராளிகளின் தேவைகளையும் வேண்டுகோள்களையும் சமாளிப்பதில் எல்லையற்ற பொறுமையைக் கடைப்பிடித்தார்கள் மருத்துவத் தாதிமார். மருத்துவத் தொழில்நுட்ப அனுபவம் இல்லாத போதும், காயங்களுக்கு மருந்து கட்டுவதில் தாதிமாரின் கரங்கள் நுட்பமாகச் செயற்பட்டன. காயங்களிலிருந்து தொற்று நோய் பரவாமல் தடுப்பதில் வெற்றிகரமாகச் செயற்பட்டனர். இளம் பெண்களுக்கு ஏற்பட்ட பெரும் காயங்களைப் பார்த்தாலேயே சிலருக்கு அங்கலாய்ப்பு ஏற்படக்கூடும். ஆனால், இங்கு நிலைமை அப்படியல்ல. போர் அனுபவத்தினாலோ அல்லது கடும் காயங்களின் வேதனையாலோ, பெண் போராளிகள் மனம் தளர்ந்து போகவில்லை. இவர்களுக்குப் பணிபுரிவதில் எனக்குப் பெரு மகிழ்ச்சி. காயங்களின் வேதனைகளையும் சகித்துக் கொண்டு, கேலியும் பகிடியுமாகச் சிரித்து மகிழும் இவர்களின் மகிழ்ச்சியில் நானும் இணைந்து கொள்வேன். உனது காயத்தை அன்ரி தொட்டால்போதும் அது குணமாகிவிடும் என்று காயமடைந்த பெண் போராளிகள் சொல்வார்கள். ஆனால், உண்மையில் அப்படியானதொரு அற்புதச் சக்தி என்னிடம் இருக்க வில்லை. அவர்கள் துரித கதியில் குணமாகி வந்ததற்கு அவர்களது இளமையே காரணம் என்றாலும் எனது பராமரிப்பில் அவர்களுக்கு இருந்த அபார நம்பிக்கை என்னை மகிழ்ச்சியடைய வைத்தது.

சுண்டுக்குளியில் பெண்களுக்கான மருத்துவச் சிகிச்சை நிலையங்கள் அமையப் பெற்றிருப்பது, காலக்கெதியில் யாழ்ப்பாணப் பொதுமக்களுக்குத் தெரிய வந்தது, இளம் பெண் போராளிகள் களத்தில் போராடிக் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் செய்தி மக்கள் மத்தியில் ஆழமான அனுதாபத்தைத் தோற்றுவித்தது. தமது அக்கறையையும் நன்றியையும் தெரிவிக்க விரும்பிய யாழ்ப்பாண மக்கள், படுக்கைகள், தலையணைகள் சமைத்த உணவுகள், இளநீர்கள் எனப் பல்வேறு பொருட்களை மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். சுண்டுக்குளியில் இயக்கத்தின் தற்காலிக மருத்துவ நிலையங்கள் அமையப் பெற்றுள்ளன என்ற தகவல் சிறீலங்கா ஆயுதப் படையினருக்குத் தெரிய வந்தது. ஒருநாள் மதிய நேரம், சிறீலங்காவின் குண்டுவீச்சு விமானங்கள் எமது மருத்துவ நிலைகள் மீது திடீரென்று தாக்குதலை நிகழ்த்தின. நான் திகைத்துப் போனேன். சிறிது நேரத்திற்கு முன்னர்தான் நான் அங்கிருந்து வீடு திரும்பினேன். காயமடைந்த போராளிகளுக்கு ஏதாவது தேவைகள் இருக்கின்றதா என்பதை அறியவே நான் அங்குச் சென்றேன். மருத்துவ நிலையத்திலிருந்து நான் வீடு திரும்பி ஐந்து நிமிடங்கள் இருக்கும் ஒரு பிரமாண்டமான வெடிச்சத்தம் அதிர்ந்தது. அதன் அதிர்வு அலையால் நான் தரையில் வீசப்பட்டேன். எமது வீடு மீதுதான் குண்டு வீச்சு நடைபெறுவதாக எண்ணினேன். உடனே எழுந்து பதுங்கு குழியை நோக்கி ஓடினேன். வீட்டுக் கதவைத் தாண்டியபோது, பயங்கர ஓசையுடன் இரண்டாவது குண்டும்

இளம் பெண்களுக்கு ஏற்பட்ட பெரும் காயங்களைப் பார்த்தாலேயே சிலருக்கு அங்கலாய்ப்பு ஏற்படக்கூடும். ஆனால், இங்கு நிலைமை அப்படியல்ல. போர் அனுபவத்தினாலோ அல்லது கடும் காயங்களின் வேதனையாலோ, பெண் போராளிகள் மனம் தளர்ந்து போகவில்லை. இவர்களுக்குப் பணிபுரிவதில் எனக்குப் பெரு மகிழ்ச்சி, காயங்களின் வேதனைகளையும் சகித்துக் கொண்டு, கேலியும் பகிடியுமாகச் சிரித்து மகிழும் இவர்களின் மகிழ்ச்சியில் நானும் இணைந்து கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்தது. அதன் அதிர்வு அப்பகுதியையே நடுங்கச் செய்தது. குண்டுச் சிதறல்களும் அவ்விடமெல்லாம் பறந்தன. நான் பதுங்கு குழிக்குள் ஒளிந்தேன். சிறிது நேரம் கழித்து எமது மெய்ப்பாது காவலரான போராளிகள் என்னிடம் ஓடிவந்தார்கள். குண்டுவீச்சு விமானங்கள் சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். எமது வீட்டுக்கு மிகவும் சமீபமாக விமானத் தாக்குதல் நிகழ்ந்ததால் நாம் எல்லோருமே பதட்டமடைந்து போனோம். குண்டுகள் எங்கே வீசப்பட்டிருக்கலாம் என்று நாம் அங்கலாய்த்தபோதுதான் எமது மருத்துவ நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தகவல் வந்தது. உடனடியாக நான் அங்கு ஓடிச்சென்றேன் அதிர்ஷ்ட வசமாக, மருத்துவ நிலையத்திலிருந்த பெண்போராளிகள் எவருக்குமே உயிர்ச் சேதமோ அன்றிக் காயமோ ஏற்படவில்லை. ஜெட் விமானங்கள் ஆகாயத்தில் சுற்றியதை அறிந்ததுமே காயமடைந்த போராளிகளும் தாதியரும் பதுங்கு குழிக்குள் ஒளிந்து கொண்டதால் உயிர் தப்பிப் பிழைத்தனர். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக வீதியால் அவ்வழியே சென்ற ஒரு அப்பாவிப் பெண் தலைசிதறி உயிர் நீத்தார். ஆனையிறவுச் சமரை அடுத்து நாம் வசித்த சுண்டுக்குளிப் பகுதி அடிக்கடி விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகியது. எமது வீட்டிற்கும் குறிவைக்கப்படலாம் என அச்சுறுத்தல் எழுந்த காரணத்தினால் நாம் சுண்டுக்குளியிலிருந்து இடம் மாறி, கொக்குவில் பகுதியில் ஒதுக்குப் புறமான ஒரு வீட்டில் குடியமர்ந்தோம். யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பு வரை நாம் அந்த வீட்டிலேயே வசித்து வந்தோம்.

பெண் போராளிகள்

இது இவ்வாறிருக்க விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரச படைகளுக்கும் மத்தியில் பல முனைகளில் மோதல்கள் நிகழ்ந்தன. இந்த மோதல்களில் பெண் போராளிகளின் பங்களிப்பு விடுதலைப் போரின் இணைபிரியாத அம்சமாக வடிவெடுத்தது. ஆனையிறவுச் சமரில் பெண் போராளிகளே முக்கியப் பங்கு வகித்ததைத் தொடர்ந்து 'மின்னல் இராணுவ நடவடிக்கை' என்ற பெயரால் மணலாற்றில் நிகழ்ந்த தற்காப்புச் சமரிலும், பெண் போராளிகள் பங்கு கொண்டனர். பலாலிப் பெருந்தளத்தின் எல்லையோரக் காவல் நிலைகளில் நிலை கொண்டிருந்த பெண் புலிகளின் போர் அணிகள், சிறீலங்கா இராணுவத்தின் மினி முகாம்கள் மீது துணிகரத் தாக்குதல்களை நடத்திச் சாதனைகள் படைத்தன. விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெண் போராளிகளின் பங்களிப்பு ஆழமாகிச் சென்றபோது, அவர்களது வீர தீரச் செயல்கள் பற்றிய கதைகள் எனது காதுக்கு எட்டியது. இந்த இளம் பெண்கள் எதிர்கொண்ட திகைப்பூட்டும் சம்பவங்களையும், அபூர்வமான அனுபவங்களையும் எழுத்தில் வடிக்க வேண்டுமென எனக்கு ஒரு ஆசை பிறந்தது. காலமும், காலத்தின் விரிப்பில் கட்டவிழும் நிகழ்வுகளும், துரித கெதியில் ஓடிக் கொண்டிருந்தன. வரலாற்று நிகழ்வுகளை உடனடியாகப் பதியா விட்டால் ஞாபகத்தில் பசுமையிலிருந்து அவை மங்கலாகிவிட லாம். அத்தோடு புதிதாகக் கட்டவிழும் நிகழ்வுகளால் பழைய வரலாற்றுச் சம்பவங்களின் உண்மைகளும் திரிவுபடலாம். ஆகையால்தான் பெண் போராளிகளின் போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தி ஒரு நூல் வெளியிட முடிவு செய்தேன்.

காலமும், காலத்தின் விரிப்பில் கட்டவிழும் நிகழ்வுகளும், துரித கெதியில் ஓடிக் கொண்டிருந்தன. வரலாற்று நிகழ்வுகளை உடனடியாகப் பதியா விட்டால் ஞாபகத்தில் பசுமையிலிருந்து அவை மங்கலாகிவிட லாம். அத்தோடு புதிதாகக் கட்டவிழும் நிகழ்வுகளால் பழைய வரலாற்றுச் சம்பவங்களின் உண்மைகளும் திரிவுபடலாம். ஆகையால்தான் பெண் போராளிகளின் போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தி ஒரு நூல் வெளியிட முடிவு செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் படைப்பிரிவுக்கு அன்று தளபதியாகப் பணிபுரிந்த ஜெயந்தி, எனது எழுத்து முயற்சிக்கு முழுமையான ஒத்துழைப்புத் தர முன்வந்தார். அத்தோடு பல்வேறு சமர்களில் களமாடி வீரசாதனை படைத்த பெண் போராளிகள் சகலரையும் எனக்கு அறிமுகம் செய்து வைக்கவும் இணங்கினார். முக்கியப் பெண் தளபதிகள் எனது வீட்டுக்கு வருகை தந்து போராட்ட வரலாறு பற்றி என்னுடன் கலந்துரையாடினர். பல சமயங்களில் நான் பெண் போராளிகளிடமிருந்து செவ்வி எடுக்கும்போது, அவர்களது சொந்தப் போர் அனுபவங்களை அவர்களது வாயால் கேட்கும் போது மெய்சிலிர்க்கும். மாவீரர் ஆகிவிட்ட தமது தோழிகளின் வீரம் செறிந்த வரலாறுகளை விபரிக்கும்போதெல்லாம் தாழ்ந்த குரலில் தன்னடக்கமாகவும் மரியாதையுடனும் கதைப்பார்கள். சிலர் தமது சொந்தப் போர்ச்சாதனைகளைக் கூறும்போது உணர்ச்சிவசப்படுவார்கள். சில சிக்கலான நிகழ்வுகளைச் சிலர் நடித்துக் காட்டியும் விளக்குவார்கள். ஆழமான அதிர்ச்சியூட்டும் அனுபவங்களைச் சொற்களில் வடிக்க முடியாது திண்டாடுபவர் களும் உண்டு. போர்க்கள வெற்றிகள் பற்றிச் சொல்லும்போது எல்லோருமே நெஞ்சை நிமிர்த்தியபடி பெருமிதத்துடன் பேசுவார்கள். களமாடிக் கொண்டிருக்கும் தமது சக போராளி களுக்கு அவசியமாகத் தேவைப்படும் ரவைகள் வெடிபொருட் களைக் காவியபடி, இருபுறத்திலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தபடி இருந்தபோதும், துணிந்து சாவுக்குப் பயப்படாது களமுனைக்குச் சென்ற சம்பவங்களைச் சில பெண் போராளிகள் விபரித்தார்கள்.

தாம் பசி கிடந்தபடி, போர்முனையில் நின்ற தமது சக போராளிகளுக்கு நேரம் தவறாது, சிரமமாக உணவுப் பொட்டலங் களை எடுத்துச் செல்லும் தன்னலமற்ற சேவை பற்றியும் சில பெண் போராளிகள் எடுத்துச் சொன்னார்கள். களமுனைகளில் காயமுற் றோருக்கு அவசரச் சிகிச்சை அளித்து, உயிராபத்தையும் பொருட் படுத்தாது அவர்களைச் சுமந்து செல்லும் பெண் மருத்துவப் போராளிகளின் துணிச்சலான சாதனைகள் பற்றியும் சிலர் விபரித்தார்கள். சிங்கள ஆயுதப் படைகளின் திடீர் சுற்றிவளைப்பு களை உடைத்துச் சென்ற வியப்பூட்டும் சம்பவங்கள் பற்றியும் சொன்னார்கள். சில பெண் போராளிகள் தமது மரணம் பற்றி முன்னுணர்ந்து சொன்னதையும், பின்னர் அது அவ்வாறே நிகழ்ந்ததாகவும் எனக்குச் சிலர் விசித்திரமான சம்பவங்களைக் கூறினார்கள். இப்படியான பல வியப்பூட்டும் சம்பவங்களை, வீரம் செறிந்த தனிமனித வரலாறுகளை, அலாதியான அர்ப்பணிப்பு களை இப்பெண் போராளிகளிடமிருந்து கேட்டபோது நான் மலைத்துப் போனேன். அவர்கள் மத்தியில் பிரசன்னமாக இருப்பதே எனக்குப் பெருமிதமாக இருந்தது. அவர்கள் கூறிய சம்பவங்களையும், வரலாற்று நிகழ்வுகளையும் அவர்களது ஒட்டுமொத்தமான போரனுபவங்களையும் தொகுத்துப் பார்த்த போதுதான் அவர்களது இலட்சியப் பற்றுறுதியையும், அர்ப்பணிப் பின் ஆழத்தையும் புரிந்துகொள்ள முடிந்தது. இந்தப் புரிந்துணர்வு ஏற்பட்ட காரணத்தினாலேயே பெண் போராளிகள் பற்றி விடயம் தெரியாது கண்டன விமர்சனங்களை எழுதுபவர்கள் மீது எனக்குக் கடும் சினம் ஏற்படுவதுண்டு.

விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் என்ற எனது ஆங்கில நூல் 1993 ஜனவரி முதல் திகதி யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகியது. பின்னர் விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் இந்நூலினை லண்டனிலும் பாரிசிலும் வெளியிட்டது. விடுதலைப் புலிகளின் மகளிர் கட்டமைப்பின் தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி பற்றிய வரலாற்றுப் பதிவாகவே இந்நூல் அமைகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் என்ற எனது ஆங்கில நூல் 1993 ஜனவரி முதல் திகதி யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகியது. பின்னர் விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் இந்நூலினை லண்டனிலும் பாரிசிலும் வெளியிட்டது. விடுதலைப் புலிகளின் மகளிர் கட்டமைப்பின் தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி பற்றிய வரலாற்றுப் பதிவாகவே இந்நூல் அமைகிறது. தமிழீழ விடுதலைப் போரில் பெண் போராளிகள் பங்கு கொண்ட சமர்களையும் அவர்களது சாதனைகளையும் இந்நூல் விபரிக்கின்றது. 1986 ஒக்ரோபரில், மன்னாரில் நிகழ்ந்த சமரில் முதற் தடவையாகப் போராட்டக் களத்திற்கு அறிமுகமாகியதில் இருந்து 1992 நவம்பர் 23இல் பலாலி இராணுவத் தளம் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் பங்குகொண்டதுவரை, விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளது ஆறாண்டு கால ஆயுதப் போராட்ட வரலாற்றை இந்நூல் சித்தரித்துக் காட்டுகின்றது. காட்டுப்புறக் கெரில்லாப் போர் முறையிலிருந்து, மரபு வழிப் போர் வரை பல்வகையான போர் அனுபவங்கள் ஊடாக மகளிர் படையணியில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றியும் முன்னேற்றம் பற்றியும் இந்த வரலாற்று விவரணத்தில் விபரிக்க முயன்றுள்ளேன். பிரமாண்டமான இராணுவ இயந்திரமான இந்தியப் படைகளை, காட்டுப்புற, நகர்ப்புறக் கெரில்லாப் போர் வடிவில் முகம்கொடுத்து, புலிகளின் மகளிர் படையானது ஒரு வலுப்பெற்ற போராட்டச் சக்தியாக உருவெடுத்ததையும் இந்நூலில் விபரிக்கின்றேன். இந்நூலில், ஒரு பகுதி பெண் போராளிகளுக்கு வழங்கப்படும் போர்ப் பயிற்சி பற்றி விபரித்துக் கூறுகிறது. எந்தவித, ஆபத்தான போர்ச் சூழலையும் எதிர்கொண்டு நிற்க வல்ல, ஒழுங்கும் கட்டுப்பாடும் உடைய போராளிகளாக மாற்றும், மிகத் திறமான கடுமையான பயிற்சி பெண் போராளிகளுக்கு வழங்கப்படுகிறது என்பதை இப்பகுதியில் நான் எடுத்துக் கூறுகின்றேன்.

வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, தமிழீழப் பெண் சமூகம் போராட்டத்தில் பங்குபற்றி வந்துள்ளது புலனாகும். அறுபது களிலும் எழுபதுகளிலும் நடைபெற்ற அகிம்சை வழிப் போராட் டங்களில் பெண்கள் தீவிரமாகப் பங்குகொண்டனர். தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களது பங்களிப்பின் ஒரு விரிவாக்கமாகவே ஆயுதப் புரட்சிப் போரிலும் பெண்கள் பங்கு கொள்கிறார்கள் என நான் எனது நூலில் வாதிடுகிறேன். ஆயுதப் போரில் பெண்களை ஈடுகொள்ளச் செய்த, அக, புறச் சூழல்களை இந்நூலில் எடுத்து விளக்கும் போது, இவை 'அரச ஒடுக்குமுறை யின் வரலாற்றுச் செல்நெறிகளால் உருவகித்தவை' எனச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். தேசிய இனக் கட்டமைப்பில் ஒரு இணைபிரியாத அங்கமாக இருப்பதாலும், அரச ஒடுக்குமுறைக்கு நேரடியாகப் பலியாகி வருவதாலும், மக்களின் போராட்டம் என்ற ரீதியில் தமிழ்ப் பெண்கள் தாமாகவே முன்வந்து ஆயுத எதிர்ப்புப் போரில் பங்குகொள்கிறார்கள் என்றும் இந்நூலில் நான் வாதிடுகிறேன்.

வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, தமிழீழப் பெண் சமூகம் போராட்டத்தில் பங்குபற்றி வந்துள்ளது புலனாகும். அறுபது களிலும் எழுபதுகளிலும் நடைபெற்ற அகிம்சை வழிப் போராட் டங்களில் பெண்கள் தீவிரமாகப் பங்குகொண்டனர். தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களது பங்களிப்பின் ஒரு விரிவாக்கமாகவே ஆயுதப் புரட்சிப் போரிலும் பெண்கள் பங்கு கொள்கிறார்கள் என நான் எனது நூலில் வாதிடுகிறேன்.

நூல்பற்றிய குறிப்பு:

*சுதந்திர வேட்கை. அடேல்பாலசிங்கம், இலண்டன் - 2002.*

*மொழியாக்கம் : தாசீசியஸ் மற்றும் அண்டன் பாலசிங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ

## விழுதாகி வேருமாகி: பார்வையும் பதிவும்

■ அர்த்தநாரீ

மனித வாழ்வில் தம்மால் செயலுருப்படுத்த முடியாத அல்லது செயலுருப்படுத்த நினைக்காத சிந்தனைகள் வழிப் பிறக்கும் சொற்கள் சொற்றொடர்களுக்குள்ளேயே சொர்க்கத்தைக் காண்பதில் உவகையும் உளத்திருப்தியும் அடையும் மனிதர்கள் நிரம்பிய சமூகமொன்றில், கிட்டத்தட்ட இரு தசாப்தங்கள் தாம் வரித்துக் கொண்ட இலட்சியம் ஒன்றிற்காக உயிர் கொடுத்து, உடல் உறுப்புகளைக் கொடுத்து, உள்ளத்து விருப்பங்களைக் கொடுத்து நிறைவேற்றிய மாபெரும் பணியின் ஒரு சிறு பகுதிக்குச் சொல் வடிவம் கொடுக்கும் அரிய முயற்சியின் வெளிப்பாடே விழுதாகி வேருமாகி என்ற இந்தப் போரியல் வரலாற்று ஆவணம்.

"எமது போராட்டத்தின் வரலாற்றை அதன் ஆழத்திலும் அகலத்திலும் அதன் யதார்த்தக் கோலத்திலும் தரிசித்துக் கொள்வது கடினம். போர் பற்றிய அறிவு ஞானம் இல்லாத பழமையில் புதைந்து போன வரலாற்றாசிரியர்களால் எமது பெண் போராளிகளின் வரலாற்றைத் துல்லியமாகக் கிரகித்தறிவது சிரமம், எதிரி மட்டும் அறிந்ததை எல்லோரும் அறியட்டும்" என்ற தலைப்பில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகர னின் மனப்பதிவுகளைச் சுமந்து நிற்கும் முன்னுரையில் காணப்படும் மேற்கண்ட வாசகம் இந்நூல் தொடர்பான பார்வை ஒன்றை உருவாக்கும் முயற்சியில் சிறு தயக்கநிலையை ஏற்படுத்தியிருப்பினும் கூட எந்த ஒரு பொருளினதும் மெய்ப்பொருளைக் காண்பதற்குப் பார்த்து, கேட்டு, படித்து, உணர்ந்து, அனுபவித்துப் பெற்ற புலன் வழி அறிவை, புலனுக்குப் புறம்பாக உள்ள பகுத்தறிவின் துணை கொண்டு சீர்தூக்கிப் பார்க்கும் உரிமையும் அதற்கான ஆற்றலும் இம் மண்ணில் வாழும், இம் மண்ணை நேசிக்கும் ஒரு பிரகிருதிக்கு இருக்கும், இருக்க முடியும் என்ற உள்ளுணர்வு தந்த தூண்டல் இங்கு உங்கள் முன் நூல் பற்றிய பார்வையாக விரிகிறது.

எந்தவொரு நூலையும் மதிப்பிடும் பணியில் கவனத்தில் கொள்ளப்படும் அம்சங்கள் மூன்று. நூலின் உருவமைப்பு, உள்ளடக்கம், அதன் உயிர்; பாதை திறப்பினால் வேறு பயன் கிடைத்ததோ இல்லையோ மண்ணின் வளத்தையும் மனதின் உரத்தையும் சிறப்பாகப் படம் பிடிக்கும் அட்டைப்படத்துடன், பார்ப்பவர் கண்களுக்குப் படிக்கத் தூண்டும் ஆர்வத்தை ஏற்படுத்தும் கணினி அச்சமைப்புடன் எமது கரங்களில் ஒரு நூல் தவழ்கிறது. இது தான் உருவமைப்பு சொல்லும் சேதி.

இக்கட்டுரையாசிரியர் சமூகவியல், நூலகவியல், அரசியல் முதலிய துறைகளில் ஆர்வம் கொண்டவர். பல நூல்களை எழுதியிருப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் சொல்லும் சேதி சற்று வித்தியாசமானது.

"எதிரி மட்டுமே அறிந்ததை எல்லோரும் அறியட்டும்'' என்ற தேசியத் தலைவரின் மனப்பதிவைச் சுமந்து,

"கால விரிப்பில் கட்டவிழுந்து கொண்டிருக்கும் ஓர் படையணியின் இராணுவ சாதனைகள் உயிர்த்துடிப்புடன் பசுமையான நினைவுகளுடன் இங்குப் பதிவாக்கப்பட்டுள்ளது.'' என்ற அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனின் பாராட்டுகளை உள்வாங்கி,

"இது இரத்தத்துளிகளால் எழுதப்பட்ட உண்மை மனிதர்களது கதை. எங்களுக்குள் இருந்தது ஒரு குடும்ப உறவு. இந்த வாழ்விலும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும்--- போர் அரங்குகளில் அணிகளைக் களமிறக்கும் ஒவ்வொரு தடவையும் என் மனம் இறுகும்'' என வரலாற்றை ஆக்கியோரின் வரலாற்றை இரைமீட்கும் தளபதி விதூஷாவின் உள்ளத்து உணர்வுகளைத் தாங்கிப் பெண்கள் அணியின் முதல் வித்தான மாலதிக்கு வீரவணக்கம் செய்து,

"போர் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. அது எங்களுக்குப் புரிகிறது. பொருளாதாரப் போர் கருத்தியல் போர் எல்லாமே பாதை திறப்பின் பின்னர் வலுத்து வருகிறது.. தனியார் நிறுவனங்கள் கொட்டுகின்ற சல்லிக் கற்களுக்குள்ளும் படை படையாக ஊற்றுகின்ற தாரின் கீழும் இவர்களின் வியர்வையும் இரத்தமும் தசைத்துணுக்குகளும் புதைந்து போய்க்கொண்டிருக் கின்றன. மாயப்போர்களாலும் காலவெள்ளத்தாலும் அழியாதவர் களாகத் தலைமுறை கடந்தும் வாழ்பவர்களாக இவர்களை நிலைநிறுத்தவே இந்நூலை எழுதினோம் எனக் கதை பிறந்த கதையைத் தமக்கேயுரிய நடையில் பணிவுடன் சமர்ப்பிக்கின்ற புரட்சிகா, காந்தா, மலைமகள் ஆகிய மூன்று போராளிகளதும் உணர்வுகளைத் தாங்கி, 567 பக்கங்களில் 11 அத்தியாயங்களில் படையணி எதிர் கொண்ட வரலாற்றுச் சமர்களின் இராணுவப் புவியியல் வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கிச் சமர் புரிந்த அமைவிடங்களின் நிலவுருவப்படங்களுடனும், படையணியின் வரலாற்றை விளக்கும் மூன்று பக்க கவிதையுடனும் வித்தாகிப் போன 1117 மாவீரர்களின் பட்டியலுடனும் உள்ளடக்கம் கச்சிதமாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது.

"போர் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. அது எங்களுக்குப் புரிகிறது. பொருளாதாரப் போர் கருத்தியல் போர் எல்லாமே பாதை திறப்பின் பின்னர் வலுத்து வருகிறது.. தனியார் நிறுவனங்கள் கொட்டுகின்ற சல்லிக் கற்களுக்குள்ளும் படை படையாக ஊற்றுகின்ற தாரின் கீழும் இவர்களின் வியர்வையும் இரத்தமும் தசைத்துணுக்குகளும் புதைந்து போய்க்கொண்டிருக் கின்றன. மாயப்போர்களாலும் காலவெள்ளத்தாலும் அழியாதவர் களாகத் தலைமுறை கடந்தும் வாழ்பவர்களாக இவர்களை நிலைநிறுத்தவே இந்நூலை எழுதினோம்

உள்ளடக்கம் சொல்லும் இன்னொரு செய்தி நூலின் ஒழுங்கமைப்பு. பாதை திறப்பைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்ற நிகழ்கால வினாவொன்றுடன் தொடங்கி மீண்டும் நிகழ்காலத்தைத் தொட்டு நிற்கின்ற உள்ளடக்க அமைப்பு. யாழ் மண்ணை விட்டு முழுதாக வெளியேறிய மக்களைப் பிடித்திருந்த அதே இறுக்கம் எழுத்துநடையிலும்---இராணுவம் வரப்போவதை அறிந்த தளபதி விதூஷாவின் பரபரப்பு படையினரால் இழப்பு படையினருக்கு இழப்பு "கண்ணாடியைச் சிறு கல்லொன்றால் உடைத்துத் தன் வீரப்பிள்ளையின் படத்தை உரித்து எடுத்து சேலைக்குள் மறைத்தவாறு தேம்பி அழுது கொண்டே கிளாலிக் கடற்கரையை விட்டுத் திரும்பும் அந்த மூதாட்டியினைப்போல் மக்களின் துயரங்கள்'' அனைத்தும் அதற்கேயுரிய இறுக்கமான உணர்வுடன்-- இந்த இறுக்கம் முல்லைத்தள மீட்பில் தளர்ந்து, மீறிண்டும் ஆனையிறவுத் தோல்வியில் துவண்டு, வெற்றி நிச்சயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையைத் தீரமுடன் தாங்கி, மன்னார் போர்முழக்கத்தைப் பம்பலாய் வரவேற்று, ஆனையிறவில் அட்டகாசமாய் நுழைந்து, சாவகச்சேரியை விட்டுத் துயருடன் மீண்டும் பின்வாங்கி, இறுதியில் போர்நிறுத்தத்தின் பின்னரும் கிட்டத்தட்ட காவியா, மதி போன்ற திறமை மிக்க தளபதிகள் உட்பட 100 போராளிகளை விழுங்கிய தீச்சுவாலை நடவடிக்கையின் வலியைத் தாங்கி-- இவை உணர்வின் வரிகள் அதனால் தான் எழுத்துகள் கூட இவர்களைப்போல் இறுக்கங்களையும் வலிகளையும் குதூகலங்களையும் அதற்குரிய ஒழுங்கில் அனுபவிக்கிறதோ--?

உயிரின்றி உடலால் பயனில்லை. எனவே இவை உயிர் சொல்லும் சேதிகள்;.

எந்தவொரு நூலும் அது கொண்டுள்ள கருத்தின் அடிப்படையில் புத்துயிர் தருவது, தகவலைத் தருவது, உயிர்ப்பூட்டுவது என மூவகைப்படுகிறது. உண்மையோ பொய்யோ நல்லதோ தீயதோ படிப்பவருக்கு ஒரு புதிய உணர்வை, புதுவித எழுச்சியை, புதுவித கிளர்ச்சியை, பொழுதுபோக்கு உணர்வைத் தருபவை புத்துயிர் தரும் நூல்கள் எனப்படும். அப்பட்டமான உண்மையிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட ரோல்ஸ்ரோயின் *புத்துயிர்ப்பு*, மக்சிம் கோர்க்கியின் *தாய்*, லியோன் யூரிஸின் *எக்ஸ்சோடஸ்* இவ்வகையைச் சார்ந்தது. வரலாறு, அரசியல், புவியியல் போன்று எடுத்துக் கொண்ட பொருட்துறை தொடர்பாகப் பொதுவான தகவலை உள்ளடக்குபவை தகவலைத் தரும் நூல்கள் எனப்படும். இவை இரண்டையும் தவிரப் பொருளாதாரத் தத்துவத்தைப் புகுத்திய அடம்ஸ்மித்தின் தேசங்களின் செல்வம் போன்று, பொதுவுடமைத் தத்துவத்தைத் தந்த கார்ல் மாக்ஸின் மூலதனம் போன்று உயிரின உருவாக்கத்தை விளக்கிய டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு போன்று மனிதனின் அறிவைத் தூண்டுகின்ற சிந்திக்கச் செய்கின்ற மனிதனையும் சமூகத்தையும் முன்னேற்றுகின்ற உயிர்ப்பூட்டும் நூல்கள் எம்மிடம் மிகவும் குறைவே. அதிலும் இந்த மூன்று அம்சங்களும் ஒருங்கு சேர அமைந்திருக்கும் அற்புத வாய்ப்பு ஒரு சில நூல்களுக்கே அமைந்துவிடுகின்றது.

*விழுதாகி வேருமாகி* என்ற இந்த வரலாற்று நூல் தான் சொல்ல நினைத்ததை ஒளிவு மறைவின்றிச் சொல்லும் பாங்கில் போரியல் வரலாற்றுத் தகவலைத் தரும் ஒரு நூலாகிறது. எப்படி?

"ஆனையிறவில் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று தடவைகள் சமர்க்களத்தின் தோல்விகளை ஒப்புக்கொள்வதில் மழை சொரியும் இருளோடும் இருண்ட எம் மனங்களோடும்-- பூநகரி நோக்கி வந்தது எமது படகுகள் மட்டுமே-- எம் மனங்களெல்லாம் அரியாலையில், சாவகச்சேரியில், வண்ணாத்திப் பாலத்தில் இன்னும் இன்னும் எம் உறவுகளின்; உயிர் பிரிந்த களங்களில்--- ஒவ்வொரு சோடி விழிகளாலும் படகுகள் நனைந்தன" எனப் பலத்த உயிரிழப்புகளுடனான பின்னடைவைச் சந்தித்ததை நினைவு கூர்வதில் எமது படையணி பங்கு கொண்ட அனேக சமர்களில் தட்சாயினியின் கால்கள் நடந்திருக்கின்றன. களங்களில் அவர் காட்டும் வெஞ்சினம், உடனிருக்கும் போராளிகளில் அவர் வைத்திருக்கும் அன்பு, பராமரிப்பு, வழிகாட்டல், தவறு சிறிதென்றாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் அவர் வழங்கும் ஒறுப்பு, அதன் பின்னரான விளக்கம்-

எந்தவொரு நூலும் அது கொண்டுள்ள கருத்தின் அடிப்படையில் புத்துயிர் தருவது, தகவலைத் தருவது, உயிர்ப்பூட்டுவது என மூவகைப்படுகிறது. உண்மையோ பொய்யோ நல்லதோ தீயதோ படிப்பவருக்கு ஒரு புதிய உணர்வை, புதுவித எழுச்சியை, புதுவித கிளர்ச்சியை, பொழுதுபோக்கு உணர்வைத் தருபவை புத்துயிர் தரும் நூல்கள் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-- ஈடு செய்யமுடியாத இழப்பு இது. பொறுப்புகளை ஈடு செய்யலாம் மனிதர்களை ஈடு செய்வது இயலாத காரியம்-- எனச் சக போராளி ஒருவரின் திறமையை வெளிப்படையாக அளவிடுவதில் எங்களுடைய எல்லாப் பொறுப்பாளர்களுமே எமது பொறுப்பிலிருந்து ஒருபடி கீழிறக்கப்பட்டோம்; காற்று இறக்கப்பட்டோம்; எனப் புளியங்குளம் வெற்றிச்சமரில் கூட உயிரிழப்புக்களைக் குறைப்பதில் கூடுதல் கவனம் எடுக்காமைக்காக காத்து இறக்கப்பட்டதைப் பெருந்தன்மையுடன் ஒப்புக் கொள்ளுவதில்.

குறுஞ்சி என்ற மருத்துவப் போராளியின் புதிய கள அனுபவத்துடன் தளபதி விதூஷா மல்லுக்கட்டியதை வெளிப்படுத்துவதில்--- வெடிபொருட்களை இழந்ததை, கஞ்சியே களவாழ்க்கையாக மாறிய பொருளாதாரப் பின்னடைவைச் சொல்வதில்- என்று பல இடங்களில் இந்த ஒளிவுமறைவற்ற தன்மை பேணப்படுகிறது. சொல்லப்படும் தகவல்கள் சமர்க்களங் களை வழிநடத்தியவர்களின் நேர்காணல்கள் மூலம் மேலும் வலுவூட்டப்பட்டிருப்பது நம்பகத்தன்மையைக் கூட்டுகிறது. வெறுமனே பொதுத் தகவலைத் தரும் பணியுடன் நின்று விடாமல் களமுனைகள் இராணுவத் தள அமைப்புகள் வீதிகள் வெட்டைகள் காடுகளின் தன்மைகள் அமைவிடங்கள் என இம் மண்ணில் நடந்தேறிய வரலாற்றுச் சமர்களின் வழித்தடங்கள் பற்றி அறிய விழைபவருக்கு மிகச் சிறந்த ஒரு குறிப்புதவு நூலாக இது கருதப்படக்கூடியது. அதுமட்டுமன்றி வரலாற்றுச் சமர்களில் பங்கெடுத்தவர்களின் விபரங்களைத் தருவதில் வாழ்க்கை வரலாற்று நூலின் பண்புகளை ஓரளவிற்கு இது கொண்டுள்ளது.

வெறுமனே பொதுத் தகவலைத் தரும் பணியுடன் நின்று விடாமல் களமுனைகள் இராணுவத் தள அமைப்புகள் வீதிகள் வெட்டைகள் காடுகளின் தன்மைகள் அமைவிடங்கள் என இம் மண்ணில் நடந்தேறிய வரலாற்றுச் சமர்களின் வழித்தடங்கள் பற்றி அறிய விழைபவருக்கு மிகச் சிறந்த ஒரு குறிப்புதவு நூலாக இது கருதப்படக்கூடியது.

நெருக்கடியான கட்டம் வந்த பின்னர் மைதிலியைக் களம் இறக்கித் தான் அந்தச் சண்டையை முடிவுக்கு கொண்டு வந்தோம். மைதிலியால் தான் அது முடியும் என சமருக்குப் பொறுப்பான தளபதி தீபனால் ஒத்துக்கொள்ளப்படும் அளவிற்குத் தனித்துவம் வாய்ந்த, யாழ் பின்னடைவின் போது தாடை உடைந்து குற்றுயிரும் குலையுயிருமாய்த் தப்பிப் பரந்தனில் கண்மூடிய அந்த அற்புதமான வேவுப்புலி போராளி லெப். கேணல் மைதிலி.---

எந்த இருளிலும் தடுமாற்றம் இல்லாத நிதானம் மிக்க காவியா, நிர்வாகத் திறன் மிக்க மதி, அமைதியான, உறுதியான, அப்பழுக்கில்லாத அந்த வீரமகள் நிஸ்மியா-- கிளாலி நடவடிக்கையில் துணிவுடன் போரிட்ட கப்டன் துளசிராம், லெப். அறிவரசி, வெற்றி நிச்சயம் படைநடவடிக்கையில் ,தனது முதல் கள அனுபவத்திலேயே அகழியில் தேங்கிவிட்ட இரத்தம் தன பாதங்களை நனைத்ததையும் பொருட்படுத்தாமல் மன உறுதியை வெளிப்படுத்திய இந்நூலின் ஆசிரியர்களால் பெயர் குறிப்பிட மறந்துவிட்ட? அந்தப் புதிய போராளி எத்தனையோ சண்டைகளுக்கு ஈடு கொடுத்துத் தமிழ் மண்ணை முத்தமிட்ட அந்த வீரமகள் லெப். திருக்கோதை.--- இப்படி நூலுக்குள் உச்சரிக்கப்படும் ஒவ்வொரு பெயருமே தளபதி விதூஷாவின் வார்த்தைகளில் சொல்வதானால் ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒவ்வொரு கதாநாயகி. சிலசமயம் ஒரு அத்தியாயத்துக்குள்ளேயே பல கதாநாயகியர்.

சொல்லப்பட்டவற்றை இலகுவான மொழிநடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரையும் ஈர்க்கும் வகையில் எழுதப்பட்டிருப்பதில் இது ஒரு புத்துயிர் தரும் நூலாகிறது. எப்படி---?

சில்வண்டுகளின் பின்னணி இசைக்கேற்ப நடைபெற்றுக் கொண்டிருந்த மின்மினிகளின் குழு நடனம் காவற் கடமையில் நின்றவர்களின் தனிமையைப் போக்கியது என இயற்கை மீதான நேசிப்பில்--.

அட அநியாயமே! இதுவா காஞ்சோண்டி--? முன்னே போய்க் கொண்டிருக்கும் வழிகாட்டிகள் அவற்றிலே முட்டாமல் மோதாமல் இலாவகமாக வளைந்து நெளிந்து போக நாங்களோ அதைப் புரிந்து கொள்ளாமல் ஒரு காஞ்சோண்டியையும் மிச்சம் விடாமல் உரசி உரசிக் கைகளால் தொட்டு விலக்கி இயற்கை மீது எமக்கிருக்கும் பேரன்பை வெளிப்படுத்தியவாறு சென்றால் கடிக்காமல் வேறென்ன செய்யும்? என்றும் இது என்னடா கரைச்சலாகக் கிடக்கு.ஏற்கனவே இசைக்குழு மாதிரி நகர்ந்து கொண்டிருக்கிறம். அதுக்குள்ள இதுகள் (மின்மினிகள்) லைற் போட்டுக் காட்டிக் கொண்டிருக்குதுகள்-- என இயற்கையின் இடைஞ்சலையும் சுவைபடக் கூறும் தன்மையில்.

நல்ல நிலையிலிருந்த 113 இராணுவ சடலங்களைச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்து விட்டோம். ஆனால் மன்னகுளத்தின் நீண்ட அடர்ந்த காட்டு மரங்களிடையே இழக்கப் பட்ட சிறப்பு அணியினரின் மானம் மரியாதை கௌரவத்தை எடுத்து ஒப்படைக்க எந்தச் சங்கமும் முன்வரவில்லை என இராணுவத்தின் படுதோல்வியை எள்ளல் தொனியில் வெளியிடுவதில்... மீனைக் கொட்டி நீங்கள் கடற்கரையைக் குப்பையாக்குறீங்கள் எண்டு தான் நாங்கள் வாங்கிச் சமைச்சுச் சாப்பிடுறம் என்று யாருமே சாப்பிடாத நெத்தலியைவிடவும் பெரிய, சூடையைவிடவும் சிறிய அந்த மீனைச் சாப்பிட வேண்டிய இல்லாமையை வெளியிடாமல் சப்பைக் கட்டு கட்டுவதில்... இப்படி நூல் முழுவதும் ஆங்காங்கே புத்துயிர் கொடுக்கும் இத்தகைய எழுத்துகள் இந்நூலை உருவாக்கிய கரங்கள் துப்பாக்கிக்கு மட்டுமல்ல எழுதுகோலுக்கும் பழக்கப்பட்டு நாட்கள் பல என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றன. அன்றைய களமுனை ஏடான சுதந்திரக்காற்று தாங்கிவந்த தரமான ஆக்கங்கள் அனேகமானவற்றுக்கு அவர்களே சொந்தக்காரர்களாக இருந்தனர் என்ற தளபதி கருணாவின் கூற்று இங்குக் கருத்தில் கொள்ளப்படக்கூடியது. எழுதப்பட்ட மொழிநடையில், கதை சொல்லும் பாங்கில் இது இலக்கிய அந்தஸ்துக்குள் நுழையக் கூடியதோ என்ற பிரமை இருப்பினும் கற்பனையின் சாரம் கடுகளவும் இல்லாத இந்நூல் கதை சொல்லும் பாங்கில் மட்டுமே புத்துயிர் தரும் நூலின் வகைக்குள் அடங்குகிறது.

சொல்ல நினைக்காத எத்தனையோ செய்திகளைப் படிப்பவரின் சிந்தனையில் புதிதாக உருவாக்கும் பாங்கில் இது ஒரு உயிர்ப்பூட்டும் நூலாகிறது. எப்படி--?

பெறுமதி மிக்க வீராங்கனைகளின் உயிர்கள், ஐநூற்று அறுபத்தாறு தூக்கமற்ற இரவுகள், மழைக்காலங்களில் நனைந்தவாறும் நீர் நிறைந்த பதுங்கு குழிகளோடும் கழிந்த நாட்கள் வெய்யில் காலங்களில் நா வறண்டு மர இலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியும் பனி நீரையும் விடாது பொலித்தீன் பைகளில் சேகரித்துக் குடித்த நாட்கள், இராணுவம் நகரும் திசைகளில் எல்லாம் பதுங்குகுழிகளை அமைத்தவாறே நகர்ந்த நாட்கள், நீண்ட தொலைதூரச் சுமை தாங்கிய நடைப்பயணங்கள், ஓயாத சண்டைகளால் உண்டான உடல் களைப்பு, எல்லாவற்றையும் கடந்து ஓயாத விழிப்புடன் மாலதி படையணி போரிட்டது' என்ற இந்தச் செய்தி சொல்லும் சொல்லாத செய்தி என்ன?

கிடுகுவேலிக் கலாச்சாரத்துக்குப் பழக்கப்பட்டுப்போன பெண்கள் சமூகம் ஒன்றில்--- குடும்ப கௌரவம், சாதிக்கெடுபிடி, அந்தஸ்து போன்ற வேலிகளுக்குள் நின்று கொண்டே உணர்வுகளுக்குத் தீனி போடும் சமூகம் ஒன்றில்-- சமர்க்களங்களில் நின்றுபிடிக்கும் ஆற்றல் இவர்களுக்கு எப்படி வந்தது? அணிகலன்கள்; மற்றும் பூக்கள் பொட்டுகளிலிருந்தும் சீதனக் கொடுமைகளிலிருந்தும் தப்பிக்கும் பொருட்டு புலிகளாக மாறியவர்கள் என முற்போக்குப்(?) பெண்ணியவாதிகளின் சாட்டையடிகளுக்குள் அகப்பட்ட புலிப் பெண்களுக்கு மரணம் அருகில் இருந்தபோதும் இயற்கை மீதான நேசிப்பு, இல்லாமையைக் கூடச் சுவைபடக் கூறும் உணர்வு எப்படி வந்திருக்க முடியும்? இயக்கத்துக்குப் போனவர்களைச் சமூகம் தீண்டத்தகாதவர் களாகத் தள்ளி வைக்கும் என்ற இவர்களின் தீர்க்க தரிசனங்களின்முன்னே இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் குழந்தை குட்டிகளுடன் வாழவும், தேவையேற்படும் போது போரில் முகம் காட்டவும் புலிப் பெண்ணால் எப்படி முடிந்தது?. அவர்கள் நினைப்பது போல் இதற்கும் பயிற்சியளித்தார்களோ ஆண் புலிகள்?

இது பெண்ணின் மொழி. இக்கட்டான நிலையிலும் இயற்கையை நேசிக்கும் ஆற்றல், இல்லாமையிலும் இதயத்தை விட்டுவிடாத ஆற்றல், தோல்வியையும் பெருமனத்துடன் ஒப்புக்கொள்ளும் ஆற்றல், பெரு வலியையும் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் புலிப்பெண்ணுக்கு மட்டுமல்ல உலகில் உள்ள எந்தப் பெண்ணுக்கும் இயல்பானதொன்று. எனவே, இங்கு இட்டுக் கட்டவேண்டிய அவசியம் யாருக்கும் இருக்காது என்றே தோன்றுகிறது. எத்தனையோ வாதப்பிரதிவாதங்கள், கண்டனங்கள், கேலிகள் மத்தியிலும் தமிழீழப் பெண்ணியத்தின் புதிய செல்நெறியைக் காட்டும் சிறந்த குறியீடாக இந்நூல் பரிணமிக்கப் போவதைக் காலம் எடுத்துச் சொல்லும். அதுமட்டுமன்றித் தாயக விடுதலையில் விளக்கு ஏந்திய பெருமாட்டிகளாக மட்டும் தமிழ்ப் பெண் பயன்படுத்தப்படவில்லை. ஆண் பெண் என்ற அடையாளத் துக்கும் அப்பால் சென்று சமர்க்களங்களில் சரித்திரமாகி உறங்கு பவர்களையும் சரித்திரமாக இன்றும் உலா வருபவர்களையும் சுமந்திருக்கும் இந்நூல், தமிழீழப் போராட்ட வரலாற்றில் மறைக்க முடியாத மறக்க முடியாத உண்மைகளை வெளிக்கொணரும் அரிய நூலாக.

இயக்கத்துக்குப் போனவர்களைச் சமூகம் தீண்டத்தகாதவர் களாகத் தள்ளி வைக்கும் என்ற இவர்களின் தீர்க்க தரிசனங்களின்முன்னே இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் குழந்தை குட்டிகளுடன் வாழவும், தேவையேற்படும் போது போரில் முகம் காட்டவும் புலிப் பெண்ணால் எப்படி முடிந்தது?.

வருங்காலத்துக்கான பாதையைத் தேடுவதில் கடந்த காலம் பற்றிய கண்ணோட்டம் அவசியமானது. துரதிருஷ்டவசமாகக் கடந்த கால வரலாறு என்பது பெண்களின் வரலாற்றைப் புறக்கணித்த இருட்டடிப்புச் செய்த ஒருபக்கச் சார்பான வரலாறாக இருக்கும் வரை இது எப்படிச் சாத்தியப்படும்.-- பெண்களது பங்கு மறுக்கப்பட்ட வரலாறு கி.பி 3000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு முன்பே தோன்றிவிட்டது. ஆனால் பெண்களது வரலாறோ 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தான் ஆரம்பித்தது. பெண்கள் இறுதியில் ஆண்களுக்கோ வரலாற்றுக்கோ இரையாகிவிடாது வலிமை வாய்ந்தவர்களாக வெல்லற்கரியவர் களாக மீண்டெழுந்தனர் என்ற றோசலின் மைல்ஸ் என்ற பெண் எழுத்தாளரின் வார்த்தைகளின் சாட்சியாக என்றும் வலம் வரும்.

முழுமை என்பது எதற்குமே சாத்தியமற்றது என்பதற்கு இந்நூலும் விதிவிலக்காக இருக்க முடியாது.

எத்தனையோ இராணுவ அம்சங்களை, போரியல் வியூகங்களை, தோல்விகளை வெளிப்படையாக எல்லோருக்கும் அறியச் செய்த இந்நூல் தென்மராச்சிக்குள் இராணுவம் திடீரென நுழைந்ததை அதைப் புரிந்து படை நகர்வைத் தடுக்கத் தளபதி ஒருவர் பதைபதைத்ததை மண்வெட்டியால் ஒருமுறை தானும் கொத்தும் முன்னரே இராணுவத்தை நாம் எதிர்கொண்டோம் என உயிரிழப்புகள் உடமை இழப்புகள் பற்றி வெளிப்படையாக ஒத்துக்கொள்ளும் நூல்... அந்த மாபெரும் பின்னடைவின் காரணம் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஏதோ காரணங்களுக்காக அன்று அவ்விடத்துக்கு வந்திருக்கவில்லை என்ற ஒற்றை வாக்கியத்தில் தொங்கிக்கொண்டிருப்பது இதன் கனதியைக் குறைக்கிறது.

எழுதியவர்களும் எழுதப்பட்டவர்களும் ஒரே குடும்பத்தவர்கள் என்பதனால் அன்னியோன்னியம் கூடிப் போராளியின் பெயருக்கு முன்னால் கொடுக்கப்படும் அந்தப் பதவிநிலை அடிக்கடி மாயமாய் மறைந்து விடுகிறது போலும். ஆட்டைக்கடித்து மாட்டைக் கடித்து இறுதியில் சிறப்புத் தளபதி கேணல் விதூஷா கூட வெறும் விதூஷாவாய்--- இராணுவக் கட்டமைப்பில் இந்தப் பதவிநிலைகள் மிக முக்கியமானவை என்பது அடுத்தவர் சொல்லித்தான் தெரியவேண்டும் என்றில்லை.

5.0 படையணியை உருவாக்குவதில் வெற்றிபெற்ற ஒரு படையணிக்கு இறுதிக்காலங்களில் எல்லைப்படைகளாய் உதவிய மக்களின் பங்களிப்பை நிர்வகிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லையோ என்ற வினா மனதில் எழுவதைத் தடுக்கமுடியவில்லை.

களமுனைகள் இருந்த இடங்களைச் சுலபமாக எவரும் அறிவதற்கும் ஒன்றுக்கு மேற்பட்ட சமர்களில் கலந்து கொண்ட போராளிகளின் விபரங்களை அறிவதற்கும் ஏதுவாய் நூலின் இறுதியில் இடப்பெயர்கள் ஆட்களின் பெயர்கள் சமர்களின் பெயர்களும் அவற்றிற்கான பக்க எண்களும் உள்ளங்கிய ஒரு சொல்லடைவு கொடுக்கப்பட்டிருந்தால்--- கனதி இன்னும் கூடியிருக்கும்.

சமர்க்களம் தொடர்பான சர்வதேச ஊடகங்களின் அபிப்பிராயங்களை ஒன்றிரண்டுடன் விட்டுவிடாமல் நூலின் இடையிடையே அவற்றிற்குரிய காலக் குறிப்புகளுடன் இணைத்தி ருப்பின் கனதி இன்னும் கூடியிருக்கும்.

இல்லாவிட்டால், புலம்பெயர் தமிழர்களின் விடுதலை உணர்வைத் திசைதிருப்பும் ஒருவகை Operation Trust உளவு நடவடிக்கை அநியாயமாகப் பலியாகிப்போன மற்றொரு இனம் என்கின்ற பெயர் வரலாற்றில் எமக்குக் கிடைத்துவிடும்.

நூல்பற்றிய குறிப்பு:

விழுதாகி
வேருமாகி...

நூலாசிரியர்கள்:

அ.காந்தா,
பெ.புரட்சியா,
மலைமகள்,

உருவாக்கம்:

கேப்டன் வானதி
வெளியீட்டகம்,
கிளிநொச்சி.

வெளியீடு:
இரண்டாம்
லெப்டினென்ட்
மாலதி படையணி
அக். 2003.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போர்க் குற்றங்கள் – அய். நா. அவையின் வல்லுநர் குழு அறிக்கை குறித்த உரையாடல்

■ பூங்குழலி

இலங்கையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வந்த ஆயுதப் போர், 2009 மே 18 அன்று முடிந்ததாக இலங்கை அரசு அறிவித்த ஒரு வாரத்திற்குள் 2009 மே 23 அன்று, அய். நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் இலங்கைக்குச் சென்றார். இலங்கை அரசு விமானத்தில் போர்ப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். பின்னர் இலங்கை அரசு அழைத்துச் சென்ற ஒரு 'மாதிரி முகாமை' எட்டிப் பார்த்தார். கொழும்பு திரும்பி, இலங்கை அதிபர் ராஜபக்சேவுடன் இணைந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டார்.

அவ்வறிக்கையில், இலங்கையில் நடந்த நிகழ்வுகள் குறித்து பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகளைப் பான் கி மூன் வலியுறுத்தினார். இலங்கை அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தது.

இந்த அறிக்கை வெளியிட்டு ஏறத்தாழ ஓராண்டிற்குப் பிறகு, 2010 ஜுன் 22 அன்று, இந்த அறிக்கையின் உறுதிப்பாட்டைச் செயல்படுத்துவதற்கு தனக்கு ஆலோசனை வழங்க அய். நா. பொதுச்செயலாளர் பான் கி மூன் ஒரு வல்லுநர் குழுவை அமைத்தார்.

இலங்கையில் நடைபெற்ற ஆயுதப் போரின் இறுதி கட்டங்களில் உலகளாவிய மனிதநேய மற்றும் மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டதன் தன்மைகளையும் அதன் வீச்சையும் கணக்கில் கொண்டு, பொறுப்பேற்கும் நடைமுறைகள் குறித்த சாத்தியக் கூறுகள், பொருந்தக் கூடிய உலகளாவிய நடைமுறைகள் மற்றும் ஒப்பிடக் கூடிய அனுபவங்கள் குறித்து அய். நா. பொதுச் செயலாளருக்கு ஆலோசனை வழங்குவதே குழுவிற்கு இடப்பட்ட பணியாகும். இக்குழுவின் தலைவராக, மர்சூகி தருஸ்மன் (இந்தோனேசியா), உறுப்பினர்களாக ஸ்டீவன் ரட்னர் (வட அமெரிக்கா), யாஸ்மின் சூகா (தென்னாப்பிரிக்கா) ஆகியோரைப் பொதுச் செயலாளர் நியமித்தார். 16 செப்டம்பர் 2010 அன்று குழு அதிகாரப் பூர்வமாகச் செயற்படத் தொடங்கியது.

இதற்கிடையே, 'நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்' என்ற அரசு சாரா அமைப்பு ஒன்று, இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்த வெளிப்படையான மக்கள் விசாரணையைக் கடந்த 2010 ஜனவரி 14, 15, 16 தேதிகளில் நடத்தி, 2010, ஜனவரி 16 அன்று தனது அறிக்கையை வெளியிட்டது.

இக்கட்டுரையாசிரியர் மொழிபெயர்ப்பாளர் மற்றும் ஈழம் தொடர்பாகத் தொடர்ந்து எழுதிவருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே இலங்கை அரசு போர்க் குற்றங்கள் செய்திருப்பதை ஏற்றுக் கொண்ட முதலாவது பன்னாட்டு அமைப்பாகும்.

அதோடு, பிரிட்டனைச் சேர்ந்த தொலைக்காட்சி நிறுவனமான சானல் 4, போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்டதிலிருந்து, தொடர்ந்து இலங்கை அரசின் வன் செயல்களை, போர்க் குற்றங்களை நிரூபிப்பதற்கான சாட்சியங்களைச் சேகரித்து வெளியிட்டது.

குறிப்பாக, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இளைஞர்கள் சிலர், உடைகள் களையப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, கைகளும் பின்னால் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்படும் காட்சிகளை அது வெளியிட்டது. இது இலங்கையில் நடைபெற்றக் கொடூரங்கள் குறித்து உலகெங்கும் முதன் முதலாக அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

இவற்றிற்கு பிறகே அய். நா. பொதுச் செயலாளரின் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அது தன் பணிகளைத் தொடங்கியது.

வல்லுநர் குழுவின் பணிகள்

அய். நா. வின் வல்லுநர் குழு தன் பணிகளை நிறைவேற்றுவதற்கான ஒத்துழைப்பை அளிக்க இலங்கை அரசு மறுத்துவிட்டது. வல்லுநர் குழு பல முறை கோரியும் அவர்கள் இலங்கைக்குப் பயணம் செய்து நிலவரங்களை நேரடியாக அறிந்து கொள்ள அனுமதிக்க இலங்கை அரசு மறுத்து விட்டது. இந்த இடர்களுக்கு இடையிலேயே, வல்லுநர் குழு, வெளிப்படையான அறிக்கைகள் மூலம், இலங்கையில் போரின் இறுதிக் கட்டங்களில் நிகழ்ந்தவை குறித்த சாட்சியங்களை அளிக்க முன் வருமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தது. அதற்கு பதிலாகக் கிடைத்த ஆயிரக்கணக்கான வாக்குமூலங்களையும், பிற சான்றுகளையும் பகுத்து ஆராய்ந்தே இவ்வறிக்கையை வல்லுநர் குழு வெளியிட்டுள்ளது. இவற்றைத் தவிரவும், அய். நா. விடமே போரின் இறுதிக் கட்டங்கள் குறித்து பெருமளவு ஆவணப் பதிவுகள் இருந்ததாக அறிக்கை குறிப்பிடுகிறது. அய். நா. வின் ஆவணங்களுக்கு வலு சேர்க்கவே சாட்சியங்கள் பயன்பட்டன என வல்லுநர் குழு தெரிவித்துள்ளது.

ஏறத்தாழ 5 மாதங்கள் தனது ஆய்வினை மேற்கொண்ட வல்லுநர் குழு, 2011, மார்ச் 31 அன்று தனது அறிக்கையை வெளியிட்டது.

அறிக்கையின் சாரம்

அறிக்கையின் முதல் பகுதியிலேயே, குழு தான் கண்டறிந்தவற்றின் தீவிரத்தை அழுத்தமாக உணர்த்தியுள்ளது.

'நம்பத்தகுந்தவை என குழு அறிந்துணர்ந்த குற்றச்சாட்டுக்கள், போரின் இறுதிக் கட்டத்தில் நடந்தவைகள் பற்றி இலங்கை அரசு இதுநாள் வரை கூறி வந்த நிலைக்கு மாறான ஒரு நிலையை வெளிக் கொண்டு வந்துள்ளது. 'பொது மக்களில் எவருக்கும் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தக் கூடாது' என்ற கொள்கையுடன் தான் ஒரு மனிதநேய மீட்பு நடவடிக்கைளை மேற்கொண்டதாக அரசு கூறியது. ஆனால் நேர் எதிராக, குழு நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களைக் கண்டறிந்துள்ளது.'

தான் கண்டறிந்தவற்றின் அடிப்படையில் கீழ்காணும் குற்றச்சாட்டுக்களைக் குழு முன் வைக்கிறது.

இலங்கையில் போரின் இறுதிக் கட்டங்களில் நிகழ்ந்தவை குறித்த சாட்சியங்களை அளிக்க முன் வருமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தது. அதற்கு பதிலாகக் கிடைத்த ஆயிரக்கணக்கான வாக்குமூலங்களையும், பிற சான்றுகளையும் பகுத்து ஆராய்ந்தே இவ்வறிக்கையை வல்லுநர் குழு வெளியிட்டுள்ளது. இவற்றைத் தவிரவும், அய். நா. விடமே போரின் இறுதிக் கட்டங்கள் குறித்து பெருமளவு ஆவணப் பதிவுகள் இருந்ததாக அறிக்கை குறிப்பிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசு ஐந்து முக்கிய வகைகளில் மோசமான அத்துமீறல்களை மேற்கொண்டதற்கான தகுதி வாய்ந்த குற்றச் சாட்டுக்களைக் குழு கண்டறிந்துள்ளது.

- பரவலான குண்டு வீச்சின் மூலம் பொது மக்களைக் கொன்றது.

- மருத்துவமனைகள் மற்றும் பிற மனித நேய அமைப்புகள் மீது குண்டு வீச்சு நடத்தியது.

- மனித நேய உதவிகளை மறுத்தது.

- இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் சந்தேகத்திற்குரிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளிட்ட, போரில் தாக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்கள் ஆகியோர் அனுபவித்த மனித உரிமை மீறல்கள்.

- ஊடகங்கள் மற்றும் அரசை விமர்சித்த பிறர் மீது நடந்த மனித உரிமை மீறல்கள்.

போரின் இறுதிக் கட்டங்களில் விடுதலைப் புலிகளோடு தொடர்புடைய குற்றச்சாட்டுக்களை ஆறு முக்கிய வகைகளிலான மோசமான மீறல்களாகக் குழு நிர்ணயிக்கிறது.

- பொதுமக்களை மனித அரணாகப் பயன்படுத்தியது.

- விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து தப்ப முற்பட்ட பொது மக்களைக் கொன்றது.

- பொதுமக்களின் இருப்பிடங்களுக்கு அருகே ஆயுதங்களைப் பயன்படுத்தியது.

- வலுக்கட்டாயமாகக் குழந்தைகளைப் படையில் இணைத்தது.

- வலுக்கட்டாயமாக வேலை வாங்கியது.

- தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைக் கொன்றது.

இவற்றோடு, போரின் கொடூரத்தையும் நடந்த அத்துமீறல்களையும் அறிக்கையின் முன் பகுதி சுருக்கமாக விவரிக்கிறது.

செப்டம்பர் 2008 முதல் 19 மே 2009 வரையிலான காலக்கட்டத்தில், இலங்கை இராணுவம், வன்னிக்குள் தனது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள, மிகப் பாரிய மற்றும் மிகப் பரவலான குண்டு வீச்சுக்களைப் பயன்படுத்தியது. இதில் மிகப் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்த நடவடிக்கை வன்னியின் மக்களைத் தனிமைப்படுத்தியது.

இந்த நடவடிக்கையானது வன்னி மக்கள் தொகையைப் பெருமளவு அழித்தது. ஏறத்தாழ 3,30,000 பேர் பொதுமக்கள், தொடர்ந்து சுருங்கிக் கொண்டு வந்த நிலப் பரப்பிற்குள் சிக்கியிருந்தனர். குண்டு வீச்சுகளுக்குத் தப்பி ஓட முயன்றபோதும் இயலாமல், விடுதலைப் புலிகளால் பணயமாக வைக்கப்பட்டிருந்தனர்.

ஊடகங்கள் மற்றும் பிற விமர்சகர்களை மிரட்டவும் அமைதிப்படுத்தவும் அரசு பல வகையான அச்சுறுத்தல்களை நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதில் வெள்ளை வேன்கள் ஆட்களைக் கடத்தி காணாமல் போகச் செய்வதும் ஒரு வழிமுறை ஆகும்.

இந்த நடவடிக்கையானது வன்னி மக்கள் தொகையைப் பெருமளவு அழித்தது. ஏறத்தாழ 3,30,000 பேர் பொதுமக்கள், தொடர்ந்து சுருங்கிக் கொண்டு வந்த நிலப் பரப்பிற்குள் சிக்கியிருந்தனர். குண்டு வீச்சுகளுக்குத் தப்பி ஓட முயன்றபோதும் இயலாமல், விடுதலைப் புலிகளால் பணயமாக வைக்கப்பட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது மக்களை, பாதுகாப்பு பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் பெருமளவு திரளச் செய்து கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற உறுதியையும் அளித்து பாதுகாப்பு வளையத்தில் திரண்ட மக்கள் மீது மூன்று முறை தொடர்ச்சியாகப் பாரிய குண்டு வீச்சுக்களை அரசு மேற்கொண்டது. அய். நா. அமைப்பினர் தங்கியிருந்த குடில், உணவு வழங்கு வரிசைகள் மற்றும் காயம்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களைக் கடற்கரையில் இருந்து அழைத்துக்கொண்டு செல்ல வந்திருந்த உலகளாவிய செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல்களுக்கு அருகே என பொது மக்கள் கூடிய இடங்களில் அரசு குண்டு வீசியது. அய். நா., செஞ்சிலுவைச் சங்கம் போன்றவர்கள் எச்சரித்ததை மீறியும் தனது சொந்த உளவுத்துறை, அதன் விளைவுகளை விளக்கியதை மீறியும் அது குண்டு வீச்சை மேற்கொண்டது. போரின் இறுதிக் கட்டங்களில் பெருமளவிலான மக்கள் இறந்தது அரசின் குண்டு வீச்சினால்தான்.

வேவு விமானங்கள் மூலம் துல்லியமாகத் தெரிந்திருந்தும், அரசு திட்டமிட்டே மருத்துவமனைகள் மீது நேரடியாக குண்டுகளை வீசியது. வன்னியில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் குண்டு வீச்சினால் தாக்கப்பட்டுள்ளன. அதில் சில தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு ஆளாகின. இந்த இடங்களைப் பற்றி நன்கு அறிந்திருந்த போதுமே அரசு இதனைச் செய்தது. மேலும் போர் நடந்த பகுதியில் இருந்த மக்களுக்கு உணவு, மருத்துவ உதவிகள் குறிப்பாக அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் போன்ற மனித நேய அடிப்படையிலான உதவிகளை மறுத்ததன் மூலம் அவர்களின் துன்பத்தைக் கூட்டியது. இந்த நிலையில் போர்ப் பகுதியில் இருந்த மக்களின் எண்ணிக்கையை அது வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டது. சனவரி முதல் மே 2009 திற்குள் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அதில் பெரும்பான்மையானவர்கள் அடையாளம் தெரியாதபடி போரின் இறுதிக் கட்டங்களில் நடந்த கொடூரத் தாக்குதல்களிலேயே உயிரிழந்தனர்.

போரில் பாதிக்கப்பட்டவர்களும் பிழைத்தவர்களும் போர் நடைபெற்ற பகுதியில் இருந்து வெளியேறிய பிறகு அரசு அவர்களுக்கு மேலும் துன்பத்தையே அளித்தது. விடுதலைப் புலிகள் என சந்தேகத்திற்குரியவர்களை அடையாளம் காண்பதற்கான சோதனை. எந்த வெளிப்படைத் தன்மையோ அல்லது பொது நபர்களின் முன்போ நடைபெறவில்லை. தனிமைப்படுத்தி அழைத்துச் செல்லப்பட்டவர்களில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். சில பெண்கள் பாலியல் வன்புணர்விற்கு ஆளாக்கப்பட்டிருக்கலாம். எஞ்சியிருந்தவர்கள் காணாமல் போயினர். இது அரசு அமைத்த குழுவின் முன் சாட்சியமளித்த அவர்களின் மனைவிமார் மற்றும் உறவினர்களின் ஊடாகத் தெரிய வருகிறது. இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் வெளி உலகத் தொடர்பற்ற முகாம்களிலேயே வைக்கப்பட்டிருந்தனர். முகாமின் கொள்ளளவுக்கு மீறிய மக்கள் கூட்டம் காரணமாக மிக மோசமான சூழலும் தடுத்து வைக்கப்பட்டவர்களின் மீதான அடிப்படை சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டதும், இதன் காரணமாக தேவையின்றி பல உயிர்கள் இறந்ததும் நடந்தது. முகாம்களில் இருந்த சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டனர். விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் எவ்வித வெளியுலகத் தொடர்புமற்ற இடங்களுக்கு மாற்றப்பட்டனர். இதனால்

வேவு விமானங்கள் மூலம் துல்லியமாகத் தெரிந்திருந்தும், அரசு திட்டமிட்டே மருத்துவமனைகள் மீது நேரடியாக குண்டுகளை வீசியது. வன்னியில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் குண்டு வீச்சினால் தாக்கப்பட்டுள்ளன. அதில் சில தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு ஆளாகின. இந்த இடங்களைப் பற்றி நன்கு அறிந்திருந்த போதுமே அரசு இதனைச் செய்தது. மேலும் போர் நடந்த பகுதியில் இருந்த மக்களுக்கு உணவு, மருத்துவ உதவிகள் குறிப்பாக அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் போன்ற மனித நேய அடிப்படையிலான உதவிகளை மறுத்ததன் மூலம் அவர்களின் துன்பத்தைக் கூட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பல துன்புறுத்தல்களுக்கு ஆளாகக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

அறிக்கையின் உள்ளே, நிகழ்வுகளை விவரித்துள்ள வல்லுநர் குழு, ஓர் அதிகாரப்பூர்வ அறிக்கைக்கான மரபுகளைக் கடந்து, மிக வெளிப்படையான சொற்களைப் பயன்படுத்தியுள்ளது.

*'குழந்தைகளின் உடல் பகுதிகள் வெடித்து மேலுயர்ந்து மரங்களில் ஒட்டிக்கிடந்தன.' - (பத்தி 85)*

*'கருப்பு புகையும் இறந்த உடல்களின் நெடியும் காற்றை நிரப்பியது. பட்டினி கிடக்கும் தங்களின் குழந்தைகளுக்கான உணவுக்காகவும் காயம்பட்ட அல்லது செத்துக் கொண்டிருப்பவர்களுக்கு உதவவும் சில மக்கள் பிச்சை எடுத்தனர். இந்தக் காட்சியானது நரகத்தைக் கண் முன் கொண்டு வருவதைப் போன்று இருந்ததாக விவரிக்கப்பட்டது.' - (பத்தி 118)*

*'வன்னியில் நடைபெற்ற ஆயுதப் போரின் இறுதியைக் குறிக்கும் நாளாக மே 18 2009 இருந்தது. செஞ்சிலுவை சங்கத்தின் சொற்களில் 'இறுதிநாட்கள் கற்பனைக்கு எட்டாத மனிதப் பேரழிவை ஏற்படுத்தின'. (- பத்தி 123)*

சாரமாக, உலகளாவிய மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் மனித நேய சட்டங்கள் மீறப்பட்டதையும், போர்க் குற்றங்கள் நடைபெற்றதையும் அறிக்கை தக்க சான்றுகளோடு நிறுவுகிறது.

இலங்கை அரசு மீதான குற்றச்சாட்டுக்கள்

இலங்கை அரசு மீது 5 குற்றச்சாட்டுகளைக் குழு வைக்கிறது. ஒவ்வொன்றிற்கும் தக்க சான்றுகளை அளித்து உறுதிப்படுத்துகிறது.

குறிப்பாக, மருத்துவமனைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தேதி வாரியாக அறிக்கை பட்டியலிடுகிறது. அய். நா. வின் பிரதிநிதிகள் போர்ப் பகுதிகளில் இருந்த போதே அவ்வாறான தாக்குதல்கள் நடைபெற்றதை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

*'29 ஜனவரி முதல் 4 பிப்ரவரி வரையான ஒரு வார காலத்தில் புதுக்குடியிருப்பு மருத்தவமனை தினமும் எம்பிஆர்.எல்கள் மற்றும் பிற ஆர்டிலறிகளால் தொடர்ந்து தாக்கப்பட்டது. குறைந்தது ஒன்பது குண்டுவீச்சுக்கள் நேரடியாக மருத்துவமனையைத் தாக்கின. இதனால் ஏற்கனவே காயம்பட்டிருந்த பல நோயாளிகளும் மருத்துவமனை ஊழியர்களும் கொல்லப்பட்டனர். அறுவைச் சிகிச்சை அரங்கும் கூட தாக்கப்பட்டது. பிப்ரவரி 4 2009 அன்று மருத்துவமனை தாக்கப்பட்ட போது 2 செஞ்சிலுவை சங்க பன்னாட்டு ஊழியர்கள் இறந்தனர். குண்டு வீச்சுக்கள் இலங்கை ராணுவத்தின் நிலைகளில் இருந்தே வந்திருந்தன.' - (பத்தி 91)*

அதிலும் குறிப்பாக, ஆளற்ற வேவு விமானங்களிலிருந்து அடையாளம் காணக்கூடிய அளவில், மருத்துவமனை அடையாளங்கள் பெரிதாக பொறிக்கப்பட்டிருந்த போதும், மருத்துவமனையின் புவியியல் குறியீடுகள் இலங்கை இராணுவத்திற்கும் அரசுக்கும் அறிவிக்கப்பட்டிருந்த போதும், நன்றாக அறிந்தே, மருத்துவமனைகள் மீது இலங்கை இராணுவம் திட்டமிட்டத் தாக்குதல்களை நடத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'புதுக்குடியிருப்பு மருத்துவமனை அமைந்திருந்த இடத்தின் சரியான புவியியல் குறியீடுகள் இலங்கை ராணுவத்திற்கு தெரிந்தே இருந்தது. ஆளற்ற விமானங்களின் பார்வையில் எளிதில் படும்படியாக மருத்துவமனை முத்திரைகள் பெரிய அளவில் தெளிவாகப் பதிக்கப்பட்டிருந்தன.' - (பத்தி 92)*

மக்களின் பாதிப்புகள் அதிகமாகிக் கொண்டிருந்த இந்த நிலையில், மனித நேய உதவிகளைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிப்பதற்கான முயற்சிகளையும் இலங்கை அரசு தடை செய்தது. போர்ப் பகுதிகளிலிருந்த மக்களின் எண்ணிக்கையைக் குறைத்துச் சொல்லியதன் மூலம், போதுமான அளவிற்கு உதவிகள் கிடைப்பதைத் தடுத்தது.

*'ஏப்ரல் இறுதியில் 1,27,117 பொது மக்கள் இன்னமும் சிக்கிக் கொண்டிருப்பதாக ஐ.நா மதிப்பிட்டது. ஆனால் அரசோ 10,000 பேர் மட்டுமே எஞ்சியிருந்ததாகக் கூறியது. அந்த இடத்தில் இருந்து வெளியேறி பின்னர், மாணிக் பண்ணை மற்றும் பிற முகாம்களில் வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 2,90,000 ஆகும். இந்த எண்ணிக்கைகளில் ஏற்பட்ட குழப்பத்திற்கு அரசு தேவையான விளக்கத்தை அளிக்கவில்லை.' - (பத்தி 127)*

'அரசின் குறைந்த மதிப்பீட்டின் காரணமாக உலக உணவுத் திட்டம் மூலம் வழங்கப்பட்ட உணவு, உண்மையான தேவையுடன் ஒப்பிடுகையில் மிகமிகக் குறைந்த அளவாகவே உள்ளது. இதன் காரணமாகப் பரவலான சத்துக் குறைவு, பட்டினி நிலவியது. அதே போன்று வன்னிக்குள் அனுமதிக்கப்பட்ட மருத்துவப் பொருட்களின் அளவானது குண்டு வீச்சினால் தாக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்வதற்கு எந்த வகையிலும் போதுமானதாக இல்லை. இரண்டாவது பாதுகாப்பு வளையத்தில் ஏற்பட்ட காயங்களின் வகைகளைக் கவனத்தில் கொண்டு மயக்க மருந்துகள், இரத்தம் ஏற்றுவதற்கான இரத்தப் பைகள், பூச்சிக் கொல்லிகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள், கையுறைகள் போன்ற மருத்துவப் பொருட்களை மருத்துவர்கள் கோரியிருந்தனர். ஆனால் இந்தப் பொருட்கள் மிகச்சிறிய அளவில் மட்டுமே வன்னிக்குள் அனுமதிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக பனடால், ஒவ்வாமை மருந்துகள் மற்றும் ஊட்டச் சத்து மருந்துகள் போன்றவையே அவர்களுக்கு வழங்கப்பட்டன. மார்ச் 2010 இல் பொது மக்களின் பாதிப்பு அதிகமான நிலையில் தேவையான மருத்துவப் பொருட்கள் இல்லாததால் பெரும் துன்பமும் இதனால் நிறைய உயிரிழப்பும் ஏற்பட்டது. மருத்துவப் பொருட்களின் போதாமை குறித்துக் கடிதங்கள் மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்ட நேர்காணல்கள் ஊடாக மருத்துவ சேவைக்கான மண்டல இயக்குநரகத்தின் மருத்துவர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். காயம்பட்ட மற்றும் இறந்து போனவர்கள் பெயர்ப் பட்டியல் மற்றும் நிழற்படங்களை அவர்கள் தொகுத்து அனுப்பினர். மருத்துவ அமைச்சகம் ஊடகங்களிடம் பேசுவதை நிறுத்துமாறும் புகார் அளிப்பதை நிறுத்துமாறும் இவர்களை எச்சரித்தது. நிறுத்தாவிடில் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறியது. மார்ச் 16 அன்று மருத்துவர்கள் சத்தியமூர்த்தி மற்றும் வரதராஜா ஆகியோர் *'முல்லைத் தீவில் தேவையான மருந்துகள் இல்லாததால் ஏற்பட்ட தேவையற்ற சாவுகள் என்று ஒரு அறிக்கையை அரசுக்கு அனுப்பினர். அதில், அடிப்படை*

மக்களின் பாதிப்புகள் அதிகமாகிக் கொண்டிருந்த இந்த நிலையில், மனித நேய உதவிகளைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிப்பதற்கான முயற்சிகளையும் இலங்கை அரசு தடை செய்தது. போர்ப் பகுதிகளிலிருந்த மக்களின் எண்ணிக்கையைக் குறைத்துச் சொல்லியதன் மூலம், போதுமான அளவிற்கு உதவிகள் கிடைப்பதைத் தடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பு வசதிகளும் தேவையான மருந்துகளும் கிடைத்திருந்தால் மருத்துவமனை சாவுகள் பலவற்றைத் தடுத்திருக்கலாம். எங்களுக்கு கிருமி நாசினிகள், மயக்க மருந்துகள் மற்றும் ஒரு பாட்டில் குளுக்கோஸ்கூட வழங்கப்படவில்லை. உயிர்காக்கக்கூடிய அவசர அறுவை சிகிச்சையைக்கூட வழங்க இயலாத மோசமான நிலையில் நாங்கள் விடப்பட்டோம் என்று குறிப்பிட்டனர்.' - (பத்தி 128)

'மார்ச் 19, 2009 அன்று மருத்துவ மற்றும் ஊட்டச் சத்து மற்றும் அமைச்சகத்தின் செயலாளர் இதற்கு அளித்த பதிலில் முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் பயிற்சி பெற்ற மயக்க மருந்து நிபுணர்கள் இல்லையென்பதால் வீரியமிக்க வலி நிவாரணிகளும் நரம்புகளில் செலுத்தத்தக்க மருந்துகளும் மட்டுமே அனுப்பி வைக்க இயலும் என்று கூறியது.' - (பத்தி 129)

போர்ப் பகுதிகளை விட்டு வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்த பிறகும் மக்களின் துன்பம் தீரவில்லை. மாறாக அதிகரிக்கவே செய்தது. முகாம்களில் நிரம்பி வழிந்த கூட்டத்தின் காரணமாக நிலவிய சுகாதாரமற்றச் சூழல், போதிய உணவு மற்றும் மருத்துவ வசதிகள் இன்மை காரணமாக முகாம்களிலும் உயிரிழப்புகள் தொடர்ந்தன.

அதோடு விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் தனியே பிரித்தெடுக்கப்பட்டு தனியான விசாரணை மய்யங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் மீதான விசாரணை எவ்வித வெளிப்படைத் தன்மையுமற்று நடைபெற்றது. அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் நிலையைப் பற்றி அறியாமல் அவர்களின் உறவினர்கள் அவதியுற்றனர். பலரைப் பற்றியத் தகவல்கள் இன்று வரை அறியப்படாத ஒன்றாகவே உள்ளது.

போர்ப் பகுதிகளை விட்டு வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்த பிறகும் மக்களின் துன்பம் தீரவில்லை. மாறாக அதிகரிக்கவே செய்தது. முகாம்களில் நிரம்பி வழிந்த கூட்டத்தின் காரணமாக நிலவிய சுகாதாரமற்றச் சூழல், போதிய உணவு மற்றும் மருத்துவ வசதிகள் இன்மை காரணமாக முகாம்களிலும் உயிரிழப்புகள் தொடர்ந்தன.

### விடுதலைப் புலிகள் மீதான குற்றச்சாட்டுக்கள்

விடுதலைப் புலிகள் மீது 6 குற்றச்சாட்டுக்களைக் குழு வைக்கிறது. அவற்றில் முதன்மையானதும் முக்கியமானதும் விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனித அரணாகப் பயன்படுத்தினார்கள் என்பதாகும். ஆனால் அதே குற்றச்சாட்டை விவரிக்கும் இடத்தில், குழு இவ்வாறு கூறுகிறது:

*போர் குற்றம் குறித்த வழமையான விளக்கம் குறிப்பது போன்று தங்களைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, பொதுமக்களைத் திட்டமிட்டு இராணுவத் தாக்குதல்களின் இலக்குகளை நோக்கி விடுதலைப்புலிகள் நகர்த்திச் சென்றனர் என்பதற்கு தகுதிவாய்ந்த சான்றுகள் எதையும் காண இயலாததால், விடுதலைப்புலிகள் பொதுமக்களைப் போர்ப் பகுதியில் இருந்து வெளியேற அனுமதிக்க மறுத்தது குறித்த தகுதிவாய்ந்த குற்றச்சாட்டுக்கள்,சட்டப்படி மனித அரணாக அவர்களைப் பயன்படுத்தியதாக எடுத்துக்கொள்ள முடியாது என குழு நம்புகிறது - (பத்தி 237).*

மேலும், இரண்டாவது முக்கிய குற்றச்சாட்டு, தப்பி ஓட முற்பட்ட மக்களை விடுதலைப் புலிகள் சுட்டனர் என்பதாகும். போர் நடைபெற்ற காலத்திலேயே இதற்குச் சான்றாகச் செயற்கைக்கோள் படங்களை இலங்கை அரசு அளித்திருந்தது. அதன் அடிப்படையிலேயே அய். நா. வல்லுநர் குழுவும் இக்குற்றச்சாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துள்ளது. ஆனால், இச்செயற்கைக்கோள் படத்தை ஆராய்ந்து விவரித்துள்ள சானல் 4, விடுதலைப் புலிகள் தரையை நோக்கியே சுட்டனர் என்பதைத் தெளிவாக காட்டியுள்ளமையும் கருதிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

இலங்கை அரசின் மறுசீரமைப்பு முயற்சிகள்

இலங்கை அரசு, போருக்குப் பிந்தைய மறு சீரமைப்பு முயற்சியாக, *'கற்றப் பாடங்கள் மற்றும் இணக்கத்திற்கான ஆணையம்'* ஒன்றை அமைத்தது. இந்த ஆணையம் போர் நடைபெற்ற பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்தது. பாதுகாப்பற்ற அச்சுறுத்தலான சூழல் நிலவிய போதும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் திரண்டு வந்து போரினால் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை ஆணையத்திடம் எடுத்துரைத்தனர். ஆனால், இந்த ஆணையத்தின் செயல்பாடுகளை ஆராய்ந்த அய். நா. வல்லுநர் குழு ஆணையம் குறித்த தனது மதிப்பீட்டினை இவ்வாறு முன் வைக்கிறது

*மொத்தத்தில் க.பா.இ.ஆ. ஆழமான தவறுகளைக் கொண்டதாகவும் பொறுப்பேற்கும் நடைமுறைகளைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான உலகளாவிய வரையறைகளைப் பூர்த்தி செய்யாததாகவும் அதனால் இலங்கை அதிபரும் செயலாளர் நாயகமும் பொறுப்பேற்கும் நடைமுறைகள் குறித்து அளித்த கூட்டு கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாததாகவும் உள்ளது.' - (பத்திகள் 344, 345)*

ஆக, இலங்கை அரசின் உள்நாட்டு முயற்சி எவ்விதத்திலும் நேர்மையானதாகவோ, பயனளிக்கக்கூடியதாகவோ இல்லை என்பதை அறிக்கை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

பரிந்துரைகள்

இந்நிலையில், அறிக்கை இலங்கை அரசுக்கும் அய். நா. விற்கும் பன்னாட்டுச் சமூகத்திற்கும் சில பரிந்துரைகளை முன் வைத்துள்ளது.

தனது பரிந்துரைகளில் முதன்மையாக,

*தான் நம்பத்தகுந்தது என கண்டறிந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இலங்கை அரசு தான் ஏற்றுக்கொண்ட உலகளாவிய சட்டங்களுக்கு ஏற்பவும் உள்நாட்டில் பொறுப்பேற்பதற்கான ஒரு சிறந்த நடைமுறையை உருவாக்கும் பொருட்டும் ஆயுதப் போரில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரும் உலகளாவிய மனித நேய மற்றும் மனித உரிமை சட்டங்களின் அடிப்படையில் புரிந்துள்ள அத்துமீறல்கள் குறித்து உடனடியாக நேர்மையான விசாரணைகளைத் தொடங்க வேண்டும் எனக் கோரியுள்ளது.*

<u>பரிந்துரை 1A</u>

குற்றவாளிகளிடமே விசாரித்துத் தண்டிக்கும் பொறுப்பை வழங்குவது போல, இலங்கை அரசே தனது உள்நாட்டுக் கட்டமைப்பின் மூலம் நடந்த போர்க் குற்றங்களை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருவது, ஒட்டுமொத்த முயற்சிகளையும் வீணடிப்பதாகவே அமையும்.

பரிந்துரை 1B

ஆ. இலங்கையில் போர் நடைபெற்றப் போதும் அதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாலான காலகட்டங்களிலும் அய். நா.வின் மனிதநேய மற்றும் பாதுகாப்புத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட செயல்கள் குறித்து பொதுச் செயலாளர் மறு ஆய்வு நடத்த வேண்டும். என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியப் பரிந்துரையாகும்.

முன்பே குறிப்பிட்டிருந்தபடி, அய். நா. வின் வல்லுநர் குழு நேரடியான கள ஆய்வுகளை மேற்கொள்ள இலங்கைக்குப் பயணம் செய்ய விரும்பிய போதும் அதனை இலங்கை அரசு அனுமதிக்கவில்லை. இந்நிலையில், இவ்வறிக்கை நேரடியான சாட்சியங்களையும், அய். நா. வின் ஆவணங்களையுமே சார்ந்து இருந்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக, இன்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீறல்கள் குறித்து அய். நா. முன்பே அறிந்திருந்தது என்பது புலனாகிறது. இவ்வளவு பெரிய மனிதப் பேரழிவு நடைபெறுவதை அறிந்திருந்த போதும் அதனைத் தடுக்க அய். நா. முயற்சிகளை மேற்கொள்ளாதது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

அண்மையில் கடந்த மே 2011-இல் பெலாரஸ் நாட்டில் நடந்த அதிபர் தேர்தலில் ஏற்பட்ட வன்முறையில் காவல் துறை நடத்திய தடியடியில் ஏறத்தாழ 500 பேர் காயம்பட்டனர். இதனை ஒரு முக்கிய பிரச்னையாக எடுத்துக் கொண்டு, ஜீன் 2011-இல் நடந்த அய். நா. வின் மனித உரிமைக் குழுக் கூட்டம் இதைப் பற்றி விவாதித்து, கண்டனத் தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளது. 500 பேர் காயம்பட்டதை அக்கறையுடன் விவாதித்த அய். நா. மனித உரிமைகள் குழு, ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதைக் குறித்து அக்கறையின்றி இருந்தது ஏன் என்ற கேள்வி மிக முக்கியமானது.

இந்தச் சூழலில்தான் இலங்கையில் போர் தீவிரமாக நடைபெற்ற காலகட்டத்தில், இலங்கையிலும் அதற்கு வெளியிலும் அய். நா. உறுப்பு அமைப்புகளின் செயல்பாடுகளை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என வல்லுநர் குழு நியாயமான பரிந்துரையை முன் வைத்துள்ளது. அய். நா. வல்லுநர் குழு, தனது அறிக்கையில், அய். நா. விற்கு மற்றொரு பரிந்துரையை அளித்துள்ளது.

பரிந்துரை 4B

அய். நா. வின் மனித உரிமைக் குழு கடந்த மே 2009இல் இலங்கைக்கு ஆதரவாக நிறைவேற்றிய சிறப்புத் தீர்மானத்தை (-A/HRC/S-11/C-1/Rev2) இந்த அறிக்கையின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

2009 மே 18 அன்று போர் முடிவுற்றதாக இலங்கை அரசு அறிவித்த சில நாட்களில், 2009 மே 27 அன்று அய். நா. வின் மனித உரிமைக் குழு 11-ஆவது சிறப்புக் கூட்டத்தில் சுவிட்சர்லாந்து அரசு ஒரு தீர்மானத்தை முன் மொழிந்தது.

'இலங்கையின் இறுதிப் போரின் போது இரு தரப்பினராலும் பன்னாட்டுப் போர் விதிகள் மீறப்பட்டுள்ளன. இலங்கை அரசே ஒரு விசாரணைக் குழுவை நியமித்து விசாரித்து குற்றமிழைத்தோரை நீதியின் முன் நிறுத்த வேண்டும்' வலுவற்ற இத்தீர்மானம் கூட

அய். நா. வின் வல்லுநர் குழு நேரடியான கள ஆய்வுகளை மேற்கொள்ள இலங்கைக்குப் பயணம் செய்ய விரும்பிய போதும் அதனை இலங்கை அரசு அனுமதிக்க வில்லை. இந்நிலையில், இவ்வறிக்கை நேரடியான சாட்சியங்களையும், அய். நா. வின் ஆவணங்களையுமே சார்ந்து இருந்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டு சமூகத்தால் புறந்தள்ளப்பட்டது. இந்தியா உள்ளிட்ட நாடுகள் இத்தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்து அதனைத் தோற்கடித்தன.

ஆனால் இதே கூட்டத்தில், இலங்கை அரசுக்கு சாதகமாக, இந்தியா முன்னின்று, சீனா, ரஷ்யா மற்றும் கியூபா போன்ற தென் அமெரிக்க நாடுகளின் ஆதரவோடு இலங்கை அரசைப் பாராட்டியும் அதற்கு உலக நாடுகள் உதவக் கோரியும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆனால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும், அதில் குறிப்பிட்டுள்ளபடியான எந்த நல்லெண்ண முயற்சிகளும் இலங்கை அரசால் மேற்கொள்ளப்படவில்லை என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

இலங்கை அரசுக்கு சாதகமாக, இந்தியா முன்னின்று, சீனா, ரஷ்யா மற்றும் கியூபா போன்ற தென் அமெரிக்க நாடுகளின் ஆதரவோடு இலங்கை அரசைப் பாராட்டியும் அதற்கு உலக நாடுகள் உதவக் கோரியும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆனால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும், அதில் குறிப்பிட்டுள்ளபடியான எந்த நல்லெண்ண முயற்சிகளும் இலங்கை அரசால் மேற்கொள்ளப்படவில்லை என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

இத்தீர்மானத்தையே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென அய். நா. வல்லுநர் குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது.

பேசப்படாத இனப்படுகொலை

இலங்கை அரசுக்கு எதிராகத் தங்களின் ஒற்றைக் குரலை மட்டுமே உயர்த்தி நின்ற தமிழ் மக்களுக்கு அய். நா. வல்லுநர் குழுவின் அறிக்கை மிகப் பெரும் பலமே என்ற போதும், நடந்து முடிந்த போரின் பின்னணி மற்றும் தாக்கம் ஆகியவை குறித்த அறிக்கை முக்கியமான இரண்டு கருதுகோள்களைத் திட்டமிட்டோ திட்டமிடாமலோ ஒதுக்கியுள்ளது.

- கடந்த 60 ஆண்டு காலமாகத் தங்களின் தேசிய சுய நிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் ஈழத் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக இவ்வறிக்கை அங்கீகரிக்கவில்லை. மாறாக இனக்குழு தேசியம் என்ற குறை மதிப்பீட்டுச் சொல்லையே பயன்படுத்தியுள்ளது.

- 'நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்' 2010 ஜனவரியில் அளித்த தனது அறிக்கையில், இனப் படுகொலையின் சுவடுகள் தென்படுவதாகவும் அவை ஆழ்ந்து விசாரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்த போதிலும், இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மனித உரிமை மீறல்களையும் போர்க் குற்றங்களையும் நடத்தியுள்ளது எனக் கூறும் அய். நா. அறிக்கை, நடந்தது இனப் படுகொலை என்பதை முற்றிலுமாக ஒதுக்கியுள்ளது.

உலக சமூகத்திடம் தமிழர்களின் எதிர்பார்ப்பு

போரில் உயிர்களைப் பலி கொடுத்து நடந்த இன அழிப்பிற்குப் பின், தற்போது, சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு இன்றியும் நிலங்களையும் வாழ்வாதாரங்களையும் பறி கொடுத்தும் தங்கள் பண்பாட்டைப் பேணவோ வெளிப்படுத்தவோ அச்சுறுத்தல் நிலவும் சூழலில், ஈழத் தமிழினம் தனது அடையாளங்களைச் சிறிது சிறிதாக இழந்து இன அழிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது.

அண்மைக் காலங்களில் இனப் படுகொலை நடந்தேறிய கிழக்கு தைமூர், மாண்டிநீக்ரோ, தெற்கு சூடான் போன்ற நாடுகளில் அய். நா. வே முன்னின்று பொதுவாக்கெடுப்பு நடத்தி நாடமைத்துக் கொடுத்துள்ளது.

அதே போன்ற ஒரு சூழல் நிலவும் ஈழத்திலும், இப்படியான வாக்கெடுப்பு மூலம் தமிழ் மக்களின் தாயகத்தை மீட்டுத் தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பொறுப்பும் கடமையும் பன்னாட்டுச் சமூகத்திற்கு உள்ளது.

இரண்டாவதாகவும், மிக முக்கியமானதாகவும் ஈழத் தமிழ்ச் சமூகம் எதிர்பார்ப்பது என்னவெனில், உலகில் இனப் படுகொலை வரலாறு என்பது இதோடு முற்றுப் பெற வேண்டுமென்பதே.

உலக நாடுகள் பலவற்றையும் தனக்குத் துணையாக வைத்துக் கொண்டு, சாட்சிகளற்ற போரின் மூலம் ஓர் இனப் படுகொலையை எவ்வாறு வெற்றிகரமாக நிகழ்த்துவது என்பதை இராஜபக்சே அரசு உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது.

மனித உரிமைகள் குறித்தும் தேசிய இனங்களின் உரிமைகள் குறித்தும் அரச பயங்கரவாதம் குறித்தும் அதிகம் விவாதிக்கப்படும் இன்றைய சூழலில், இராஜபக்சே காட்டியுள்ள இந்தத் தவறான வழிமுறையானது, உலகெங்கிலும் சிறுபான்மையினராக வாழும் தேசிய இனங்கள் அனைத்திற்கும் அச்சுறுத்தல் அளிப்பதாகவே முன்வைக்கப்பட்டுள்ளது.

இனப் படுகொலைகள், போர்க் குற்றங்கள், இன அழிப்புகள் மற்றும் மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றைத் தவிர்க்கவும் தடுக்கவும், எழுந்துள்ள முழக்கமான 'பாதுகாப்பதற்கான பொறுப்பு' (-Responsibility to protect - R to P) என்பது இன்றைய முக்கிய தேவையாக உருவாகியுள்ளது. 2005-இல் நடந்த ஐ. நா. வின் உலக மாநாட்டில் உலக நாடுகள் 'பாதுகாப்பதற்கான பொறுப்பு' என்ற அடிப்படையில் அரசுகளுக்கு சில கடப்பாடுகளை அளித்தன.

'பாதுகாப்பதற்கான பொறுப்பு' குறித்து விளக்கும் போது பேரா. கரெத் இவான்ஸ் சொல்வது போல, 'இறையாண்மை என்பது கொல்வதற்கான அனுமதிச் சீட்டாக உள்ளது'. இதனை உடைத்து, இறையாண்மை என்ற பெயரால் அரசே தலைமையேற்று நடத்தும் படுகொலைகள், நீதிக்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே 'பாதுகாப்பதற்கான பொறுப்பு' என்ற இந்த கோட்பாட்டின் அடிப்படையாகும்.

இதன் அடிப்படையில் ஈழத் தமிழர்கள் மீது இனப் படுகொலை புரிந்த இலங்கை அரசு மீதும் அதற்கு உதவியாக இருந்த அனைத்து நாடுகள் மீதும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப் பன்னாட்டுச் சமூகம் முன் வர வேண்டும்.

குறிப்பு:

ஐ.நா. அறிக்கையின் முழுமையான மொழிபெயர்ப்பு இக்கட்டுரையாசிரியரால் செய்யப்பட்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

குடிமை சமூகத்தின் கடமை

பன்னாட்டுச் சமூகத்தின் மீதான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது என்பது அத்தனை எளிதல்ல. அதனைச் சாத்தியமாக்குவது, மனித உரிமைகளை மீட்டெடுப்பதில் உறுதி கொண்டுள்ள குடிமை சமூகத்தின் கைகளிலேயே உள்ளது.

ஈழத் தமிழர்கள் மற்றும் உலகெங்கும் பரவியுள்ள தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்லாது, யாரெல்லாம் மனித உரிமைகள் மீது நம்பிக்கை கொண்டுள்ளனரோ அவர்கள் அனைவரையும் அணி திரட்டிப் பன்னாட்டுச் சமூகத்திற்கு அழுத்தம் கொடுக்க வைப்பதே இன்று நம் முன் இருக்கும் பெரும் கடமை.

(http://www.responsibilitytoprotect.org/indext.php/aboutrtop/learn-about-rtop)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண தண்டனைக்கு எதிரான நிகழ்வுகள்

குற்றங்கள் தொடர்பான தண்டனைகள் நடைமுறைக்கு வருவது குறித்து பல்வேறு கருத்துமாறுபாடுகள் உள்ளன. மரண தண்டனை உலகின் பல்வேறு நாடுகளில் எதிர்ப்புக்குள்ளாகி இன்று பெரும்பான்மையான நாடுகள் மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவதில்லை. இத்தகைய சூழலில் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து அம்மூவருக்கும் கருணை காட்ட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலான போராட்டங்கள் தமிழகமெங்கிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இதனையொட்டி பல்வேறு கூட்டங்களும் நிகழ்வுகளும் உண்ணாவிரதங்களும் நடந்தேறி வருகின்றன.

நிகழ்வு : 1

21 செப்டம்பர் 2011 அன்று சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் செயல்படும் திரைவெளி என்னும் அமைப்பில் மரண தண்டனைக்கு எதிரான ஆவண மற்றும் குறும்பட விழா ஒன்று நடத்தப்பட்டது. போலந்து, ஜப்பான், ஜெர்மனி, இந்தியா (மலையாளம்) ஆகிய நாடுகளைச் சேர்ந்த குறும்படங்கள் திரையிடப்பட்டு அது குறித்த விவாதமும் நிகழ்த்தப்பட்டது. அரசு நீதியின் பெயரால் நிகழ்த்தும் கொலை குற்றவாளிகள் செய்யும் கொலைகளைவிட வன்மமானது என்றும் மரண தண்டனை குற்றங்களுக்குத் தீர்வாகாது என்றும் குற்றமற்றவர் மரண தண்டனையை அடையும்போது அதற்கான பொறுப்பை யார் ஏற்பது என்று பல்வேறு கருத்தியல்கள் அப்படங்களின் மூலம் முன்வைக்கப்பட்டன.

நிகழ்வு : 2

29 செப்டம்பர் 2011 அன்று சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறை, அரசியல் மற்றும் பொது நிர்வாகத் துறை, இதழியல் மற்றும் தொடர்பியல் துறை ஆகிய மூன்று துறைகள் ஒருங்கிணைந்து மரண தண்டனைக்கு எதிரான கலை நிகழ்வுகளைப் புத்தர் கலைக்குழு வாயிலாக நிகழ்த்தின. பறையாட்டமும் உயிர், மரண கயிறு, கொலைவெறி தண்டனை ஆகிய மூன்று நாடகங்களும் நிகழ்த்தப்பட்டன. இவை மரண தண்டனை குறித்த விவாதங்களையும் உணர்வுகளையும் பதிவுசெய்தன. தமிழ் இலக்கியத்துறையின் 'திரைவெளி' மூலம் மரண தண்டனைக்கு எதிரான திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

நிகழ்வு : 3

2 அக்டோபர் 2011 அன்று சென்னையில் இலயோலா கல்லூரியில் மரண தண்டனைக்கு எதிரான கூட்டம் ஒன்றினைச் சென்னை அரசியல் பள்ளி நடத்தியது. அதில் வ.கீதா தலைமையில் கவிஞர் இன்குலாப் மற்றும் எஸ்.வி.ராஜதுரை ஆகியோர்

தொகுப்பு:

மு.நஜ்மா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
சென்னைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடினர். அவற்றில் முன்வைக்கப்பட்டவை :

- நிரபராதிகளைத் தூக்கிலிடலாமா என்னும் நிலைப்பாடு, தமிழ்த் தேசிய உணர்வு நிலையிலிருந்து மட்டுமே கிளம்பும் ஒரு நிலைப்பாடு, ஒட்டு மொத்தமாக மரண தண்டனை கூடாது எனப் பல்வேறு நிலைப்பாடுகளில் மரண தண்டனைக்கு எதிரான போராட்டம் என்பது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

- மரண தண்டனை தொடர்பான இயக்கங்கள் பல்வேறு நிலைப்பாடுகளிலிருந்து தனித்தனியாக செயல்பட்டுவருகின்றன. இவை பரவலாக்கத்திற்கு உதவும் என்றாலுமேகூட பொது அரசியல் புரிதல், குறைந்த பட்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருப்பது ஆகியவற்றை நம் கவனத்தில் கொள்ள அனுமதிப்பதில்லை.

- எத்தனையோ பேர் தூக்கிலிடப்படுகின்றனர். இந்த மூவரையும் தூக்கிலிட்டால் என்ன என்ற கேள்வி எழக்கூடும். இது ஒரு பிம்பம் தான். இந்திய அரசு தன்னுடைய தேசியத்தை நிலைநிறுத்திக் கொள்ள குறியீட்டளவிலான சட்டரீதியாகச் செய்யப்படும் கொலை இது என்கிற அடிப்படையில் இம்மூவர் தண்டனை குறித்த கருத்தாடல் முக்கியத்துவம் பெறுகிறது. நாடாளுமன்ற தாக்குதல் தொடர்பான வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் அப்சல் குரு மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லை என்று கூறிய அதே உச்ச நீதிமன்றம்தான் இந்திய சமுதாயத்தின் ஒட்டுமொத்த உணர்வுகளை அமைதிப்படுத்த அப்சல் குருவிற்கு மரண தண்டனை வழங்க வேண்டும் எனத் தீர்ப்பளித்தது. இது போன்ற தீர்ப்புகளால் இந்திய அரசு யாரைத் திருப்திப்படுத்துகின்றது? இந்திய சமுதாயம் என்கிற எல்லைக்குள் யாரெல்லாம் இடம்பெறுகின்றனர் என்பது முக்கியம். எனவே, மரண தண்டனைக்கு எதிரான போராட்டம் என்பது இந்திய அரசினுடைய பாதுகாப்பு வெறியைப் பற்றிய விமர்சனமாக நீள வேண்டும்.

- சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கான மரண தண்டனையைக் குறைப்பதற்கான அதிகாரத்தை அரசியல் சட்டப்பிரிவு 161, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 54, குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 433 ஆகியன வழங்குகின்றன. அரசியல் சட்டப்பிரிவு 161 மாநில அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரம் பிரயோகிக்கப்படக்கூடிய விடயத்தோடு தொடர்புடைய எந்தவொரு சட்டத்துக்கும் எதிராகக் குற்றம் இழைத்ததாகத் தண்டிக்கப்பட்டுள்ள எந்த ஒரு நபருக்கும் தண்டனைக் குறைப்போ தண்டனை நீக்கமோ வழங்கலாம்.

- சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கான மரண தண்டனையைக் குறைப்பதற்கான அதிகாரத்தை அரசியல் சட்டப்பிரிவு 161, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 54, குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 433 ஆகியன வழங்குகின்றன. அரசியல் சட்டப்பிரிவு 161 மாநில அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரம் பிரயோகிக்கப்படக்கூடிய விடயத்தோடு தொடர்புடைய எந்தவொரு சட்டத்துக்கும் எதிராகக் குற்றம் இழைத்ததாகத் தண்டிக்கப்பட்டுள்ள எந்த ஒரு நபருக்கும் தண்டனைக் குறைப்போ தண்டனை நீக்கமோ வழங்கலாம். தண்டனை பெறுவதற்கான குற்றம், தண்டிக்கப்பட்ட இடம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் அதிகார எல்லைக்குள் வருபவையே இந்த மூவரின் கருணை மனுக்கள் என்பது தெளிவு.

- ராஜீவ் காந்தி கொலை வன்முறை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அரசின் வன்முறைகள் இந்திய அமைதிப்படைகளின் வன்முறைகள், சிங்கள இராணுவ வன்முறைகள், காஷ்மீரிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் இந்தியப் பாதுகாப்புப் படைகள் நடத்தும் வன்முறைகள், பல்லாயிரக் கணக்கான குடியானவர்களின் தற்கொலைகள், காவல்துறை மரணங்கள், போலி மோதல்களில் நடக்கும் கொலைகள், பழங்குடி மக்கள் மீதான கொலைவெறித் தாக்குதல்கள் முதலியன கொலைகளாகவோ, குற்றங்களாகவோ ஏன் பார்க்கப் படுவதில்லை?


- மக்கள் சக்தியைச் சரியான வழியில் ஆற்றுப்படுத்தி ஜனநாயக உரிமைகளையும் வாழ்வாதார உரிமைகளையும் பெறுவதற்கான திசையில் செலுத்துவதற்குப் பதிலாக, ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்தவும் குறுகிய அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்ளவும் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்கு சமூக அக்கறை கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் தலைமுறையினர் இரையாகிவிடக் கூடாது.

- நம் நாட்டில் கல்வியறிவு இல்லை, பெருந்தன்மை இல்லை, கலாச்சார அறிவு இல்லை, குற்றங்கள் மிகுதி என்று பல்வேறு காரணிகள் கூறப்படுகின்றன. ஆனால் இத்தகைய பண்புகள் குறை வாக இருந்தும்கூட நம்மைவிட அதிகமான வன்முறைகள் நடக்கக் கூடியதும் மிக நீண்டகாலமாக வெள்ளையின ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் நடத்தியதுமான தென்னாப்பிரிக்க நாட்டில் சுதந்திரம் பெற்ற ஆண்டிலேயே அரசியல் சட்டத்தை உருவாக்கும் போது மரண தண்டனை தேவையில்லை என்று 11 நீதிபதிகள் முன்வந்து கூறினர். இது போன்று பல்வேறு நாடுகள் மரண தண்ட னையை அங்கீகரிப்பதில்லை. எனவே, மரண தண்டனை கூடாது என்பது உலகம் தழுவிய போராட்டமாக விரிவடையும்போதுதான் குறிப்பிட்ட சில நபர்களுக்காக நடத்தப்படும் போராட்டத்திற்கான நேர்மை முழுமையாக வெளிப்படும்.



இத்தொகுப்பு நூல்கள் இலங்கையில் சமூக அடையாளம் தொடர்பான அரசியலை வெளிப் படுத்தும் விதமாக இனவாத அடையாளங்களின் தலைமுறை குறித்தும் கிழக்குக் கரையோர வேடர்கள் இனக்குழும அடையாளத்தால் பாதிக்கப்படுதல் குறித்தும் இலங்கையில் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடு மற்றும் மொழிபற்றிய உணர்வு நிலை குறித்தும் கட்டுரைகளைக் கொண் டுள்ளன. இலங்கையில் சமூக அடையாள அரசி யல் குறித்த புரிதலை இத்தொகுப்புகள் முன் வைக் கின்றன. மேலும் புரொட்டெஸ்ரன்ட் பௌத்த இயக்கத்தின் தோற்றுவாய்கள், யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் வழிபாட்டிடங்களின் வகிபாகம் தொடர்பான ஒரு விசாரணை, 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பௌத்தத் தைக் கிறிஸ்தவ மிஷனரிகள் எதிர்கொண்டமை ஆகிய கட்டுரைகள் இலங்கையின் சமயம் தொடர்பான அரசியலை முன்வைக்கும் விதமாக உள்ளது. வரலாற்றை அங்கீகரித்தலும் நிலத்தை ஒழுங்க மைத்தலும் என்ற அநுராதபுரத்தை வெற்றி கொள்ளுதல் தொடர்பான கட்டுரையும் அச்சமுற்ற இடங்களும் வன்முறை வெளிகளும் என்ற கட்டுரையும் இலங்கையின் பண்பாட்டு அடையாளம் தொடர்பான அரசியலை முன் வைத்துப்பேசுகிறது. இலங்கையின் கிராமிய வர்க்கங்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரை இலங்கையின் சமூக அமைப்பு குறித்த புரிதலைத் தருவதாக உள்ளது. இவ்வாறே இலங்கையில் ஊடகங்கள் தொடர்பான அரசியலை முன்வைக்கும் கட்டுரைகள் குறிப்பாக காண்பியக் கலையின் சமகால நடைமுறைகளும் தொண்ணூறுகளின் போக்கும் என்ற கட்டுரையும் ஈஸ்மென் கலர் பூசிய யாழ்ப்பாணத்துக் கடவு ளர்கள் என்ற கட்டுரையும் ஊடக அரசியலின் பல்வேறு பரிமாணங்களை வெளிக்கொணர்கிறது. இலங்கையின் சமூக, பண்பாட்டு, அடையாளம், சமயம், அரசியல் வன்முறை, ஊடகம் உள்ளிட்ட பல்வேறு கூறுகள் குறித்த மிக விரிவானப் புரிதலை இத்தொகுப்புகள் தருவதாக உள்ளன.

**இலங்கைச் சமூகத்தையும் பண்பாட்டையும் வாசித்தல்: தெரிவுசெய்யப்பட்ட கட்டுரைகள் தொகுதி 2&3**

திரட்டுதல்: சசங்க பெரேரா, தொகுப்பு: தா.சனாதனன், பா.அகிலன்
வெளியீடு: சமூகப் பண்பாட்டு உயர் கற்கைகளுக்கானக் கொழும்பு நிறுவனம், 2005

- தே. சி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்திய இடதுசாரி இயக்க வரலாற்றை கட்டமைத்த அறிஞர்

## சி.எஸ்.சுப்பிரமணியன் (1910-2011)

■ வீ.அரசு


சி.எஸ்.சுப்பிரமணியன் (1910 - 2011)

கடந்த 18.09.11 அன்று மறைந்த தோழர் சி.எஸ். என்றழைக்கப்படும் சி.சுப்பிரமணியம் தென்னிந்திய இடதுசாரி இயக்க வரலாற்றை மிக விரிவாகக் கட்டமைத்த வரலாற்று அறிஞர் ஆவார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் தொடங்கி 1950கள் வரையிலான காலங்களில் தென்னிந்தியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு உயர்கல்விக்காகச் சென்றவர்கள், தென்னிந்தியப் பகுதிகளில் இடது சாரி இயக்கப்பணிகளில் ஈடுபட்டவர்கள் ஆகிய பிறர் குறித்த விரிவான வரலாற்றுப்பதிவுகளைச் செய்தவர் தோழர் சி.எஸ். ஆவார். இவர் உருவாக்கிய வரலாற்று நூல்களைப் பின்வரும் வகையில் நாம் தொகுத்துக்கொள்ள முடியும்.

- தென்னிந்தியாவிற்கு 1927இல் வருகை புரிந்த ஷப்பூர்ஜி சக்லத்வாலா என்ற பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் செயல்பட்ட ஒரே இந்திய கம்யூனிஸ்டின் வாழ்க்கை வரலாறு குறித்தப் பதிவுகள்
- 1931-32 ஆம் ஆண்டுகளில் சென்னையில் கம்யூனிஸ்ட்கட்சி அமைப்பதற்கான அடித்தளங்களை உருவாக்கிய தோழர் தாதா அமீர் ஹைதர் தொடர்பான வரலாற்றுப் பதிவுகள்.
- 1936களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் பொதுச்செயலாளராக செயல்பட்ட தோழர் எஸ்.வி.காட்டே தொடர்பான வரலாற்றுப் பதிவுகள்
- ஐரோப்பாவில் புரட்சிகரமான செயல்களில் ஈடுபட்ட எம்.பி.டி.ஆச்சார்யா அவர்கள் குறித்த ஆங்கிலநூல்.
- தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டான தோழர் சிங்காரவேலு குறித்த வாழ்க்கை வரலாற்று நூல்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் : தோழர் சிங்காரவேலு அவர்களின் கட்டுரைகள் அடங்கிய நான்கு தொகுப்பு நூல்கள் மற்றும் சிங்கார வேலரின் கான்பூர் சதி வழக்கு குறித்த நூல்.
- இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு குறித்த மிகச் சுருக்கமான ஆங்கில நூல்
- பாரதியாரின் இந்தியா பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்த *பாரதி தரிசனம்* இரண்டு தொகுதிகள்.

தோழர் சி.எஸ்.அவர்கள் 100 ஆண்டுகளைக் கடந்து வாழ்ந்து மறைந்தார். மாநிலக்கல்லூரியில் வரலாற்று மாணவனாகப் படித்த அவர் இலண்டன் நகரத்திற்கு மேல் படிப்பிற்காகச் சென்று ஒரு கம்யூனிஸ்டாக இந்தியாவிற்குத் திரும்பி வந்தார். 1930 தொடக்கம் அவர் மறையும் வரை சுமார் 80 ஆண்டுகள் இந்திய இடதுசாரி இயக்கத்திற்கெனவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்த தோழர் ஆவார். 1940களின் இறுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்ட் கட்சியோடு தோழர் சி.எஸ். அவர்களுக்கு அவரது காதல் திருமணம் தொடர்பான முரண்பாடு உருவானது. அந்தக் கட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி இவர் மீது நடவடிக்கை எடுத்து கட்சியிலிருந்து நீக்கியது; இருந்தாலும் கட்சியின் மீது தோழர் சி.எஸ். மிகுந்த ஈடுபாடு கொண்டு பிற்காலங்களில் கம்யூனிஸ்ட்கட்சியில் இணைந்து செயல்பட்டார். கம்யூனிஸ்டுகள் எந்த செய்தியையும் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் செய்தி சேகரிப்புக் குழு ஒன்று இவரது முயற்சியால் உருவாக்கப்பட்டது. இக்குழு பல்வேறு கோப்புக்களின் மூலம் அன்றாட நிகழ்வுகளைப் பதிவு செய்து வந்தது. இக்கோப்புக்களின் துணைகொண்டே 1937 முதல் வெளிவந்த ஜனசக்தி இதழின் பல கட்டுரைகள் எழுதப்பட்டன. ஜனசக்தி இதழின் ஆசிரியர்களில் ஒருவராக இருந்து அவ்விதழ் தரத்துடன் வெளிவருவதற்கு சி.எஸ். அவர்களின் பங்களிப்பு முக்கியமானது. 1970களில் தென்னிந்திய ஆராய்ச்சி மையம் என்ற ஒன்றை உருவாக்கி அதன் மூலம் பல்வேறு ஆய்வுகளைச் செய்வதற்கும் அவர் திட்டமிட்டார். பல்வேறு கொடுமையான அடக்குமுறைகளுக்கும் தலைமறைவு வாழ்க்கைக்கும் ஆளான கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் ஆவணங்களைப் பாதுகாப்பது என்பது மிகுந்த சிக்கலான ஒன்றாகும்; இருந்தாலும் தோழர் சி.எஸ்., தோழர் கே.முருகேசன் அவர்களோடு இணைந்து பல அரிய ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு தென்னிந்திய இடதுசாரி இயக்க வரலாற்றை ஆதார பூர்வமாகக் கட்டமைத்ததன் அடையாளமே மேலே நாம் குறிப்பிட்டுள்ள நூல்களாகும்.

மும்பையில் பிறந்த டாடா குடும்பத்தைச் சேர்ந்த தோழர் சக்லத்வாலா லண்டனுக்குச் சென்று வாழத் தொடங்கினார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்குப் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினரானார். அந்தப் பாராளுமன்றத்தில் இந்தியாவில் இருந்து சென்ற ஒரே கம்யூனிஸ்டாக அவர் செயல்பட்டார். அதன்மூலம் இந்தியாவில் பிரித்தானியர்கள் செய்யும் சுரண்டல்களை அம்பலப்படுத்தினார். அவர் 1927 இல் இந்தியாவிற்கு வருகை புரிந்து இந்தியாவில் பல்வேறு நகரங்களிலும் சொற்பொழிவாற்றினார். தோழர் சி.எஸ்., சக்லத்வாலாவின் இந்திய வருகை தொடர்பான வரலாற்றுப்பதிவை தமது நூலில் செய்துள்ளார். சென்னை நகரத்தில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் அன்றைய செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்தன. அவற்றையெல்லாம் தொகுத்து மொழியாக்கம் செய்து இந்நூலை உருவாக்கியுள்ளார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்தியாவினுடைய சிக்கல்களை இந்தியாவில் பிறந்த கம்யூனிஸ்ட் எவ்வகையில் பதிவு செய்தார் என்பதற்கான அரிய ஆவணமாக தோழர் சி.எஸ்.சின் இந்த நூல் அமைந்துள்ளது.

'தென்னிந்தியாவைக் கண்டேன்' என்ற நூலைப் பதிப்பித்த தோழர் சி.எஸ்., தோழர் அமீர்ஹைதர் சென்னையில் கம்யுனிஸ்ட் கட்சியை எப்படி வளர்த்தெடுத்தார் என்பதற்கான விரிவான பதிவுகளை இந்நூலின் மூலம் அறிய முடிகிறது. உலகம் முழுவதும் கப்பல் பயணம் மேற்கொண்டு பல்வேறு இடங்களுக்குச் சென்ற அமீர் ஹைதர் சென்னையில் தங்கியிருந்த காலங்களில் தமிழக கம்யூனிஸ்ட் இயக்க உருவாக்கத்திற்கு மிக முக்கியப் பங்களிப்பு செய்துள்ளார் என்பதை இந்நூல் வழி அறிகிறோம். தோழர் ஜி.அதிகாரி ஆங்கிலத்தில் எழுதிய வரலாற்று நூலை தோழர் ஆர்.பார்த்தசாரதி தமிழில் மொழியாக்கம் செய்தார். அந்நூலைப் பதிப்பித்த சி.எஸ். பல்வேறு இணைப்புக்களை அந்நூலில் கொடுத்துள்ளார். அதன் மூலம் தென்னிந்திய இடதுசாரி இயக்க வரலாற்றைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் பொதுச்செயலாளரான தோழர் எஸ்.வி.காட்டே குறித்துப் பலரின் நினைவுக்கட்டுரைகள் அடங்கிய

பல்வேறு கொடுமையான அடக்குமுறைகளுக்கும் தலைமறைவு வாழ்க்கைக்கும் ஆளான கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் ஆவணங்களைப் பாதுகாப்பது என்பது மிகுந்த சிக்கலான ஒன்றாகும்; இருந்தாலும் தோழர் சி.எஸ்., தோழர் கே.முருகேசன் அவர்களோடு இணைந்து பல அரிய ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு தென்னிந்திய இடதுசாரி இயக்க வரலாற்றை ஆதார பூர்வமாகக் கட்டமைத்ததன் அடையாளமே மேலே நாம் குறிப்பிட்டுள்ள நூல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலை சி.எஸ் பதிப்பித்துள்ளார். எஸ்.ஏ.டாங்கே, சி.ராஜேஸ்வரராவ், ஜி. அதிகாரி, எம்.பி. ராவ், ஏ.எஸ்.கே, கே.முருகேசன், சி.எஸ்., இராதாகிருஷ்ண மூர்த்தி, கே.இராமநாதன் ஆகியோர் காட்டே குறித்து எழுதிய கட்டுரைகள் தோழர் ஜமதக்கினி அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இக்கட்டுரைகளைப் பதிப்பித்த சி.எஸ். இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பல்வேறு வரலாற்றுச் செய்திகளை ஆவணமாகப் பதிவாக்கியுள்ளார். துரதிருஷ்டவசமாக கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றை எழுதுபவர்கள் இவ் ஆவணங்களை உரிய முறையில் பயன்படுத்துகிறார்களா என்பது ஐயத்திற்குரியது. எம்.பி.டி ஆச்சார்யா லண்டனுக்குப் படிக்கச்சென்று இந்திய தீவிரவாத விடுதலை இயக்கத்தில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டவர். அவர் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கும் சென்று இந்தியாவில் பிரித்தானியர்களுக்கெதிரான போராட்டத்தை வலுவாகக் கட்டமைத்தவர். மாஸ்கோவிற்குச் சென்று லெனினை சந்தித்தவர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியொன்றை கிரம்ளின் நகரத்தில் உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றியவர். இவ்வகைல் ஒரு இந்தியர் ஐரோப்பிய நாடுகளில் செயல்பட்ட மிக அரிய தரவுகளை எம்.பி.டி ஆச்சார்யா குறித்த நூலில் தோழர் சி.எஸ். பதிவு செய்துள்ளார். இந்நூல் பல்வேறு அரிய தகவல்களைக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டிய முக்கியமான நூலும் கூட.

தோழர்கள் தாதா அமீர் ஹைதர், சக்லத் வாலா, எஸ்.வி.காட்டே மற்றும் எம்.பி.டி.ஆச்சார்யா ஆகியோர் வரலாறுகளை மிகவிரிவாகப் பதிவுசெய்தவர் தோழர் சி.எஸ். இவர் தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டான சிங்காரவேலரின் வாழ்க்கை வரலாற்றை தோழர் கே.முருகேசன் உதவியோடு ஆங்கிலத்தில் முதலில் எழுதினார் (1975). இதன்மூலம் தென்னிந்தியாவில் செயல்பட்ட சிங்காரவேலர் குறித்த அகில இந்திய அளவிலான புரிதல் உருவானது. இச்சிங்காரவேலர் குறித்த வரலாற்று நூலை எழுதுவதற்கு அடிப்படையாக அமைந்தவை சிங்காரவேலருடைய பல்வேறு சொற்பொழிவுகளையும் கட்டுரைகளையும் நான்கு தொகுதிகளாகத் தோழர்கள் சி.எஸ்.சும் முருகேசனும் வெளிக்கொண்டு வந்ததைக் கூறலாம். இத்தொகுதிகள் 1920 களின் இறுதி மற்றும் முப்பதுகளில் தமிழ் நாட்டில் சமதர்ம இயக்கம் உருப்பெற்று வளர்ந்து வந்த வரலாற்றைப் பதிவு செய்துள்ளன. ஈ.வெ.ரா. பெரியார் உருவாக்கிய சுயமரியாதை இயக்கம், சிங்காரவேலர் முன்னெடுத்த சமதர்ம இயக்கம் ஆகியவற்றின் தொடர்புகளை இக்கட்டுரைத் தொகுப்புகள் வழி நாம் புரிந்துகொள்ள முடியும். இக்கட்டுரைத் தொகுப்புகளின் தலைப்புகளே அப்பொருள்களில் அமைந்திருப்பதை அறிகிறோம். தோழர் சிங்காரவேலர் குறித்த கான்பூர் சதி வழக்கு எனும் நூல் சிங்கார வேலர் குறித்த தவறான தகவல்களை நேர் செய்துள்ளது. அதைப்போலவே தமிழில் எழுதப்பட்ட சிங்காரவேலர் குறித்த வாழ்க்கை வரலாறு, தமிழகத்தில் சுயமரியாதை இயக்கம், சமதர்ம இயக்கம் ஆகியவை தொடர்பான மிகவிரிவான வரலாற்று ஆவணங்களைக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். ஆங்கில நூலை விட மிக விரிவான பல்வேறு தகவல்கள் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன.

> தோழர்கள் தாதா அமீர் ஹைதர், சக்லத் வாலா, எஸ்.வி.காட்டே மற்றும் எம்.பி.டி.ஆச்சார்யா ஆகியோர் வரலாறுகளை மிகவிரிவாகப் பதிவுசெய்தவர் தோழர் சி.எஸ். இவர் தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டான சிங்காரவேலரின் வாழ்க்கை வரலாற்றை தோழர் கே.முருகேசன் உதவியோடு ஆங்கிலத்தில் முதலில் எழுதினார் (1975). இதன்மூலம் தென்னிந்தியாவில் செயல்பட்ட சிங்காரவேலர் குறித்த அகில இந்திய அளவிலான புரிதல் உருவானது.

பாரதியார் எழுதிய பல்வேறு ஆக்கங்கள் ரா.அ.பத்மநாபன் மற்றும் பெ.தூரன் ஆகியோரால் அறுபதுகளில் தொகுக்கப்பட்டன. அம்மரபில் தோழர் சி.எஸ் பதிப்பித்த பாரதியாரின் இந்தியா பத்திரிகை கட்டுரைகள் குறித்த 'பாரதி தரிசனம்' இரு தொகுதிகள் மிக முக்கியமான பங்களிப்பு ஆகும். பாரதியியல் ஆய்வில் இத்தொகுதிகள் தனித்துக் கூறத்தக்கன.

கம்யூனிஸ்டாக வாழ்ந்த தோழர் சி.எஸ். தம் வாழ்நாட்களில் செய்த வரலாற்று ஆய்வுகள் தமிழ்ச்சமூகத்தால் என்றும் நினைக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாற்றுவெளி

## சந்தா சேர்ப்பு இயக்கம்

மாற்றுவெளி ஆய்விதழ் 2009ஆம் ஆண்டு முதல் வீ.அரசு அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டு வெளிவருகிறது. இவ்விதழுடன் எட்டு இதழ்கள் வெளிவந்துள்ளன. 2011 இறுதிக்குள் மேலும் இரண்டு இதழ்கள் வெளிவர உள்ளன. *கால்டுவெல், இந்தியப் பொருளாதாரம், கல்வி, ரோஜா முத்தையா நூலகம், நாவல்கள், மாற்றுப் பாலியல், தமிழ்ச் சமூக வரலாறு, போருக்குப் பிந்தைய ஈழம்* ஆகிய பொருண்மைகளில் இதழ்களைக் கொண்டு வந்துள்ளோம். *தமிழ்ச்சித்திரக் கதைகள், தமிழ்ச் சிறுகதைகள்* ஆகிய பொருண்மைகளில் அடுத்தடுத்த இதழ்கள் வெளி வர உள்ளன.

மாற்றுவெளி ஆய்விதழுக்குப் பரவலான வரவேற்பு இருப்பதை அறிகிறோம். நாங்கள் எதிர்பார்த்தைவிட அதிகமானவர்கள் சந்தாதாரர்கள் ஆகியுள்ளனர். சிறுபத்திரிகை வாசகர் வட்டம், கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆய்வு மாணவர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரிடத்தில் இவ்விதழ் அறிமுகமாகியுள்ளது. அக்டோபர் தொடங்கி ஜனவரி 2012க்குள் குறைந்தது 500 பேரைச் சந்தாதாரர்களாக்கும் இயக்கம் ஒன்றை நாங்கள் முன்னெடுக்க இருக்கிறோம். மாற்றுவெளி ஆசிரியர் குழுவில் இருக்கும் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்கள் இந்த சந்தா சேர்ப்பு இயக்கத்தில் ஈடுபட உள்ளனர். வரவிருக்கும் சென்னைப் புத்தகக் கண்காட்சியில் சந்தா சேர்ப்பு இயக்கம் நடைபெற உள்ளது. மாற்றுவெளி இதழுக்கு சந்தா கொடுத்து தொடர்ந்து இதழ் வெளிவர உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


தலையங்கம்

**ஒரே குரல் என்னும் சர்வாதிகாரம்** 5

கட்டுரை

**ஒரு கிராமத்தின் கதை** 9
எல். சிவலிங்கம்

**பாரம்பரியப் பிரதேசங்களும் அரச குடியேற்றத் திட்டங்களும்** 16
ச. சத்தியசீலன்

**இலங்கையும் அவசரகாலச் சட்டமும்** 24
செ. துரைசிங்கம்

**மே 18 இன் பின்னரான சவால்களும் வாய்ப்புகளும்** 32
சிவ. முத்துக்குமார்

**போரியல் வாழ்புலமும் சூழலியல் பிரச்சினைகளும்** 41
எம். மோகனகிருஷ்ணன்

**வரலாற்றுப் பிரக்ஞையின் உருவாக்கம்:** 52
அர்ஜுன குணரத்ன / தமிழில்: மனோ

**இலங்கையும் ஊடகப் பண்பாடும்** 74
துரை. மதங்கன்

**தமிழர்களைக் குறிவைக்கும் புதிய இராணுவ நடவடிக்கை** 78
நிராஜ் டேவிட்

**நெருக்கடிக்குள் உள்ளதா தமிழ்த் தேசியம்?** 87
டி.சிவராம்

**தமிழ்த் தேசியம்: சிந்தனையும் தேடலும்** 92
த.சுரேன்

**இலங்கையின் இன்றைய பிரச்சனைகள்:** 98
பொன்னி அரசு

**ஈழத்துப் பெண் கவிஞர்கள்** 113
ரமேஷ்

புத்தக அறிமுகம்

**பெண் போராளிகள்: புதிய பார்வை** 120
அடேல் பாலசிங்கம்

**விழுதாகி வேருமாகி: பார்வையும் பதிவும்** 129
அர்த்தநாரீ

ஆவணம்

**ஐ. நா. அவையின் வல்லுனர் குழு அறிக்கை** 136
பூங்குழலி

பதிவு

**மரண தண்டனைக்கு எதிரான நிகழ்வுகள்** 147

அஞ்சலி

**சி.எஸ்.சுப்பிரமணியன் (1910 - 2011)**
வீ.அரசு


மாற்று

ISSN 0976-1667

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org